2.K.V. 207

[illegible]

[illegible]

[illegible]

DIGITIZED

R6
N09
117096

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஞானஸம்பந்தகுருப்யோநம:

7 AUG 1909
MADRAS

# பிரஹ்மவித்யாவிகற்பநிரசநம்.

"வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம்"

ஸ்ரீல ஸ்ரீ

## சோமசுந்தரநாயகரவர்கள்

பிரம்ஹவித்யாவில்

சித்தாந்த சைவத்தின்மேல் நிகழ்த்தப்பட்டுள்ள

ஆசங்கைகளைப் பரிகரித்து,

சைவநீலலோசனியில் வெளியிட்ட வியாசங்கள்

சென்னை

வேதாந்தோக்த சைவசித்தாந்த சபையங்கத்தவர்களில்

ஒருவராகிய

சி. நாராயணசாமிநாயகரவர்களால்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

Madras:

Printed at the Vidhya Bhaskara Press & K. R. Press.

1909.

இதன் விலை ரூபா [illegible].

117096
R6
ஃ79
MADRAS
AUG 1909
2E

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானஸம்பந்தகுருப்யோநமஃ.

# பிரஹ்மவித்யாவிகற்பநிரசநம்.

"வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம்"

ஸ்ரீல ஸ்ரீ

சோமசுந்தரநாயகரவர்கள்

பிரம்ஹவித்யாவில்

சித்தாந்த சைவத்தின்மேல் நிகழ்த்தப்பட்டுள்ள ஆசங்கைகளைப்

பரிகரித்து,

நாகை நீலலோசனியில் வெளியிட்ட அரியவிஷயங்கள்

சென்னை

வேதாகமோக்த சைவசித்தாந்த சபையடியவர்களில்

ஒருவராகிய

சி. நாராயணசாமிநாயகரவர்களால்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

MADRAS:

Printed at the V. B. & K. R. Presses.

1909.

இதன் விலை ரூபா - க.

3E

2/17

சிவமயம்.

## சிறப்புக்கவி.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து மகாவித்துவான்

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றிய

பன்னிருசீர்க்கழிநெடில்விருத்தம்.

---

ஆதியினிற் கௌதமனா ரிட்டபெருஞ் சாபத்தை
    யவலமாக்கித்தோ
ரவனியினி லேபிறந்து சிவசின்ன மேபூண்டு
    மவற்றின் மாறாய்
நீதியான் வேதாகமத் துண்மை தேறும்
    னிரயத் தாழ்த்தும்
நிலையறுமா யாவாத மேற்கொண்ட மாக்கள்பலர்
    நியாயங் காணத்
தீதில்செந் தமிழ்நாடு முழுவதினு மொப்புயர்வில்
    சிங்க மென்னத்
திகழ்ந்துவை திகசைவ சித்தாந்த சண்டமா
    ருதப்பேர் சேர்ந்து
மாதிறமே வியசோம சுந்தரவிற் பன்னர்சக
    மதித்துப் போற்ற
வளாங்களித்தான் பிரமவித்தி யாவிகற்ப நிரசனமாம்
    வண்மை நூலே.

திருச்சிற்றம்பலம்.

---

௳

சிவமயம்.

## விஷய அட்டவணை.


| பக்கம். | விஷயம். |
|---|---|
| ௧ | பிரம்ஹவித்யா நாவலர் ஜகத்குருவாத நிராகரணம்:— வைதிகசைவ விளக்கம், தில்லைவேதியர் மகிமை, சங்கராசாரியாரது பிரஸ்தாபம், பிரம்ஹவித்யாநாவலர் தந்திரம், ஆதிசைவர் மகிமை, சைவமடம் அநாதியெனல், ஸ்ரீஜ்ஞானசம்பந்தப்பெருமானது மகிமை, நாத்திகரிவரெனல், மாயாவாதிகளிவரெனல், பிரம்ஹவித்யாநாவலரைக் கடாவுதல், வேதாந்த சித்தாந்த சமரசம், விஷயவிரோதம், புறச்சமயம், சிவாத்துவிதக் குழப்பம், முறைபிறழ்ச்சி, அத்துவிதம். |
| ௩௪ | பிரம்ஹவித்யா பத்திராதிபரது ஸ்மார்த்தமதக் குழப்பம். |
| ௪௩ | பிரம்ஹவித்யா நாவலர் தீமையை விலக்கல். |
| ௪௮ | பிரம்ஹவித்யா கலிபுருஷர் மகிமை. |
| ௫௩ | பிரம்ஹவித்யா அந்தணர்விளக்க மறுப்பு. |
| ௭௮ | பிரம்ஹவித்யா கொழும்புசர்மாவின் குறும்பறுத்தல். |
| ௮௩ | பிரம்ஹவித்யா குருசர்மாவின் கொடுமைதவிர்த்தல். |
| ௧௦௨ | பிரம்ஹவித்யா பத்திராதிபரது சங்கராசாரியர் பிறப்பின் குழப்பம். |
| ௧௦௭ | பிரம்ஹவித்யா பத்திராதிபரும், அவரது மாயாவாத ஜாலமும். |
| ௧௧௨ | பிரம்ஹவித்யா நாவலரை வினவுதல் (ஜகத்குருவிசாரம்). |
| ௧௧௭ | பிரம்ஹவித்யா ஆரியன் வினவின் அழிவுபாடு. |
| ௧௨௪ | ஒரு சந்தேகநிவிர்த்தி. |


௳

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானசம்பந்த குருப்யோநம:

# சித்தாந்தரத்நாகரம்.

## பிரமவித்யாவிகற்ப நிரசநம்.

### காப்பு.

அத்துவித மென்றழைத்து மாயாவா தந்தன்னை யகத்தைபேசி
வத்துவிலே யறியாது வம்பளக்கு மூடர்தலை வளைக்கயானை
வித்தகமா முகனிலவ லவதார மென்றுமறை விளம்புகாழி
யத்தனருள் கொடுபிரம வித்தியா விகற்பமறப் பறைகுவாமால்.

சிவசின்னங்களாகிய விபூதி ருத்திராக்ஷங்களை உலகை வஞ்சிக்குமாறு உடம்பிலணிந்து பசுத்தோலைப் போர்த்துப் பாய்புலித்தொழிலைச்செய்வது போல் சிவாலய வழிபாடு, சிவனடியார் தொண்டு, சிவபுராணபடன முதலியன அறவே கைவிட்டு சிவத்வேஷிகளாய் அஹம்பிரமக் கொள்கைமேற்கொண்டு அவ்வாபாசக் கொள்கைக்கு ஆசாரியராகத் தாமொப்பிய சங்கரரே ஜகத்குருவென்றுமனப்பால்குடித்து மகிழும் மாயாவாதிகளுடைய அவலசித்தாந்தத்திற் பொதிந்துள்ள கருதி யுக்தி யநுபவ விருத்தமான பலவிகற்பங்களைப் "பிரமவித்யாவிகற்பநிரசநம்" என்னும் பெயரிய கண்டனவிஷயவாயிலால் சாதுக்கள் சமுசயநீங்கிச்சந்தோஷிக்குமாறு தெள்ளிதின் விளக்கிக்காட்டி நல்லறிவுச்சுடர் கொளுத்தும் வாய்மைவருமாறு:—

பிரஹ்மவித்யாவில், "ஜகத்குரு தூஷண நிராகரணம்" என்பதொன்று எழுதப்பட்டிருக்கின்றது. அதனை சண்டு விசாரித்து ஒழிப்பாம். இந்நிராகரணத்துக்கு ஆக்கியோர் "ஓர் நாவலர்" என்று அதிற் காணப்படுகின்றது. அந்நாவலர் யாவராயினுமாகுக. சண்டுபா. மெடுத்துக்கொண்ட விஷயமே யெமக்கு முக்கியமாகையால், அதை விசாரிப்பதனையே யாம் மேற்கொண்டொழுகினுமென்க.

அந்நாவலர் ஞானாமிர்த பத்திரிகாசிரியரைப் பிரஸ்தாபித்து "இவர் வைதிக சைவரெனின், இவர் சமயக்கொள்கையாதோ? அக்கொள்கையை விளக்கும் நூல்கள் எவை? அந்நூல்களின்வழி வைதிக சைவ சமயக்கோள்களை நிறுத்திய நல்லாசிரியர் பரம்பரையாது? அவர்கள் இப்பொழுது ஆசரிக்கும் ஆசாரங்கள் எவை? அவை எந்நூற் பிரமாணத்தன? வைதிகர், சைவர் என்னும் இருவேறு நாமங்கள் தனித்தனி மதத்தர்க்குச் சிறப்புப்பெயராய் பெருவழக்காய் வழங்குவதாக, அவ்விருவேறு சொற்களையும் ஒருசேரத் தொடுத்து இவர்போல்வார் நவீனர்சிலர் இக்காலத்துச் சிறுவழக்காய் வழங்குகின்றனர்" எனப் பிரசங்கித்தனர். இனி யிதற்குச் சமாதானங்கூறுவாம்.

## வைதிக சைவ விளக்கம்.

ஸ்ரீ தாயுமான சுவாமிகள் "அயர்வறச் செங்கியில்வைத்து ராஜாங்கத்திலமர்ந்தது வைதிக சைவமழகிதந்தோ" என்று கூறியருளினர். இவ்வைதிக சைவ மினைந்தென்பது தோன்ற "இயல்பென்றுந் திரியாம லியமாதி யெண்குணமுங் காட்டியன்பா லின்பமாகி" என்று தொடங்கி அதனுண்மையை இனிது பிரகாசப்படுத்தினர். இனியவ்வைதிக சைவநெறி நின்றாரிவரென்பது விளங்க "விண்ணவ ரிந்திரன் பிரமனாதி விளங்கு சத்தரிஷிகள் கன வீணைவல்லோ, ரெண்ணரிய சித்தர் மனுவாதி வேந்த ரிருக்காதி மறைமுனிவ ரெல்லாமிந்தக், கண்ணகன் ஞாலம் மதிக்கத்தானே யுள்ளங் கையினெல்லிக்கனிபோலக் காட்சியாகத், திண்ணியநல்லறிவாலிச் சமயத்தன்றோ செப்பரிய சித்திமுத்தி சேர்ந்தாரென்றும்" என விதந்தோதி யருளினர். இவ்வுண்மை தெளியப் பெருமையால் நமது பிரமவித்யா நாவலர் கடாவிய கடாக்கள் பயனிலவா யழிந்தொழிந்து போயின. சங்கராசாரியர் ஜகத்குரு வாகாரென்று ஞானாமிர்தக்காரர் பிரசங்சித்ததை மறுக்கப்புகுந்த இவர் அதனைவிடுத்து, வைதிகசைவர் வழக்கிலிழிந்து வாய்மாண்டுபோக நேர்ந்தது பரிதாபமென்க. இவரது புன்மையைப் பிறர்கண்டு நகைப்பதை நாடி நாணாமல் வைதிகர், சைவர் என்னு நாமங்கள் மதத்தர்க்குச் சிறப்புப்பெயராய் வழங்காநிற்கும் என வம்பளந்து மகிழ்வெய்தினாரின்கொலோ?

இனி வைதிகர் என்னுஞ்சொல் வேதநெறி நின்றார் எனவும், சைவர் என்னுஞ்சொல் சிவனை வழிபடுவோர் எனவும் பொருள் பயத்தலால், வைதிக சைவரென்பவர்கள் வேதநெறிநின்று சிவனைவழி



படுவோர் என்று வெளியாகாநிற்பர். வேதசம்பந்தம் வைதிகமும், சிவசம்பந்தம் சைவமுமாயிடுதல் சர்வஸம்பிரதிபந்நமாமென்ப திவருணரார்போன்று செய்யும் அதிப்பிரசங்க மினிமணம்பெறு தென்க. வேதம் பிரமாணமும், சிவம் அந்தப்பிரமாணத்தாற் போதநும் பிரமேயமுமாகுமுண்மை யுணர்ந்தார்க்கே வைதிக சைவத்தின் வாய்மை நலம் விளங்கும். வேதம் நூற்பெயர். சிவம் தெய்வத்தின் பெயர். நூற்பெயரை விளக்கும்வைதிகர் என்னும் வார்த்தை அந்நூலை மாத்திரம் கடைப்பிடித்துச் சிவசம்பந்தம் பெருமையையும், தெய்வத்தின் பெயரை விளக்குஞ் சைவர் என்னுந் தனிப்பெயர் அத்தெய்வத்தினாற் கூறப்படும் வைதிகத்தைத் தன்னில் வியாப்பியமாகக்கொண்டு தான் வியாபகமாயிருப்பதனையும் வெளிப்படுத்துகின்றன இவ்விரண்டனுள், தெய்வ சம்பத்தொழிந்த வைதிகம் வரனை மேற்கொள்ளாத விவாகச்சடங்கு மாத்திரமாயொழியும். இனி வைதிகமென்னுஞ்சொல் கூட்டாத சைவம், விவாகச்சடங்கு நடத்தலின்றி யோர் வரனை மேற்கொண்ட தாகாதோவெனின், ஆகாது. வரனைமேற்கொள்வது விவாகச்சடங்கு புரிந்தேயாயினும், அவ்வரனைக் கூடியபின்ன ரச்சடங்கினைப் பிரஸ்தாபித்துக் கொண்டிருக்க வேண்டுமென்னு மாவசியகமில்லை. அன்றியும், வைதிகத்துக்கு வேறாயுள்ளது சைவம் என்று பூர்வபட்சி புகன்றதுபோல், சைவத்துக்கு வேறாயுள்ளது வைதிகம் என்று யாம் புகல்வதுமில்லை. வைதிக சைவம் என்றதும், சைவம் என்றதும் ஒன்றேயாம். வைதிக சைவம் என்றது நீதி யரசு என்பதற்கும், சைவம் என்றது அரசு என்றதற்கும் நிதரிசனமாம். நீதிக்கும் அரசுக்குஞ் சம்பந்தங்கூறாமல் நீதியை யொரு முதலாகவும் அரசையொரு முதலாகவும் பிரசங்கிப்பாரது கறகத்தின் மாத்திரமே நமதன்பரது வைதிக வாதம் பயன்படத்தக்கதென்க. இனி வைதிகம், சைவம் என்பவற்றுள் வைதிகம் உடம்பும், சைவம் உயிருமாம். இவ்வுண்மை தோன்றவேயன்றோ "சைவம் வேதமயம் யஜேத்" என்று பதுமங்கூறியது. இதனை யுணராது நமதன்பர் வைதிகத்தினின்றுஞ் சைவத்தை வேறுபடுத்திக்கூறியது உடம்பினின்றும் உயிரை வேறுபடுத்தியதற்கே யொப்பாகும். உயிர் நீங்கிய வுடம்புபோல்வதாய் வேதம் பிணத்தன்மை யெய்துதற் கிவர்தொடுத்த வாதம் கேவலம் வேதநிந்திதமாயதென்க." இதனால், யாம் சைவர் என்று வெளிவரத்தக்கவரே (யாம் வைதிகர், யாம் வைதிக சைவர் என்று) வெளிவருதல் மரபாயதென்க. யாம்

சைவராகோம், யாம் வைதிகர் என்று வெளிவருபவர் பரமநாஸ்தி
கப் பண்டிதரேயாவர். இவ்வசைவ வைதிகரையே "ஆதிமறை யோதி
யதன் பயனொன்று மறியா, வேதியர்சொல் மெய்யென்று மேவாதே" என்
று ஸ்ரீமத் உமாபதிசிவம் பிரதிஷேதித் தொழுக்கியதென்க. இனி,
ஜைமினிமதத்தை மேற்கொண்ட கர்மப்பிரஹ்ம வாதிகள் தம்மை
வைதிகரென்றே கூறுவர். இவருக்கு அநீசுவர வாதப்பிரசங்கமே நி
யதம். இவரோடினப்பட்ட நாஸ்திக வைதிகர் பலருளர். இவரோடு
சேர்ந்து நாஸ்திகரா யொதுங்காமல் சிவப்பிரஹ்மவாதியாகிய நம
து பிரமவித்யா நாவலர் தப்புவது கஷ்டமென்க.

இன்னுமிவர் "வைதிகசைவம்" என்பதை "வைதிகம்-சைவம்"
எனப்பிரித்து வைதிகம் வேதசம்பந்த முடையதெனவும், சைவம்
ஆகமசம்பந்த முடையதெனவும் பொருள்கூறி ஆகம சம்பந்தத்தை
நோக்க வேதசம்பந்த முசிதமுடையதென வம்பளக்கவரலாம். அ
துகூடாது. ஏனெனின், "தெய்வம் சிவனே சிவனருள்சமயம்-சைவம் சிவ
த்தொடு சம்பந்தமென்றான்-சைவம்வளர்க்குஞ் சம்பந்தமூர்த்தி" என்று சை
வப்பெரியோர் கூறினாராகையால், இவ்வாறு பொருள்கோடலே நி
யதமென்றுணர்க. சிவனை வழிபடுவோர் சைவரும், விஷ்ணுவை வழி
படுவோர் வைஷ்ணவரும், சத்தியை வழிபடுவோர் சாக்தருமாயிரு
முறைமை புணர்ந்தார்க்கே சைவம் இனைத்தென்று விளங்கும். நம
தன்பர் தாம் சைவரன்றென வெளிவரலால், சிவனை வழிபடுந்தன்
மை அவர்பாற் சேராதொழியும். இனிச் சிவனைவழிபடுவது சைவம்
என்பதெமக்கு மொப்பாயினும், அச்சைவம் என்னுஞ்சொல் ஆக
மத்தையுஞ் சென்றடைதலால், யாம் சைவரென்று வெளிவர அஞ்
சினோமென்று அவர் கூறுதொழியார். சைவம் என்னுஞ்சொல் ஆக
மத்துக்கு ஏனோ சிறப்பாய் வந்து வழங்கியது? அவ்வாகமத்தில் சிவ
மணமே முழுதுங் கமழ்தலாலன்றே அது சைவமென்னும் பேர்
பெற்றது? இவ்வுண்மை போதரவேயன்றோ "ஸர்வாகமமயஸ்ஸிவ:"
என்று அவ்வாகமத்தை வேதம் புகழ்ந்தது? அதுபற்றியேயன்றோ
சிவாகமமெனவதனை யாவருங்கூறுகின்றனர்? வேதமெடுத்துப் புக
ழ்ந்தேத்துஞ் சிவாகமம் நமதன்பருக்குக் கசப்பெடுத்துப்போனது
அவரது குறையென்றோ அச்சிவாகமத்தின் குறையென்பது யாங்
ஙனம்? வேதத்தினுஞ் சிவாகமத்தில் சிவனாது புகழ் விரிந்து கிட
த்தலால், அச்சிவாகமம் சைவம் என்னும் பேர்பெறுதல் சர்வசித்.



டஜந ஸம்மதமாமென்க. இதனைவிரோதித்தல் அவைதிக சிரேஷ்ட
ர்களுக்கே சிறந்திடுமென்றறிக. இதுநிற்க.

## தில்லைவேதியர் மஹிமை.

நமது பிரமவித்யாநாவலர் ஆதிசைவர் மகாசைவர்கள் சித்தாந்
த சைவரெனவும், தில்லைவாழந்தணர்கள் சித்தாந்த சைவராகாரெ
னவும், இத்தில்லைவேதியர்கள் ஆதிசைவர்முதலினோர் போன்று சம
யவிசேடாதி தீக்ஷைகள் வேண்டாராய் வேதோக்தமான கர்மாநு
ஷ்டானங்களையே கைக்கொண்டு அத்துவித சித்தாந்தம் பேணி வா
ழ்பவரெனவும் பிரசங்கித்து "தில்லைவாழந்தணர் சங்கராசாரியர்
கொண்ட மதமாகிய அத்துவித சித்தாந்திகள்" என வோரதிசயங்
கண்டு கூறினார்.

இவரது விபரீதம் அம்மம்ம அறக்கொடிது. இவர் செய்யும் மி
த்திரபேதம் யாமளவிடற் கரத்தினதோ? இவர் ஆதிசைவர் மகாசை
வர்கள் சித்தாந்த சைவர் எனவும், தில்லை வேதியர்கள் சங்கராசாரி
யர்கொண்ட அத்துவித சித்தாந்திகள் எனவும் பிரசங்கித்தது வெ
றும் பொய்யேயாமென்க. ஆதிசைவர் மகாசைவர்களுக்கு அதிக
மானவர்கள் தில்லைவேதியர் என்று புகழ்வது போற்றொடங்கி, அத்
தில்லைவேதியர்களைச் சங்கராசாரியரது சிஷ்யர்களாக்கிய இவரது
வஞ்சகத்தை யாமென்னென்று சொல்வோம்? சங்கராசாரியர் பசு
வாகிய தன்னைப் பதியாக வாதித்துப் பதியாகிய ஸ்ரீ நடராஜமூர்த்தி
யைத் தன்னிடத்திற்கற்பிதமாய பொய்ப் பொருளென்று போதிப்
பவர். தில்லைவாழந்தணர் ஸ்ரீ நடராஜ பதியையே மெய்ப்பொருளெ
னவும், தாங்களவரது தொண்டர்களெனவுங்கொண்டு வழிபட்டு
உலகத்துக்குந் தேசிக மூர்த்திகளாய் விளங்குபவர். இங்ஙனமாக,
சாமான்ய விப்பிரவர்க்கத்து ளெண்ணப்பட்ட தனக்கு வேறாகக்
கடவுளில்லையென்று இவ்வுலகை வஞ்சித்துழன்ற சங்கராசாரியரை
வியாபகராகவும், சிவ் கணங்களாக வெண்ணப்பட்ட (ஸ்ரீ நடராஜப
தியோடு தில்லையை யடைந்த லோகாசாரியர்களாகிய) தில்லைவாழந்
தணர்களை வியாப்பியர்களாகவும் நமதுபோலி வைதிகராகிய பிரம
வித்யாநாவலர் போதிக்கவந்தது எங்ஙனே மணம்பெறும்? "ஸவ
கோருத்ரேத்யேய: த்யாயீதேசாநம்" என்னுஞ் சுருதிகள்கொண்டா
டித் துதிக்கும் வேதாந்தக்கனியாகிய ஸ்ரீ நடராஜபதியை வழிபட்டு
வாழும் பரமசைவர்களாகிய தீக்ஷித மூர்த்திகளைப் பிரஸ்தாபித்து,

அவர்கள் சைவர்களாகாரெனவும், சங்கராசாரியரது நாஸ்திகாத்துவிதத்தைப் பேணி வாழ்பவரெனவும் பூர்வபட்சியார் தொடுத்த வாதத்துக்குப் பிரமாணம் யாதோ அறிகிலம். சிதம்பர புராணம் தில்லைவேதியர்களை ஏகான்ம வாதிகளென்று கூறியதில்லையென்றறிக. ஸ்ரீ சிதம்பர க்ஷேத்திரத்தில் சங்கராசாரியர் தாமே விபூதியெடுத்துக்கொள்ளவேண்டிச்செய்த பிரயத்தனங்களைத் தடுத்து அவர் தமது சிஷ்யராலே வெளிப்படுத்திக்கொண்ட தீக்ஷிதர்களைச் சங்கராசாரியர் கொண்ட அத்துவித சித்தாந்திகள் என்று நமதன்பர் பேசியது இனிக் கனம் பெறுதென்க. இது நிற்க.

சங்கராசாரியர் "நசைவம் நசாக்தம்" என்று சிவசக்திகளது வழிபாடுகளைத் தூஷித்த நாஸ்திகப்பெரியோராயுள்ளவர். இவர் வேதத்தைப் பிரமாணமாகத் தழுவினும், பின்னர் அவ்வேதத்தையும் மிச்சையென்று வாதித்து வேத நிந்தகரா யொழுகினராகையால் இவரை வைதிகரெனினும், அவைதிக ரெனினும் பெருமை சிறுமைகளில்லையென்றறிக. அதனால், இவருக்குச் சைவ சித்தி கிடையாதென்று நமது புது நாவலர் வாதிடுவது மரபேயாமென்க. இவரது சிஷ்யர்களாக ஸ்மிருத்பாசாரம் பற்றுவார் யாவரையுங் கொள்வதும் அசங்கதமென்றறிக. சங்கர மதத்தவருக்கு மாத்திரமேயன்றி மத்வ ராமாநுஜ மதத்தினர்க்கும் ஸ்மிருதிகள் பிரமாணமாய் விளங்கலால் ஸ்மார்த்தரெல்லாஞ் சங்கராசாரியரது சிஷ்யர்களென்பது கேவலம் அசங்கதமாம். வேதம்-சிவாகமம்-புராணம்-இதிகாசம்-ஸ்மிருதிகள் முதலிய பிரமாணங்களைத் தழுவி அவ்வெல்லா நூல்களானுந் துணியப்பட்ட பரம்பொருளாகிய சிவபெருமானை வழிபட்டுப் பரம சாம்பவாளாயிருந்த சிவனடியார் பலரைவஞ்சித்துப் பூர்வம் சங்கராசாரியர் தமது நாஸ்திகாத்வைதத்தைப் போதித்துக் கெடுத்துத் தமக்குள்ளாக்கிக் கொண்டனர். பின்னரவருட் சிலரைத் திருப்பி இராமாநுஜாசாரியர் சக்கிராங்கனத்தால் அடையாளமிட்டு மீண்டும் அந்த மிச்சாவாதத்துட்போய்ப் புகாதவழி தேடினர். அதன் பின்னர் மற்றுஞ்சிலரை மத்வாசாரியர் தமது வழியிற் றிருப்பித் துவைத சித்தாந்தத்தினிறுத்தினர். போனவர் போக இப்போதுள்ளவர்களைக் கிறிஸ்தவர்களும் வேதஸமாஜ பிரமஸமாஜத்தவர்களும் தத்தஞ் சமயங்களிற்சேர்த்து வருகின்றனர். இதனால், சங்கராசாரியரது சூழ்ச்சியிலும், ஏனையோரது மயக்கிலு மகப்படாது அநாதிதொட்டு சிவாகம நெறிப்பட்டு மரபுபிறழா தொழுகிவருஞ் சிலருக்கு மட்டு



மே பரம சாம்பவத்வம் பிரகாசமாயதென்க. இவ்வுண்மை தெளிந்தோர்க்கு நமது பிரமவித்யா நாவலரது போதம் எட்டியாய்க் கசந்திடுமென்றற் கிழுக்கென்னே? சங்கராசாரியருக்கும், தில்லைவேதியருக்கும் விஜாதீயத்வம் பிராப்தமாயிடுதலறிந்து குணப்படுவதே விவேகிக ளினித்தேடத் தக்கதென்க.

இனித் தில்லைவாழந்தணருக்குச் சித்தாந்தசைவங்கிடையாதென்று பிரஸ்தாபித்த பூர்வபட்சியார் அவர்களுக்கு வேறு எந்தச்சைவத்தையாவது கூறித்தொலைக்காலாகாதா? ஒருசைவத்தையுங் கூறாமல் தம்மைப்போல அவர்களையும் அசைவரிலேயே நிறுத்திக்கொண்டார். அவர்கள் யாண்டும் அசைவராகாரென்க. சைவாசாரியர்களாகிய அன்னோர்க்கு இவர்சைவத்தை யொப்பாதது அவர்பாலொருகுறைவையு முண்டுபண்ணாதென வறிக. வேதமும், சிவாகமமுஞ் சிவோபாசனையையே கூறுகின்றன. வேதவழியானும், சிவாகமவழியானுஞ் சிவனைவழிபடுவோர் சைவரேயாவர். வேதம், சிவாகமம் என்னும் இரண்டையும் பரமாப்தராகிய சிவபெருமானே அருளிச்செய்தமையால் இரண்டுநூல்களும் பிரமாணமாக நிலைபெறும். ஆகையினன்றோ "வயந்துவேத சிவாகமயோர்ப்பேதம் நபஸ்யாமஃ— வேதோபிசிவாகமஃ" என்று ஸ்ரீபாஷ்யத்தில் ஸ்ரீநீலகண்ட சிவாசாரியசுவாமிகள் பிரகாசப்படுத்தி யருளினர். இவ்விருவித பிரமாணங்களால் வேதவழியினின்று சிவனைவழிபடுவதும், சிவாகமவழியினின்று சிவனைவழிபடுவதும் ஒன்றேயாகும். வேதத்திற் சுருங்கச்சொல்லிய விஷயத்தைச் சிவாகமம் விளங்கச்சொல்லியது. இரண்டுக்கு முள்ள பேதம் இவ்வளவேயாம். இவ்விரண்டு நூல்களில் எதனைக்கைப்பற்றுவோருஞ் சைவரேயாவர். வேதத்தில் சிவாகமத்தைப்பூஷித்தும், சிவாகமத்தில் வேதத்தைப்பூஷித்துஞ் சிவோபாசனையை இனிது போதிக்கு நலமுணர்ந்தவர்கள் எதனையுங் குறைகூறாரென்க. நமதன்பர் கூறியவாறு தில்லைவாழந்தணர்கள் வேதவழியினின்று சிவனை வழிபடுவாராகவே கொள்வோம். அதனால், அவர்கள் சிவாகமத்தின் வழியின்று சிவனை வழிபடவில்லை யென்று ஒருவராதுங்குறை கூறப்பெறுரென்க. அப்படியே சிவாகமவழியினின்று சிவனை வழிபடுவாரை அவர்கள் வேதவழியினின்று சிவனை வழிபடவில்லையென்று குறைகூறுவாரொருவரு மிரார். வேதவழி சிவாகமவழி என்னுமிருவித வழிகளினின்று சிவனை வழிபடுவான ஏனிவர்கள் இருவழிகளினுமின்றுசிவனை வழிபடுகின்றார்கள் என்று கடாவுவாருமில்

லை. இரண்டு நூல்களும் பிரமாணமாகையால், ஒன்றுக்கொன்று விரோதமாக இவ்விரு நூலையுங் கைக்கொண்டே தில்லைவேதியர் முதலியோர் சைவ வழிபாட்டிற்சிறந்து விளங்குதல் கண்டறிக. ஸ்ரீ சிதம்பராலய பூஜாபத்ததி (பதஞ்ஜலிபகவான்) செய்திருப்பதில் காமிகம், காரணம் முதலிய சிவாகமங்களைத் தழுவியிருக்கும் அருமையும், தில்லைவாழந்தணருட் சிறந்து விளங்கிய உமாபதிசிவம் வேதவழி சிவாகமவழிகளினின்று பிறழா வழிபட்டுச் சந்தாநாசாரியராய்த் தலைமை யெய்தியவராயமையும், அத்தில்லைவேதியர் பூசிக்கு மாலயம் சிவாகமசித்தமான த்வஜஸ்தம்பம் பலிபீடம் பஞ்சாவரணமுதலியவை கொண்டிருக்குமற்புதக்காட்சியும், அங்கெழுந்தருளியஸ்ரீநடராஜவள்ளல் சைவசித்தாந்த போதகமான பஞ்சகிருத்ய தாண்டவ மூர்த்தியாய் விளங்கு மதிசயப்பாடும், சிவாகம வழிபாட்டினைத் தில்லைவேதியர்க்குப் பிரதிபோதிக்க இடங்கொடுக்க மாட்டாவென்க. இவற்றை யுணராது தில்லைவேதியர் மகா சைவராகார் என்று நமதன்பர் கூசாதெழுதியது பெருவஞ்சமென்றறிக.

இனி, "ருஷயஸ்ஸாம்பவா:— பாசுபதா-மஹாசைவா-வேதாவதம்ஸம்-சைவம்பஞ்சாக்ஷரம்-தஸ்தாரகம்ஸப்ரணவம்-மோதமாநாஸ்திஷ்டந்தி" என்னுஞ் சுருதியானது இருடிகளும், சாம்பவர்களும், பாசுபதர்களும், மகா சைவர்களும் வேதபூஷணமான சைவ பஞ்சாக்ஷரத்தையே தாரகமாகப் பிரணவத்துடன் ஜபஞ்செய்துகொண்டு சந்தோஷத்துடன் வசிக்கின்றார்கள் என்றுகூறியிருத்தலால், இனியேனும் பூர்வபட்சியார் கண்ணைத்திறந்து பார்த்து நாணுவாராக. இந்தச்சுருதியில் மஹாசைவரது பிரஸ்தாபஞ் செய்யப்பட்டதன்றிச் சைவபஞ்சாக்ஷரப்பிரசங்கமுஞ் செய்யப்பட்டிருக்கின்றது. ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைச் சைவமென்று வேதம் கூறுவதற்கு இவரினிச்செய்வது யாதோ? பாசுபத மகாசைவாதிகளை வேதம்பூஷிப்பதுணராது தில்லைவாழந்தணருக்கு மகாசைவத்வங் கிடையாதென்று நமதன்பர் வாதிட்டது நமக்கு வேதவிசாரத்திற் கிடைத்த வற்பவறிவினையே விளக்கியதென்க. இன்னும் விரிக்கிற்பெருகும். இது நிற்க.

## சங்கராசாரியரது பிரஸ்தாபம்.

நமது நண்பர் சங்கராசாரியரை ஜகத்குருவென்று சாதிப்பதாகத் தொடங்கி "இவ்வுலகமெங்கும் அவர்க்கப்பெயர் பெருவழக்காக வழங்குவதொன்றும். பூர்வசாசனங்களில் நிலைபெறுவதொன்றும்



ஆங்கிலேய வரசினர்மதித்து வழங்குவதொன்றும். நாஸ்திகபௌத்தர் மகமதியராது மொத்துக்கொள்ளப் பட்டதொன்றும்" என்பனவாதி சில வரிகளை யெழுதி மகிழ்வெய்தினர். இவரெழுதிய வரிகளிவரது சொந்த வார்த்தைகளேயன்றி(இவர் பிரஸ்தாபித்த) பிராது வாக்கியங்களல்ல. ஆங்கிலேயர் கூறியவை இவை, நாத்திகர் கூறியவை இவை, புத்தர் கூறியவை இவை, மகமதியர் கூறியவை இவை என்று அவைகளைத் தனித்தனி யெடுத்துக்காட்டி ருசுப்படுத்தாமல் இஷ்டம்போலெழுதிக் கொள்வதானுலிவர் கையைப்பிடிப்பாரொருவருமில்லை. அன்றியும், ஒருவன் பிராமணவேஷம் போட்டுத்திரிந்து வருகையில், பிறரவனைத்தடுக்காதது கண்டு அவ்வேடதாரி(நம்மைப்பிராமணனென்று யாவரும் அங்கீகரித்துக் கொண்டார்களென்று) திருப்தியடைந்து மகிழ்வதே நமதன்பர் கூறியவிடைக்கு நிதரிசனமாம். இனி, ஞானமிர்தக்காரர் ஆதிசைவர்களையும் தில்லைவாழந்தணரையும் ஜகத்குருக்கள் என்று பிரஸ்தாபித்ததில், தில்லைவாழந்தணர்விஷயத்தில் நமது பூர்வபட்சியார் பூசல்கொள்ளாதொதுங்கியது எம்மோடிணங்கியதாக முடிந்தது. அது நிற்க, ஈண்டு ஆதிசைவர் ஜகத்குருக்களாயிருத்தலைப் பிரமாணவாயிலாக நிரூபிப்பாம். ஸ்காந்தம், சங்கரசங்கிதை, உபதேச காண்டத்தில் "த்வம்ஹி லோககுரு:" எனவும், "ததாத்வம்க்ருபயாவித்வந்.குருலோககுரூர்யத:" எனவும் போந்த வசனங்கள் அகஸ்தியபகவான் அமிர்தேசுவரரைப்பூசிக்கும் ஆதிசைவரைப் பார்த்துத் துதித்ததாகப் பெறப்படுகின்றன. வைதிகவாதம் புரியத்தொடங்கிய நமது பண்டிதர் வைதிகமாயுள்ள பிரமாணத்தைக்காட்டி வெளிவராமல் பயனில்லாததும், மதிப்பில்லாததும் ஆகிய வீண்சொற்களை விரித்து விருது கூறிக்கொண்டது விவேகிகளுக்கு நகைப்பையே விளைத்ததென்க. விரிக்கிற்பெருகும்.

இனி, ஞானமிர்தக்காரர் சங்கராசாரியர் ஜகத்குருவாகாரென்றது ஆதிசங்கராசாரியரை. அதற்கிறைதர வெழுந்த பிரமவித்தியாகாவலர் சிங்கேரிசங்கராசாரியரை அதற்கிலக்காகவைத்து விவகரிக்கின்றார். ஆதிசங்கரரோ மடம்புக்கு மானங்கொள்ளாதவர். அவரம்மடாபத்யம் நிஷித்தமெனவொதுக்கியவர். இவருக்குக் குறுக்குப்பல்லக்கு முதலிய குறுக்குவழிகள் கிடையா. இவரது பெருமையையெடுத்து விவகரித்து இவருக்கு ஜகத்குருவென்னும் பட்டத்தைப் பிரமாண வாயிலாகவும், யுக்தியநுபவவாயிலாகவுஞ் சாதிப்பதொழிந்து இவரதுபேரை யிரவலாகத் தாங்கித்திரியும் பிற்காலத்து மடாதிபதி

யொருவரை வலிந்துகொண்டு வந்து மானங்காக்க வழிதேடுதல் மரப
ன்றுமென்க. இவ்வொருமடாதிபதிதாமே சங்கராசாரியர் பேரைத்
தாங்கி வாழ்பவர்? கும்பகோண சங்கராசாரியர், புஷ்பகிரி சங்கராசா
ரியர், ஆவணி சங்கராசாரியர் முதலிய அநேக சங்கராசாரியர்கள்
உலகத்தில் பிரசித்தி பெற்றிருக்கிறார்கள். இவருள் ஒருவருக்குள்ள
பிருது மற்றொருவருக்குக்கிடையாது. சிங்கேரி சங்கராசாரியர் ஏனை
ய சங்கராசாரியர்கள் தமக்குக் கீழிட்டவர்களென்று வாதிட்டு மலைகி
ன்றார். கும்பகோணசங்கராசாரியர் தாமே முதல்வரெனவும், ஏனைய
சங்கராசாரியர்கள் தமதுசிஷ்யர்களெனவும் வழக்கிட்டுவருகின்றார்.
இந்தச் சங்கராசாரியர்களது சண்டையானது, இன்னுந்தீராமலிருக்
கின்றது. இங்ஙனமாக, இவருள், எந்தச்சங்கராசாரியர் முதல்வர் எ
ன்று வழிதேடி மானங்காத்தலொழிந்து ஏனைய சமயமடாதிபதிகளை
யெல்லாம் அந்நியாயவழியிலிறங்கித் தூஷிக்கத்தலைப்பட்ட பூர்வப
ட்சியினது விவேகத்துக்கு யாம் அதிகமாகத் துக்கிக்கின்றோம். இவ
ர் சங்கராசாரியரது மடத்து வீதிவழியாக வேறு மடத்தார் விருது
கூறிக்கொண்டும் பல்லக்கின்மீதேறிக்கொண்டும் வரக்கூடாதென்ப
தும் அவர் குறுக்குப்பல்லக்கிட்டு வரும்போது எதிர்ப்பல்லக்கிட்டு
ஒருவரும் போகக்கூடாதென்பதும் ஏனையசமய மடாதிபதிகளிடத்
து மாத்திரஞ் செல்லாமல் சங்கரமடபதிகள் யாவரிடத்துஞ் சேர்ந்
து வியாபித்தலால், நமதன்பரது ஆசை அவமதியாய்த்தொலைந்தது.
கும்பகோண சங்கராசாரியர் மடத்துவாசல் வழியாகச் சிங்கேரி சங்
கராசாரியர் குறுக்குப்பல்லக்கிட்டு விருது கூறிக்கொண்டு போகக்கூ
டாது. இதனை விசாரித்துணர்க. இப்படியே யொவ்வொரு மடத்தா
ரிடத்துங்காண்க. சங்கராசாரியருக்குக் கௌரவம் உண்டுபண்ண வே
ண்டுமானால், எல்லாச் சங்கராசாரியர்களுக்கும் சமமரியாதையுண்டா
யிருத்தலைக்காட்டிவெளிவரவேண்டும். அந்தச்சங்கராசாரியர்க ளொ
வ்வொருவருந்தாங்கடாங்களே முதல்வரெனவும்,ஏனைய சங்கராசா
ரியர்கள் கற்பிதமடாதிபதிகளெனவுங் கூறுதலால்,எல்லாச்சங்கராசா
ரியர்களும் கற்பித மடத்தர்களென்பதே துணிவென்றறிக. அம்மட
பதிகளுக்குள்ள லௌகிககௌரவம் அவர்களை அவர்கள் காலத்தில்
அபிமானித்திருந்த வபிமானிகளா லுண்டாயதென்பதே சித்தம். பூ
ர்வத்தில் எத்தனை வித்துவான்கள் விருதுகளுடன் பல்லக்குகளிலே
றித் திரிந்திருக்கிறார்கள்? அவர்களுக்குப், அவர்களது காலங்களில்
அவர்களை அபிமானித்திருந்தவர்களால் சம்மானங்கள் நடந்ததுண்
டாகையால், சங்கரமடபதிகளுக்கே எல்லாவுயர்வு முண்டெனவாவ



து, அவருள், சிங்கேரிமடாதிபதிக்கே ஆதிக்கம் சிறந்திருக்கின்ற தெ
னவாவது, நமதன்பர் கூற முந்துவது அவருக்குப் பரிபவத்தைத் த
விர வேறொன்றினையு முண்டு பண்ணாதெனவறிக.

நமதன்பர் கூறியபடி மொத்தத்தில் சங்கராசாரியர் ஜகத்குரு
வாயிருந்தால், சிங்கேரி சங்கராசாரியர், கும்பகோண சங்கராசாரியர்
கள், காஞ்சிபுரம்,சிதம்பரம், திருத்தணிகைமுதலிய விடங்களில் அ
ங்குள்ள ஆதிசைவ மஹாசைவர்களால் பரிபவப்பட ஆவசியகமி
ல்லை. அவ்வாலய பூஜகர்களிடத்தில் சங்கராசாரியரது ஜகத்குருத்வ
ம் செல்லாதொழிந்தமையானும், பெருமாள் கோயில்களுக்கு இச்ச
ங்கராசாரியர்கள் போயிருந்த காலங்களில் இவர்கள்தலையில் அங்கு
ள்ள அர்ச்சகர்கள் சடகோபம்வைத்து ,இவர்களுக்குத் தாங்கள் வி
யாப்பியர்க ளென்பதை மறுத்து வியாபகர்களாதலை வெளிப்படுத்
திக் கொண்டமையானும், சங்கராசாரியர் ஜகத்குருவென்று துணி
வாரதுமதம் துணிக்கப் பட்டொழிந்தது.

இன்னுமிவர், 'இராஜாதி ராஜகுரு பூமண்டலாசாரியர்,' என
வும், 'ஷட்தரிசன ஸ்தாபனாசாரியர்' எனவும் சங்கராசாரியரைப் பூஷி
த்துக் கொண்டார். எந்த இராஜனுக்கோ சங்கராசாரியர் குருவாயி
ருந்தனர்? ஸ்ரீஜ்ஞானசம்பந்தசுவாமிகள் "இராஜாதிராஜபாண்டிய
மஹாராஜகுரு" என்று படிக்கப்பட்டிருத்தல்போல எடுத்துக்கா
ட்டினன்றோ சனம்பெறும்? இப்பரமகுருநாதரேயன்றோ "பரமத
களபகேசரி ஷண்மதப் பிரதிஷ்டாபகாசார்யர்" என்று உலகந்து
தித்துக் கொண்டாடும் பெருமை தாங்கித் தெய்வப் பெருமானையெ
ழுந்தருளியிருக்கின்றனர். சர்வஜ்ஞ பீடாரூடரும், ஸ்ரீஜகத்குருவும்,
ஜ்ஞான விஜ்ஞான சக்ரவர்த்தியுமா யெழுந்தருளிய வெம்பெருந்த
கையினது அருளதிசயத்தை யன்புடனநுபவிக்கும் பரிபாகம் வந்த
காலத்தில் அவ்வருளாளரைச் சங்கராசாரியர் துதித்துய்ந்த வாய்
மை நலத்தையுலகமறியுமே, இவற்றை யோராது அளவுக்கதிகமா
கச் சங்கராசாரியரை நமதன்பர் புகழ்ந்தது அவலமாயினதறிக.
சங்கராசாரியர், "நசைவம் நசாக்தோ நவிஷ்ணூர்க் கணேசோ, ந
ஸௌரஞ்சகாபாலிகமதர்சநம்வா, மதம்ஸர்வமேகம் ஜிதம் கர்மக்ருத்
யம், சிதாநந்தரூபஸ் ஸிவோஹம் ஸிவோஹம்" என்று கூறி, சை
வம் சாக்தேயம் வைஷ்ணவம் காணபத்யம் கௌரவம் காபாலி
கம் என்னும் ஷண்மதங்களையுந் தூஷித்து, மலப் பசுவாகிய தன்
னையே சிவமாகவெண்ணி யிறுமாந்த வதிசயமுணர்ந்தார்க்கு அ

ச்சங்கராசாரியரை நமதன்பர் காட்டிய பிருதாவளியி லுள்ள வாறு, ஷட்தரிசனஸ்தாபனாசாரியர் என்று ஒப்புதல் யாங்ஙனங்கூடும்? ஷண்மதங்களையும் பொய்பொய்யென்று கூறிச் சூனியவாதத்திலிழிந்த மாயாவாத சித்தாந்தியை ஷட் தரிசன நிந்தகாசாரியர், என்று புகழ்வதே யினியமையுமென்க. இவ்வாறு சங்கரரையே பூமண்டலாசாரியர் என்று புகழல் நிழுப்பிலிருப்பதறியாது நமதன்பர் சிங்கேரியாரையன்றோ அவ்வாறு கூறுவதாகப் பிருதாவளி காட்டினர். அச்சிங்கேரியாராவது, கும்பகோணத்தாராவது வேறுயாராவது யாருக்கேனும் உபதேசாதிகள்செய்து தமது ஆசாரியதர்மத்தைப் பரிபாலித்துவருகின்றார்களா? உலகத்துக்குப் பொதுவாய்க் குருபதேசஞ் செய்யாதொழியினும், அச்சங்கராசாரியர்களை ஜகத்குருவென்று கொண்டாடி மகிழும் ஸ்மார்த்தர்களுக்கேனும் உபதேசம் புரிந்து வருகின்றார்களா? ஸ்மார்த்தரென்று தங்களைக் கூறிக்கொள்வார்க்கெல்லாம் பிரஹ்மோபதேசம் செய்வார் அவரவர்களது பிதாக்களேயாம். சங்கராசாரியரது உபதேச மொருவருக்குமின்றென்பதே சத்தியம். அன்றியும், இச்சங்கராசாரியர்,"குருர்நைவசிஷ்ய:"என்று கூறினவராகையால் இவரைக் குருவாயெண்ணுஞ் சிஷ்யர்களிவரது மதத்துக்கு நேர்பங்கம் தேடினவர்களாகின்றனர். இன்னுமிவர் "ந மேஜாதிபேத:" என்று நாட்டியதுமன்றுமி யாகையால், ஜாதியொழிப்பும், அதுவே மோக்ஷம் என்று சொப்பனங் கண்டுகொண்டிருக்கும் பிராஹ்மணர்கள் அச்சங்கராசாரியர்களுக்குச் சிஷ்யராயிடுதல் நமது பிராஹ்மண சாதிக்குக் கேடு தேடிக்கொண்டதாகவே முடியுமென்க.

இச்சங்கராசாரியர் ஜாதிபொய், சமயம்பொய், தெய்வம்பொய், வேதம்பொய், குருபொய், சிஷ்யன்பொய், உலகம்பொய், எல்லாம் பொய்யென்று வாதிட்டு வரும் வழக்கை யுணர்ந்தார் இவரைப்பொய்யாகிய ஜகத்துக்குப் பொய்யாகிய குருவென்னுது வேறுயாதாக்கூறத்துணிவர்? உலகம் மிச்சையாகையில், அதற்குக் குருவாவாரும் மிச்சாகுருவாயிடுதல் சத்தியமாகின்றமையால், நமதன்பர் சங்கராசாரியரைப் பொய்க்குருவென்று சாதித்ததாகவே முடிவுநேர்ந்திடலாயிற்று. இதனால், நமது பிரமவித்தியா நாவலர் சிங்கேரியாரது பிருதாவளியை வேதத்தினும் அதிகமானதாக மதித்துப் பிறருக்குப் பூச்சிகாட்டி, "பூமண்டலாசாரியர்" என்று அவரைப்புகழ்ந்தது பயனில் சொல்லாய் முடிந்ததுணர்க. இது நிற்க.



## பிரமவித்யா நாவலர் தந்திரம்.

இப்பிரமவித்தியா நாவலர் தமது பேரைக்காட்டாமல் "ஓர் நாவலர்" என்று மறைந்து விவகரித்ததை யுடனே மறந்து, சிங்கேரியார் தமக்கெழுதிய பிருதாவளி சகிதமான கடிதத்தைத்தமது பிரமவித்தியாவின் முதற்பக்கத்திற் பதித்திருப்பதைப் பிரஸ்தாபித்து, "அதனை இப்பத்திரிகையின் முதற்பக்கத்தில் பதித்திருக்கின்றோம்" என்று கௌரவம் பாராட்டியது இவர் கரந்துரை யாடியதைக் காட்டிக்கொடுத்துவிட்டது. இவர் முதல் ஒரு தீக்ஷிதருக்குச் சிஷ்யராக வெளிப்பட்டார். இரண்டாவது ஓர் நாவலராக வெளிவந்தார். மூன்றுவது ஓர்சித்தாந்தி என்று சாதித்தனர். நான்காவது நியாயவாதியென்று தலைகாட்டினர். இவருள், தீக்ஷிதரது சிஷ்யரை முதலிலேதானே விசாரித்துக்கொண்டோம், இப்போது நாவலரை விசாரித்து வருகின்றோம். இந்த விசாரணை தீர்ந்தபின்னர், சைவசித்தாந்தியையும், நியாயவாதியையும் விசாரியாமல் விடோம். இவருள், நாவலரதுவிருத்தாந்த மதிகமாகையால், அதனை யின்னுங் கொஞ்சமெடுத்து விசாரிப்பாம்.

## ஆதிசைவர் மஹிமை.

இவர் "தில்லைவாழந்தண முனீந்திரர்களும், ஆதிசைவரும், மடாதிபதிகளன்றே" எனவொன்று கூறினர். இவருள், தில்லைவேதியர்கள் ஸ்ரீ நடராஜபதியினது திருக்கோயிலையே தமது திருமடமாகக்கொண்டவர்கள்.

இனிச் சிவவேதியர்கள் அமர்த்தகி, கோளகி, ரணபத்திரம், புஷ்பகிரி என்னு நான்கு மடங்களுக்கு அதிபதிகளாயுள்ளவர்கள். இத்திருமடங்கள் மந்தானகாளீசம் என்னும் பதியிலுள்ளன. இவர்கள் ஜகத்குருக்களாயிடுதலை மேலே விரித்திருக்கின்றோம். இவர்களை ஜகத்குருவாகக் கொள்ளாத பட்சத்தில் இவர்களது பூஜார்ஹத்வமெய்திய சிவாலய சேவைகளை விரும்பிச் சங்கராசாரியர்கள் கோயில்களுக்குப் போகக்கூடாது. அச்சங்கராசாரியரது சிஷ்யர்களாகிய ஸ்மார்த்தர்களுந் திருக்கோயில்களுக்குப் போய்ச் சிவாசாரியர்களுக்கு முன்னின்று விபூதிப்பிரஸாதத்துக்குக் கையேந்துவதுகூடாது. அவர்கள் பூசிக்கும் சுவாமியை வணங்கிக் கதிதேடுவதுங் கூடாது. அவர்களுக்குச் சிஷ்யர்களாயிருந்துகொண்டே குருக்களாகிய அவர்களுக்கு நாமம் போடப்பார்க்கும் நமது ஸ்மார்த்த நண்பர்களது அறியாமை அந்தோ கொடிது! கொடிது!! இது நிற்க.

இந்த நாவலர் "சைவசமயாசாரியரும், ஆதிசைவசிலருமாகிய ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகளே தில்லைவாழந்தணர்த மடியார்க்கு மடியேன்" என்று துதி கூறியமையால், அவ்வைதிகசிலர் திருவடி முடிமேற் சூட்டிவணங்கற்குரியார்" எனவொன்று கூறினர். தில்லைவேதியர் வைதிகசைவரேயன்றிக் கேவலம் வைதிகரன்று. அங்ஙனங்கூறின், நாத்திகத்வமே அவர்பாலெய்தும். இதனுண்மையை மேலேவிரித்திருக்கின்றாம். இனி வைதிக சைவமணிகளாகிய 'தில்லைவாழந்தணர்களை ஸ்ரீ சுந்தரமூர்த்திகள் துதித்ததனால், ஸ்ரீ சுந்தரமூர்த்திகளுக்குக் குறைவொன்று முண்டாயினதில்லை. தில்லைவேதியரைத் துதித்ததுபோல் "திருநீலகண்டத்துக் குயவனார்க்கடியேன்" என்றுந் துதித்தமையால், தில்லைவாழந்தணருக்குத் தாழ்ந்தவர் ஸ்ரீசுந்தரமூர்த்திகளாகிய ஆதிசைவரென்னும் வாதம் அடிபட்டுப்போய்விட்டது. வேதியரல்லாத ஸ்ரீமத் அப்பர்சுவாமிகளது காலில் வேதியராகிய அப்பூதியடிகள் வீழ்ந்து வழிபட்டனர். வேதியரல்லாத திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கு வேதியராகிய திருநீலநக்கர் தமது திருமாளிகையாகசாலையில் விடுதிவிட்டுப் புனிதராயினர். இவ்வாறுண்டாகிய சிவனடியார்களது வைபவங்களை யெடுத்துக்கூறி, ஒருவரிலொருவருயர்ந்தவர் தாழ்ந்தவரென்று புரியும் வாதம் பாவத்தழும்பேறினவர்க்கு மாத்திரமே பயன்படத்தக்கதென்க. பெரியபுராணத்தில் "ஆளானவன்றொண்ட ரந்தணர்டாம்போற்ற வமர்ந்துவைகி" என்று பெறப்பட்ட வாக்கியத்தால் ஸ்ரீசிதம்பரத்துக்கு எமது வன்றொண்டப்பெருமானெழுந்தருளிய காலத்தில் ஆதிசைவப் பெருந்திருவாளராகிய அவரது திருவடிகளை ஸ்ரீ தில்லைவாழந்தணர்களிறைஞ்சினார்களென்று போந்ததனை யிவருணராதது என்னே? தில்லைவேதியர்கள் வன்றொண்டரை வணங்கியதும், வன்றொண்டப்பெருமான் அத்தில்லைவேதியரைத் துதித்ததும் அன்னோர்பானிகழும் அன்பினியற்கைக்குரிய விசேடமாமென்க.

இனி யொன்று சொல்லுகின்றாம். ஸ்ரீசுந்தரமூர்த்திகள் திருத்தொண்டத்தொகையிற் றுதிக்கப் பெற்றவர்களே தனியடியார்கள் அறுபத்துமூவரும், தொகையடியார்கள் ஒன்பதின்மருமாம். ஸ்ரீசுந்தரமூர்த்திகள் துதியாதபோது எழுபத்திருவருமில்லாதவரேயாவர். தனியடியார்கள் தொகையடியார்கள் என்று உலகங்கொண்டு வணங்கி யுய்யுமாறு அருளிய திருத்தொண்டத்தொகையிற் சேர்ந்திருப்பதுகொண்டே தில்லைவேதியர் பூஜ்யராயினர். எம்பெருமானருளா



தபோது ஏனைய வேதியரோடுதானே அத்தில்லைவேதியரு மெண்ணப்படுவரென்க. இத்தில்லைவேதியரைத் தில்லைப்புராணங் கூறுமுகத்தானறிந்து உலகம் வழிபடுதலே நியமமெனின், அது கூடாது. சிவக்ஷேத்திரங்கள் பலவுந் தனித்தனிப் புராணங்களைக்கொண்டு பொலியு மியல்பினவாயினும், தேவாரப்பதிகம் பெறாத க்ஷேத்திரம் கனம்பெறா தட்குமாறுபோலத் திருத்தொண்டத்தொகையா னெடுத்துக்கூறாதபோது தில்லைவேதியர் மான்மியம் உலகிற்பரவுவது அரிதேயாமென்க. அன்றியும் அத்தில்லைப்புராணம் இவ்வேதியர்களை அறுபத்து மூவரோடினப்பட்ட தொகையடியாருட் சேர்த்துக்கூறியது மின்றெனவறிக. திருச்செந்தூர்ப் புராணத்தில் முக்காணியர் என்று கொண்டாடப்பெறும் இரண்டாயிரம்வேதியர் தன்மையோடுதானே இத்தில்லைவேதியருஞ் சேர்ந்து மணம் பெறுவரென்க. இதனைப்பரியாலோசிக்குஞ் சாதுக்கள் தில்லைவேதியரை ஸ்ரீசுந்தரமூர்த்திகள் துதித்தமையால் அச்சுந்தர மூர்த்திகள் குறைந்தவரென்று பிரசங்கித்த பிரம்வித்தியா நாவலர தறியாமைக்கு இனி வருந்தாமற் போகாரென்க. விரிக்கிற் பெருகும். இது நிற்க.

## சைவமடம் அநாதியெனல்.

இப்பிரமவித்தியா நாவலர் சங்கராசாரியர் காலத்தில் சைவர் வைணவர் முதலிய எந்த மடாதிபதிகளு மிருந்ததில்லை யெனவும்; சங்கராசாரியருக்குப் பின்னரே எல்லாச்சமய மடங்களுமுண்டாயினவெனவும், அவர் காலத்து அவரை யெதிர்க்குஞ் சைவவைணவமடபதிக ளிருந்ததில்லை யெனவும், அப்போதிருந்த சிலசைவரும், பிறரும்தமக்கு நாத்திகர், புத்தர் முதலினோராலுண்டாகிய துன்பத்தைக் களையுமாறு சங்கராசாரியரை வேண்டிக்கொண்டார்களெனவும்; அவ்வாறே சங்கராசாரியர் செய்து காத்தமையால், அன்னோர் சங்கராசாரியரை ஜகத்குருவென்று துதித்து வணங்கினார்களெனவுங் கூறி, வெறும் வாயை மென்று விழலராயினர். இனியிதனை மறுத்திடுவாம். சங்கராசாரியர் ஸ்ரீ நீலகண்ட சிவாசாரிய சுவாமிகளுடன் வாதுக்குச்சென்று அபஜயமடைந்து தமக்கு உபாசனா தெய்வமாகிய நரசிங்கமூர்த்தியைத் தியானித்தலும், அந்நரசிங்க மூர்த்தி உக்கிரவடிவத்துடன் சைவாசாரியரை யணுகினரெனவும், அப்போது சைவாசாரியர் ஸ்ரீ சரபமூர்த்தியைத் தியானித்தலும், அச்சரபமூர்த்தி கோரரூபத்துடன் நரசிங்கத்தை யணுகினரெனவும், அப்போது நரசிங்கமூர்த்தி சரபமூர்த்தியினது திருவடிகளைத் தஞ்சம் என

று அடைந்தாரெனவும், அதுகண்ட சங்கராசாரியர் சிவாசாரியார் பாதங்களில் தஞ்சம் என்றுவீழ்ந்து உய்ந்தாரெனவும் ஸ்ரீ நீலகண்டவிஜயத்திற் கூறப்பட்டிருக்கின்றது. பண்டிதவிஜயத்தில் ஸ்ரீ பண்டிதாராத்யரிடம் சங்கராசாரியர் வாதிற்றோர்த்துப் பரிபவமுற்றாரென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இன்னனபலவுள. இவற்றைத் தெளிந்தா ரவைக்கண்ணே நமதன்பரது பிரசங்கம் மணம்பெறு தென்க. சிவாசாரியர்களது மடங்கள் அநாதியென்பதை முன்னர் வெளிப்படுத்தினும். ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகள் காலத்தில் புத்தர்வலிகுன்றியது. ஸ்ரீஜ்ஞானசம்பந்த சுவாமிகள் காலத்தில் சமணர்வலிகுன்றியது. இப்பரமாசாரியர்களது பேராற்றலின்முன் னில்லாமலன்றே யொதுங்கின புத்தம் சமணம் என்பதுலக மறியும். இவ்வுண்மை புராணப் பிரஸித்தம், இவருள், திருஞானசம்பந்த சுவாமிகள் சம்பந்தமான திருமடமொன்று அநாதியே யுள்ளது. அதன் பரம்பரை நாளதுவரையில் விர்த்தியாய்க்கொண்டுவருகின்றது. இவ்வுண்மைகளுக்கு விரோதமாகச் சங்கராசாரியர் காலத்தில் எந்த மடங்களு மில்லையென்றிவர் தொடுத்த பொய்க்கு எம்மால் கூலி கொடுக்க முடியாது. இது நிற்க.

இவர், சைவர் சிலர் புத்தர் முதலியோரால் துன்புற்றிருந்ததைச் சங்கராசாரியர் தவிர்த்துச் சைவர்க்குபகரித்தாரென்றதும் வெறும் பொய்யேயாமென்க. அச்சங்கராசாரியர் மலப்புழுவாகிய ஜீவனையே பரம் என்று மயங்கிச் சஞ்சரித்தவர். இவரது மதம் தெய்வசம்பந்தொழிந்த நாத்திகமாயுள்ளது. இவர் நாத்திகருட்கொஞ்சம் தெளிவெய்தியவர். இவரைக் காட்டிலுமெத்தனையோ பங்கதிகமானவர்கள் வைணவர். மாத்துவர் முதலியோர். இவர் தமது நாத்திகத்தை அப்படியே கொண்டு விவகரித்து வருவாராயின், இவரைப்புத்தர் சமணருக் கதிசயமாக வொவ்வொருவருங் கொள்ளார் இவர் வேதத்தைப்பிரமாணமாகத்தழுவியும், பஸ்மருத்திராக்ஷங்களைத் தரித்தும் இராமகிருஷ்ண கோவிந்த நாமங்களை யுச்சரித்தும் யாம் வைதிகரென்று வெளிப்பட்டு வேதத்துக்கு அபார்த்தங்கள் புரிந்து திரிந்தமையால், சைவ வேடத்தைக்கண்டு சாமான்ய சைவர்களும், விஷ்ணுநாமங்களைக்கேட்டுச் சாமான்ய வைணவர்களும், வேதந்தைத்தழுவுதலை நோக்கி யேனைய சாமானியர்களும் மயங்கி, இவர் மயக்கிற்றலைப்பட்டுக் கெடநேர்ந்தது. இச்சங்கராசாரியர் எவ்வளவோ கஷ்டப்பட்டுத்தமது ஏகான்ம வாதத்தைச் சாதித்து மிவரை ஜகத்குருவெ



ன்று கொண்டாடும் ஸ்மார்த்தர் பரவிநிறைந்துள்ளது முறையாக எங்கள் ஞானஸம்பந்தப் பெருமானார் திருத்தி யருளிய பஸ்மாவைத் தவிர வேறொன்றுங் காணேம். சங்கராசாரியரது மதம் நிலைபெற வேண்டின், பஸ்மருத்ராக்ஷ தாரணம், சிவாலயசேவை, சிவபூஜை, ஸ்ரீபஞ்சாக்ஷர ஜபம் முதலிய சைவதர்மங்களொழிந்து அஹம்பிரஹ்மவாத மொன்று மாத்திரமே செய்திருத்தல் வேண்டும். அங்ஙனமின்மையால், எமது சைவத்திருவாளர் நாட்டிய வைதிக சைவமே யுலகமெங்கும் பரவி யிருத்தல் கண்டு நமதன்பரினியேனு மடங்கி வாழ்வாராக. இது நிற்க.

## ஞானசம்பந்தப் பெருமானது மகிமை.

இவ்வஸம்பாவித நாவலர் சில வினாக்கள் வினவித்தருக்கினார். அவற்றிற் கெல்லாம் விடைகூறுவது அநாவசியமாம். அவை பூர்வபக்ஷி யெடுத்துக் கொண்ட விஷயத்தோடு சம்பந்தியாத வீண்கேள்விகளாயிருத்தலால், அவர்போன்றுயாமுஞ் சில கேள்விகள் அவரைக்கேட்டு ஒழிப்பதே யாம் அவருக்குத் தாத்தக்க விடையாம். ஆயினு மவ்வினாக்களுள், முதல்வினா எங்கள் ஞான சம்பந்தப் பெருமானைத் தொடர்ந்திருத்தலால், அதற்கு சண்டிறைதந்து பின்னரெமது கேள்விகளை விடுப்பாம்.

இவர், திருஞான சம்பந்த சுவாமிகள் சைவசமயாசாரியரன்றெனவும், அவரை வைதிக சமயாசாரியரென்று வைதிகர்கள் சொல்லுகிறார்களெனவும், அவ்வாறே பெரிய புராணமும் மோதுகின்றதெனவும், அவருக்கு வேதோக்தமான அநுஷ்டானமே யன்றி ஆகமாநுஷ்டானம் யாண்டாயினுங் கூறப்பட்டுள்ளதா எனவும், அவர் ஆதிசைவ மகாசைவ குலத்தவருமன்றெனவும், அவரது தந்தை முதலியோர் வைதிகர்களெனவும், ஆகையால், அவரை வைதிகரென்றுது சைவரென்று கூறுதல் பிசகெனவும் பிரசங்கித்தனர்.

இவர் ஊராருடைமைக்குப் பேயாய்ப் பறக்கின்றார். எமது அப்பனுகிய சம்பந்தனை இவர் களவாடப் பார்ப்பது அழகாயுள்ள ஒருபுருஷனைச் சுட்டி, இவன் என்மாப்பிள்ளையென்று அவனது மனைவியிடஞ் சண்டை பிடிக்கத் தொடங்கிய ஒரு மூடஸ்திரீயின் செய்கையையொத்திருக்கின்றது. இனி யிவரது புன்மொழிகளை மாற்றி யெமது நன்மொழிகளை யினிது நாட்டுவாம்.

எமது பிள்ளையாரை வைதிக சமயாசாரியர் என்று வைதிகர்கள் கூறுவாராயின், அவ்வைதிகர் சிவோபாசனை மேற்கொண்ட வைதிகராயிருத்தல் வேண்டும். அப்போது அவர்கள் கேவலம் வைதிகராகாமல் வைதிகசைவர் ஆயிருத்தல் மரபாமென்க. இவ்வாறு கோடலின்றிப் பிள்ளையாரைப் போனிவாழ்பவர்களைக் கேவலம் வைதிகரென்றது அசங்கதமென்க. சைவமணம் வீசாத வைதிகம் நாஸ்திக வைதிகமேயாம். எங்ஙனமெனின், வேதத்தில் காலமே கடவுளெனவும், கருமமே கடவுளெனவும், சீவனே கடவுளெனவும், பிறபொருள்களே கடவுளெனவும் போந்த பகுதிகள் பூர்வபட்ச நிலையிற் பொருந்தியுள்ளன வாகையால், அவற்றைத் தனித்தனியே பொருளெனக்கொண்ட காலவாதிகள், கருமவாதிகள், ஆன்மவாதிகள் முதலினோரும் யாம் வைதிகரென்று திரிகின்றார்கள். இந்நாத்திக வைதிகருளொருவராகவே நமது பிரமவித்தியா நாவலர் சேர்ந்திருக்கின்றனர். இவரால் வைதிகரென்று கொண்டாடத் தக்கவர்களிவரினத்து வைதிகராயிருத்தலி லொழுக்காகாது. இவை வேதத்திற் பூர்வபட்சம், இனி வேதத்திற் சித்தாந்த மாயுள்ளது சிவோபாசனை யொன்றேயாம். "சிவஏகோத்யேய:" என்னுஞ் சுருதியே அதனை நிறுத்தும். இஃதோருபாசனையைக் கூறும் முடிவே ஆஸ்திக வைதிகமாமென்க. ஏனைய வழிபாடுகள் வேதத்திற் பெறப்படினும், அவைபூர்வபட்ச நிலையிற் போந்தமையால் அவற்றை வைதிகமென்றிடலாகாது. சித்தாந்தமாகச் சிறந்ததொன்றே வைதிகமாயிருத்தல் சித்தம், அதனைத்தனியே வைதிக மென்றது ஏனைய பூர்வபட்ச வைதிகத்தினின்றும் பிரித்துக் காட்டவே வைதிகசைவம் என்று உண்மை நூல்கள் கூறுமென்க. இதனானே வைதிகசைவர் தன்மை இனிது வெளியாகியதுணர்க. இவ்வுண்மையால், ஞானஸம்பந்தப் பெருமான் பிரமவித்தியா நாவலரும், அவரினத்தவருங் கொண்டாடத்தக்க வைதிக சமயாசாரியா ரன்றெனல் வெளிப்பட்டது. இனி அவரை வைதிக சமயாசாரியரென்றிடல் பொருந்தாதோ வெனின், வேதத்திற் போந்த பூர்வபட்சங்களைக் கழித்துச் சித்தாந்த பாகத்தை மேற்கொண்டு சிவோபாசனையிற் சிறந்து விளங்கிய வைதிக சிலர்க்கே அவ்வெம்பெருமான் வைதிக சமயாசாரியாராகலா மென்க. இவ்வைதிகர் தம்மை வைதிக சைவரெனவும், சைவரெனவுங் கூறிமகிழ்வ ராகையால், இவர்கள் வாழ்த்தும் பரமாசாரியரும் வைதிக சைவ சமயாசாரியரெனவும், சைவ சமயாசாரிய ரெனவுங் கொண்டாடப் பெறுவரென்க. இனி யிதனைப் பிரமாணவாயிலாக கண்டு நிரூபிக்கின்றோம்.



ஹாலாஸ்ய மாஹாத்மியத்தில், "மைத்யேசக்ஷபஞசார்ய. வைதிகாசார்யவர்யயோ:" என்னும் வசனமும், "ஸோபிவைதிகதேசிக:" என்னும் வசனமும் எமது காழிப்பிள்ளையார் வைதிக சமயாசாரிய சிரேஷ்டரென்பதைத் தெரிவித்தன. இவ்வைதிகம் சிவ சித்தாந்தத்தோடு கூடியதென்பதை, "சருத்யுக்தசைவ ஸித்தாந்தரு, ப்யந்த்ய மேஷ்யத்யஸம்சய:" என்னும் வசனம் தெரிவிக்கின்றது. இந்த வசனத்தால் வைதிக சைவத்தின் வாய்மை வெளியாகியது. இதனால், எம்பெருமான் வைதிக சைவசமயாசாரிய ரெனல் வியக்தமாகியது. இனி, "சைவசித்தாந்தி நாஸோக்யமகரோத்" என்னும் வசனமும், "சைவசித்தாந்திநாம்பீரேஷ்ட: சைவாசார்யஸ் சபுத்திமாங்" என்னும் வசனமும் எமது பிள்ளையார் சிரேஷ்டமான சைவசித்தாந்தியும், சைவ சமயாசாரியத் தலைவருமாயிருத்தலைத் தெரிவிக்கின்றன. அன்றியும், "விதாயசாக்ஷி-வஷீம்தீக்ஷாம், குப்ஜபாண்ட்யஸ்யதஸ்யது" என்னும் வசனமானது பிள்ளையார் கூன்பாண்டியனுக்குச் சிவாகம சித்தமான சாக்ஷூ-தீக்ஷையைச் செய்து உய்வித்தருளிய (சிவாகமாசாரம் மேற்கொண்ட) தன்மையை வெளிப்படுத்தியது. தத்தேசஸ்தஜநாஸ் ஸர்வே சிவஸித்தாந்தமாபீரிதா:" என்னும் வசனமானது "யதாராஜா ததாப்ரஜா" என்கிறபடியே பாண்டிநாட்டவர்கள் பாண்டியர் பெருமான் கைப்பற்றிய சைவ சித்தாந்தாசரணர்களா யொழுகிய நலத்தை இனிது விளக்கியது. இவ்வளவி லமையாமல் "ஸ்வாமிந்ஸர்வஜ்ஞமந்நாத ஜதந்நாத ஜகத்குரோ" என்னும் வசனமானது அப்பரமகுருநாதரைச் சுவாமியெனவும், சர்வஞ்ஞரெனவும், ஆத்மநாதரெனவும், உலகத்துக்கு நாயகரெனவும், ஜகத்குருவெனவும் பிரசித்தப்படுத்தியது. இன்னுமவர் ஜகத்குருவென்பதை "பத்ராஸநம்ஸமாரோப்ய பத்ராகாரம் ஜகத்குரும்" என்னும் வசனம் நிறுத்தியதுணர்க.

இம்மட்டோ, "ஜ்ஞாநஸம்பந்தபகவாந்" எனவும் "ஜ்ஞாநபூர்ணஞ்சஸர்வஜ்ஞம்" எனவும் போந்த வசனங்கள் ஞானசம்பந்தரைப் பகவான் எனவும் ஞானபூரணரெனவும், சர்வஞ்ஞரெனவும் பிரகாசப்படுத்தின. இவ்வருளாளரது பெருமையை யுணராமல் சங்கராசாரியரை ஜகத்குருவெனவும், வைதிக குருவெனவும், அவர்போன்றவொரு வைதிகர் ஞான சம்பந்தரெனவும் நமதன்பர் கொண்டிருந்த மயக்கம் இன்றோடே விட்டுத்தொலைந்ததென்க. அன்றியும், மேலுதகரித்த ஹாலாஸ்ய வசனங்கள் ஞானசம்பந்தருக்குச் சிவாகமாநுஷ்டானம் உண்டாவெனவும், அவர் மஹாசைவகுலத்தவரா ம

னவும் நமதன்பர் விடுத்த கடாக்ஷங்களெல்லாம் வீழ்த்தி வைத்துவிட்டனவென்க. இதனையிவ்வளவில் நிறுத்திச் சேக்கிழார் பெருமான் திருவாக்கினையும் கண்டு விசாரித்து, எமது பக்ஷத்தை நிறுத்துவாம்.

நமது பிரமவித்யா நாவலர் (பெரியபுராணமும் பிள்ளையாரை வைதிகரென்றே கூறுகின்றதெனவும், அப்பிள்ளையாரது தந்தை முதலினோரும் வைதிகரே யாமெனவும், அதனால் அந்தப் பிள்ளையார் சைவரும், சைவசமயாசாரியருமாகா ரெனவும்) பிரசங்கித்த விபரீதம் எமது விசாரணையின் முன்னிற்க மாட்டாமலடங்கியொழிவதை இனி விவேகிகள் கண்டு சந்தோஷிப்பாராக.

பெரியபுராணத்தில் "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க" என்னும் வாக்கியமும், "சைவமல்லாது மற்றொன்று மில்லையென்றே—அந்தமில் சீர்மறைகளாகமங்களேனையகலைப் பொருளுணர்ந்தாரருளிச்செய்ய" என்னும் வாக்கியமும் பிள்ளையாருக்கு வேதானுஷ்டானமும், ஆகமானுஷ்டானமும், வைதிகசைவஸ்தாபனமுமுண்டாயிருந்ததை நிலைபெறுவித்தனவென்க. "மரபிரண்டுஞ் சைவநெறி வழிவந்த கேண்மையினார்," என்னும் வாக்கியம் பிள்ளையாரது தந்தைதாயர்களும் அவர்களது முன்னோர்களுஞ் சைவமரபினர் என்று வெளிப்படுத்தியது இத் தந்தைதாயர்களை நமதன்பரினி வைதிக சைவரென்று கூறுதற்கு இடமென்னோ? இன்னோர் பால் புத்திரரத்னமா யெழுந்தருளிய எமது அப்பனைச் சைவமணியென்று கூறும் வாக்கியங்கள் பின்வருமாறுகாண்க.

1. "சைவமுதல்வனார் மடத்தைச் சார்ந்தார்"
2. "செந்தீ-சிவநெறிவளர்க்கவந்தார் திருமடஞ்சாரச் செய்தார்"
3. "சைவமைந்தர் சொல்லின் வென்றி"
4. "திருச்சாத்த—மங்கை தன்னிலெழுந்தருளினார் சைவசிகாமணியார் மெய்த்தவத்தோர் சூழ"

என்னு மிவ்வாக்கியங்களால், ஞான சம்பந்தர் சைவாசாரியரெனல் வெளியாகியது. இனிப்பிள்ளையாரை வழிபட்டுய்ந்த மங்கையர்க்கரசியார் முதலினோர்பாற் சைவம் பெருகிய நலம் வருமாறு.

1. "இருவர்தம்பாங்குமன்றிச் சைவமஞ்செய்தாதாக"
2. "தங்கிய சைவவாய்மை யொழுக்கத்தி னின்றதன்மை"
3. "மீண்டுஞ், சிவநெறியடையும் விதியினாலும்"
4. "சார்—சிவநெறிபோற்றி யிருப்பீரென்று"



என்னு மிவ்வாக்கியங்களால், நின்றசீர் நெடுமாறனார், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் ஆகிய மூவருஞ் சைவமணங்குலவப்பெற்றாரெனல் வெளியாகியது. இனிச்சைவம் வைதிகமே யாகையால் அதனை வைதிக சைவம் என்று கூறுதற் கியைந்த பிரமேயம் வருமாறு.

1. "சைவமாமறைத்தலைவர்"
2. "மன்னியசைவவாய்மை வைதிகவழக்கமாகு— நன்னெறி"
3. "மன்னிய சைவநீதி மாமறைச்சிறுவர்"
4. "மன்னிய புகலி வேந்தர் வைதிக வாய்மைச்சைவச்-செந்நெறி விளக்குகின்றார்"
5. "உலகியல் வேதநூலொழுக்கமென்பதும். நிலவு மெய்ந்நெறி சிவநெறியே யென்பதும்"
6. "வேதம் வளர்க்கவுஞ் சைவம் விளக்குதற்கும்"

என்னு மிவ்வாக்கியங்களால் அவ்வைதிக சைவமினைத்தெனல் வெளியாகியது. இனி ஞானசம்பந்தரை யடைந்தோர் யாவருஞ்சைவரென்னும் பிரமேயம் வருமாறு.

1. "உம்பால் நிலவு சிவ நெறி சார்ந்தோர்"
2. "சைவர்வாழ் மடத்தமணர்களிட்ட தீத்தழல்"
3. "சைவரிருந்து வாழ்மடத்தில்"
4. "முன்னெழுது விழுந்தெழுந்து சைவரானார்"
5. "தின்றனவுஞ் சரிப்பனவுஞ் சைவமேயாம் நிலைமை யவர்க்கருள்செய்து"
6. "பம்புசடைத்திரு முனிவர் கபாலக்கையர், பலவேடச்சைவர்"
7. "அறுவகை விளங்குஞ் சைவத்தளவிலாவிரதஞ்சாரு நெறிவழி நின்றவேடர்"

என்னு மிவ்வாக்கியங்களால் ஞான சம்பந்தரைச் சார்ந்திருந்தவர்களும், அவரோடு திருமடத்திற் சூழ்ந்திருந்தவர்களும், சமணர் புத்தராயிருந்து திருந்திய தவசீலர்களுஞ் சைவநல மெய்தினாரெனலே வெளியாகியது. இனி வேதத்தலைவராகிய சிவனாரது வழிபாட்டினைக்குறிக்குஞ் சன்மார்க்கம் சைவமே யென்னும் பிரமேயம் வருமாறு.

1. "ஏறுயர்த்தார் சைவநெறியானையுய்க்க"
2. "தேனவில் கொன்றையார்தந் திருநெறி நடந்ததன்றே"

என்னு மிவ்வாக்கியங்களால் சிவபெருமானை வழிபடும் மார்க்கம். சைவம் என்னுஞ் சிறப்புப்பெயராலன்றி வைதிகமென்னும் பொது,

ப்பெயரால் வழங்கப்பெறுதெனல் வெளியாகியது. எங்காயினும் ஞானசம்பந்தப் பெருமானது அடியார்களை வைதிகர் என்று சேக்கிழார் கூறியருளினரா? "வைதிகர் வாழ்மடம்" என்று ஏன் அவர் கூறுது விடுத்தனர்? இவைகளைத் தேடிப்பார்த் திருப்பாராயின், நமதன்பர் அவசரப்பட்டு அவையேறிப்பரிபவமுறார். சேக்கிழார் பெருமான் ஞானஸம்பந்தரை வைதிகரென்றோ கூறினரென்றிவர் தொடுத்தவாதமினியென்னவது? இனியேனும் நமதன்பரிவற்றைச் சீர்தூக்கி வைதிகசைவராய்மையுணர்ந்து, வைதிகசைவபரமாசாரியமூர்த்தியா யெழுந்தருளிய ஸ்ரீஜ்ஞானசம்பந்தரது பாதபக்திபூண்டு குணப்படுவாராக.

இன்னுமிவரது துர்ப்போதத்தால் பேதைகள் மயங்கிக் கெடாவண்ணம் வேறு சிலபிரமாணங்களை சன்றெடுத்துக்காட்டி யுபகரிப்பாம். திருவிளையாடற் புராணத்தில் சில வாக்கியங்கள் வருமாறு.

1. "பருதியெனனிறந்த வேதாகமநிலைபற்றிச் சார்வாய்-விரிகலையிற் றுமோதா துணர்ந்தனன் விளைந்த ஞானம்"

என்னுமிதனால் பிராட்டியாரது திருமுலைப்பாலை யுண்டருளிய பிள்ளையார் வேதங்களையும், சிவாகமங்களையும், ஏனைய கலைகளையும் யதாவத்தாக வுணர்ந்தருளினரெனல் வெளியாகியது. இனிப்பிள்ளையாரது திருவடிச் சம்பந்திகளிடத்து சைவமணம் வீசிய நலம்வருமாறு.

1. "வாலிதாகிய சைவவான் பயிரினைவளர்ப்பான்-கேவியாகி யோரிருவரும்"
2. "சைவர் சிறிடப்பார்ப்பது"
3. "சைவ—விளைபயிரோங்கு மென்றார்"
4. "சைவ விதந்திருவொழுக்கம் பூண்ட வேட்கத்தர்"

என்னு மிவ்வாக்கியங்கள் மங்கையர்க்கரசியார் முதலியோரையும், ஏனைய சைவர்களையும் வெளிப்படுத்திய வாறுணர்க. இம்மட்டோ, எமது பிள்ளையாரோதியருளிய (தமிழ்வேதமாகிய) தேவாரத்தில், "ஆகமத்தொடு வேதங்களமைத்த சங்கதம்" என்று வேத சிவாகமங்கள் புகழப்பட்டிருக்கின்றன. இந்த வாக்கியத்தால் சிவபெருமானது திருவாக்குகளாயுள்ளவை சிவாகமங்களும், வேதங்களுமென்று வெளியாகியது. அன்றியும், "மந்திரமாவது நீறு—தந்திரமாவது நீறு" என்னும் வாக்கியங்களில், மந்திரம் வேதத்தையும், தந்திரம் சிவாகம



த்தையு முணர்த்தியவாறறிக. இவற்றையுணராது பிள்ளையாருக்கு வேதமாத்திரமேயன்றிச் சிவாகமமுடன்பாடில்லை யென்றும், அதனால், அவருக்கு ஆகமாநுஷ்டானமாகிய சைவாசாரமில்லையென்றும் அதனாலவர் சைவசமயாசாரியராகாரென்றும் அஸப்யவழியினின்று நமதன்பர் தொடுத்தவாதம் அஸாமஞ்சஸமாயதென்க. அன்றியும், "தழலிலங்கு திருவுருச்சைவனே" என்னுந் திராவிட ஸூக்தியால், சைவனே யென்று சிவபெருமானை எமது பிள்ளையா ரழைத்தமையும் பிள்ளையார் சைவாசார சம்பத்துடையாரென்பதை யினிது பேர்தருளித்ததென்க. "அநாதிசைவஸ்ஸசிவஃ" என்னும் ஆகம வசனத்தால் சிவபெருமான் "சைவன்" என்று படிக்கப்பட்டவாறுணர்க. இவ்வாறு தெளியும் விவேகிகள் கழகத்து நியாயவாதி யென்றிவர் வெளிப்பட்டுப் பரமாசாரிய சப்தவிசாரஞ்செய்து, ஞான சம்பந்தர் முதலிய நால்வராசாரியர்கள் எப்படிப் பரமாசாரிய ராவார்கள் என்று விடுத்த கடா எம்மட்டில் ஜீவித்து நிலைபெறுமென்பதை யாம் சொல்வது ஆவசியகமன்று. இன்னுமிதற்கொரு சுலபமான சமாதானமுரைக்கின்றோம். நமதன்பர் ஞான சம்பந்தரை வைதிககுருவென்று வாதித்திருக்கின்றார். சங்கராசாரியரை அவருக்குப்பிந்திய வைதிககுருவென்று பேசியிருக்கின்றார். இந்த வைதிக சம்பந்தத்தால், சங்கராசாரியருக்கு முற்பட்ட குருவென்று ஞான சம்பந்தர் வெளிப்பட்டமையாலும், சங்கராசாரியராகிய வைதிக குருவானவர் சம்பந்தராகிய (முதல்) வைதிக குருவைத் துதித்திருக்கின்றமையாலும் சங்கராசாரியருக்கு ஆசாரியத்வமும், சம்பந்தருக்குப் பரமாசாரியத்வமும் பிராப்தமாவதாகச் சுலபமாயெவருமுணர்ந்து வாழலாம். எவ்வாறு சென்று விவகரிப்பினுமெமது சம்பந்தரது பரமாசாரியத்வம் கெடாது நிலைபெறுதலாலவரோடு சேர்த்தெண்ணப்படுமேனைய பரமாசாரியர்க டன்மையையு மெவராலுமசைக்க முடியாதென்க. விரிக்கிற் பெருகும்.

நாத்திகரிவரெனல்.

நமது பூர்வபட்சியாரிக்கோட்டையமையாமல், சைவவாதியென்று வெளிவந்து சங்கராசாரியருக்கு ஜகத்குருபட்டம் சாதிக்கப்புகுந்திடர்ப்பட்டு, இதரமதஸ்தர்கள் சங்கராசாரியரை ஜகத்குருவென்றெப்பாகது நாஸ்திகர்கள் கடவுளை யொப்பாததுபோலாம் என்றொரு சமாதானங் கூறித்திருப்தி யடைந்தார். நாஸ்திகர்கள் பிரமாணத்தை யொப்பாதவர்கள், இதரமதஸ்தர்கள் பிரமாணத்திற் கட

கொண்டவர்கள். சங்கராசாரியர் ஜகத்குருவென்று பிரமாணங்காட்டினால், இதரமதஸ்தர்களே யொப்பமாட்டார்களோ? எமது ஞானசம்பந்தரை ஹாலாஸ்ய மஹாத்மிய முதலிய நூல்களின் வாயிலாக ஜகத்குருவென்றும், வைதிகாசாரியரென்றும், சைவாசாரியரென்றும், பரமாசாரியரென்றும், யாம் நிரூபித்தோம். அவ்வாறு செய்தலொழிந்து சங்கர மடங்களை விரோதிக்கத்தக்க ஏகதேச பிருதாவளியைக் கையிற்பிடித்துக்கொண்டு சங்கராசாரியர் ஜகத்குருவென்று இவர் மலைந்துபேசுவது இவர்போன்ற நாஸ்திகக்குழுவினர்க்கு மாத்திரமே பயன்படத்தக்கதென்க. இவரே நாஸ்திகராயிருத்தலறியாது நாஸ்திகர் தமக்கு வேறாக யாரோ வுளராகவிவர் பிரஸ்தாபித்ததும் அஸப்யமாதலை யிங்கறிவிப்பாம். இவர் நாஸ்திகரென்றது ஜடத்தைப் பிரதானமாக வொப்பியவர்களை. இன்னோர் சதுர்ப்பூதஸையோகமாகிய பௌதிகத்தினின்றும் அறிவுண்டாயிற்றென்று கூறுகின்றார்கள். நமதன்பரும், அவரினத்தவராகிய மாயாவாதியரும் அறிவினின்றும் பஞ்சபூத பௌதிகமாகிய தேகாதி பிரபஞ்ச முண்டாயிற்றென்று கூறுகின்றார்கள். அறியாமையினின்றும் அறிவுண்டாயது என்பது அஸப்யமாயிடுதல்போல அறிவினின்றும் அறியாமையுண்டாகியது என்பதும் ஏன் அஸப்யமாகமாட்டாது? அறியாமையொன்றற்கே அஸ்தித்வங்கூறி, ஏனையவற்றிற்கு நாஸ்தித்வங் கூறுவோரை நாஸ்திகர் என்று கூறுவதுபோல, ஜ்ஞானமாகிய அறிவொன்றற்கே அஸ்தித்வங்கூறி, ஏனைய பதிபாசங்கட்கு நாஸ்தித்வங் கூறுவோரையும் நாஸ்திகர் என்று கூறுதலே அமையுமென்க. பதிபசுபாச பதார்த்தத்திரய நிரூபணஞ் செய்திருக்கும் வேத சிவாகமங்களி னுண்மையை யறியாமல் அறிவேயுலகம் என்றுரைத்திடுமிவரது மாயாவாதம் நாஸ்திகமாயிடுதலே சித்தமென்றறிக. இதுநிற்க.

## மாயாவாதிகளிவரேனல்:

இவரும், இவரது மாயாவாத நண்பர்களும் யாம் மாயாவாதிகளல்லவென்று வாதிடுகின்றார்கள். அதற்கு "மாயையே (உலகத்துக்கு) முதற்காரண மென்போரன்றோ மாயாவாதிக ளெனப்படுவர்" என்றும், "சைவர் மாயையே முதற்காரணமெனக் கூறுவோராதலின் (அவரன்றோ மாயாவாதிகளாகின்றார்?) எனவும் எடுத்து நியாயங் காட்டினார்கள். இதனாபாசத்தை யினிக்களைந்தெறிவாம். சைவசித்தாந்திகள் மாயையை உலகத்துக்கு முதற்காரணமென்று ஒப்பியது



சத்தியம். அம்முதற்காரணமாகிய மாயைக்கு ஜடத்வம் பிராப்தமாகையால், அதனை ஸ்வதந்திரவஸ்துவாக வவரங்கீகரியார். அதனால் அவர் பரமகாரணவஸ்துவாகக்கொண்டு வழிபடும் மெய்ப்பொருள் அம்மாயையாகாது. அவர் வழிபடும் பரம்பொருளாயுள்ளது சிவமொன்றேயாம். வழிபடுகின்ற அதிகாரியாகிய சேதனனுக்கே மாயை குறைந்திடுமாயின், அந்தமாயை அவனுக்கு உபாஸ்யப்பொருளாயிடுதல் யாங்ஙனம்? அங்ஙனமாகாமையால், அம்மாயோபாஸகனாகாத சைவசித்தாந்தி மாயாவாதியாக மாட்டான்.

இதனை யோராது நமதன்பர் சைவசமயியே மாயாவாதியென்று பேசியது அவரதறியாமையாகவே முடிந்தது. இனி நமதன்பரது மதமே மாயாவாத மாதலை இனிது வெளிப்படுத்துவாம். இவரது மதத்தில் பிரமமே உலகத்துக்கு முதற்காரணமென்று கூறுவதாக விவர் பிரஸ்தாபித்தாரன்றோ? அதனை யவ்வாறே கொள்வாம். அப்பிரமம் நிர்விகாரமாயுள்ளது. அது உலகமாக விகாரப்படுதல் யாங்ஙனம்? அன்றியுமப்பிரமம் ஞானவடிவமாயுள்ளது. அது உலகமாகிய ஜடப்பொருளாகக் காரியப்படுதல் யாங்ஙனம்? யாம் மாயையெனக்கொண்ட பொருளையே யிவர் பிரமமெனக்கோடலால், இவர் மாயாவாதியாயினதுண்மையறிக. எமது மாயையைத்தவிர விவருக்குப் பிரமமென்பதொருபொருளில்லையாகையால் இவரை மாயாவாதி யெனவும், போலிப்பிரமவாதி யெனவும் பெரியோர் கூறுவரென்க. அன்றியும், இவர் மதத்தில் எல்லாம் மிச்சையென்று கூறும் வழக்குண்மையாலிவரை மிச்சாவாதியென்று கூறுதலுமாம். மிச்சையென்பது பொய்யென்று பொருள்படும். இவர் மதத்தில் மாயையென்பதற்குப் பொய்யென்றே பொருள் கூறுவதுண்மையாகையால், மிச்சாவாதி மாயாவாதி என்பன வொருபொருளிலேயே நிலைபெறடையும். அதனாலும் இவர் மாயாவாதியாயிடுதல் தடைபடமாட்டாது. இன்னுமிவர் மதத்தைப் பிரச்சந்நபௌத்தமென்று கூறுவதும் வழக்கமாம். அதனாலிவர் பிரச்சந்நபௌத்தருமாயிடுவர். இவ்வெல்லாப்பெயர்களும் நாஸ்திகத்திலேயே பரிவஸாநமாமென்க. இதனையிவ்வளவினிறுத்தி, யாம் விடுப்பதாக மேற்கூறியகடாக்களை யினி யேவுகின்றாம். சிவசம்பந்திகளிடத்து மாத்திரமே மறலியூர்தியாகிய கடாச்சென்றடர்த்திடவஞ்சும். அவைவரிட மஞ்சாது குதித்தோடி யிடர்ப்படுத்துமென்க. இனி அக்கடாவருமாறு.

பிரமவித்தியா நாவலரைக் கடாவுதல்.

1. சங்கராசாரியர் ஜகத்குருவாயின், அவருக்குமேலொரு குருவிருந்திடல் கூடாதன்றோ? அவருக்குக் குருவாயிருந்தவர் கோவிந்தயோகியென்று நீவிர்கொண்டாடுமாறென்னை? அவர் சமூகத்தில் நுமது சங்கராசாரியர் குருவாயிடுதலொழிந்து சிஷ்யராவாரெனின், அப்போது அவருக்கு ஜகத்குரு பட்டம் நிலைப்பதெங்ஙே? முக்காலத்திலும் நிலைபெறாத ஜகத்குருபட்டம் சங்கராசாரியரிடத்து அவாந்தர கற்பிதமாகாம லினிவேறென்னாகும்?

2. சங்கராசாரியருக்கு ஆசாரியர் என்னும் பட்டமுண்டாகியவிதமெப்படி? இவ்வாசாரியர் பட்டம் வைஷ்ணவரும், மாத்துவரும், விசுவகுலத்தவரும் பெற்றிருப்பது உலகிற் பிரசித்தம். ஸ்மார்த்தர்களுக்கு எங்ஙனும் ஆசாரியர்பட்டம் வழங்கக்காணோம். இங்ஙனமாக, ஸ்மார்த்த வேதியர்களுக்குக் குருவாகிய சங்கராசாரியர் ஆசாரியர் பட்டம் பெற்றதெங்ஙனம்?

3. சங்கராசாரியருக்கு அந்தப்பெயர் தந்தைதாயர்களாலிடப்பட்டதா? கோவிந்த யோகியாற் கொடுக்கப்பட்டதா? தம்மால் வைத்துக் கொள்ளப்பட்டதா? அல்லது வேறுவிதத்தால் விளம்பரப்பட்டதா? இதற்குப்பிரமாணமுண்டேல், அந்த நூற்பெயர்யாது?

4. சங்கராசாரியருக்கு யாவரால் சந்யாஸம் கொடுக்கப்பட்டது? அது கர்ம சந்யாசமா? ஞான சந்யாசமா? கர்மசந்யாஸமெனின், அவர் ஜாதி விலக்கான பலகாரியங்கள் செய்தது யாங்ஙனம்? ஞான சந்யாஸமெனின், அது எங்கே கூறப்பட்டது? கர்மவர்ஜிதராகிய அவரைக் கர்மாநுஷ்டான பரராகிய ஸ்மார்த்தர்கள் குருவாகக் கொண்டதும் யாங்ஙனம்? அன்றியும், "அஸ்வாலம்பம் கவாலம்பம் ஸங்யாஸம் பலபைத்ருகம்-தேவரேணுஸுதோத்பத்தி: கலௌபஞ்சவிவர்ஜயேத்" என்னும் பிரமாணப்படி அசுவமேத முதலியவற்றோடு கலியிற் கொள்ளத்தகாததாக விலக்கிய சந்யாஸம் சங்கராசாரியருக்கு விஹிதமாயினவாறென்னை?

இவற்றிற்கு நமதன்பர் தெளிவான சமாதானமெழுதி விடுத்து உபகரிப்பாராக. இப்புதிய நாவலர் சைவர்களுக்குச் "சந்யாஸம் விதிக்கப்பட்டிருக்கின்றதா?" என்பது முதலிய கேள்விகள் விடுத்தமைக்கு யாம்பதில் கூறுவது ஆவசியகமன்றாயினும், மந்தர்களது பிரமை



நிவிர்த்தியர்த்தம் அவற்றிற்குஞ் சமாதானமெழுதி விரைவில் வெளிப்படுத்துவாமென்க. அன்றியுமிவர் இதற்கு முன்பு தாம் வேறுபெயர்களான் மறைந்து விவகரித்ததை விட்டு இப்போது பிரமவித்யா பத்திராதிபர் என்று வெளிப்பட்டு அத்துவித விசாரத்திலிழிந்து அட்டகாசஞ் செய்ய வாரம்பித்தனர். ஜகத்குருவிசாரத்தி லிவருக்குண்டாகிய தோல்வி இவரது அத்துவிதவிசாரத்திலுந் தொடர்ந்து நிலைபெறுமாகலின், அஃதங்ஙனமாகும்போது அதனை விடுத்து அண்டவிசாரத்திலிறங்கி (வாரும் ஒரு கைபார்ப்போம்) என்று வாதுக்கழையாமற் போகார். இப்படியே யொன்றைவிட் டொன்றைப்பற்றி முழுதுந் தோல்வியையே பூஷணமாகக்கொண்டு பின்னிடுவ திவரதியற்கை யென்க.

## வேதாந்த சித்தாந்த சமரசம்.

இவர் இவரது அத்துவித விசாரத்தைத் தொடங்குவதன் முன்னர் "அறிவிப்பு" என வொன்று வெளிப்படுத்தியிருக்கின்றார். அதில், "வேதாந்தமும் சித்தாந்தமும் ஒருபொருள் கொண்டு முடியும் ஒருமுதல்வனருளிய நன்னூலாவதுபோல், ஸ்ரீமத் ஹிரண்ய கர்ப்பயாஜி ரவிகுலராஜா முத்துவிஜய ரகுநாத பாஸ்கர ஸேதுபதி மஹாராஜன் என்னும் ஓர் மன்னவனுதரனை பெற்று ஒருமுடிவுள்ளதாய் எவ்விதத்தும் நமது நாட்டில் புறச்சமயங்கள் ஒழிந்து நற்சமயம் நிலைபெறவேண்டியே வெளிவந்துலாவுவன இவ்விரண்டு பத்திரிகைகளும்" என்றெழுதித் தமது பிரமவித்தியாவுக்கும், ஞானாமிர்த பத்திரிகைக்குஞ் சம்பந்தங்காட்டினார்.

இனி வேதாந்தமும், சித்தாந்தமு மொற்றுமை யுடையன வென்பதெமக்கு மொப்பே. வேதாந்தம்=வேதத்தினந்தம், சித்தாந்தம்=ஆகமத்தினந்தம். வேதம் ஒருநூலும், ஆகமம் ஒரு நூலுமாக விரண்டு நூல்கள் பொதுச்சிறப்பாக முதல்வனா லுண்டுபண்ணப்பட்டமையால், அவ்விரண்டு நூல்களின் முடிவுகளொன்றிலொன்று விரோதிக்க ஆவசியகமில்லை. ஆகையால், வேதாந்த சித்தாந்த சமரசஞான முடையார் மதம் சர்வஸம்பிரதிபந்நமாயிடுதல் மரபாமென்க. வேதாந்தம் கனியும், சித்தாந்தம் அதன் சாரமுமாம். இதனை "ஒரும்வேதாந்தமென்றுச்சியிற் பழுத்த-வாராவின்பவருங்கனி பிழிந்து-சாரங்கொண்ட சைவசித்தாந்தத்-தேனமுதருந்தினர் சிலரே" என்றருளிய ஸ்ரீகுமரகுருபரதேவர் திருவாக்கானே யறிந்திடலாம். இதனோடு நம

து பிரமவித்யா பத்திராதிபரது வேதாந்த மிணங்காதென்க. இந்தப்பத்திராதிபர் ஆன்மாவே பரம் என்பது வேதாந்தமென்று வாதிப்பவர். ஸ்ரீகுமரகுருபரதேவர் ஆன்மா பசுவென்றும், பரமான்மா பதியென்றுங் கொள்வது வேதாந்தமென்று வாதிப்பவர். இவ்விரண்டு வேதாந்தங்களில் சீவனைப்பரமென்னும் வேதாந்தம் அச்சீவனை நிஷேதித்துச் சிவனே பரம் என்று ஸ்தாபிக்கும் சித்தாந்தத்தோடு சமரசம்பெறுதல் கூடாதாகையால், சீவன்பரமன்று சிவனேபரமென்று ஸ்தாபிக்கும் வேதாந்தமே அவ்வாறு ஸ்தாபிக்குஞ் சித்தாந்தத்தோடு சமரசம்பெற் றொளிபெறுமென்க. இவ்வாறுகொண்டு குணப்படமாட்டாதார் யாம் வேதாந்த சித்தாந்த வொற்றுமை ஞானமுடையார் என்று வெளிவருவது கேவலம் அசங்கதமென்றறிக. வேதாகமங்களை யருளிச்செய்த சிவபெருமான் வேதத்தில் சீவன் பிரஹ்மமென்றும், ஆகமத்தில் சிவன் பிரஹ்மமென்றுங் கூறியதில்லை யாதலின், அவ்விரு நூல்களிலுஞ் சீவன் சேவகன், சிவன் சேவ்யன் என்னுந் துணிபே யாவராலுந் துணியத்தக்கதாயுள்ளதென்க. இதனால் சீவப் பிரஹ்மவாத போதிதமாகிய நமதன்பரது வேதாந்தம் சித்தாந்தத்தோடு சமரசமானதில்லை யென்பது சித்தமென்றுணர்க. இனிச்சீவனை வேதத்தின் றுணிபொருளெனக்கொண்ட விவர்போன்று கருமத்தை வேதத்தின் றுணிபொருளென்றும், காலத்தை வேதத்தின் றுணிபொருளென்றுங் கொண்டு வாதிக்கும் வாதிகளும் வேதாந்திக ளாகலாமாகையால், இவர்களும் வேதாந்த சித்தாந்த சமரசங் கூறி வெளிவரலாமென்க. பாசப்பொருள்களையும், பசுக்களையும் பரம் என்று வேதமூலங்கொண்டு வாதிக்கும் வாதம் போலிவேதாந்தங்களா யொழியு மாகையா லவற்றோடினப்பட்டு, "நானேபரம்" என்று வேதாந்தவாதம் புரியத்தொடங்கிய நமதன்பர்மதம் போலிவேதாந்த மாகாமல் வேறுயாதாகவோ சிறந்திடும்? இவ்வுண்மைபோதரவே யன்றோ "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற வித்தகச் சித்தர்கணமே" என்று வேதாந்த சித்தாந்த சமரசங் கூறிய ஸ்ரீதாயுமானசுவாமிகள் "யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவரும்" என்று நமதன்பரது வேதாந்தத்தை வெட்டிச்சாய்த்து வேர்களைந்தெறிந்தனர்? இவற்றை யுய்த்துணர்வார் வேதசிவாகமங்களோடு முரணாமல் வேதாந்த சித்தாந்தங்களை மேற்கொண்டெழுந்த ஞானாமிர்தத்தோடு வேதத்துக்கு முரண்பொருள்கூறி, ஆகமத்தை யவிரோதமாகக் கொண்டதாக நாடகம் புரியும் பிரமவித்தியா



வைச் சமரசம் பெற்றது என்று நமதன்பர் பிரஸ்தாபித்ததும் நாடகமென்றே தெளிந்திடுவரென்க. இவரே சிவாகமத்தைச் சித்தாந்தமென்று ஒப்பினராகையால் இனி யிதனுண்மையை மீண்டுச் சிறிதெடுத்திசைப்பாம். வேதத்தில் பாசபசுமார்க்கங்கள் கொள்ளக்கிடக்கின்றன. அவை பூர்வபட்சம். அவ்வேதத்தின் முடிவாயுள்ளது பதிமார்க்க மாகிய சைவமொன்றேயாம். அஃதொன்றே சித்தாந்தமாம். அச்சித்தாந்தத்தினையே சிவாகமம் விளக்கவெழுந்தது. அதனால் சிவாகமமுழுதுஞ் சித்தாந்தப்பெயர் பெற்றதெனவறிக. இவ்வாறு தெளிந்தபேர்க்கே வேதாந்த சித்தாந்த சமரசவுண்மை வெளியாமென்க. இது நிற்க.

## விஷயவிரோதம்.

நமதன்பர் வேதாந்த சித்தாந்தங்களுக்கு ஒருமுதல்வனைக் கருத்தா வாகக்காட்டி, அப்படியே பிரமவித்தியா-ஞானாமிர்தங்களுக்கு ஒருபரிபாலன கர்த்தாவைச் சுட்டினாரன்றோ? இப்பரிபாலன கர்த்தர் நமதன்பர் கருத்தோடிணங்கினவரன்று. வேதாந்த சித்தாந்தங்களால் வழிபடத்தக்க பெரியோனாகிய சிவன் நமதன்பரது போலிவேதாந்தத்தைக் கண்டஞ்சி யொதுங்குமாபோலவே சண்டெடுத்துக்கொண்ட விருபத்திரிகைகளுக் குதவியதலைவரு மிவரது போலிவேதாந்தத்தைக் கண்டஞ்சி யொதுங்காமற் போகாரென்க. இவ்வரசவள்ளல் நமது பிரம்வித்யா பத்திராதிபர், சங்கராசாரியரைச் சம்பந்தரோடு சமானமானவரென்று பிரசங்கித்ததை மறுத்து சங்கராசாரியர் வழிபட்ட தனிமுதலாயுள்ளவர் சம்பந்தரென்று பிரகாசப்படுத்திய அன்பாளரென்னும் அருமையை யாம் கேட்டுள்ளோமாகையால், யாம்கொண்ட கருத்து ஸாமஞ்சஸமாமென்க. ஞானாமிர்தக்காரரிடம் நமக்குண்டாகிய வருமையால் அவரிடஞ் சண்டைபிடிக்கத் தொடங்கிய நமதன்பர் சைவநிந்தை, சைவாசாரிய நிந்தை, சிவாகம நிந்தை, சிவவேதியர் நிந்தை, தேவார திருவாசக நிந்தை முதலிய தூஷணங்களிலிறங்கி, அம்மட்டிலுமொழியாமல் மெய்கண்ட சிவாசாரியர் நிந்தையிலு நுழைந்து பூர்த்தி செய்துகொண்டது அவரது தவமே போலும். இது நிற்க.

## புறச்சமயம்.

இவர் நமது நாட்டில் "புறச்சமயங்க ளொழிந்து நற்சமயங்கள் நிலைபெறவேண்டியே வெளிவந்துலாவுவன இவ்விருபத்திரிகை

களும்" என்றாரன்றோ? ஞானமிர்தக்காரர் மாயாவாத போதிதமாகிய பிரமவித்தியாவைப் புறச்சமய பத்திரிகையென்றே கொண்டிருக்கின்றார். அகச்சமயம் - அகப்புறச்சமயம்-புறச்சமயம்-புறப்புறச்சமயம் என்னுஞ் சமயங்களோவ்வொன்றும் ஆறாகப்பிரிந்து விளங்கும். அவற்றுள், புறச்சமயம் ஆறனுளொன்று மாயாவாதம். இங்ஙனமாக, நமதன்பர் புறச்சமயமென்றது எதனையோ வறியேம்.

## சிவாத்துவிதக்குழப்பம்.

இனி யிவரது பாஷ்யமார்க்கத்தின் கௌரவத்தை யோசித்றப்பாராமல் சுத்தவைதிக சிவாத்துவித சித்தாந்தம் தமது மதமெனவெவ்ன்று எழுதிக்கொண்டார். முன்னரிவர் வைதிகரென்று வெளிவந்தனர். இப்போது சிவாத்துவிதச் சொற்றொடர் பூட்டிக்கொண்டு வெளியாயினர். இவரது ஜகத்குருவாகிய சங்கரரை இவரே கேவலாத்துவிதியென்று கிளத்தினர். தாம் சிவாத்துவிதியும், தமது குரு கேவலாத்துவிதியு மாயிடுதல் தமது குருபதேசத்தாற் றுமடைந்தவுறுதியேபோலும். இவேதரமான சம்பந்த மொழிந்திடினன்றோ விவர்க்குச் சிவாத்துவித மொருகால் நிலைக்கலாம்? இவரது சங்கரமதத்தில் சிவ விஷ்ணுங்களுக்கு அபேதமாகையா லிவர்கேவலம் சிவாத்துவிதப்பிரசங்கஞ் செய்தது அசங்கதமென்க. இவரது சங்கராசாரியர் நரசிங்கமூர்த்தியைப் பூசித்து உடல்வேகாது பிழைத்தவரென்று சங்கரவிஜயாதிகள் கூறுதலாலிவரது அத்துவிதம் சிவனையே பற்றியதன்லறிந்து, காலபேதத்தால் விஷ்ணுவையும் பற்றிவர்த்தித்தல் வெளியாயதென்க. அதனால், இவர்தமது சமயம் சுத்த வைதிக சிவாத்துவித சித்தாந்தம் என்று பிரஸ்தாபித்தது வெறுங்கற்பனையாயதென்க. இவரது பிரசங்கத்தில் யாமின்னுமொரு விசேடங்கண்டாம். என்னெனின், "ஆரணாகமங்களை மொப்பியவழி சுத்தவைதிக சிவாத்துவித சித்தாந்தத்துறையை விளக்குவாம்" என்றிவர் பிரசங்கித்ததேயாம். இவரது சுத்தவைதிக சிவாத்துவிதத்தை யிவர் சாதித்தற்கு ஆரணத்தை யிவர் பிரமாணமாகத் தேடுவது அவசியகமே. ஆகமத்தா லிவருக்குண்டாகும் பயன்யாது? வைதிகம் வேறு, சைவம்வேறு என்று தூசவிட்ட விப்புத ஜனவிரேஷ்டர் இவரது வைதிக சிவாத்துவித ஸ்தாபனத்துக்கு ஆகமமாதரவாயிடுமென்றது எங்ஙனே வைதிகமாகும்? இவரிப்போதுதான் மெல்லச் சைவராக வழிந்திடுகின்றார். இவரது மாயாவாதமிவரை விட்டு முற்று



ந்தொலைந்த போதன்றோ விவர்பாற் சைவமணஞ் சிறிதேனும் வீசுதற்கிடமுண்டாகலாம்? அங்ஙனமின்றி யிவர் தொடுக்குஞ் சைவபத மிவருக்கு அசைவத்தையே பிராப்தப்படுத்து மென்க. இதுநிற்க.

## முறை பிறழ்ச்சி

இவர் பரமாசாரியர்களிவரென்பது தோன்ற ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியர்-ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியர்-ஸ்ரீமத் ஆளுடைய பிள்ளையார் முதலினோர் எனவொன்று கூறியிருக்கின்றார். இதுவும் பேராச்சரியத்தையே விளைக்கின்றது. எங்ஙனமெனின், இவரிப்போது சக்கரவிடைக்கு ஆரம்பித்தது சங்கராசாரியர் ஜகத்குருவென்று சாதிக்கவேயன்றி வேறில்லை. அதற்கு மாறாக அச்சங்கராசாரியரோடு மாறுபட்ட வேறிருவரைச் சமானமாகக்கொண்டு இம்மூவரும் பரமாசாரியர்கள் என்றது என்னையோ? சங்கராசாரியர் பரமாசாரியராயிடுதல்போல ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியரும் பரமாசாரிய மூர்த்திகளாவரெனின், சங்கராசாரியருக்கு அப்பரமாசாரிய பட்டம் விசேஷதோஷத்தை யடையத்தடையென்னோ? இத்தகைய சங்கராசாரியருக்கு ஜகத்குருபட்டம் நிலைக்கு மென்பதும் அதிசயமே யாமன்றோ? இவ்வாறு முரணிப்பேசுங் கலைத்திறமுடைய விவரதுமரபு விளங்கவேபோலும் முன்பு ஆளுடைய பிள்ளையாரைப் பரமாசாரியரல்லரென்று பிரசங்கித்து இடர்ப்பட்டு மெலிந்தார்? இவர்தேடிய பரமாசாரியரை முன்னும், ஸ்ரீ கண்டசிவாசாரியரை இடையும், ஸ்ரீ ஞானஸம்பந்தரைப் பின்னும் அமையச்செய்தது எந்தமுறைபற்றியோ அறியேம். இவரிப்போது புதுசாய்த்தேடிக்கொண்ட வைதிக சிவாத்வைதத்துக்கு அம்மூவரையும் பரமாசாரியர்களாகக்கொண்டாலத்தும் முறையே ஞானசம்பந்தர்-நீலகண்ட சிவாசாரியர்-சங்கராசாரியர் என்று காலக்கிரமத்தை நோக்கி அமைக்கவேண்டியதே மரபாமென்க. இவரொருகால் பிள்ளையாரைத் தமிழ்ப்பிரபந்தம் பாடினவராக மதித்துக் கீர்வாண பாஷ்யகாரர்களுக்குப் பின்னரமைப்பது மரபெனயோசித்து அவ்வாறு செய்திருக்கலாம். அங்ஙனமாயின், நமதுபத்திராதிபருங் கீர்வாணபண்டிதராகையா லிவரும் பிள்ளைப்பிள்ளையாருக்கு முந்திட விழையாசைப்படுவார்போலும். பிள்ளையாரை முன்னெழுதாதார்க்குப் பிடையே பயனுய் வருவது சித்தமாகலை யினியேனுமிவர் தெளிந்து குணப்படுவாராக.

## அத்துவிதம்

இதனையிம்மட்டி னிறுத்தி யிவரது அத்துவித விளக்கத்தை யினி வெளிப்படுத்துவாம். இவர் அத்துவிதம் நால்வகைப்படுமென்றார். அத்துவித மென்னுஞ் சொல்லுக்கு ஏகம் என்று பொருள் கூறமுூந்து மிவர் அத்துவிதத்தை நாலாகக்கண்டது அதிசயமே. அந் நால்வகை அத்துவிதங்களிவை யென்பது போதரக் கேவலாத்துவிதம், விசிட்டாத்துவிதம், பாவனாத்துவிதம், சுத்தாத்துவிதம் என்று பிரசங்கித்தார். இவரிவ்வாறு வகுத்துக் கூறியதற்குப் பிரமாண மொன்றுங் கூறுதொழிந்தார். இவைகளைப் பிரமாணவாயிலாக நிறுவி இவற்றுள், தலையாயது இது வென்றுசுட்டித் தமது மரபினைக் காத்துக் கோடலன்றோ விவருக்கு வெற்றியாவது? அவ்வாறு செய்த லொழிந்து அத்துவிதப் பலசரக்குக் கடையினுழைந்து சமானாதிகரண வியதிகரணாத்வைதங்களையும் வெளிக்குக்கொண்டுவந்து எல்லா அத்துவிதிகளும் அத்துவித சத்தத்திற் போந்த அகரத்தை இன்மைப்பொருளிற் கொண்டார்களெனவும், வியதிகரணாத்வைதியாகிய மெய்கண்ட சிவாசாரியர் மாத்திரம் அதனை அன்மைப்பொருளிற் கொண்டாரெனவும், அவற்றுள், வியதிகரணாத்வைதியினது மதம் பாதஞ்சலத்தோடு விரோதிக்கின்றதெனவும், ஏனைய அத்துவிதங்கள் ஒரு நிலைமையினவாய் அப்பாதஞ்சல சூத்திரத்தோடிணங்கி யிருக்கின்றன வெனவும் பிரசங்கித்துத் தமதிலக்கணப்புலமையைச் சிறிது வெளிப்படுத்திக் கொண்டார். இவரது வேதாந்தத்தை விடுத்து வியாகரணத்தில் வாய்வைத்து எடுத்த விஷயத்தை வழவழவென்று விடப்பார்ப்பது தானோ இவரது ஆண்மையின்றிறம்? இவருக்கு அன்மைப்பொருளிவரதிலக்கணத்துக்குக் கோணலாயிருந்தாலிருக்கட்டும். இன்மைப்பொருளிவரது சொந்தமென்று வாதிக்குமிவர் மதத்தோடு அவ்வின்மைப் பொருளிலேயே நின்று வர்த்திக்கு மேனைய மதங்கள் விரோதித்து இவரது கேவலாத்துவிதங் காலைக்கிளப்பிக் கொள்ளுமாறு கீழே வீழ்த்தித் துவைக்குமாறென்னை? இவரோடிணங்கிய விலக்கணத்தவரா லிவருக்குப் பரிபவமேயன்றிப் பஹுமானமொன்றுங் கிடைக்காமையா லிவரோடிணங்காதவராக விவர் பிரஸ்தாபித்த வியதிகரணாத்வைதியினிடம் வியாகரண விசாரஞ் செய்து காலப்போக்குச் செய்வது கேவலம் அறியாமையேயாம். இது நிற்க.



அன்மைப்பொருளையே துவிதத்தை முன்னடுத்து வந்த அகரம் தராதொழியவும், அஃதோரத்துவித முளதாகக் கொண்டு வியதிகரணாத்வைதமென வதற்குப் பேரிட்ட பண்டிதர்தாம் யாவரோ? இதற்கிலக்காக விவர் தேடிய மெய்கண்ட சிவாசாரியர் தமது அத்துவிதத்துக்கு வியதிகரணாத்வைதமெனப் பேரிட்டு, யாண்டாயினும் விதந்திருக்கின்றனரா? இதனை நமதன்பர் யோசிப்பாராக. இனி யிவர் அத்வைதம் ஐந்து என்று பிரசங்கித்த விஷயம் யாவருமறிவார்கள். இவற்றுளொன்றுதான் சங்கராசாரியரது அத்துவித மென்பதிவரது மதம். இங்ஙனமாக, சங்கர மதத்துக்கே அத்வைத மெனப் பேரிட்டு, யாமே அத்வைதிகளென்று இவரும், இவரது ஸ்மார்த்த நண்பர்களுங் கௌரவம் பாராட்டித் தருக்குற்றுறென்னையோ? அத்வைதமென்னுஞ் சொல் "ஒன்றாகாம லிரண்டாகாம-லொன்று மிரண்டு மின்றாகாமல்" சிவசிவர்கள் விளங்குந் தன்மையையே விளக்கவெழுந்த தறிக.

இதற்கு வேறான அத்வைதங்கள் வெறும் போலிகளெனயாமொதுக்கினமாகையால், அவற்றோடினப்பட்ட நமதன்பரது அத்துவிதமு மொதுங்கிய தெனவே யமைவுடைத்தாம். அத்துவிதச்சொல்லில் அன்மைப்பொருள் கொள்ளவேண்டுமெனின், அப்பிராமணன் என்பதற்குப் பொருளென்னை? பிராமணனுக்கு வேறானவன் எனக்கொண்டு க்ஷத்திரியாதி ஜாதிகளிற் சேர்ந்தவனாகப் பொருள் கோடலமையுமெனின், அதுகூடாது. அவன் க்ஷத்திரியனாயின் அவனை க்ஷத்திரியனெனவும், வைசியனாயின் வைசியனெனவும், சூத்திரனாயின் சூத்திரனெனவும் எளிதி னுரைத்திடலொழிந்து அப்பிராமணன் என்று மயக்கப் பொருளுண்டாமாறு கூறுதல் யாங்ஙனம்? பிராமணனும், பிராமணனல்லாத மற்றவனு மோரிடத்திலிருந்துழி, இவன் பிராமணன், இவன் அப்பிராமணன் என்று கூறுதலமையுமெனின், அவ்வப்பிராமணன் க்ஷத்திரிய வைசிய சூத்திராதிகளி லின்னனென்று கோடற்கியையுண்டாகாமையி னவ்வாறு கூறுதல் மரபன்றுமென்றொழிக. இனி அப்பிராமணன் என்பது பிராமணனாயிருந்து தன்னிலைமை குன்றிய வொருவனையே சுட்டுதற்கியைந்த சொல்லாயினதறிக. அப்பிராமணச் சொல்லில் முன்னிருந்த பிராமணத் தன்மையொழிந்தவாறு அத்துவிதச் சொல்லில் முன்னிருந்த துவிதத்தன்மை யொழிந்தவாறுணர்க. பிராமணத் தன்மை யொழிந்தபோது வேறு ஒருசுத்த சாதித் தன்மை யுண்டாகாதவாறு துவிதத் தன்

மை கெட்டபோது வேறு ஒரு எண்ணின்றன்மை யுண்டாயதின்றும். அப்பிராமணன் பிராமணனுமன்று சூத்திரனுமன்று. அத்துவிதம் இரண்டுமன்று, ஒன்றுமன்று. அப்பிராமணனில் பிறப்பொழுக்கங்களாலாய பிராமணத்வமும், அப்பிறப்பொழுக்கின் குன்றியதனாலாய சண்டாளத்வமுங் கேட்கப்படுமாறுபோல அத்துவிதத்தில் உச்சாரணையிலாய துவிதமும், அது தன்மை மாறியபோதுண்டாய ஏகத்வமுங் கேட்கப் பட்டவாறு முணர்க. அப்பிராமணனிடத்தில் பிராமணத் தன்மையும் வேறு சாதித்தன்மையும் காணுமிடத்தும் அவனிடத்தில் பிராமணத் தன்மையும், சண்டாளத் தன்மையு மில்லாமற் போகாவாறு அத்துவிதச் சொல்லில் இரண்டாந் தன்மையும் ஒன்றாந் தன்மையுங் காணுமிடத்தும் அதில் ஒன்று மிரண்டு மில்லாமற் போயினதில்லை யென்றறிக. இதனையே மேல்யாமுதாரித்த "ஒன்றாகாம லிரண்டாகாம லொன்று மிரண்டு மின்றாகாமல்" என்னு மற்புதத் திருமொழி யுணர்த்திய ஆய்ந்துணர்வர் மேலோரென்க. இவ்வாறு தெளிந் தின்புறுதலே நியாயவாதிகள் மதமாம். இதனை யுணர்ந்தபே ரிவரது விபரீதத்தைக் கண்டுங் கேட்டும் மயங்காரென்க. விரிக்கிற் பெருகும். இதை யிம்மட்டில் நிறுத்தி, இனி நமதன்பரது ஸ்மார்த்தமதக் குழப்பத்தையும் எண்டெடுத் தாக்காட்டிக் கண்டித்தொழிப்பாம்.

## பிரமவித்யா பத்திராதிபரது

### ஸ்மார்த்தமதக்குழப்பம்.

ஸ்மார்த்தம் என்பது ஸ்மிருதி ஸம்பந்தமுடையது எனச்சிறந்திடும். இதனைக் கையாண்டு வருபவரே ஸ்மார்த்தர் என்று உலகில் பிரசித்தி யடைந்திருக்கின்றார்கள். இவர் கைக்கொண்ட ஸ்மிருதிகள் வேதத்தை மூலமாகவுடையன வென்பது இவரது நிச்சயம். ஆயினும், சுருதிகளுக்கும் ஸ்மிருதிகளுக்கும் விரோதமுண்டாயின், ஸ்மிருதியைத் தள்ளிச் சுருதியைக் கொள்ளவேண்டியது என்று மீமாம்ஸா சாஸ்திரம் கூறுகின்றது. இதனால், சுருதியை மூலமாகக் கொள்ளாத ஸ்மிருதிகளு முளவென வேற்படுகின்றது. இதனை யுணர்ந்தபேர் ஸ்மிருதிகளை முக்கியப்பிரமாணமாகத் தழுவாரென்க. இனி ஸ்மிருதிகளில் அதிக பாகம் வேதாவிரோதமும், ஏகதேசபாகம்



வேதவிரோத மாதலே நியதமென்று நமதன்பர் வாதிக்கலாம். அவிரோதபாகம் இது, விரோதபாகம் இது என்று வியவஸ்தை யேற்படாமையாலும், ஒருவனுக்கு அவிரோதமென்று தோன்றியது மற்றொருவனுக்கு விரோதமென்று தோன்றுகையாலும் அது பயன்படாது. ஸ்மிருதிகாரர்கள் ஒருவர் போனவழி யொருவர் போனதில்லை. இவர்கள் பாசத்தழும்பேறிய பசுக்கள். இவர்களது நூல்களில் முரணுண்டாவது ஸஹஜம். ஆகையால், யார்யாருடைய புத்தியில் எந்தெந்தப்பகுதிகள் ஸ்மிருதிகளில் வேதாவிரோத மெனப்படுகின்றனவோ, அவைகளை அவரவர்கள் கைக்கொண்டு அநுஷ்டிப்பதை ஆட்சேபிப்பாரில்லை. சைவவைஷ்ணவர்களும் ஸ்மிருதிகளைத் தத்தமக்கிசைந்த மட்டி லங்கீகரித்து அநுஷ்டிக்கின்றார்கள். அவ்வாறநுஷ்டிப்பினும் இவர்களுக்கு முறையே சைவாகமங்களும், வைஷ்ணவாகமங்களுமே முக்கியம். சைவாகமங்கள் சிவனார் சொல்லியருளியதும், வைஷ்ணவாகமங்கள் விஷ்ணு கூறியதுமாம். ஸாமாந்ய ரிஷிகள் கூறியதைநோக்க விஷ்ணு சொன்னது உசிதமாகத்தட்டில்லை. அவரினும், மற்றையாவரினுமேலாய சிவபெருமா னருளிச்செய்த சிவாகமங்களை யாமாதரிப்பதின் மிக்கபுகழ் எமக்கு வேறொன்று மில்லை.

இச்சிவாகமங்களுக்குக் கர்த்தா விசுவாதிகரும், மஹாரிஷியுமாகிய உருத்திரப்பிரானே யாயினமையால், அவர் காமிகாதி யூர்த்வஸ்ரோதஸ்ஸூக்களைக் கொள்ளவும், ஏனைய அதஸ்ரோதஸ்ஸூக்களைத் தள்ளவும் அச்சிவாகமங்களிலேயே விதித்திருக்கின்றனர். இவ்வாறு ஸ்மிருதிகளுக்கு நியமன மில்லாமையாலும், அப்படி நியமனமுண்டாவதாயின், ஒரு ரிஷிசொன்னதை மற்றொரு ரிஷி மறுப்பதாக முடிந்து, எல்லாம் மறுக்கப்பட்டனவா யொழிந்து நிர்மூலமாய்ப் போமாகையாலும், சிவாகமங்களை நோக்க ஸ்மிருதிகள் கௌணவப்பிரமாண மாகாவென்பதே சத்தியமென்க. சிவாகமங்களிலெழுந்த விதிவிலக்குகளுக்குச் சிவபெருமானே கர்த்தாவாயினமையால், அதனை அவரினுங் கீழிட்ட தேவர்களாவது, ரிஷிகளாவது மறுக்கவதிகாரிகளாகார்கள். அதனால், அவர் கூறியயாவும் ஸர்வஸம்பிரதிபந்நமாயிருத்தல்காண்க. இச்சிவாகமங்களை ஸ்மிருதிகாரர்கள் எடுத்து நிந்தித்ததில்லை. அதவா நிந்தித்திருப்பார்களாயின், அவ்வாறு நிந்தித்தவர் பக்கமே குற்றம் வந்து சாரும். அவ்விருடியர்க்குக் குற்றமில்லாமையை நாட்டவேண்டுமாயின், சிவாகமங்கள் சிவபெருமான

ருளிச்செய்தனவல்லவென்று கூறுதல்வேண்டும். அங்ஙனங் கூறுதற்கு வேதோப பிரம்மஹணங்களாகிய புராணங்க ளிடங்கொடுக்கமாட்டா. அப்புராணங்கள் வேதத்தை யெடுத்துப் புகழ்ந்ததுபோல் சிவாகமங்களையு மெடுத்துப் புகழ்ந்திருக்கின்றன. அவற்றையுந்தள்ளி யெமக்குச் சிவாகமம் அங்கீகார மில்லையெனின், அவர்களைத் திரஸ்தவர்களோடு சேர்த்து அவர்களது முகாலோபனஞ் செய்யாதொதுக்குவதே எமக்குமரபாம். கேசித்துஸ்மார்க்கர்களே அவ்வாறு சொல்லத்துணிவார்கள். அவர்களையே யாம் திறிஸ்தவர்களோடு சேர்த்தொதுக்கினோம். வித்யாரண்யப்பிரபுருதிகள் முதலாயினோர் சிவாகமங்களைச் சிவப்பிரணீதமென்றே கொண்டு பூஷித்தார்களாகையால், அவரோடினப்பட்ட ஸ்மார்த்த நண்பர்கள்யாம் புகழ்ந்து பாராட்டத் தக்கவர்களேயாவர். சிவபெருமான் சொல்லியருளிய சிவாகமங்களில் விரோதமும் ஸாமாந்ய ரிஷிகள் கூறிய ஸ்மிருதிகளில் விசுவாச புத்தியும் பூர்வபட்சிகளுக் குண்டாயிருப்பது புதுமையினும் புதுமையாகவே யிருக்கின்றது. இதற்குப்புண்ணியக் குறைவே காரணமன்றி வேறு காரணம் எமக்குப் புலப்படவில்லை. எதிரிகள் தாட்சணியமின்றிச் சிவாகமங்களை அகௌரவப்படுத்தும்போது ஸ்மார்த்தர்களை யொருபொருளாகச் சைவர்கள் மதிக்கவாவசியமென்னே? சிவாகமங்களோடு விரோதியாத பாகங்களே ஸ்மிருதிகளில் எமக்கு அங்கீகாரமாயினவென்க. இது நிற்க.

ஸ்மார்த்தர்களிற் சிலர் வைதிகர்-சிரௌதர் என்று வெளிப்பட்டிருக்கின்றார்கள். ஸ்மார்த்தர் ஸ்மிருதி ஸம்பந்தமுடையவரெனவும், வைதிகர் வேதஸம்பந்த முடையவரெனவும், சிரௌதர் சுருதி ஸம்பந்தமுடையவ ரெனவுஞ் சொல்லப்படுவர். இந்தப்பெயர்கள் அவர்களுக்கு நூல்களின் பெயரை யநுசரித்துண்டாயின. சைவர்கள் வைஷ்ணவர்கள் என்னும் பெயர்கள் சிவனை வழிபடுவோருக்கும், விஷ்ணுவை வழிபடுவோருக்கும் முறையே பெறப்பட்டவாறு பூர்வபட்சிகளுக் குண்டாகாதவாறென்னே? அவர்களுக்குத் தெய்வமிருந்தால், ஏனோ அத்தெய்வத்தின் பேரால் அவர்கள் மதம் பிரசித்தியடைதல் கூடாது? அவர்கள் தெய்வவழிபா டொழிந்தவர்களாதல்கொண்டே நூல்களின் பேர்களைத்தாங்கி நொந்துழலாநின்றனர். வேதத்தில் பலதெய்வங்கள் கூறப்படுதலால் அத்தெய்வங்களின் பெயர்களையெல்லாந் தாங்குதலின்றி அவற்றைக்கூறும் வேதத்தின் பேரையே யாம் தாங்கினோமெனின், வேதம் பலதெய்வங்க



ளைக் கூறியது என்னும் வார்த்தையைக்கேட்டால் பாலியர்களுஞ் சிரிப்பார்கள். "ஏகமேவாத்விதியம்" என்னும் வேத வசனமும் பொய்ப்பட்டுப்போம். அதவா இவரது வார்த்தையை நம்பலாமெனின், இவரது சங்கராசாரியர் "ஷசைவம்சாக்தம்" என்று கூறிச்சிவன் சக்தி-விஷ்ணு-கணேசன்-சூரியன்-கபாலி முதலிய வேதத்தாற் பெறப்பட்ட தெய்வங்களைப் பிரதிஷேதித்துத் தன்னையே தெய்வமென்று கூறிக்கொண்டிருக்கிறார். இத்தெய்வதூஷணை நாஸ்திகமதத்துக்கு ஏகாத்மவாதமென்றும் பெரியோர்கள் பேரிட்டிருக்கின்றார்கள். இதுவுந் தெய்வத்தின் பெயராகா தொழிந்தது.

இவர்களையே மாயாவாதிகளென்று சைவ நூல்கள் கூறும். இவர்கள் எப்படி மாயாவாதிகளாயின ரென்னு முண்மையையாம் "பிரமவித்யா நாவலர் ஜகத்குருவாத நிராகரண" த்தில் இனிது பரிஷ்கரித்தோம். அதனை விவேகிகள் யூகித்தறிவார்கள். அதனுண்மையைத் தெளிந்து குணப்படாமல், நமதன்பர் சைவர்களை மாயாவாதிகளென்று மனப்பால் குடித்து மாழ்கினர். இப்படியுங் கெடுவாருண்டோ? ஒருவன் றலையின்மேற் காக மெச்சமிட்டிருக்கக் கண்ட மற்றொருவன் அவனைப் பார்த்து அப்பா! உன் றலைமேற் காக்கை மலமிருக்கின்றது. அதனை யெடுத்துவிடு என்று கூறினான். அதற்கு அவன் அம்மலத்தைக் களைந்து பரிசுத்தப் படுவதொழிந்து சொன்னவனையே திருப்பிக் கொண்டு என்றலைமேற் காக்கை மலமில்லை, உன்றலைமேற்றான் காக்கை மலமிருக்கின்றது என்றான். இவ்வழக்கினையே மாயாவாதியாகிய நமதன்பரிடம் ஸமர்த்திக்கத் தக்கது. ஏகான்ம வாதிகளை மாயாவாதிகளென்று யாமின்று கூறவந்ததில்லை. எம்மபெரியோர் அநாதியே கூறினார்கள். அவர்களை யெந்த மாயாவாதியுந் திருப்பி, யாம் மாயாவாதிகளல்ல, நீங்களே மாயாவாதிகளென்று கூறினதில்லை. எந்த மாயாவாத நூலில் சைவர்களை மாயாவாதிகளென்று சொல்லியிருக்கின்றது. சைவநூல்களெல்லாம் அகம்பிரமவாதிகளை மாயாவாதிகளென்று கூறியிருப்பது பிரத்தியட்சம். இம்மாயாவாதிகள் தம்மைப் பிரமவாதிகள் என்று இப்போது பேசத்தொடங்கினார்கள். இது ஒரு ஜாலவித்தையாம். இவர்கள் பிரமத்தை யுபாஸ்யப் பொருளாகக் கொண்டால் இவர்களைப் பிரமவாதிகளென்னலாம். பிரமம் உபாஸ்யப் பொருளானால், உபாஸகப் பொருள் வேறொன்று வேண்டும். அஃதியாது? தானே பிரமமென்று கூறுமிவரது மதத்தில் உபாஸ்யப் பொருளாகிய பிரமத்தைத் தவிர

வேறொரு உபாஸகப்பொருளுண்டாகாமையால், இவரது நிலைமை கேவலம் அஸப்யமாயிடுதல் காண்க. சவாரி செய்கிற புருஷனும் அவன் ஏறி நடத்துகிற குதிரையு மொன்றேயென்று வாதமிடும் படிற்றுரைக்கு யாமென்ன விடைபகரலாம்? இவரோடினப்பட்ட நமதன்பர் பிரஹ்மவாதியாகார். இவர் அஹம்பிரஹ்மவாதி யாயினதுணர்க. அஹம்பிரஹ்மவாதிகளென்பதற்குச் சிவப்பிரஹ்மவாதிகளென்று பொருளாம். சிவனைப் பிரஹ்மமென்று வாதிக்குமிவர்கள் சிவப்பிரஹ்மவாதிகளாயினவாறு காலத்தைப் பிரஹ்மமென்று வாதிப்பவர்கள் காலப்பிரஹ்ம வாதிகளும், கர்மத்தைப்பிரஹ்மமென்று வாதிப்பவர்கள் கர்மபிரஹ்ம வாதிகளுமாயிடுவர். அவர்களெல்லாந் தங்களைப் பிரஹ்மவாதிகளென்று சொல்லிக்கொண்டு வெளிவந்ததில்லை.

இங்ஙனமாக, ஏனோ இவர் மாத்திரம் பிரமவாதியாயிடத் தலைப்பட்டார்? பிரஹ்ம வாதிகளென்ற மாத்திரத்தானே சிவபரமேபதார்த்தம் வெளிப்படுகிறதன்றிச் சிவனும் பரனுமொன்றென்னும் அபேதார்த்தம் பெறப்படுவதில்லை. இனிப் பிரமக்கிழத்தியென்று பெரியர் கொண்டாடுஞ் சிவையை மணந்த பெரியோனே வேதங்களில் "துரியம் ப்ரஹ்மஸம்ஞ்ஞதம்" என்று கொண்டாடப் பெற்று விளங்கலால், அந்தபிரஹ்மத்தை வழிபடுஞ் சைவர்களே பிரஹ்மவாதிகளாயிடுதல் அமைந்திடும். பிரஹ்மவாதிகளென்றதும், சைவர்களென்றது மொன்றேயாம். வேதங்களில் துரீயத்வம் ஸ்தாபிக்கப்படுகிறபோது பிரஹ்மம்-அல்லது சிவம் என்னுஞ் சொற்களே ஆளப்படுகின்றமையானும், "சிவமத்வைதம் சாந்தம் சதுர்த்தம் மந்யந்தே" என்பதுபோன்ற பலசுருதிகள் அதனை நிறுத்துகையானும் சைவவாதிகளாகிய யாமே பிரஹ்மவாதிகளாயினமை யுணர்க. பிரஹ்மபரியாய ஸ்தானத்தினின்று சிவசப்தத்தை [illegible] ஆன்றமையாயின், யாம் பிரஹ்மவாதியென்று வெளிவந்தபோல் யாம் சைவவாதி, அல்லது சைவர் என்று இவர் வெளிவாராது ஏனோ? இவர் "யாம்வைதிகர், சைவரன்று" என்னாநிற்கும் அசைவ சிரோமணியாயினது பிரஸித்தியாகையால், இவர் பிரஹ்மவாதியென்று [illegible] தலைப்பட்டது சர்வஸம்மதமென்க. இதனாலே யாமெடுத்துக் கூறிய நியாயங்களால் நமதன்பரது மதத்துக்கு ஸ்மார்த்தம்-வைதிகம்-சிரௌதம்-ஏகாத்மவாதம்-அகம்பிரமவாதம்-மாயாவாதம் என்பனவாதி தெய்வமைப்பத் தொழிந்தநாமங்களே ஸ்திரமாயினமையால், பரம நாஸ்திகப் பாஷண்டத்வமே அவர் பாலெய்தியதனை



ர்க. இவ்வுண்மை தெளிந்த சைவஸஹோதரர்கள் "ஆதிமறையோதியதன்பயனொன்றும்மறியா-வேதியர்சொன்மெய்யென்றுமேவாதே" எனவும், "தாம்பிரமங்கண்டவர்போற் றம்மைக்கண்டாங்கதுவே நாம் பிரமமென்பவர்பானண்ணாதே" எனவும், "அகம்பிரமக்காரர் வெளியா மிருளில்விடாதே" எனவுஞ் சைவாசாரியர்கள் போதித்த வாய்மைநெறியிற் கட்டுண்டு "பசுநூல்கற்கும்-பிச்சரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே" என்பதுணர்ந்து நன்மை கடைப்பிடித் தொழுகுவதே நலமென்க. விரிக்கிற் பெருகும்.

இனி, ஸ்மிருதிகள் ஆசாரகாண்டம்-பிராயச்சித்தகாண்டம்-விவகாரகாண்டம் என்னும் பாகுபாடுகள் பெற்று விளங்கும். இவை வேதத்தின் கர்மகாண்டங்களைப் பற்றி யெழுந்தனவாம். அதனால், ஸ்மிருதிகளில் ஞானம் பூஜ்யமென்று ஏற்படுகின்றது. ஸ்மார்த்தர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொள்ளுபவர்களுந் தங்களைக் கர்மடாள் என்னுங் கருத்துக் கொண்டவர்களே யன்றி வேறில்லை. யாம் வைதிகர்-யாம் சுரௌதர் என்பவர்களும் கர்மத்தைப் பிரதானமாகக்கொண்டே வெளிப்படுவதன்றி வேறில்லை. யாம் சுரௌதிகள்-யாம் வைதிகர் என்று வெளிப்பட்டிருக்கும் ஸ்மார்த்தர்களுக்குக் கல்வி-ஞானம் ஆவசியகமில்லை. அன்னோர் யாகாதிகளைச் செய்துழன்று தக்ஷப்பிரஜாபதிக்குத் தம்பிகளாய்த்திரிந்து சிவபக்தி சூன்யர்களாய், (நாம் பிராஹ்மணர்-நமக்கு வேதம்வரும்-நாம் யாகாதிகள் செய்கின்றோம் என்று கனவுகண்டுகொண்டு) மமதையையே தாம்பெற்ற பேறுகத்துணிந்து இன்புற்றுவாழு நீரரே யாவர். இவர்களுக்குந் தெய்வஸம்பத்தே கிடையாது. இவர்கள் "வதுவைச்சடங்கதனை மைதுனமாக் கொள்வோரே" யாவர். ஒருமணவறையில், மணமகனை யொழித்துக் கன்னிகை யொருத்திக்குக் கலியாணஞ் செய்யுமநுபவமே நமது சுரௌதிகளுக்கு யாம் தேடிய வுபமான நிதரிசனமாம். இவர்களுக்குப் பதிநிச்சயஞான முண்டாகாமையால், சிவா என்றொருகால் வாயாலுச்சரிக்க நேரினும், அதனை யப்படியே யநுஸந்தானஞ் செய்யாமல் இராமகிருஷ்ணகோவிந்த வாசுதேவ நாமங்களையுங் கூடவே சொல்லித்தொலைப்பர். நாராயணனிடத்தில் பக்ஷ புத்தியிருந்தாலும் பரவாயில்லை, அதுவுமில்லை. இவர்களுடைய நிலைமை "அந்தச்சாக்தஃ-பஹிச்சைவஃ-லோகேவைஷ்ணவஃ-அயமேவ ஆசாரஃ" என்று விளங்குவதொன்று, ஸ்வேச்சாசாரப்ரவர்த்தகர்களாய் மதுமாம்ஸங்களைச் சேவித்தல் முதலிய ஹேயங்களை மேற்கொண்டு வாமசாக்தர்களாய்ப் பிரவர்த்திக்கும் ஸ்மார்த்தர் கடமை

லையைக் காஞ்சி முதலிய ஸ்தலங்களிற் சென்று கண்டிடுக. சக்தியே தெய்வம் என்று வாமசாக்தத்திற்கட்டுண்டு துராவலம்ப மேற்கொண்டு வாழ்பவர்கள் ஸ்மார்த்தர்களே யன்றி யேனைய ஜாதியினரன்று. இவ்வாறு பலதெய்வந் தொழும்புகொண்டு வாழ்பவர்கள் அப்படியே நில்லாமல் அவைகளைப் பொய்யென்றும் நிஷேதித்தலால் நாஸ்திகமணிகளாகிய அவரது கூட்டுறவு நஞ்சினுங் கொடியதேயாமென்க. இனி யிவர்களை நாஸ்திகஸ்மார்த்தர்-நாஸ்திகவைதிகர்-நாஸ்திகச்ரௌதர் என்று யாம் பேரிட்டழைப்பதே நலமாமென்க.

இவர்கள் ஸ்மிருதிகளையும், வேதங்களையும் மதித்து மகிழ்வதுபோலத் தெய்வத்தினிடத்திலே மதிப்பும், மகிழ்ச்சியுங்கொண்டு வாழார்கள். இவர்களுக்குச் சிவநிந்தையி லுள்ளங்கூசமாட்டாது. வேதநிந்தையில் மனஸ்தாப மதிகமுண்டாகும். இப்படியே ஸ்மிருதிகளிலும் நிந்தை சகிக்கமாட்டார்கள். புராணாதி நிந்தைகளிலே வழவழவென்று விட்டு விடுவார்கள். இப்படி அவர் செய்வதெல்லாம் சுருதி ஸ்மிருதிகளுக்குத் தாங்களே அதிகாரிகளென்று மனத்திற் கொண்டிருக்கும் அழுக்கத்தினாலேயே யன்றி வேறில்லை. இதனைக் கூர்ந்து யோசிக்கிறபோது அவர்கள் சித்தாந்த மீதென்று எவருமெளிதி லுணர்ந்திடத் தடையில்லை. வேதம் எதனாலுயர்ந்தது? அதிற் போந்த பிரமேயத்தி னருமை நோக்கியேயாம். பிரமேயம் சிவம். அதனை விளக்கவந்த பிரமாணம் வேதம். பிரமாணம் பிரமேயம்வேண்டாதபோது அநாவசியகம். இதனையாவரு மொப்புவார்கள். இதற்கு விரோதமாக வேதம் பெரிதெனக்கொண்டு, சிவாபிமானமொழிந்து, யாம் சைவரென்று வெளிவரவுங்கூசி, யாம்வைதிகர் என்றவாயால் வடித்துவாழும் வாழ்க்கையினரது வாழ்வு மொருவாழ்வா? வேதம் உடம்பும், சிவம் உயிருமாம். உயிரோடு கூடியிராத வுடம்பு பிணமென்னும் பெயர்பெறுதலால், நமதன்ப ருயிரை யொழித்து உடம்பையோம்பல் பிணத்தை யோம்புதலுக்கே யொப்பாயினதறிக. பிணத்தை அமங்கலமெனச் சிஷ்டர்களொதுக்குவது மரபாயினமையால், சிவமொழிந்தவேதம் அமங்கலத்வமெய்தி யொதுக்கப்படு மியல்பினதேயா யழியுமென்க. வேதத்தில் தெய்வம் அல்லது சிவம் பிரதானமாகாதபோது அவ்வேதம் பைபில் குரான் முதலிய நூல்களின் முன்னுமொரு நூலாகின்று கௌரவம் பெறுதென்க. நூல்களுக்கு உலகில் பெரியோர்கள் பாராட்டிவருங் கௌரவம் அந்நூல்களிற் பிரதிபாதிக்கப்படும் விஷயவருமையை நோக்கியும், அந்



நூல்களைச் செய்தாரது யோக்யதையை நோக்கியுமேயாம். வேதம் சிவபரஞ்சுடரைப் பிரதிபாதித்தலானும், அவ்வேதத்துக்கு ஆக்கியோர் சிவபரஞ்சுடரே யாதலானும் யாம் (சைவர்கள்) வேதத்தைப் பூஷித்து வாழுநலம் வெளியாயினதுணர்க.

இவ்வேதத்தைப்போலவே சிவாகமமுஞ் சிவபரஞ்சுடரைப் பிரதிபாதித்தும், அச்சிவபரஞ்சுடராற் செய்யப்பட்டும் விளங்கலாலிச்சிவாகமத்தையும் யாம்பூஜ்யமாகக் கொண்டாமென்க. இரண்டுமொரு தன்மைய வாயினும் வேதம்பொதுவும், சிவாகமம் சிறப்புமாயினமையால், வேதத்தினுஞ் சிவாகமத்தை யாமதிகமாகக் கௌரவித்து வாழ்கின்றுமென்க. எம்மைப்போல் (சைவர்களைப்போல்) சிவபாரம்ய புத்தியுடையவர்களுக்கே வேதசிவாகமங்க ளிரண்டினும் பக்திவிசுவாச முண்டாகும். சிவபக்தியொழிந்த இதரர்க்கே சிவாகமத்தில் விசுவாசங்குன்றும். அவர்கள் வேதத்தில் வைக்கும் விசுவாசம் அது சிவனைப் பிரதிபாதிக்கு நோக்கங்கண்டன்று. வேதத்தையே சத்தெனமதித்து, அதிற்கூறியபடி யொழுகுதலே கடமையெனக்கொண்டு, அதிற்றாங்கள் தமது விபரீதத்தாற் காணும் மாபாசங்களையெல்லாம் ஆசாரமாகமேற்று, சிவத்தையிகழ்ந்து அசிவத்தைமகிழ்ந்து அவதிக்குள்ளாயிடுத லவரதியற்கை யாயினதென்க. வேதம் சுயம்பு என்றுகொண்ட பெருங்கேடே யிவர்க்கிவ்வளவு விபரீதத்தைப்பயந்து அவ்வேதமு மிடர்ப்பட்டொதுங்க விடஞ்செய்ததென்க. 'வேதம் கடவுளாற் கொடுக்கப்பட்டது என்பது அகௌரவமும், அதுதானேயுள்ளது என்பது கௌரவமுமாகக் கொண்ட வாதிகள் கடவுணிந்தையிற் றலைப்பட்ட கயவர்களென்னத் தட்டில்லையாகையால், வேதத்தாற் கடவுளுக்குக்கௌரவமுண்டாயதென்னும் வாதமேற்கொண்டு, அக்கடவுளால் வேதத்துக்குக் கௌரவமுண்டாயதென்பதைக்கசந்து பரமநாஸ்திகப் பாஷண்டிகளா யொழியுந் தெய்வத்துரோகிகளை யாமொருபொருளாக மதித்திலமென்க. வேதத்தை யாம் மதித்ததெல்லாம் அது சிவனுரைத்த வாக்காயிருத்தல் கண்டாம். சிவனார் சொல்லாததாயின், அவ்வேதம் யாம் மதிக்கத்தக்கதன்றாம். ஏனைய நூல்கள் சிவனார்சொல்லிய வேதத்தின் வழியாகவும், சார்பாகவும் பிறந்த மாட்சிமைநோக்கியே அவைகளையும் யாமாதரித்தாமென்க. சிவஸம்பந்தமொழிந்த ஸ்மார்த்தர்களையும், வைதிகர்களையும், சுரௌதிகளையும் மேலே நிஷேதித்ததோமாகையால்,

யாம்பூஷிக்கத் தக்கவர்கள் சிவாதிக்யப் பிரஸங்கமேற்கொண்ட ஸ்மார்த்தர்களும், வைதிகர்களும், சுரௌதிகருமாவார்.

எமது உமாபதிசிவம் "ஆதிமறையோதியதன்பயனொன்றும்,மறியா வேதியர்" என்று தூஷித்ததை யோசிக்குங்கால், ஆதிமறையோதி, அதன்பயன் முழுதுமுணர்ந்த வேதியர்களை மேவுதியென்று உபதேசவிளக்கம் வெளியாகத் தட்டில்லை. இவர்களையே ஸ்மார்த்தர்களென்றும், வைதிகரென்றும், சுரௌதர்களென்றும் யாம்துதித்து வாழ்வதென்க. இவர்கள் சிவாகமத்தைத் தமது ஸ்மிருதி சுருதிகளினுஞ் சிறந்ததெனக்கொண்டு வந்தித்து வாழ்வரென்க. இவர்கள் தங்களைச் சைவரென்று கூறிமகிழ்வரென்க. இவர்களையே வைதிகசைவர் என்று உண்மை நூல்கள் முழங்குமென்க. இவர்களே பிரஹ்மவாதிக ளாவரென்க. இவர்களுக்கு மாயாவாதமுதலிய மருட்பேர்கள் மன்னி நிலைபெறுவென்க. இதனால், சிவாகமாவிருத்தத்வ மேற்கொண்ட வேதார்த்தப் பிரசங்கமும் ஸ்மார்த்த சுரௌதாநுஷ்டானங்களும் ஸர்வஸம்பிரதிபன்னமாதல் தெளிந்தின்புறுதலே சிஷ்டஜந சம்மதமாமென்க. விரிக்கிற் பெருகும். இதுநிற்க.

ஸ்மார்த்தர்கள் ஆகமதூஷணஞ் செய்கின்றார்களன்றோ? அவர்கள் அப்படியும் நில்லாமல் ஆகமாநுஷ்டான மேற்கொண்ட சிவாலய விஷ்ணுவாலயங்களுக்குச் சென்று வழிபடுவது என்னமதியோ? பாஞ்சராத்திரம் வேதபாஹ்ய மென்பார்கள். பாஞ்சராத்திரி கையில் துளசிதீர்த்தம் வாங்கிக்கொள்வார்கள். அவன் தங்கள் தலைமேல் சடகோபம்வைக்கத் தாங்குவார்கள். அவனுக்கும், அவன்வழிபடும் விஷ்ணுவுக்கும் மண்பூச்சுண்டு. அதனை வேதபாஹ்யமென்று சொல்லிக் கொண்டே தத்ஸம்பந்திகளிடம் ஸம்பந்திப்பது வைதிகம்போலும். அந்தப் பாஞ்சராத்திரிகளுக்குத் தங்களது வைதிகசதஸில் பாஷ்யதாம்பூலங் கொடுப்பார்கள். இதுவும் வைதிகம் போலும். அன்றியுமிவர்கள் சிவாகமசித்தமான ஆலயபூஜகர்களைக் குருக்களென்று கும்பிட்டு விபூதிவேண்டி அவர்முன்னின்று கையை விரிப்பார்கள். அந்தக் குருக்கள்மார் பூஜிக்குஞ் சிவாலயங்களில் அவர்கள் அநுஜ்ஞைபெற்று மந்திரபுஷ்பங்கூறி மனைந்திடுவார்கள். அவர்கள் கையின்கீழ்ப் பாரிசாரகவேலைசெய்து ஜீவிப்பார்கள். பாத்திர சாமான்கள் தேய்த்துக்கொடுத்தலும், சலஞ்சேந்திக் கொண்டுவந்து சேர்த்தலும், மடைப்பள்ளி வேலைசெய்து பிழைத்தலுமாகிய கூ-



லித்தொழில்களைக் குருக்கள் கையின்கீழிருந்து செய்துகொண்டே அந்தக்குருக்களைக் கூலிக்குப் பூசிப்பவன் என்று நிந்திப்பார்கள். இவ்வாறு செய்துகொண்டே சிவாகமநிந்தையி லின்னும் காலம் போக்குவது காலகதியின் பயனேயாம். இவர்கள் சிவாகமநிந்தையிலும், சிவாசாரியர் நிந்தையிலுமிழிந்து காலம்போக்கி "யாம்ஸ்மார்த்தர்" என்று இறுமாந்திடுவதன்பய னிம்மட்டி லொழியாமலிவரை யதோகதிப்படுத்தியதென்க. என்னெனின், இவர்கள் கோமாம்ஸ பக்ஷணிகளாகிய சுவேதப்பிரபுக்களது ஸம்ஸர்க்கம் பெற்று அவர்களது காலின் கீழொதுங்கி வாழ்வதன்மிக்க பேறில்லையெனமதித்து, தமது ஸ்மார்த்தவுடைகளை மாற்றி, சட்டை தொப்பிகளைப் போற்றி ஸதாசாரங்களைத் தூற்றி, ஸ்நாநஸந்திகளைப்பாற்றி சந்தோஷித்து வாழ்வது யாவருமறிந்தவிஷயமே. அன்றியும், சோற்றுக்கடை, வேற்றுக்கடைகள் வைத்துச் ஜீவிப்பதும் பிரத்தியட்சம். இவர்கள் தியாஜ்யமெனின், இவர்களோடிருந்து விருந்துண்பார் சுரௌதிகளாம். சுரௌதிகளது மக்களே யிவ்வாறிருந்து அலைபவர்களாம். இவைகள் வேதபாஹ்யமாகாமல் நமது ஸ்மார்த்தநண்பர்களுக்குச் சிவாகமாசாரம் வேதபாஹ்யமாயினது ஆச்சரியமேயாம். இவ்வநிஷ்டாசாரங்கள் சிவாகமநிஷ்டையுடையோர்பாற் சிறந்ததில்லையென்றறிக. இதுநிற்க, இன்னும் இந்நாவலர்பேசுந் தீமையைப் பலவாற்றானும் எடுத்துக்காட்டி சத்போத வாயிலால் விலக்கி யுபகரிப்பாம்.

---

## பிரமவித்யா நாவலர் தீமையை விலக்கல்.

இந்த நாவலர் பலபடியாலும் நமது தீமையைக் காட்டத்துணிந்து "ஓடமருந்தான் றெங்குபவன்" போல் எடுத்த விஷயத்தை முடிக்காதிடையேவிட்டு, இப்போது ஜாதியினும் ஜாதிதர்மத்திலுமிழிந்து வீண்வாதம்பேசத் தொடங்கினர். இவ்விஷயத்திற் குத்தரமளித்தல் அநாவசியகமேனும் பின்னர் இடம் வாய்ந்துழி செவ்வனே வெடுத்துப்பேசிக் கண்டித்தொழிப்பாம்.

"பிரமற்குக் க்ஷத்திரியைவயிற்றிற் பிறந்த பிள்ளை வசிட்டரும், வசிட்டர்க்குச் சண்டாளிவயிற்றிற் பிறந்த பிள்ளை சத்தியரும், சத்தியர்க்குப் புலைச்சி

தோள் சேர்ந்து பிறந்த பராசரரும், பராசரருக்கு மீன்வாணிச்சி வயிற்றிற் பிறந்த வியாசரும், வேதங்களோதி மேன்மைப்பட்டு மறையவராகி வயங்கினரன்றோ" என்னுங் கபிலரகவலைக் கண்ணுற்று மௌனமாய்க் கிடக்குமிவர் எம்மைச்சுட்டி யிவர் வேதத்தை யுச்சரிக்கலாமா? என்று கடாவியது இவரது பெருமையையும் இவரது முன்னோர்கள் பெருமையையும் வெளிப்படுத்திக் கொள்ளுமேதுவாய் முடிந்ததென்க. எம்மால் இனி விரைவில் வெளியிடப்படும் "வேதாதிகார விளக்கம்" என்னு நூலைவிவரது வைதிகபிரட்டு வெட்டவெளியாயிடுமென்றையமில்லை. இவ்விஷயத்தில் அதிகமாகப் பிரவர்த்திக்க மனமில்லாமலிம்மட்டில் விஸ்ராந்தியடைந்தாம். இது நிற்க.

இவர் யாமெழுதிய "நிராகரணத்தை" நியாயவாயிலாக மறுப்பதொழிந்து வீண்வார்த்தைகளைப் பரப்பியதனால் என்னபயன்? எம்ம நிராகரணத்தை யிவர் வெறும்பேன ராவித்துவிட்டதினாலேயே அந்நிராகரணம் பூர்வபட்சமாயிட மாட்டாது. அவரது ஆரீகரணத்தையும் எமது நிராகரணத்தையும் நடுநிலைமை பூண்ட விவேகிகளே யறிந்து மகிழ்த்தக்கவர்கள்.

எமது நிராகரணத்தில் அவரது உதவியற்ற கேள்விகளுக்கு விடை விரவில்லையென்று அவர் அலர்தூற்றினராகையால், அவரது பொய்மை யாருமெளிதி லுணருமாறு ஈண்டு எமது பதிலைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் யாம் எடுத்துக்காட்டுகின்றோம்.

பூர்வபட்சம்.

க. வைதிகசைவ சமயக்கொள்கை யாது.

சித்தாந்தம்.

வைதிகம் வேதசம்பந்தமும், சைவம் சிவசம்பந்தமுங் கொண்டு விளங்கலால் வேதவழி நின்று சிவனை வழிபடுவதே வைதிகசைவ சமயக்கொள்கையாம். வேதவழி நிற்றல்=சிவனை வழிபடுதல்.

பூர்வபட்சம்.

உ. அக்கொள்கையை விளக்கும் சமய நூல்கள் எவை?

சித்தாந்தம்.

வேதமும் சிவாகமமுமே அச்சமய நூல்கள். வேதம் சுருங்கச் சொல்லியதைச் சிவாகமம் விளங்கக் கூறினமையால், இரண்டும் எ



மக்குப் பிரமாணமாயின. வேதாகமங்க ளபேதமென்பதை "வயந்து சிவாகமயோர்ப்பேதம் நபச்யாம்-வேதோபிசிவாகமஃ" என்று ஸ்ரீபாஷியக்காரர் கூறியருளினர். "வேதம் சைவமயம்யஜேத்" என்று புராணங் கூறியது. "ஒரும்வேதாந்தமென் றுச்சியிற்பழுத்த, வாராவின்ப வருங்கனி பிழிந்து - சாரங்கொண்ட சைவசித்தாந்தத் -தேனமுதருந்தினர்சிலரே" என்று குமரகுருபரதேவர் கூறியருளினர். இதனையே "வேதமோடாகம மெய்யாமிறைவனூல்" என்று திருமந்திரமுங் கூறியது. இன்னும் பலவுள.

பூர்வபட்சம்.

ங. அந்நூல்களின்வழி வைதிகசைவ சமயக்கொள்கைகளை நிறுத்திய நல்லாசிரியர் பரம்பரை யாது?

சித்தாந்தம்.

"விண்ணவரிந்திரன் பிரமனாதி விளங்கு சத்தரிஷிகள்கனவீணைவல்லோர் - எண்ணரிய சித்தர்மனுவாதிவேந்த ரிருக்காதிமறைமுனிவரெல்லாம்" என்று தாயுமானசுவாமிகள் கூறிய பெரியோர் பரம்பரையேயாம்.

பூர்வபட்சம்.

ச. அவர்களிப்பொழுது ஆசரிக்கும் ஆசாரங்கள் எவை?

சித்தாந்தம்.

வேத சிவாகமோக்தாநுஷ்டான ஆசாரங்களேயாம். இவ்வநுஷ்டான முடையாரே சைவரும் வைதிகரும் ஸ்மார்த்தருமாயிடுவரென்க. இவ்வுண்மையை அவ்வேதியராகிய ஆதிசைவரிடத்தும், மகாசைவ ரனுசைவ ராதியோரிடத்துங் காண்க.

பூர்வபட்சம்.

ரு. அவை எந்நூற் பிரமாணத்தன?

சித்தாந்தம்.

வேத சிவாகமங்களையும், அவற்றின் வழிநூல், சார்பு நூல்களையும் ஆதாரமாகக்கொண்டன.

பூர்வபட்சம்.

சா. வைதிகம் சைவம் என்பன இருவேறு மதங்களின் பெயர்கள். வைதிக சைவமென்னும் வழக்கு நவீனமாவதன்றிப் புராதனமாகாது.

## சித்தாந்தம்.

"அயர்வறச்சென்னியில்வைத்த ராஜாங்கத்தி லமர்ந்தது வைதிகசைவமழகிதந்தோ" என்று தாயுமானவர் கூறியதால் வைதிகமும் சைவமும், வேறு வேறு மதங்களின் பெயர்களாயின தில்லை. இவ்வைதிக சைவவழக்கு நவீனமுமன்று, புராதன மானதொன்றாம். இவ்வாறு தெளிந்திடத்தக்க விஷேயங்கள் கழகத்து நமது சிவாலய காவலரது விபரீதம் பயன்பட மாட்டாதென்க. இது நிற்க.

யாம் வேதவழி நின்று சிவனை வழிபடுவோர் வைதிக சைவர் என்று கூறியதற்குப் பிரமாணம் வேண்டுமென்றார். இவரும் இவரது மாயாவாதக்குழுவினரும், வைதிக சமயிகள் என்பதற்கு இவர் பிரமாணங்காட்டினரா? வைதிகம் என்பது சமயப்பெயரன்று, சமயந் தெய்வசம்பந்த முடையதாக வேண்டும். அச்சமயிகளுக்கே அவர் கைக்கொள்ளும் நூல்களின் சம்பந்தத்தால் வைதிகர் ஸ்மார்த்தர் முதலிய பெயர்களமைந்திடும். நமதன்பரது மதம் வைதிகமாகாததை "அத்வைதிகள் வைதிகர்களா?" என்று சித்தாந்திக்காடு சிவாசாரியர் கடாவிப் பரிஷ்கரித்திருப்பதையும் பார்த்து நாணுவாராக. இவரது போலிவைதிகம் படும்பாட்டைக் கவனியாமல் எமது வைதிக சைவத்துக்குப் பிரமாணங் கேட்டது பேராச்சரியமாயதென்க. "சுருத்யுக்தசைவசித்தாந்தோ" என்று ஹாலாஸ்யம் கூறியதை யாம் எடுத்துக்காட்டியிருக்கின்றோம், அதுவே சைவம் எனத்தனி நின்று பொலிவெய்துதலை "சைவசித்தாந்தா" என்று அந்த ஹாலாஸ்யம் புகழ்ந்ததையும் எடுத்துக்கூறினோம். இவைகளைக்கவனியாமல் அவைபோல்வதொன்றாய் வெளிப்பட்ட தாயுமானவர் பாடலைப் பிரஸ்தாபித்து அது பிரமாணமாகாதென்று இவர் வம்பளந்ததென்னையோ? உலகமுழுதுங் கொண்டாடத்தக்க வப்பெரியோனுரை சபையேறுதாயின், சங்கராசாரியரது பாஷ்யம் தெருவேறுவதன்றிவேறு எங்கு ஏறும்? இவர் மெய்கண்டார் அருணந்தியார் முதலிய அருளாளர்களது நூல்களையும் தூஷிக்குந் தவறுடையவராகையால் இவர் எம்பெரியாரது நூல்களைக்கொள்வதும் கொள்ளாததும் எமக்கு நிஸ்புருஷமென்க. நடுநிலைமையுடையார் விவேகிப்பதே யாம் வேண்டற்பாலதென்க.

இவ்வஸம்பாவித நாவலர் தாயுமானவர் இவரது போலிவேதாந்தத்தையும், எமது சைவசித்தாந்தத்தையும், சமரசமென்று கூறியதா



கவொரு பிரசங்கஞ் செய்தார். இவரது போலிவேதாந்தத்தைத் தாயுமானவர் "நாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவரும்" என்று வெட்டிச் சாய்த்ததையும், வேதாந்தம் இது, சித்தாந்தம் இது என்பதை "வேதாந்த சித்தாந்த சமரசம்" என்னும் பகுதியில் யாம் நன்கு பரிஷ்கரித்திருப்பதையும் பாராதவர்போல், தமது பழய பாடத்திலிறங்கிப் பகடிக்கூத்தாடிய திவர்பண்பேபோலும்! இவர்கொண்டாடி மகிழும் வைத்யநாதீயம், எல்லா ஸ்ரீயம்-முதலிய சாமானியர் வாக்குகளெல்லாம் பிரமாணமாகிறபோது லோகபூஜ்ய மூர்த்தியாகிய தாயுமானவர் பாடல் பிரமாணமாகாதென்பதும், அவர் இவர் போலிவேதாந்தத்தைப் புகழ்ந்தாரென்பதும் எங்ஙனே கனம் பெறும்? தாயுமானவர் "வைதிகசைவம்" பூர்வமே கூறியுள்ளதை அதுதோன்றிய இது காறும் எவருங் குறைகூறிய தின்றாகையாலும் அப்புராதன வழக்கையே ஞானாமிர்தக்காரர் எடுத்தாண்டமையாலும் அப்புராதன வழக்கை நவீனமாக நமது தூரீகரணக்காரரே தூஷித்தமையாலும் அவ்வாறு தூஷிக்கும் வாதமும், வைதிகம் வேறு சைவம் வேறு, என்று பிரசங்கித்ததுமே நவீனவழக்காதல் துணியப்பட்டவாறறிக.

இனிச் சிவனை வழிபடுந்தன்மையால் சைவர் என்னும் பெயருண்டாகு மென்பதற்கு "தெய்வம் சிவனே சிவனருள் சமயம் - சைவம் சிவனொடு சம்பந்தமென்றான்" என்னுமேலோர் வாக்கியத்தைக்காட்டி யாம் பிரசங்கித்ததை இவருணரார்போன்று அதையுந் தூஷித்தொழிந்தனர். சிவாகமங்கள் சிவனைச் சிறப்புவகையால் பதியென்று நிரூபித்தலால் அச்சிவாகமத்துக்குச் சைவம் என்னும் பேர் சிறந்ததென்க. சிவனைத்தெய்வமென்று கூறுமதிகாரிகள் "சிவனடியார்" "சைவர்" என்று பேர்பெற்றவாறுபோலச் சிவனைத் தெய்வமென்று கூறுமாகமம் "சிவாகமம்" "சைவம்" என்னும் பேர்பெற்றது ஸர்வஸம்பிரதிபன்னமாயதென்க. இனிச் சிவாகமத்துக்குச்சைவம் என்னும் பேர் யாதுகாரணத்தால் வந்ததாக இவர்கண்டு கூறினர்? அப்பெயர் சிவாகமத்துக்கு ரூடியாயின், பிரமாணங்காட்டி வெளிவருவாராக. யோகமென்பாராயின் எமது உபதேசமொழியிலடங்கி மௌனஞ்சாதித்து வாழ்வாராக. வைதிகசைவர் வைதிகர், சைவர் என விருசாராகப் பிரியாரென்பதைச் சிவவேதியர் என்னும் பிரயோகவாயிலாகவு மறியத்தக்கது. சிவனுக்கு அணுக்கராகிய வேதியரென்று பொருளுண்டாதலும், அதனையே சிவப்பிராமணர்

என்று சாதித்தனுபவர்க்கு வெளிதில் விளங்குமென்க. வைதிக சைவர் என்பது பொதுப்பெயரும் சிவவேதியரென்பது சிறப்புப் பெயருமாம். சிவவேதியரென்பது ஆகமங்களைக் கைக்கொள்வோரும், வேதங்களைக் கைக்கொள்வோருமாகிய இருதிறத்தவரைப் புலப்படுத்தியது, என இவர் சாதிப்பாராயின் இவரது வைதிக சைவ நாசனைங் கனம்பெறும். அது இவராலும் எவராலும் முடியாத காரியமாகையால் இனியிவர் வாய்மூடிக் கிடப்பதே யிவருக்குப் பெருமையாம். இன்னும் இவர் வீண்வம்பிலிழிந்து வரம்பு கடப்பாரெனின், இவரை வாதசபைக்கழைத்து ஒழுங்கு தேடுவதே யெமக்கு மரபாமென்க. இவர் யாமெழுதியதற்குப் பதிலெழுதாவிட்டால், இவர் மஹாமஹோபாத்யாயரது மாணாக்கரென்னும் பெருமை குலைந்திடுமென்றஞ்சி யிவரது இந்து டிராக்டு சொஸைட்டியாராகிய சமரசஞானிகள் மெச்சும்படி யிவர் பழகிய கைத்திறமெல்லாங் காட்டிக் கரணம் போடப்பார்க்கிறார். அந்த ஸாமர்த்தியம் வைதிக சைவர் பக்கல் செல்லாதென்க. இனி யேனும் ஸந்மார்க்கத்திற் றிரும்பி நன்மை கடைப்பிடித் தொழுகுவாரென்று நாடித் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

---

## பிரமவித்யா கலிபுருஷர் மகிமை.

சென்ற கர௵ பங்குனி௴ மாத பிரஹ்மவித்யாவில் "கலியுகவலிமை" என்னும் மகுடம் புனைந்து கலிபுருஷரொருவர் தமது விபரீதத்தைப் பெருக்கிக் களியாட்டயர்ச்சியிற் சிறந்து தருக்கினார். இம்மகுடாதிபர் "சிதம்பரம் ஸ்ரீமது பிரஹ்மஸ்ரீ பரமேசுவர தீக்ஷிதரவர்களுடைய சிஷ்யர்களில் ஒருவன்" என்று வெளிவந்திருக்கின்றனர். இவரது அறியாமை தொலையுமாறு சில விண்டுவரைகின்றோம்.

இவர் இவரது பிரசங்க ஆரம்பத்திற்றானே "இப்பொழுது செந்தமிழ்ப் பெருங்கடலுள் ஓர் சிறிதுகற்ற சில சூத்திரர்கள்" என்று ஹேயமாகப் பிரஸ்தாபித்துச் சூத்திரர்களைப் பலவாறு தூஷித்தார். சுருதி ஸ்மிருதி இதிஹாஸ வேதாந்தமுதலிய எவ்விஷயங்களிலும் அந்தணரே சுதந்தரமுடையவரென்று மாரவாரித்தார். தமதாரவாரத்தில், "அங்ஙனமெழுவதாலும், எங்கேனும் ஓர் மூலையிற் கி



டந்து உளறுவதாலும்" என்று சண்டைக்கு ஆஸ்பதமான பிரயோகங்களை யோட்டித் தருக்குற்றார். அன்றியும் "அவர்களைப் பிரதிவாதித் தன்மைக்கு யோக்யர்களாக மதித்து இக்கடித மெழுதத் தொடங்கிற்றிலேம். இனி அவர்களோ சரீர கர்மத்தால் நான்காம் வருணத்தவர்கள்" என்று சுடுமொழிகளை நிரப்பித் தூர்த்தாவேசங்கொண் டிழிவேற்றார்.

இவ்வாறு எழுதியதாலிவர் வாரிக்கொண்டது ஏதென்று எமக்குப் புலப்படவில்லை. இவர் ஒன்று கொடுத்து ஒன்பது வாங்கிக்கொள்ள இசைந்தார்போலும். இவர் அந்தணராயினுமாக. சூத்திரர் சோலிக்குப் போய்ப் பரிபவப்படுவ தெற்றுக்கு? "அந்தணரென்போரறவோர்" என்னுங் குறளை இனியேனுஞ் சிந்தாக்ஷிச் சகப்படுவாராக. முதற்சாதியினரிடமே அது சிறக்குமெனின், அம்முதற்சாதியினரிக்காலத்திலில்லையெனத் துணிந்திடுக. கும்பத்திற் பிறந்த கலசயோநியும், கரிக்குருவியினிடம் பிறந்த பாரத்துவாசமுனியும், கோவினிடம் பிறந்த கௌதமனும், வேசிவயிற்றிற் பிறந்து சக்கிலிச்சி தோள்சேர்ந்த வசிட்டனும், மீன்வாணிச்சி வயிற்றிற் பிறந்த வியாதனும், கழுதையினிடம் பிறந்த கர்க்கனும் ஆகிய பலதிறத்து அந்தணரது சந்ததிப் பெருக்கேயன்றோ இப்போது உலகில் பிரசித்தியடைந்திருப்பது? இவ்வாறு பிரகாசப்படுத்தற்பாலராகிய வந்தணர் சுத்தகுலமாகிய சூத்திரர்களைப் பழிப்பது முறையாகுமோ? இவரது சாதியின்கதியை வெளிப்படுத்திக் கொள்ளவேபோலும் சூத்திர நிந்தையி லிவரிழிந்தது? சூத்திரரினுங் கீழாகிய சூதரது காலில்வீழ்ந்து புராண சிரவணஞ்செய்யுஞ் சௌநகாதியர்களைத் தமது ஜாதி முன்னோர்களாகத் துணிந்துகூறு மாதிக்யமே தமக்கிருப்பதை இனியேனுஞ் சிந்திக்கக்கடவர். இந்த வியவஸ்தையால், சுத்த குலத்தவராகிய சூத்திரரை நமதன்பர் பிரதிவாதியாகத் தேடாதிருப்பதே அச்சூத்திரருக்குப் பெருமையாமென்க. நாம் பிராஹ்மணன், சூத்திரர்களை நாம் அதட்டிப்பேசினால் அடங்கிவிடுவார்களென்று பூச்சிமிரட்டு மிரட்டுவது இனிச்செல்லாதென வறிக. இது நிற்க.

இவர் "பிரமனது முகத்திற் பிராமணர்கள் பிறந்தார்கள்" என்னும் பிரமாணத்தை மேற்கொண்டு அந்தணர் முதற் குலத்தவராக வாதிக்கலாம். அங்ஙனமாயின், பிரமனிடம் முதலிற்பிறந்த பிராமணன் யாவன்? ஒருவன் பிறந்தானா? பலர் பிறந்தார்களா? அவ

ர்கள் பேரென்னே? அவர்கள் தனியே பிறந்தார்களா? ஸ்திரீகளோ டு பிறந்தார்களா? இவர்கள் பேரைப் பிரஸ்தாபித்து இவர்களைத் த மது அந்தணர்குலத்துக்கு மூலபுருஷராக வெடுத்துக்காட்டி வெளி வருவாராயின், அப்போ தொருகாலிவர் மேற்குறித்தவாறாகலாம். அப்படி வெளிவருங்கால், பிரமனிடம் பாதத்திற்பிறந்த சூத்திரர்கள் இவரைத்தமது மூத்தசகோதரராக வங்கீகரிக்கலாம். இனிப்பிரமன து முதற்குமாரன் பிராமணனும், இரண்டாவது குமாரன் க்ஷத்திரிய னும், மூன்றாவது குமாரன் வைசியனும், நான்காவது குமாரன் சூத் திரனுமாகு முறைமையால், இன்னோர் ஒருவரை யொருவர் தாழ்வு கூறவு மதிகாரம் பெறார்கள். பிராமணன் மூத்தசகோதரனும், சூத் திரன் இளைய சகோதரனுமாகிய சம்பந்தத்தை யுணர்ந்தபின்னர், பிராமணன் சூத்திரனைப்பழிப்பது அவனது அறியாமையென்னது வேறு யாதென்னலாம்? இப்படித் தலைகீழ் வருமென்று தெரிந்தா ல், நமது தீக்ஷிதரது சிஷ்யர் இவ்வளவு தூரத்திற்கு வரமாட்டார். இனியாவது அடங்கிவாழ்வாராக. இது நிற்க.

இவர் சர்வ வித்தைகளிலும் அந்தணரே சுதந்தரமுடையார் என்றும், சூத்திரர்கள் தமக்குச் சுசுருஷை செய்தற்கே யுரியார் என்றும் பிரசங்கித்தாரெழுந்தார். இந்த வுபதேசம் மூடர்களுக்கு மாத் திரமே பயன்படும். எனெனின், வேதத்தை நான்காகப்பிரித்துப் பிரகாசப் படுத்தினவரும், வேதாந்த சூத்திரங்களை விரித்தவரும், பாரதத்தை ஐந்தாம்வேதமென்று பகர்ந்தவரும், அஷ்டாதசப் பிர மாணமாகப் புராணங்களை வகுத்தவரும் ஜாதி வேதியரன்று, மத்ஸ்ய கந்தி மகனாகிய வியாசரென்றறிக. இனி ஸ்ரீமத் ராமாயணஞ்செ ய்தவர் வேடுவர்கோமானாகிய வான்மீகி பகவானென்றறிக. இந்நூ ல்களையேயன்றோ நமது வேதிய நண்பர் பிராமணர்களுக்கே சொந் தமென்று வாதிட வந்தது? இனி அவர் கண்ணைத்திறந்து பார்க்க க்கடவர். அந்த நூல்களுக்கு ஆக்கியோர்களை (அவர்களது உற்பத் தியை நோக்காமல் யோக்கியதையை நோக்கி) எப்படி அந்தணர்கள் என்று நூல்கள் கூறினவோ அப்படியே மேற்படி நூல்களுக்கு அந்தண ர்களே அதிகாரிகள் என்ற விடத்திலும் பெறப்பட்டவாறறிந்து கு ணப்படுவதே பரபாரமென்க. வேதமுதலிய கலைகளில் "பிராஹ்மண ர்" என்றது ஜாதி வேதியரையன்று என வச்சிரசூசிகோபநிஷத்தி ல் விளக்கியிருப்பதனையுமறிக. விரிக்கிற் பெருகும்.



இவர் சூத்திரர் சுசுருஷைக்கேயன்றி வேறொன்றற்கும் அதிகா ரம் பெறார்களென்று கூறினராகையால், அதனையும் யோசிப்பாம். இவர் சூத்திரருக்குத்தேடிய சுசுருஷை பிராமணர் மட்டினின்று வே வருக்கொருகால் கௌரவமுண்டாகலாம். அது க்ஷத்திரியர், வைசி யரிடங்களிலுஞ் சென்று வியபிசரித்தலா லவரது மதம் அநாதரணி யமாயிற்று. ஒருபிராமணனுக்கு அவனுடைய மனைவி சுசுருஷைக் கே யதிகாரியாயிடுதல் நியதம். இதனால், அந்தப்பிராமணன் தனது மனைவியை ஹேயமாக வெண்ணுவது கூடுமோ? அவளிடத்தில் அ வனது மிகையான சேட்டை பயன்படாதவாறு சூத்திரரிடத்தில் நமது தீக்ஷிதரது சிஷ்யர் செய்யும் விபரீதம் பயன்படாதென்பதே சித்தம். பிராஹ்மண ஸ்திரீயையும், சூத்திரனையுஞ் சமமாகக்கொ ண்டு சாத்திரங்கள் உபதேசாதிகளை விதித்தலால், பிராஹ்மணன் தன்னுடைய ஸ்திரீயினிடம் பாராட்டத்தக்க மரியாதையே தனது சகோதரனாகிய சூத்திரனிடத்தும் பாராட்டத் தக்கவனாகிறான். பிரா ஹ்மணனுக்கும் அவனுடைய ஸ்திரீக்கும் பேதமில்லாவாறுபோல, பிராஹ்மணனுக்குஞ் சூத்திரனுக்கும் பேதமில்லையெனலே சத்திய ம். சூத்திரன் பாஹ்யனாயிடுவானாயின், பிராஹ்மணனது ஸ்திரீயும் பாஹ்யத்தன்மை பெய்தி விலக்கியொதுங்கத் தக்கவளேயாவள். இனிச் சூத்திரன், முதன் மூவர்களுக்கும் சுசுருஷைசெய்ய நூல்க ள் விதித்தது அச்சூத்திரனுக்கு அம்முதன் மூவருஞ் சகோதர ச ம்பந்தத்தால் பெரியவர்களாயிடுதல் கருதியென்க. தமையன்மார்க ளுக்குத் தம்பி சுசுருஷை செய்தலால், அவன் குறைகூறப்படுமா றெங்ஙனம்? தம்பியைத் தமையன் தனது முறியாள்போல வெண் ணினால், அத்தமையன் காதை அவன் பிடித்தாட்டாமற் போகான். இதனால், பிராஹ்மணனாகிய தமையனிடம் அன்புரிமையால் சுசுரு ஷை புரிய விசைந்த தம்பியை அப்பிராஹ்மணத் தமையன் இழிவு கூறி விசிறி விளையாடுவது அவனுக்கே பரிபவமாய் முடியுமென்க. இதனை நமது தீக்ஷிதரது சிஷ்யர் இனியேனுஞ் சிந்தித்தடங்கு வாராக.

இனி, இவர் சுசுருஷையைத்தவிரச் சூத்திரர்களுக்குப் பிரமா ணங்களிற் பயின்று விவகரிக்கும் அதிகாரமில்லையென்றும், பிராஹ் மணருக்கே அவ்வதிகாரமுண்டென்றும் பிரசங்கித்தனர். எல்லாப் பிரமாணங்களும் வியாச வான்மீகாதி (சூத்திரினுங்கீழ்ப்பட்ட) ரிஷி களது வாக்கியமாதலை மேலே விரித்துள்ளேமாகையாலும், விது.

ஈன்முதலிய ஞானோபதேச கர்த்தர்கள் பிராமணரல்லாமையாலும், கௌசிகன் என்னும் வேதியனுக்குச் சகல தர்மங்களையு முபதேசித்த தர்மவியாதன் வேடனாயினமையாலும் சூத்திரன் சகலஞைக்கே யுரியவன் என்பதூஉம், பிரஹ்மஞானமே சர்வாதிகாரியென்பதும் அபண்டித சத்தியின்மாத்திரமே மெய்ம்பெறுந் தக்கவென்றறிக. இது நிற்க.

இவர் "இராஜாதிராஜ குரு பூமண்டலாசாரியரான ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகளுக்கு ஜகத்குரு வென்னும் பட்டம் பொருந்துவது எப்படி என்பது முதலிய கேள்விகள் கேட்டு ஒரு சூத்திரர் தமதறியாமையை வெளியிட்டார்" என ஒரு புதுமை கண்டுகூறினர். இதனைச்சற்று விசாரிப்பாம். பிரஹ்மவித்யா பத்திரிகையில் "மடாதிபதிகளும் ஜகத்குருக்களும்" என்னும் மகுடம் புனைந்து அப்பத்திராதிபரோ, பிறரோ சிலவிஷயம் எழுதியிருக்கிறார்கள். அதனைப்பார்த்து ஞானாமிர்த பத்திரிகைக்காரர் அதற்கொரு மறுப்பெழுதினர். அந்த மறுப்பை யாம் பார்த்தோம். அது எமக்குச் சம்மதமாயினும், அதனை யாவருமே சம்மதிக்கவேண்டியது என்று யாம் வாதிக்கவரவில்லை. யாருக்கேனும் அதன்மேல், தமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்க விருப்பமாதேல், சம்பிரமமாய்த் தெரிவிக்கலாம். அப்படித் தெரிவிக்க முயலுங்கால், எடுத்துக்கொண்ட பிரமேயத்துக்கிணங்க விஷயங்களை யெடுத்துப்பேசுவதே முக்கியம். இங்ஙனமாக, அஃது ஞானாமிர்தக்காரர் எழுதிய விஷயத்தை மறுக்கத் தொடங்கிய நமது தீக்ஷிதரது சிஷ்யர் (சங்கராசாரியரே ஜகத்குரு என்று) சாதித்துத் தமது சமய குருவின் பெருமையைக் காத்துக்கொள்வதை விட்டுச் சூத்திர நிந்தையிலிழிந்து பரிபவப்பட்டது வெறுக்கத்தக்கதாய் முடிந்தது. எடுத்த கட்சியை நிர்வகிக்க முடியாத குறைவேயன்றோ சூத்திரர்களை நிந்திக்க அவ்வளவுந் தூண்டியது? இனி இத்தகைய வலங்கதங்களி லமைவாராது சுகிக்கும்வழி தேடுவாராக. இவரது ஆபாசச் சரக்கைப் பிரஹ்மவித்யா பத்திராதிபர் தமதுபத்திரிகையில் வைக்க விடந்தந்தது அப்பத்திராதிபரிடத்துங் குற்றமே. ஏனெனின், இவர் ஐக்கிய மத்தியத்துக்காக இரவும்பகலுங் கூச்சலிட்டுப் பிரசங்கித்தும், பத்திரிகை யெழுதியும் பாடுபடுபவர். இவர் உலகத்திற்குத் தாம்செய்யும் உபகாரத்தைக் காட்டி மாட்சிமைபொருந்திய சேதுபதி மகாராஜா அவர்களிடம் பொருளுதவி பெற்றுச் சீவனஞ்செய்பவர். இத்தகைய போதநன்மை



யாளர் தமது பத்திரிகையில் சூத்திரர்களைத் தூஷிக்கவிடங்கொடுத்தது மகானாகிய சேதுபதியவர்களது உள்ளத்தைக் கொதிக்கச் செய்யாமற்போகாது. இனியேனுஞ் சாக்ரதைப் படுவாராக. இது நிற்க.

நமது தீக்ஷிதரது சிஷ்யர் சங்கராசாரியரை "இராஜாதி ராஜகுரு பூமண்டலாசாரியர்" என்று கொண்டாடினர். இது என்ன சுருதியா, ஸ்மிருதியா, புராணமா, இதிகாசமா? இஷ்டம்போலெழுதிவைத்துக்கொள்ளு மேற்பாடு. இப்படியே பலமதத்தருந் தத்தமக்கிசைந்தவாறு எழுதிவைத்துக்கொண் டிருக்கிறார்கள். ஒருவரையொருவர் மறுக்குங்கால், அவரவர்களது பிரபல துர்ப்பலங்கள்வெளியாகநிற்கும். நமது ஞானாமிர்தக்காரர் மறுத்ததற்கு ஒரு இம்மியேனு மிவர் பதில் கூறிற்றிலர். இவரது சகோதரராக வெளிப்பட்ட ஜகத்குரு தூஷ[illegible] காரீகானராவலரும் நாவசைக்க வகையற்று அவலமொழிகளை நிரப்பித் திருப்தியடைந்தனர். அதன் மறுப்பும் உடனே வரும். இனி யிவர் கூறிய வேனை யாபாசத்தையு மெடுத்துக் காட்டி, நமது நியாய சஸ்திரத்தைப் பிரயோகிப்பாம்.

இவர் "உத்தம வைதிக பிராமணராகிய தில்லைவாழந்தணரென்னும் தீக்ஷிதஸ்வாமிகளே ஜகத்குரு வென்பதில் எங்கள் சம்மதம்போல அவரும் அபிநயித்துத் தீக்ஷிதர்களின் நிந்தாஹேதுவான ஆதிசைவ சாம்யத்தை வெளியிட்டார்" எனவும், "வைதிக மதஸ்தர்கள் அவ்வைதிகவழி பூசிக்கப்படுந் தேவதா ஸந்நிதியில் பிரசாதங்களை ஏன் கிரகிக்கமாட்டார்" எனவும், "அப்பிரசாதத்தைக் கிரகிக்கத்தகாத அதிகாரிகளுக்கே அவ்வைதிகப் பிரசாதம் கொடுக்கப்படமாட்டாது" எனவம் பிரசங்கித்து, இப்போது தாம் பிரயோகித்தது வச்சிரசூசி எனவும், இனிப் பிரயோகிக்கப்போவது வச்சிரமுசலம் எனவும் சமாப்தி கூறினர்.

இனி யாமிதனையுங் கொஞ்சம் விசாரித்து உபரதியடைவாம். ஈண்டிவர் "எங்கள் சம்மதம்போல" என்றது பேர்கொண்ட பார்ப்பாரை "அவரும்" என்றது ஞானாமிர்தக் காரரை. இவருள், ஞானாமிர்தக்காரர் ஸ்ரீ சுந்தரமூர்த்திகள் கட்டளையிட்டருளிய திருத்தொண்டத் தொகையைத் தமதுபெருநிதியெனக் கொண்டு "தில்லைவாழந்தணர்த மடியார்க்குமடியேன்" என்று சதா பாராயணஞ்செ

ய்து வருபவர். பேர்கொண்ட பார்ப்பாரேயெனின், தில்லைவேதியர் தம்மைப்போன்ற வேதியரென்று ஸாம்யங்கூறித் தருக்கிவாழ்பவர். கும்பகோண மடாதிபதியாகிய சங்கராசாரியர் என்னும் வேதியரும், அவரினத்தவரும் அத்தில்லை வேதியரை யெதிர்த்துச் சங்கராசாரியர் தில்லைவேதியர் கொடுக்க விபூதிப்பிரசாதம் வாங்கமாட்டார் என்று வீண்போர்விளைத்துத் தூஷித்த சங்கதி உலகமுழுதும் அறியுமே. இதனை மறைக்கமுடியாதே. இதற்கு விரோதமாக நமது நீசுதிரது சிஷ்யர் ஞானாமிர்தக்காரரைத் தூஷித்தது வஞ்சமென்றன்றி வேறு யாதென்போம்? தில்லைவாழந்தணர்கள் சாமானிய விப்பிரவர்க்கத்துட் சேர்ந்தவரல்லரென்பதே யமது துணிவென்றறிக. இவர்களை வைதிகபிராஹ்மணர்கள் "ஜகத்குரு" என்று கொண்டிருப்பது சத்தியமானால், சங்கராசாரியரையும் ஜகத்குரு என்று சாதிக்க வழுவதென்னை? ஞானாமிர்தக்காரரைத் தூஷிப்பதற்குத் தமக்குத் துணைவேண்டித் தில்லைவேதியரை நமது ---த்ததன்றி வேறில்லை. அத்தில்லைவேதியர் சிவகணத் தலைவர்களாதலால், அன்னோர் வசிட்டாதி வர்ண சங்கரமுனிவர் கூட்டத்தோடு சேர்ந்து யாம் அவரினத்தார் சாமானியவேதியர் என்று வெளிவரத்துணியாரென்க. இது நிற்க.

இவர் தில்லைவேதியர்களுக்கு ஆதிசைவ ஸாம்யம் நிந்தையாமெனக் கூறியுமிருந்தார். ஆதிசைவர் வசிட்ட பராசராதி மருப்பிற்சேர்ந்த வேதியராகார். தில்லைவேதியரைப்போலவே தத்த சிவசம்பந்தமுற்று ஆவிர்ப்பவித்தவர்கள். நிர்த்தோஷமும் நிர்மலமுமுடைய கோத்திர ஸம்பந்தமும், பரார்த்த பூஜாதிகார விசேடமுமுடைய இருவகைவேதியரும் சாம்யாதிசயம் பெறுதல் சர்வசம்மதம். இதனை நியாயமுகத்தால் நிறுவிய வெம்மை மறைக்க இவரால் முடியாதே! முடியாது!! தில்லைவேதியர் தம்முள், தங்கள் பெருமை தெரிந்து கொள்ளாத சிறு குழந்தைகளிடத்தின் மாத்திரமே நமது அன்பரது பொய்ப்போதம் பயன்படுமென்க. இனிவ்வாசிரியரமைய மல், வைதிகப்பிரசாத விசாரம் கொஞ்சந் செய்தாரன்றே? சங்கராசாரியர் செய்யும் வைதிக பூசையிலுண்டான பிரசாதத்தில் தில்லைவேதியர்கள் ஸ்வீகரிக்கின்றார்களா? சங்கராசாரியரது பூஜாபத்ததி யாது? சிங்கேரிசங்கராசாரியர், கும்பகோண சங்கராசாரியர், ஆமனி சங்கராசாரியர், புஷ்பகிரிசங்கராசாரியர் முதலியோர் தத்தம் வைதிக பூசைகளில் தெய்வத்திமைச் சமயாண்டிருக்கின்றனரா? இத்தபடிச



ட்டுச் சங்கராசாரியர்கள் செய்யும் பூசைகளிலுண்டான பிரசாதஸ்வீகாரம் தில்லை வேதியர்களுக்குப் பாவனகாம் என்று விதியுளதா? தில்லை வேதியரது பிரஸாதம் சர்வவைதிக ஜநபரிக்ருஹீதம் என்பதற்குயாம் சாக்ஷிதேட வேண்டியதின்றென்க. ஆதிசைவ மூர்த்திகளிடம் கர்ப்பக்கிரகத்துக்கு வெளியிலிருந்துகொண்டு விபூதிப்பிரசாதத்துக்குக் கையையேந்தாத வேதியர்கடாம் யாவர்? இவைகளை மறைத்துப் பொறாமையால் விபரீதம் பேசுவது அவிவேகிகளுடைய சதவியில் முன்னுக்குவராதென்க.

இனித்தில்லைவேதியர்கள் ஜகத்குருக்களும், சங்கராசாரியர் அந்த ஜகத்குருக்கள் வாயிலாகச் சிவதரிசனஞ்செய் தூய்யத்தக்கவருமாயின தன்றியும், சங்கராசாரியர் செய்யும் பூசை ஆன்மார்த்தமும் தில்லை வேதியர் செய்யும்பூசை பரார்த்தமுமாயிடு முன்மையுணர்ந்தவர்களுக்கு மாத்திரமே சங்கராசாரியர் தில்லைவேதியரது பூஜாப்பிரசாதத்தை ஸ்வீகரித்தலுக்கும், தில்லை வேதியர்கள் சங்கராசாரியர் முதலியோரது பூஜாப்பிரசாதத்தை ஸ்வீகரியாமைக்குஞ் சரியான காரணம் புலப்படுமென்க. அன்றியும் தில்லைவேதியர்களை ஸ்ரீநடராஜவள்ளல் தம்மை யொத்தவர்களாக உலகில் வெளிப்படுத்தியும், அப்பெரியோர்கள் ஸ்ரீசபேசனுக்குக் கொத்தடிமையாயுள்ளவர்கள். பேர்கொண்ட பார்ப்பாரைப் பத்த சிவகோடிகளாக ஸ்ரீசிவபெருமான் அமைத்திருந்தும், அப்பசுஞான வேதியர்கள் தம்மையே பரமென்றுமயங்கி ஸ்ரீசபேசனைப் பரமார்த்தத்திற் பொய்ப்பொருளென்று பொங்கி வழிந்து போதமேற்கொண்டிருக்கின்றார்கள். இனி பதிஞான சுத்தவேதியர்களும், பசுஞான சாமான்ய வேதியர்களும் ஸாம்யாதிசயம் பெறுதல் யாங்ஙனம்? இதனை யுற்றுநோக்குறின் தில்லைவேதியர்களும், சிவவேதியர்களுமே ஸாம்யநிலையிற் கொண்டாடத்தக்கவரென்பது பகமாத்தாணியறைந்தாற்போல நாட்டப்பட்டது. இவரது சாமான்ய வேதியத்தன்மை வச்சிரசூசியென்னுமுபநிஷத்தில் பிரதிஷேதிக்கப் பட்டிருப்பதை இவரறிந்திருப்பாராயின், யாமிப்போது வச்சிரசூசியைக் கையிலேந்தியிருக்கின்றோமென்று வாய்திறக்கமாட்டார். அவ்வச்சிரசூசியை யாமே கையிலேந்தி யிருக்கின்றோம். இவ்வச்சிரசூசியை யாமென்றுங் கையைவிட்டகலோம். இதினின்றுந் தப்பிப்பிழைப்பது பூர்வபட்சியாருக்கும், அவரினத்தவருக்கும் யாண்டும் முடியாதகாரியமேயாமென்க. இது நிற்க.

நமது பூர்வபக்ஷியார் தம்மைந் "தீக்ஷிதரது சிஷ்யர்" என்று பிரஸ்தாபித்துக் கொண்டாரன்றோ? அத்தீக்ஷிதர் இன்னாரென்று எமக்கு விளங்கவில்லை. சிதம்பரம் என்னும் ஊரைக்குறித்தலால், தில்லைத் தீக்ஷிதரோவென்று சங்கிக்க இடஞ்செய்தது. அதனை அப்படியிருந்தால், அவரது பேரை அநியாயமாய் வெளியிலெழுத்துவிடுத்த சிஷ்ய வேதியரிடங் கோபங்கொண்டு தம்பக்கலேறிய தோஷத்தை அவர் பரிகாரஞ்செய்து கொள்ளாமற்போகார். மற்றை வேதியராயிருந்தால் எமக்கு ஆக்ஷேபமேயில்லை. அவர் தமது வச்சிரமுசலோப நிஷத்தை யெத்திக்கொண்டு வந்து வாதுபுரியலாம். இம்மட்டிலடங்கிக் குவாப்படுவாராயின, அவருக்குப் பலகோடி வந்தனம்புரிந்து விச்ராந்தியடைவோம்.

---

## பிரமவித்யா அந்தணர்விளக்க மறுப்பு.

---

நமது பிரமவித்யா பத்திராதிபர் பலஜாலவித்தைகளிற் றேர்ந்திருக்கின்றார். என்னெனின், மகாசைவர் ஆகமதீக்ஷைக்குரியாரென்று தாபித்துவருபவரது மதத்துக்கு விரோதமாக இப்போது மகாசைவ நாமந்தாங்கி வெளிவந்து யாம் சிலலோசனியில் வெளியிட்ட "கபிலருகஷர்மகிமை" க்கு விடை கூறினார். அந்த விடை இடையொடிந்து விழ்ந்ததை யெடுத்துக் காட்டி யெமதுண்மையை நிறுத்துவாம்.

யாம் அந்தணரென்ப திவரென்பதுதோன்ற, "அந்தணரென்போரறவோர்" என்று செந்நாப்போதர் திருவாய்மலர்ந்தருளியதை யெடுத்திசைத்திருந்தோம். அதிற்போந்த அந்தணரைப் பார்ப்பார ஜாதியினராக இவர்தழுவிப் பிங்கலந்தையைத்தேடிப் பிடித்தார். அதற்குரையெழுதிய பரிமேலழகருக்கு இப்பிங்கலந்தை தெரியாது போலும். இத்திருக்குறள் நீத்தார் பெருமையிலுள்ளது. அதனால், ஈண்டுப்போந்த அந்தணரென்னுஞ்சொல் தவத்தாற்பெரியாரையேயன்றிச் சாதியிற் பெரியாரை யுணர்த்து மியல்பினதாகாதென்க. அன்றியும், "அறவர் சார்பிலோர் நீத்தோர் தாய்த்தவர் முனிவர் மெய்யர் - அறவர் மாவதர் கடிந்தோ ரந்தணரடிகளேயர்" என்னுஞ் சூடாமணி நிகண்டில், அறவர் - அந்தணர் - ஐயர் என்று கூறியிருப்பது ஜாதி



வேதியரையன்றென்ப திவரறியாமையால், தலைமயக்கேறித் தடுமாறினரென்க. இனிச் சாதியுண்மையை யோசிப்பாம். ஆதியிற் பிறப்பினாற் சூத்திரராயிருந்தோரிற் சிலர் அப்படியே சூத்திரராயிருந்துவிட்டார்கள். சிலர் ஸம்ஸ்காரத்தால் துவிஜரானார்கள். சிலர் வேதமோதி விப்பிரருமாயினார்கள். வேறு சிலர் பிரமஞானப் பேறெய்திப் பிராமணருமாயினார்கள். இதனை "ஜந்மநாஜாயதே சூத்ர:" என்னும் பிரமாணமே நிறுத்தும். இவ்வாறு நான்குவிதமாய்ப் பிரிந்த கூட்டத்தார் தனித்தனி விர்த்தியடைந்து ஒருவரோடொருவர் கலவாமல் நான்கு ஜாதியாய் வாழ்ந்திருந்தார்கள். அதற்குப் பின்னருண்டாகிய பிங்கலந்தையில், ஜாதிப்பிரிவுக ளப்போதிருந்த நிலையின்படி ஜாதியின்பெயர்க ளெழுதப்பட்டன. மேலாக வுயர்ந்த சில சூத்திரர்கள் போகச் சில சூத்திரர்கள் கீழாகவுமிழிந்து பல ஜாதிகளாயினார்க ளாகையால், அவர்களையுந் தனித்தனி யெடுத்துப் பிங்கலந்தை யோதியது. அந்தப் பிங்கலந்தையில், அந்தணர்முதலிய நாமங்களைப்பெற்ற ஜாதியாரைப் பிறப்பினாலுயர்ந்தோர் எனவாவது, பிரமன் முகத்திற் பிறந்தோரெனவாவது கூறினதில்லை. அதிற்கூறிய பெயர்கள்யாவும் செய்கையுயர்வைப்பற்றி வந்தனவேயன்றிப் பிறப்பைப்பற்றி வந்ததில்லை. தவத்தினன் மேம்பட்ட சூத்திரர் படிப்படியாயுயர்ந்து அந்தணராயின தன்மை. அவரது குலத்தவ ரவரைப்போ லந்தணப்பேரைப் பெற்றதேயன்றி அந்தணர் குணத்தைப் பெற்றதில்லை. அதனால் அந்தணப்பேர் தாங்குவதற்குச் செய்கையாற் சிறந்தவரேயன்றிப் பிறப்பினாற் சிறந்தோமென்பா ரதிகாரிகளாகாரென்க. இதனால், செய்கையா லுயர்ந்தோரை அந்தணரென்பது உண்மையும், செய்கையை நாடாது அந்தணரது சந்ததியாரை அந்தணரென்பது உபசாரமுமாம். அந்தணர் மக்களுள், செய்கையாலுயர்ந்தோர் இடைப்பின், அவருண்மை யந்தணராகத் தட்டில்லையென்க. இவ்வுண்மை தோராது இவர் தேடிய திருவிளையாடற் புராணமும் இவருக்குப் பகையாயொழிந்ததறிக. பிங்கலந்தையில் அந்தணர் பேருரைத்ததற்கு யாம்கூறிய நியாயமே திருவிளையாடலிலு மமைந்து கிடத்தலறிந்தடங்குக. பிறப்பினாலாய வந்தணர் தண்ணளியுடையராதலை "முட்டிபுகும் பார்ப்பா ரகத்தைவெட்டிப் பாரோமே" என்னுங் கம்பர்வாக்கை யுணர்ந்தவர்கள் எங்ஙனே கலந்துசெய்வார்கள்? இரக்கமென்பது பெரும்பான்மையாக வந்தச் சாதியினர்க்கில்லை யென்பதும், ஜாதியகந்தையொன்றே அவருட் பலர்

பாம் குடிகொண்டிருப்பதென்பதூஉம் பிரத்யக்ஷமாகையால், நமது சாஸ்திரியார் தமது ஜாதியாரை அழகிய தன்னவனரியுடைய வந்தனர் என்று கூறிக்கொள்ளும்போது அவருக்கே நகையுண்டாயிருக்கத் தடையிராது. விரிக்கிற் பெருகும். இது நிற்க.

இவர் அகத்தியர் - பாரத்வாஜர் - கர்க்கர்முதலிய ரிஷிகளைத் தெய்வத்தன்மையுடையாரெனப் பூஜித்தார். அதிலெமக்கு ஒரு விரோதமுமில்லை. நமதன்பர் கூறிய (பிறப்பினாலாய) பிராமண ஜாதித்வமவர்பாலில்லை யென்பதேயன்றோ வெமது வாதம்? அந்த ரிஷிகள் பார்ப்பனியும் பார்ப்பானுங் கூடிப்பிறந்தவர்களல்லவாகையால், அவர்களைப் பிராமணரென்றேற்பியது பிறப்பினாலேயே பிராமணத்வமுண்டென்னு மிவரதுமதத்தை நாசப்படுத்தியதென்க. கும்பத்திற் பிறந்ததையும், கரிக்குருவி வயிற்றிற்பிறந்ததையும் அயோநிஜத்வமாகக் கொண்டு இருடியர்க்கு மேன்மை கூறியதுந் தவறுடைத்து. இவரதுமதத்தை யொப்பின், கல்லிலே பிறக்குந் தேரைக்கும், வேர்வையிலே புழுக்கும் பேன்முதலியவைகளுக்கும் இனி அயோநிஜத்வங் கூற முற்றுவ ரிவரதுசகோதரர். யாம் அந்தரிஷிகளைத் தெய்வத்தன்மை யுடையாரென்றேற்பியது அவர்களது தவவன்மையைநோக்கி யென்றறிக. இனி வசிட்டர் வேசி வயிற்றிற் பிறந்தாரென்று வேதாகமபுராணங்களி லெங்காவது கூறியிருக்கின்றதாவென்று கேட்டு, ஒருபாட்டைத் தீட்டி மலைவித்தார். வச்சிர சூசிகோபநிஷத்தில், "ப்ராஹ்மண: நாம கோவா" என்று ஆசங்கித்து விசாரிக்கும் பகுதியில், "கிம்ஜாதி:" என்று பிரசினித்து, ஜாதியா பிராமணன்? என மறுத்தமையாலும், அங்ஙனம் மறுத்துவருங்கால், "வசிஷ்ட: ஊர்வச்யாம்" என்றுபிரஸ்தாபித்து வசிட்டர் ஊர்வசியினிடம் பிறந்ததை யொப்பினமையாலும் நமதன்பர் பிராமணன் பிறப்பினாலுயர்ந்தவனென்றதும், வசிட்டர் வேசிவயிற்றிற் பிறந்தாரென்பதற் கெங்கேபிரமாணமென்றதும் உலகை வஞ்சித்ததாகவே முடிந்தது. இவ்வுபநிஷத்தையழிக்க விவர்தேடிய பாட்டு வலியற்றதென்பதி லோராட்சேபமுமில்லை. இதுபோன்ற வேறு எத்தனை கற்பிதவசனங்கள் பிறப்பினு மவை முன்னுக்குவரு மியல்பினவாகாவென்க. அதவா அவர் தேடியவசனம் பிரயோசனப்பட வேண்டுமாயின், அவர் வேறு வசிட்டராயிருத்தலே நியதமாமென்றறிக. வசிட்டர் - விருத்தவசிட்டர் என்னும் பிரஸ்தாபங்கள் நூல்களிற் கேட்கப்



பட்டவாறறிந்து அடங்குவாராக. அன்றியும், "பிரமற்குக்கூத்தி வயிற்றிற் பிறந்த வசிட்டனும்" என்று கபிலர் கூறியது என்னாவது? இது வேதத்தின் பொருளாய் விளங்கலால், இந்த ஸித்தாந்தமே சத்தியமென்றறிக. யாம் வசிட்டரைப் பிறப்பினாற் றாழ்ந்தவரென்று கூறியதனால், அவரை அபூஜ்யரென்று தள்ளியதில்லை. அவரை யாம் வழிபடுந் தெய்வப்பெருமானாகவேயன்றோ கொண்டிருக்கின்றோம்? நமதன்பரது சித்தாந்தம் பிறப்பினாலுயர்ந்தவரே பிராமணரென்று போதித்தலால், அவர்கள் செய்கையினாற் பரம துஷ்டராயிருந்தாலும் அந்தத் துஷ்டர்களையே பூஜ்யராகவன்றோ இனி யாம் கொள்ளவேண்டியிருக்கின்றது? அப்படிக் கொள்ளுங்கால், சைவநிந்தை - சிவாகமநிந்தை - சிவனடியார்நிந்தை - க்ஷத்திரியநிந்தை - வைசியநிந்தை - சூத்திரநிந்தை முதலியவைகளைப் பாலும் பழமுமாகக் கொண்டுவாழும் படிற்றொழுக்கமுடைய விவருமன்றோ பூஜ்யராயிடுவர்? பிராமண ஜாதிக்கே பூஜ்யத்வமும், இதரஜாதியின ரெவ்வளவு தவவொழுக்கங்கள் பெறினும் அவர்கள் பிராமணராகாமையுமாகிய இவரது அபசித்தாந்தம் ஸாமஞ்சஸமாயின், அறுபத்துமூவ ரடியார்கள் பெருமையை உண்மைநூல்கள் விரித்தது மிகையாம். இவ்வறுபத்துமூவரில் ஜாதிபிராமணரும், ஜாதிசண்டாளரும், ஏனைய பலஜாதியாருங் கலந்து சிவனடியார்களென்று பிரசித்தி பெற்றிருக்கின்றார்கள். சிவனடியார்களே சைவரும், பிராமணருமாவர். சிவ சம்பந்திகள் சைவர்களும், பிரஹ்ம சம்பந்திகள் பிராமணர்களுமாயிடுதல் சத்தியம். சிவம் - பிரஹ்மம் என்பன ஒரு பரம்பொருளைக் குறிக்கும் பரியாயச் சொற்கள். சிவம் என்பது தாழ்ந்த பதம்., பிரமம் என்பது உயர்ந்த பதமென்றுகூற இவரால் முடியாது. இதனால், சிவனை வழிபடுதலால் சைவரென்னப்படுவோரே, அச்சிவமே பிரமமாயிடுதனோக்கிப் பிராமணரென்று சொல்லப்படுவரென்க. சிவபக்தியும், சிவகாருண்ய முதலியனவும் வகியாத ஜாதி பிராமணர்கள் தங்களை பிராஹ்மணரென்பது ஔபசாரிகமும், சிவபக்தியும் சிவகாருண்ய முதலியனவும் வகித்த (பலஜாதியிற்பிறந்த) சைவநிஷ்டாபரர்களைப் பிராஹ்மணரென்பது உண்மையுமாக வறிவதே சுருதிசம்மதமென்றறிக. பிராமணஜாதிக்கே யோக்யதை யுண்டெனின், அறுபத்துமூவரில் சிலபிராமணரே சேரவேண்டிய ஆவசியகமில்லை. உலகிலுள்ள எல்லாப் பிராமணருஞ் சேர்தற்குரியவ

ராவர். இப்போதுலகிலுள்ள வுத்தமபிராமணர் நீங்கலாக ஏனைய ஸாமான்யர்களைப் பார்த்தால் அவர்களிடம் குடிகொண்டிருக்கும் அஸம்பாவிதங்களை யெண்ணி யெழுதமுடியாது. அவைகளை யாமறிவிப்பதும் அநாவசியகம். அவை யாருக்குந் தெரிந்தவிஷயந் தான். இது நிற்க. ஒருவன் தன்னை ராஜவம்சம் என்று சொல்லிக் கொள்வதனாலேயே அவன் இராஜனாகமாட்டான். அவனை இராஜனென்று ஒருவரும் பணியவுமாட்டார்கள். அவனை இராஜாவென்பது உபசாரமன்றி வேறென்னவது? இப்போது உலகில் இராஜஜாதியென வொரு ஜாதியிருக்கின்றது. அந்த ஜாதியினர் தங்களை இராஜகுலமென்றே சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவர்க ளெவ்வாறு சொல்லிக்கொள்வதை யங்கீகரித்து, ஏனைய ஜாதியினர் அவர்களைப் பணியவாவது, அவர்களுக்குத் திறைகொடுத்து அடங்குவாவது செய்கின்றார்களா? உலகினர் அந்தராஜ ஜாதியை மதித்துத் தாழாராயினும் அவர்களைப் பிரஸ்தாபிக்குங்கால், பார்த்தசாரதி ராஜா, கிருஷ்ணசாமி ராஜாமுதலிய பெயர்களால் வழங்குமநுபவமிருக்கின்றது. இப்படி யாம் அங்கீகரிப்பதுகொண்டே அந்த ஜாதியினர் தங்களை உலகமெல்லாம் கொண்டாடி வழிபடத் தக்க அரசரென்றுமதித் திறுமாந்திருத்தல் யாங்ஙனம்? இதனை நமது ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் ஏகாந்தஸ்தானத்தி லிருந்தெண்ணி, இவ் வுபமான மெந்த வுபமேயத்தை வெளிப்படுத்துகின்றதெனத் தெளிந்து சுகிப்பாராக. இனி உண்மையாய்ப் பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்ட வொருவனே இராஜா ஆவனென்றறிக. அவன் இராஜவம்சஸ்தனா யிருந்தாலும், வேறுவம்சஸ்தனா யிருந்தாலும் அமையும். மதுரையின்கட் பிரஸ்தாபிக்கப்பட்ட "மும்மையா லுலகாண்டமூர்த்தி" என்பவர் யாவர்? வைசிய குலமணியேயன்றோ அவர்? நமது மகாராணியாரைச் (அப்பெருமாட்டியார் க்ஷத்திரியகுலத்திற் பிறவாதவரென்று குறைகூறி) "சக்கிரவர்த்தினி" என்று அழைக்க விவர் கூசுவாரோ? வேடராஜன், ஒட்டராஜன், துலுக்கராஜன் என்று உலகிற் பிரசித்தி யடைந்தவர்களை நமதன்பர் அரசரென்று ஒப்பாத பட்சத்திலன்றோ பலஜாதிகளிற் றோன்றிய சிவாநுபூதிமான்களைப் பிராஹ்மணரென்று கூறுதற்குப் பின்னிடையவேண்டும்? அவர்களை மொத்தமாய்க் கூறுமிடத்து அரசர்கள் என்று துதிப்பதே மரபாகையால், அவரோ டுவமிக்கப்பெறும் (பலஜாதி) சிவனடியார்களை மொத்தமாய்க் கூறு



மிடத்துப் பிராஹ்மணரென்று துதிப்பதே மரபாமென்க. பலஜாதி அரசர்களை அரசர்களென்று கூற விசையாதவனை அரசன் அன்று கொல்வதுபோலப் பலஜாதி ஞானிகளைப் பிராமணர்களென்று கூற விசையாதவனைத் தெய்வம் நின்றுகொல்லு மென்க. இவ்வாறு தண்டிக்கப் பெறுதற் கேதுவாகிய சிவனடியார் நிந்தையிற்புக்குப் பரிபவமுறாமல் ஸ்ரீமத் அப்பூதியடிகளாகிய பிராமணர் பிராஹ்மணோத்தமராகிய திருநாவுக்கரசுகள் திருவடிக் கன்புபூண்டொழுகிய நலத்தையும், அவ்வாறே திருநீலநக்கராகிய பிராமணர் பிராஹ்மணோத்தமராகிய திருநீலகண்ட யாழ்ப்பாணரது பாதசேவை செய்தொழுகிய நலத்தையும் யோசித்து நமதன்பர் சிவனடியார் சேவையிற் சிறந்து பிராஹ்மணத்வமெய்திச் சுகிக்கும்வழி தேடுவாராக. இது நிற்க.

நமதன்பர் வலைச்சியினிடம் வியாசர் பிறந்தாரென்பாரது மதம் அநாதரணீயமென்றுகூறி மகிழ்வெய்தினார். அங்ஙனமாயின், "வ்யாஸ: கைவர்த்தகந்யாயாம்" எனப்போந்த உபநிஷத் வாக்கியமே அநாதரணீயமாயினதறிக. இவர் உபநிஷத்தை அநாதரணீயமாக்கிவிட்டு வைதிகமணியாயுலவ வாசைப்படுவது கணவனை யுயிர்க்கோறல்செய்து சுமங்கிலியாய்வாழ வாசைப்படுங் காரிகையின் செய்கையோடு தானே யொப்பாமென்க. இவரிந்த வலைச்சியை மச்சத்தின்வயிற்றிற் கருத்தரித்தவளென்று பிரஸ்தாபித்துவிட்டு, பின்னரவளை மச்சகந்தியென் றெழுதக்கூசி யோஜனகந்தியென்று யோசனையோ டெழுதி அந்தத் துர்க்கந்தத்தை மாற்றப்பார்க்கிறார். மச்சகந்தியை மணந்தாரே அவளது நாற்றத்தை மாற்றினாராகையாலிவருக்கு அதனை மாற்றுங்கஷ்டம் வேண்டியதின்றென்க. அந்தத் துர்மணத்தை அவர் மாற்றினாலும், இவர் மாற்றினாலும் அந்தப்பெண் ஒரு பார்ப்பனிவயிற்றிற் பிறந்த சிரேயசையடையாமற் போயினள். அவளுடைய வுற்பத்திக்குப் பீஜஸ்தானமாயிருந்தவன் ஒரு பார்ப்பானாகாமற் போயினன். இவளுடைய வயிற்றிற் பிறந்த வியாசரைப் பிறப்பினு லுயர்ந்தவரென்று கூறுதல் யாங்ஙனம்? இனி நமதன்பர் "முன்னைய யுகங்களில் ஜாதிமேன்மைக்கு க்ஷேத்திரம் பிரதானமன்று, பீஜமே பிரதானம்" எனத் தெரிவித்தது நன்றமையுமெனின், அது கூடாது. ஏனெனின், இந்த வியாசர் க்ஷத்திரியப்பெண்களைக் கூடித் திருதராஷ்டிரனையும், பாண்டுவையுந் தந்தருளினார். அவர்களுடைய தோழியாகிய சூத்

திரப்பெண்ணைக் கூடி விதுரனைத் தந்தருளினார். க்ஷத்திரியப்பெண்களிடம் பிறந்தவர்கள் க்ஷத்திரியர்களும், சூத்திரமாதினிடம் பிறந்தவன் சூத்திரனுமாயிடுதலைநோக்கியே திருதராஷ்டிரன் - பாண்டு இவர்களிற் பிரித்து விதுரனைச் சூத்திரனென்று உலகம் விதந்தபடியாம். வியாசராகிய பிராமண பீஜத்தாற்றோன்றிய மூவரும் பீஜப்பிரதானத்தாற் பிராமணராயிடாமல் க்ஷேத்திரப் பிரதானத்தால் இருவர் க்ஷத்திரியர்களும், ஒருவர் சூத்திரருமாயினவாறு என்னை? இதனை யுற்றுநோக்குவார்க்கு வியாசரைப் பிறப்பினாற் பிராமணரென்று வாதித்த நமது சாஸ்திரியாரது மதம் ஸாமஞ்ஜஸமாவ தெங்ஙனம்? வியாச குடும்பத்திக்குப் பராசரமுனிவரது பீஜங் காரணமும், திருதராஷ்டிரன் முதலியோர குடும்பத்திக்கு வியாசமுனிவரது பீஜங் காரணமு மாயினது சித்தம். வியாச குடும்பத்திக்கு நேர்ந்த க்ஷேத்திரம் கேவலம் நிகிருஷ்ட ஸ்தானம். திருதராஷ்டிராதிகள குடும்பத்திக்கு நேர்ந்த க்ஷேத்திரங்கள் சர்வோத்கிருஷ்ட ஸ்தானங்கள். அபகர்ஷ க்ஷேத்திரமும், உத்கர்ஷ பீஜமுங்கூடிய பிறப்புப் பிராமண ஜாதியாவதும், உத்கர்ஷ க்ஷேத்திரமும், உத்கர்ஷ பீஜமுங்கூடிய பிறப்புப் பிராமணஜாதி யாகாமற்போவதும் விந்தையென்றது வேறு யாதென்னலாம்? ஜாதி யுயர்வுக்குப் பீஜமே பிரதானமென்ற விவாது வாதம் எமது விசாரணையின்முன் னில்லாதடங்கினமையால், வியாசர் பீஜத்தினாலும், க்ஷேத்திரத்தினாலும் பிராமணராயினதில்லையென்னு மெமதுபட்சம் வேரூன்றிப் பொலிவெய்தியதுணர்க. ஈண்டு யாம் விசாரணையிற் கொண்டுவந்தது பூர்வயுக விருத்தாந்தமே யாகையால், அது பூர்வபட்சியாருள்ளத்தைப் புண்படுத்தியது அவரது அதிர்ஷ்டமேயாம்.

இனிப் பூர்வயுக நியாயத்தைச் சிறிது யோசிப்பாம். பூர்வயுகத்தில் க்ஷேத்திர முயர்ந்திருக்கவேண்டியதில்லை யென்னும் விதி இந்தயுகத்தி லழிதற்குக் காரணமென்னை? காரணங் கருதாது ஒன்றினை யேற்படுத்துவதானால், வருகிற யுகத்தில் பிராமணனுக்கு நீச்ச ஸ்திரீகளையே மணப்பித்தல் வேண்டுமென்றுவது, க்ஷத்திரிய ஸ்திரீகளை நீச்சர்களுக்கே மணப்பித்தல் வேண்டுமென்றுவது ஒருவிதி யேற்படுதலு மாவசியகமாம். அப்போது அதுவுங் குணமாகவே நமதன்பருக்கும், அவரினத்தவர்க்கும் அங்கீகாரமாமன்றோ? இந்தக் கலியில் பார்ப்பானும், பார்ப்பன மாதுங்



கூடிப் பிறந்தவர்களையே பிராமணரென்று நமதன்பரொப்பினார். பார்ப்பானும், வேறுஜாதிப் பெண்ணுங்கூடிப் பிறந்த வொருவனைப் பார்ப்பானென்று ஒப்பாமல் சங்கரஜாதியென்று ஒதுக்கினார். இப்போது நிஷித்தமாயினது பூர்வ யுகத்திற் கௌரவம் பெற்றது அதிசயமே. பூர்வ யுகத்தில் பீஜம் பிரதானமென்ற விவாதுவாதம் சரியன்று. உயர்ந்த பீஜத்திற்றோன்றிய திருதராஷ்டிரனாதியோர் தக்கவாறு தவத்தை முயலாமல் பிராமணராகா தொழிந்தனர். தாழ்ந்த க்ஷேத்திரத்திற் பிறந்த வியாசர் முதலியோர் தக்கவாறு தவத்தின் முயன்றதனாற் பிராமணராயினார்கள். இந்த வியவஸ்தையால் பிராஹ்மணத்வசித்திக்குப் பிறப்புக் காரணமாகாமல் தவங் காரணமாயினதெனலே யமைவுடைத்தென்க. நமதன்பரது வாதத்தை யாமொப்பினால், பூர்வ யுகத்திலிருந்த ஈன ஜாதிப்பெண்கள் வம்சமே இப்பொதுள்ள பிராமணஜாதி யென்று கொள்ள வேண்டியிருக்கின்றது. பூர்வயுகத்தில் க்ஷேத்திரம் பிரதானமன்றென வொப்பியவிவர் மீண்டும் வியாசரது தாயை யாம் வலைச்சியென்றதற்காகக் கண்களி னீர்விட்டுத் தேம்பியது பரிதாபமென்க. இந்த யுகத்தில் பிராமணனும், பிராமண ஸ்திரீயுங்கூடிப் பிறந்தவர்களே பிராமணராவாரென்று கூறுமிவரது துணிவை யிவரே துணித்துவிட்டுப் பூர்வயுகத்தில் க்ஷேத்திரம் பிரதானமன்றெனத் துணிந்துகூறியதனா லிவருக்கு ஒரு நஷ்டமுமுண்டாயினதில்லை யன்றோ? அதனால், இவர் க்ஷேத்திர முக்கியத்தைத் தியஜித்ததுபோல், பீஜோத்கிருஷ்டத்தையுந் தியஜித்துப் பிராஹ்மணத்வசித்திக்குத் தவமே காரணமென்று கொண்டா லிவருக்கு ஒரு தோஷமுமுண்டாகாதென்பது எமது கருத்து. பூர்வ யுகத்தில் க்ஷேத்திரம் பிரதானமன்று, பீஜமே பிரதானம் என்றிவர் பிரஸ்தாபித்ததும் புதுசன்று. அநாதி வழக்கேயாம். அதற்குக் காரணம் பீஜப் பிரதானத்துக்கு ஆதாரபூதர்களாயிருந்த முனிவர்கள் தவத்தின் முதிர்ந்தவர்களா யிருந்தமையேயாம். இனி க்ஷேத்திரம் பிரதானமன்று என்பதன் கருத்தைச் சிறிது யோசிப்பாம். க்ஷேத்திரம் பிறப்பினாற் சண்டாள ரூபமாயிருந்தாலும், அது தவத்தாற் றூய்மை யடைந்திருத்தலாலேயே முக்கியமாயிற்றென்க. உயர்ந்த க்ஷேத்திரமாயிருப்பது கொண்டே தவத்தின் மிகுதிப்பாடும், தாழ்ந்த க்ஷேத்திரமாயிருப்பது கொண்டே தவத்தின் குறைவுபாடு மமைவதில்லை, பிராமணன் படிப்பில்லாத

மூடனும், சூத்திரன் படித்த விவேகியுமா யிருக்கின்றார்கள். பிராமணன் குஷ்டமுதலிய ரோகங்களாற் பீடிக்கப்பட்டவனும், சூத்திரன் அரோக திடகாத்திர சரீரமுள்ளவனுமா யிருக்கின்றார்கள். இன்னு மிவ்வித ஏற்றத்தாழ்வுக ளவ்விருவர்பாலும் முறையே பல சொல்லப்படும். இனிப் பிராமணனுக்குண்டான அஸம்பாவிதங்கள் பூர்வ ஜந்மகிருத பாப பலமன்றி வேறில்லை. சூத்திரனுக்குண்டான விசேடங்கள் பூர்வ ஜந்மகிருத புண்ணிய பலமன்றி வேறில்லை. இதனால், தாழ்ந்த ஜாதியினர் புண்ணிய மதிகமாய்ப் பெற்றிருக்கக்கூடுமென்பது சித்தித்தமையால், பிராமணராகிய வியாசரது உற்பத்திக்கு ஆதாரமாயிருந்த மச்சகந்தி பூர்வபுண்ணிய விசேடம் பெற்றிருந்தாளென்பதும், திருதராஷ்டிரன்முதலினோரது உற்பத்திக்கு ஆதாரமாயிருந்த க்ஷத்திரியப் பெண்கள் பூர்வபுண்ணிய பகிஷ்டம் பெறாதிருந்தார்க ளென்பதுமே ஈண்டு நிதர்சனமாயதென்க. இவ்வாறேதியது கொண்டு பிராமணர்கள் புண்ணியார்ஜித மின்மையையும், சூத்திரர்கள் பாபார்ஜித மின்மையையு முடையவர்களென்பது எமது கருத்தன்று. பிரகிருதோப யுக்தமாகப் பிராமணரது குறைவையும், சூத்திரரது நிறைவையு மெடுத்து விதந்திட நேர்ந்ததென்க. இனி வியாசரது உற்பத்திக்கு அவரது தாய் தந்தையர்கள் ஒத்தபுண்ணிய முடையரா யிருந்தமையால், அவர் தவசிரேஷ்டராய பிராமணராயினர். திருதராஷ்டிரன்முதலினோரது உற்பத்திக்கு அவர்களது தாய் தந்தையர்கள் ஒத்தபுண்ணிய முடையராயிராமையினால், அவர்கள் தவங்கைகூடத்தக்க பிராமணராகா தொழிந்தனர். விசுவாமித்திரபகவான் தவத்தினாற் பிராமணராயினதேயன்றிப் பிறப்பினாலன்று. அங்ஙனமானவிடத்தும் அவரது தேகம் வேறாகத் திரிந்ததின்று. க்ஷத்திரிய தேகத்துடனேயே பிராஹ்மணத்வ மெய்திப் பிரஹ்மரிஷியாய்ப் பிரசித்தி பெற்றனர். இவைகளைப் பரியாலோசிக்குங்கால், நமதன்பர் பிறப்பினாலேயே பிராஹ்மணத்வ முண்டென்று தொடுத்த வாதம் அஸாமஞ்சஸமாயினதறிக. இவ்வாறு யாம் பரிஷ்கரித்தமையால், எமக்கு வியாசரது உற்பத்தி ஸாமாந்யத்தை நோக்கி, அவரிடத்தில் கௌரவபுத்தி யுண்டாகவில்லையென்று கூறுவது கூடாது. அவரிடம் நிறைந்துள்ள தவமே யாம் கொண்ட முக்கியப் பொருளாகையால், அவர் யாம் கொண்டாடும் ஜகத்குருவாயினா ரென்பது சித்தமென்றுணர்க. விரிக்கிற் பெருகும். இது நிற்க.



நமது பிரதிவாதியார் வியாசர் விஷ்ணுவினது அவதாரமென்று பூஷித்தார். அதனால், வியாசருக்குப் பிறப்பினாலாய தோஷமுண்டாதலும், தவத்தினாலாய பிராமணத்வம் வருதலும் மறுக்கப்படமாட்டா. வியாசர் பூர்ணாலோடு பிறந்தமையால், அவர் பிறக்கும்போதே பிராமணரென்று வாதித்தார். அவ்வியாசருக்கு மூலபுருஷரா யிவரங்கீகரித்த விஷ்ணுவோ க்ஷத்திரியர். அவர் தவத்தினாற் பிராமணராயினாரென்பதே யினியமையும். இனி யாமொன்று கூறுகிறோம். துரோண புத்திரராகிய அசுவத்தாமர் வருகிற துவாபர யுகத்தில் வியாசராய்ப் பிறக்கப்போகிறாரென்று பாரதங் கூறுகின்றது. அன்றியும் பலவியாசர்கள் நாள்களில் கேட்கப்படுகின்றார்கள். இவர்களது கதியையெல்லாம் யோசித்து மத்ஸ்யகந்தி மகனாரைப் பிரபிதாமகராகக்கொண்ட பூர்வபக்ஷியா ரடங்கிவாழ்வதொழிந்து சூத்திரர்களுக்குத் தவங்கிடையாதெனவும், அவர்கள் பிராமணராகமாட்டாரெனவுங் கூறி, அக்குலத்திலுதித்த பிராஹ்மணர்களை நிந்தைபுரிவதனால் பிரயத்தன்பத்துக்காளாகி வருந்த நேரிடுங்கால், தமது தலைவிதியைநொந்து அழாது வேறென்செய்வார்? பரிதாபம்! பரிதாபம்!! இவரிம்மட்டிலமையாமல், ஜீவதயாபரக் கொக்கொத்து சிவபெருமானும், முருகக்கடவுளும், வள்ளிநாச்சியாரும் ஸாமானிய ஸ்தானங்களிற் பிறந்தமையால், அவர்களையும் யாம் குறைகூறவேண்டி வருமென்றொரு அரியநியாயங் கண்டுபிடித்தார். இவரது புத்தியை வண்ணானுக்குப்போட்டு வெளுக்கப்பார்த்தால், அப்போதொருகால் அதனைமூடிய வழுக்குக்கழிந்து இவர் சுகப்படலாம்போலும். யாம் உற்பத்திஸ்தானங்களா லொருவனுயரமாட்டானெனவும், அவன் தவத்தினாலேயே யுயர்ந்திடுவானெனவுங் கூறியதை யிவர் கவனித்தால் சிவபெருமான் முதலினோரை வீணிற் பிரஸ்தாபித்துப் பாவத்துக்கு மடிகட்டிக்கொள்ளமாட்டார். சிவபெருமான் முதலினோ ரியற்கையாகவே யுயர்ந்தவர்கள். அவர்களைத் தவத்தாலுயரத்தக்கவர்களோ டெடுத்தலே அஸம்பாவிதமாயிடுதலறியாது பிறப்பினா லுயரத்தக்கவர்களென் றிவர்பிரஸ்தாபிக்குஞ் சிவஸாமாந்யகோடிகளிற்சேர்த்து இவர் செய்த சிவநிந்தையும், எமதப்பனாகிய முருகனது நிந்தையும், எமது தாயாகிய வள்ளிநாச்சியாரது நிந்தையும் இவரை யெந்த வதோகதியிற் புகுத்தி யழிக்குமோ தெரியாது. இவர் சிவேசுவர ஜகத்து மிச்சையென்று

9

வாதிடும் நாத்திகர். இவர் பிச்சையென்று கழிந்த மூன்றனு ளொன்று இவர் ஈசுவரனென்று கொண்ட பொருள். இவ்வீசுவர னைப் பிரம விஷ்ணு ருத்ரர் என்றுகொள்வ திவரது மதம்.* இவ ருள், உருத்திரனே சிவனும், அவரது குமாரர் ஷண்முகரும், ஷண்முகரது மனைவியார் வள்ளியம்மையாரு மாவார்கள். இவ் வாறு எண்ணியிடுக்கண்பட்டலையு மிவரது பொய்ம்மதத்தின் பிச் சையா யொழியத்தக்கவர்களை அமல மூர்த்தியாகிய பரசிவப்பிரபு வெனவும், சிற்கனைத் தெள்ளமுதெனவும், ஜகன்மாதாவென வும் இவர் பரிந்துபரிந்து கூறியது இன்னு மெத்தச்சைவர்களை யேமாற்றவோ தெரியாது. சிவனடியார்களா யுள்ளவர்கள் முன் போலோம வெப்போது கண்ணை விழித்துக்கொண்டே யிருப்ப தா லினியிவருக்கு அரைக்காசுங் கொடுத்து ஏமாந்திடாரென்க. இது நிற்க.

இவர் பிரமன் முகத்திற் பிராமணன் பிறந்தானென்று வேதந் புருஷன் சாதிப்பதை யோசியாது வேறு பிரமாணங்கள் வேண் டினர் என்று எம்மைக் குறைகூறிப் பிரமன் முகத்திற் றம்பதிக ளாகவே மரீசி - பிருகு - அங்கிரசு - புலஸ்தியர் - புலகர் முத லிய விருடியர்கள் பிறந்தார்களென்று வாயுசங்கிதை கூறுவதாக கப் பிரமாணங்காட்டித் தருக்கினர். வேதங்களில் விராட்புருட னுக்குப் பிராமணர் முகமாயினரென்பதொழிந்து பிராமணர் பிறந்தாரென்று கூறப்பட்டதில்லை. ஆண்டுப் பிராமணரென்பதும் தவத்தாலுயர்ந்த சிவஞானிகளென்பதாம். பிராமணர்களை முக மென்றும், க்ஷத்திரியர்களைத் தோளென்றும், வைசியர்களை ஊரு வென்றும், சூத்திரர்களைப் பாதமென்றும், வேறு பலவஸ்துக்க ளைப் பலவுறுப்புக்களென்றும் ஆலங்காரிகமாகச் சொல்லியிருப்ப தை யிவர் தடித்தடியா யப்படியே பிறந்தார்களென்று கொண் டது கேவலம் அசங்கதமென்க. அவ்வாறு பிறந்த பிராமணர்கள் யார் என்று யாம் கேட்டது சுருதி (பிரமன் முகத்திற் பிராமண ருற்பத்தியைக் கூறியிருப்பின், அவர்கள் பேரையும், அவர்களது பத்தினிகள் பேரையும்) விதந்திடாமற்போகாது என்பதைக்கரு தியேயன்றி வேறில்லை. யாம் கேட்டதைக் கவனியாதவர்போல இவர் வாயுசங்கிதையில் தம்பதிகளாகப் பிராமணர்கள் பிறந்தமை யைச் சொல்லியிருப்பதாக ஜாலங்காட்டி யொதுங்கினர். பிராம ணர்கள் வேதன் முகத்திற் பிறந்தார்களென்று கூறிய வேதமே



யன்றோ அவர்கள் பலானவர்களென்று விதந்திடல் வேண்டும்? சுருதியிலில்லாதவைகளைப் புராணத்தாற் சாதிப்பது கற்பிதமென் றே யொதுக்குவர் மேலோரென்க. அதவா இவர் கூறிய புராணத் தை யாம்தழுவியவிடத்து மிவருக்கு அப்புராணம் இஷ்ட விகாத த்தையே செய்தது. எங்ஙனமெனின், வாயுசங்கிதையில் "தகைசால ருமன் சங்கற்பன் மரீசி பிருகுத் தனிமறைகள்-புகழு முடைய வங்கிராப் போ ற்றுகின்ற புலத்தியன் சீர் - நிகரில் புலகன் கிரதுவொடு தக்க னிகழ்த்து மத்தி ரியோர் - தகளில் வசிட்டனெனு மிவரைத் தவ்வித் யுறைப்படைத் தனனால்." என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதில் நமதன்பர் கூறியவாறு மரீசி முதலியவர்கள் பிரமன் முகத்திற் பிறந்தார்களெனவாவது, அவ்வாறு பிறக்குங்கால் தங்களது ஸ்திரீகளோடு பிறந்தார்களென வாவது பெறப்பட்டதில்லை. இந்தப் பாடலில், அவ் ரிஷிகளைப் பிர மதேவர் படைத்தாரென்றே யிருப்பதால், இது உலகம் யாவையும் கடவுள் படைத்தாரென்னுஞ் சுருதியோடு விரோதம் பெற்றில தென்க. மகரிஷிகளைப் பிரமன் படைத்தானென்பதில் யாமாட் சேபத்தை யுண்டுபண்ண விடமின்றாகையாலும், அவ்வாறு அவர் களைப் பிரமன் படைத்தது சுவேதவராககற்பத்திலாகையாலும், அதனால் அது பிரதம மகாசிருட்டி யாயினதில்லையாகையாலும், நமதன்பர் பிராமணர் பிரமனது முகத்திற் பிறந்தாரென்று ருசுப் படுத்தவேண்டியது பிரதம மகாசிருட்டியைப் பொறுத்ததாகை யாலும், சுவேதவராக சிருட்டியைக் கூறியவிடத்தும் அவ்வாயு சங்கிதையானது "பொன்னூர்கமல மலர்முகத்தில்" என்ற பாடலால் முகத்திற் புத்தேளிரையும், புயங்களில் தென்புலத்தாரையும், பின்புறத்தில் அசுரர்களையும், "குறியதனின் மக்கடமையும்" பிரம தேவர் பிறப்பித்தார் என்று பிரகாசப்படுத்தியது. இந்த மக்களே மானிடரென்னப்படுவோரென்க. இவர்களையே பிராம்மணர் - க்ஷத்திரியர் - வைசியர் - சூத்திரர் என்று பிரிவுபடுத்திப் பின்னரு மவ்வாயுசங்கி புருஷசூக்தங் கூறியவாறு பிரமனது முகம் பிராம ணர், அவனது தோள் க்ஷத்திரியர், அவனது தொடை வைசியர், அவனது பாதம் சூத்திரர் என்று ரூபகாலங்காரஞ்செய்து துதி செய்தவாறறிக. இவ்வுண்மை யறியாமல் வேதன்முகத்திற் பிறந்த வேதியர்களையும், அவர்களது ஸ்திரீகளையும் வெளிப்படுத்துவா னெழுந்த நண்பர் இனி அவ்வேதனது தோளிற் பிறந்த க்ஷத்தி ரியர்கள் பேரையும், அவர்களது ஸ்திரீகள் பேரையும், தொடையிற்

பிறந்த வைசியர்கள் பேரையும், அவர்களது ஸ்திரீகள் பேரையும், பாதத்திற் பிறந்த சூத்திரர்கள் பேரையும், அவர்களது ஸ்திரீகள் பேரையும் சுருதிப்பிரமாணவாயிலாக நிரூபிக்கவுங் கடமைப்பட்டு, அப்படிச் சாதித்தவனந்தரமே பிரமன் முகத்திற் பிறந்த வெந்தப் பார்ப்பானது சந்ததியாராகவாவது வெளிப்பட்டுப் பிறப்பினாலாய தமது பிராஹ்மணத்வத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டு மேன்மை யடையலாமென்க. இது நிற்க.

நமதன்பர் போதாயனம் - ஆபஸ்தம்ப முதலியவற்றுள், பிரவரகாண்டங்களில் மரீசிமுதலிய ஐவர் வழித்தோன்றிய வந்தணர்களே யிப்போதுள்ளாரெனவும், ஏனைய விருடியர் வழித்தோன்றிய வந்தண ரருகிப்போயினார்களெனவும் பெறப்படுவதாகவும், பிராமணர் அபிவாதன மந்திரத்தில் இவ்வைந்து ரிஷிகளி லொருவர் பேரையே தமது கோத்திரத்துக் காதாரமாக முதலிற் கூறி வருகின்றார்களெனவும் பிரசங்கித்தனர். இதிலெமக்கொரு விரோதமுமில்லை யென்க. பிரதிவாதியார்க் கெதனாலொரு அநுகூலமு மில்லையென்க. இவரெத்தனை யிருடியரைத் தேடினும், அவர்கள் பிரமனது முகத்திற் றந்தம் பன்னியரோடு பிறந்தார்களென்று சுருதிப் பிரமாண மேற்படுத்துமவரையில் இவரது பட்சம் பிரபலத்தை யடையாதென்க. இவரது வெள்ளறிவினைப் பிறரெள்ளுவதறியாமல் (வைதிகசைவராகிய விவர் தாம் வணங்கத்தக்க அந்தணர்குலத்தை நிந்திப்பது நீதியோவென்றும், கிறிஸ்தவர்கள் - மகம்மதியர்கள் முதலியோர் இவருடைய வேதபுராணங்களை யிகழ்வார்களேயென்று யோசியாதது தகுதியோவென்றும், அரக்கோணவாசியாரோடு வாதித்த லெமக்குத் தகுதியன்றாயினும், முதல் வருணத்தாருள்ளும் அநேகர் தமது குலமகிமை யுணராமல் மயங்குதலையால், அவர் தெளியும் பொருட்டே இங்ஙன மெழுதத் துணிந்தோமென்றும்) நமதன்பர் நியாயங்காட்டித் தாம் வெளிவந்த காரணத்தை விரித்தார். யாம் வைதிகசைவரென்பது உண்மையே. வேதத்தைப் பூஜிக்கும் யாம் அந்தணரைத் தூஷிப்பதாக விவர்கூறியது சுத்த பொய்யென்றறிக. "அந்தணரென்போ ரறவோர்" என்று கூறிய திருவள்ளுவதேவ ருபதேசவழியினிற்கும் யாம் அந்தணரை யாண்டுந் தூஷித்திலமென்க. வைதிகசைவரல்லாத விம்மாயாவாதியார் தம்மை அந்தணரென்று மருண்டிருப்பதனாலேயன்றோ யாம் அந்தணரைத் தூஷிப்பதாகப் பிரஸ்தாபித்தார்? இவர் தவத்தாற்



றூயராய அறவோராயின், இவரையும் யாம் அந்தணரென்று வாழ்த்தப் பின்னிடையேமென்க. இனிக் கிறிஸ்தவர்கள், மகம்மதியர்கள் முதலியோரும் பரிகசிக்குமாறு பிறப்பினாலேயே ஜாதியுயர்வு உண்டென்று வேதங்கள் கூறுவதாக விவர் பிரசங்கிப்பதை மறுத்து, அவ்வேதபுராணங்கள் தவத்தினாலேயே பிராஹ்மணத்வத்தைக் கூறுகின்றதென யாம் வெளிப்படுத்துவது அப்புறச்சமயிகள் வேதாதிகளை முன்போனிந்தித்துப் பரிகசிப்பதை யொழிக்கின்றமையால், எமது பிரவர்த்தகம் உசிதமாயினவாறறிக. இவ்வாறு யாம் கஷ்டப்பட்டெழுதுவதெல்லாம் சீநிவாஸசாஸ்திரியாரை யொருபொருளாக மதித்தன்று. எம்மவர்களும், ஏனைய ஜாதியாரும் (நெடுநாளாகத் தங்களைப் பிறப்பினாலுயர்ந்தவரென்று போதித்து மயக்கி உலகத்தை வஞ்சித்துவரும்) கன்மனப் பார்ப்பாரது சூழ்ச்சியி லின்னுமகப்பட்டு வருந்தாவண்ணமே யாம் இதனை யெழுத விசைந்தாமென்க. இது நிற்க.

இவர் வேதம் பொய்யாயிடுதல் கூடாதெனவும், அவ்வேதம் பிரமன் முகத்திற் பிராமணர் பிறந்ததாகக் கூறுகின்றதெனவும், பிரமன் சிவபெருமானது திருமுடியைக் கண்டுவிட்டதாக விஷ்ணுவினிடம் பொய் பேசியகாலத்தில், அவனுக்குப் பூசையுங் கோயிலும் போகச் சிவனார் சபித்தாரெனவும், அதற்கஞ்சித் திருவடியிற் றஞ்சமென்று வீழ்ந்த அப்பிரமனிடமிரங்கிய சிவபரஞ்சுடர் அவனைப்பார்த்து உலகிற் பிராமணருக்குச்செய்யும் வழிபாடுகளுன்பொருட்டேயாகக் கடவனவென்று அருள்புரிந்தாரெனவும் உண்மைநூல்கள் கூறுதலால், பிராமண ருலகிலிருப்பது சத்தியமென்று சாதித்தார். வேதத்தை யாம் யாண்டும் பொய்யென்று புகலவில்லேமென்க. அவ்வேதம் பிரமன் முகத்திற் பிராமணர் பிறந்தாரென்று யாண்டும் போதித்ததில்லையென்க. இவ்வுண்மைகளை மேலே யாம்விரித்திருக்கின்றோம். இனி அந்தணர்க்குச் செய்பூசை பிரமனுக்காகத் தக்கதென்பது சத்தியமே. "அந்தணரென்போ ரறவோர்" என்ற பாட்டின் பயனுணர்வார்க்கு நமதன்பரது போதம் வாய்க்குமட்டிலே புன்பெண்ணைமற் போகாதென்க. நிகண்டில் அந்தணப்பேர் முதல்வருணத்தாருக்கே சொல்லப்பட்டதென்பதன் சூக்குமத்தை முதலிலேதானே பிங்கலந்தையைப்பற்றிப் பேசியபோது வெளிப்படுத்தினோம். இனி அந்தப்பிராமணர் சிவப்பிராமணராகாரோவென்று சங்கித்து, அவர்களுக்குப் பிராமணப்பெய

ரோடு சிவ என்னும் முன்னடை கொடுத்திருத்தலால் சிவபெருமான் பிராமணரென்று பிரஸ்தாபித்தது அந்தச் சிவப்பிராமணராகாரென்று ஒதுக்கினர். யாம் அந்தணரென்பார் "அந்தணரென்போ றறவோர்" என்னுங்குறளால் வெளியாகத்தக்கவரென்று இதுகாறுங் கூறிவருவதோடு இச்சிவப்பிராமணரையும் அந்தணரென்றே கொண்டாமென்க. இவர் பிராமணுதிநால்வருணத்தவருக்கும், ஏனையோருக்குங் குருமூர்த்திகளாயிருந்து சிவபரஞ்சுடரைத் தரிசிப்பித்தலும், அந்தப் பிராமணன் முதலினோர் பயபக்தியுடன் வணங்கிக் கையேந்தி யிரந்திடுங்காலையில், அவர்களுக்கு விபூதிப்பிரசாதங் கொடுத்தருளி அவர்களதபீஷ்டங்களினைவேறுமாறு ஆசிர்வதித்து அநுக்கிரகித்தலுமாகிய தன்னளிபூண்ட அறவோராயினமையால், இவரை யாம் அந்தணரென்று கொண்டது தவறாகாதென்க. ஏனைய சாமானிய விப்பிரர் அரசன்முதலினோர் வணங்குறினும் இச்சிவவேதியர் யாண்டும் வணங்காராகையாலும், இச்சிவவேதியரை யேனையவிப்பிரர் அகங்காரத்தினால் வணங்கக் கூசுவாராயினும், சிவதரிசனஞ்செய்விக்குமமயத்தில் விபரீதம்பண்ணவேலாதாகையாலும், அவர்களைப் பிராமணரேயன்றி மற்றச் சாதியாரும் வணங்கலாலும் யாவராலும் வணங்கத்தக்கவர் சாமான்ய வேதியராகாமையும், யாவரும் வணங்கத்தக்கவர்கள் சிவவேதியராயினமையும் வெளிப்பட்டவாறறிக. இதனாலும், சிவபெருமானே பிராமணரென்று வேறுங்கூறியவாறு, பிராம்மணதெய்வமாயெழுந்தருளிய சிவனாரது மக்களாய் அச்சிவவேதிய ரெனப்பட்டமையாலும், அச்சிவபிராமணர்களே சிவபெருமானும் பிரஸ்தாபிக்கப்பட்டவராயினரெனவறிக. யாம் சிவபிராஹ்மணரென்கையில், சிவசம்பந்தத்தாலேயே பிராஹ்மணத்வமுண்டென்பதையும், ஏனைய சம்பந்தத்தா லஃதுண்டாகாதென்பதையு மினிதுபோதித்தலால் இதனையறியாது சிவ என்னுமடையை மிகை யெனக்கழித்த நமதன்பரது பாவத்துக்கு வைவஸ்வதனே கூலிகொடுக்கத் தக்கவனென்றறிக. சிவ என்பதுதாழ்ந்த அடையாயிருந்தால் நமதன்பர் அதனைத்தாதித் தொகுக்கலாம். அது இரத்ன முடியாய்ப் பிராமணனென்பவனுக்குச் சூட்டப்பட்டதாகையால், அம்முடி சூட்டப்பெறாத போலிப்பிராமணரை யொதுங்கி, அவர் முன்னர் வாய்பொத்திக் கைகட்டி யொதுங்கி வாழத்தக்கவராயினரென்க. நமதன்பர் வீணில் சிவத்விஜரைப் பிரஸ்தாபித்துக் குறை கூறினை



மையால், யாம் அவர் பெருமையைக்கூறி முடித்தாமென்க. இது நிற்க.

இவர் சூத்திரத் துறவிகளைப் பிராமணரென்று கொள்ளலாமாவென்று சங்கித்து, அவர்களுக்கு அன்னமிடுதல் முதலியவைகளை மஹேசுவரபூசையென்று யாவருங் கூறுதலால், அவர் பிராமணராகாரென்று சாதித்தார். மகேசுவரபூசையென்பது சூத்திரரை வழிபடுதலுக்கே யமையுமென்றது கூடாது. பிராமணுதி சாதுர்வர்ணத்துச் சைவதீக்ஷாவான்களது பூசையே மகேசுவரபூசை யென்றறிக. சூத்திரருள் சிவதீக்ஷாவான்களாய் முதிர்ந்த சைவர்பாலதுர்கழ்ந்துவரு மநுபவத்தை மாத்திரம் பார்த்து இவர் மயங்கக்கூறினர்போலும். இம்மாஹேசுவரத்வமே பிராஹ்மணத்வமென்றறிக. பிரமம் - மகேசுவரன் என்பது சிவபரஞ்சுடர்க்குரிய பரியாய நாமங்களாகையால், பிராஹ்மணன் அல்லது மாஹேசுவரான் என்று எண்ணப்படு நால்வகைச்சாதிப் பெரியோரி லொருவகையினராய் விளங்குஞ் சூத்திரத்துறவிகள் பூசை பிராமண பூசையாயிடுதலும், அங்ஙனம் பூசிக்கப்படுவோர் பிராமணராயிடுதலும் ஸாமஞ்சஸமாயினதறிக. அதனால், அப் பெருந்திருவாளரையே சிவபெருமான் பிரஸ்தாபித்தாரெனலு மிழுக்காகாது.

இனி இவர் வேதாதிகாரம் முதல்வருணத்தாருக்கென்றே ஸ்மிருதி முதலியவைகளில் விதிக்கப்பட்டிருக்கின்றதெனவும், சூத்திரருக்கு ஸ்மிருதிகளிலன்றி ஆகமங்களினும் வேதாதிகாரம் விதிக்கப்படவில்லை யெனவும் பிரசங்கித்துச் சூத்திரர்களுக்கு ஆகமபுராணங்களாகிய கலைகளை யோத வதிகாரமுண்டெனவும், விதுரர்யோக்யதை யாருக்கு மினிதுபுலப்படுமெனவும், வான்மீகியை யாண்டும் மகரிஷியென்று கூறியதில்லையெனவும் வீண் வார்த்தைகளை நிரப்பி ஸங்கோஷித்தார். இதனையும் பரியாலோசிப்பாம். ஒரு புருஷனிடத்திலேயே பிறப்பினாலாய சூத்திரத்வமும், கர்மத்தினாலாய த்விஜத்வமும், வேதசம்பந்தத்தாலாய விப்ரத்வமும், பிரம ஞானத்தாலாய பிராமணத்வமுஞ் சித்தித்தலை "ஜந்மநாஜாயதேசூத்ரா:" என்னும் பிரமாண வசனம் இனிது போதித்தல் பிரசித்தியாகையால், முதல் வருணத்தாருக்கு வேதாதிகார முண்டாயிடுதலை யாமாட்சேபிக்க வரவில்லை. முதல்வருணத்தாருக்கே யவ்வதிகாரமுண்டென்று கூறி இதர வருணத்

தாரைப் பிரதிஷேதிக்கது மிகையாம். அரையர் - வைசியரும் வேதாதிகாரிகளென்பது சாஸ்திர சம்மதம். இனி வேதம் - ஸ்மிருதி - ஆகமமுதலிய கலைகளில் சூத்திரனுக்கு வேதாதிகாரம் விதிக்கவில்லையென்றது மெமக்குடம்பாடாயிற்று. அவன் ஸம்ஸ்காரியாயினபிறகே வேதாதிகார மவனுக்குண்டெனவறிக. இனி யவரெம்மில் விரோதித்த விஷயம் பிறப்பினாலுயர்ந்தவரே பிராமணரென்பது. அது சுத்த பொய்யென்பதைப் பலபடியால் மேலே யாம் பரிஷ்கரித்தோமாகையால், அதனை மீண்டுமீண்டும் வருவித்துரைப்பது அநாவசியகமாயினதறிக. இம்மட்டோ, இவர் சூத்திரர்களுக்கு ஆகம புராணங்களி லதிகாரமுண்டெனக் கூறினாரன்றோ? இதுவு மசங்கதமாமென்க. எங்ஙனமெனின், ஸம்ஸ்காரமில்லாத சூத்திரர்களுக்கு ஒன்றிலு மதிகாரங்கிடையாதென்பது சித்தம். ஸம்ஸ்காரமாயினபிறகே சிவாகமங்களி லதிகாரமுண்டென்று அச்சிவாகமங்களும், வேதங்களும் விதிக்கின்றன. அவ்வாறு ஸம்ஸ்காரிகளாயினவர் சூத்திரராகமாட்டார்கள். இஃதுணராது சூத்திரர்களுக்குச் சிவாகமத்தி லதிகாரமுண்டென்றது தெளிவின்மையாற் பிதற்றியபடியென்றறிக. இனிச் சூத்திரர்களுக் கதிகாரானுகுணமாய்ப் பிறந்த சிவாகமங்கள் அச்சூத்திரருக்கே பயன்படத்தக்கதற்கு மாறாக அச்சிவாகமபோதிதமாகிய சிவாலயபூசை முதலியனவைகளை வேதாதிகாரிகளாகிய நமதன்பரும், அவரினத்தவருங் கைக்கொண்டு சூத்திரராயிழிந்து கெடுமாறென்னை? சிவாகமம் சில ஸம்ஸ்காரிகளுக்குப் பயன்படுமாறு போலவே வேதமும் பயன்படுமாறறிக. விரிக்கிற் பெருகும். இது நிற்க.

இவரை யாம் விதுரன் ஞானோபதேச கர்த்தாவாயினமை யாது எனப் பூர்வம் வினயதற்கு இவர் "விதுரன்யோக்யதை யாருக்கும் புலப்படும்" என்று சமாதானங் கூறினார். இஃதொரு சமாதானமா? அவ்விதுரன்யோக்யதை யாது? சூத்திரன் யோக்யதையினாற் பிராமணனானானென்று தலையுடைத்துக்கொள்ளும் இவர் அச்சூத்திரனை யோக்யதையினான் ஞானோபதேச கர்த்தாவாக மதித்து ஒப்பியது யாங்ஙனம்? விதுரனை மத்தளிப்பாய்ப் பிராமணனென்றொப்பிய நண்பர் வான்மீகியை மஹரிஷியாகாரென்று ஒதுக்கினார். சுருதியில், "பஹவ: மஹர்ஷய: ஸந்தி" என்று பிரஸ்தாபித்து அவ்விருடியரில் "வால்மீக: வல்மீகாத்" என்று வான்மீகிய பகவா



னைச் சேர்த்துரைத்திருப்பதற்கு இச் சுருதிவிருத்தபோதகர் என் செய்வார்? வேடுவனைப் பார்ப்பானென்று கூறுவதால், தமது குடி முழுகிப்போவதாயெண்ணி, அநியாயத்தி லவ்வந்தணர்பெருமானை மஹரிஷியாகாரென்று தூஷித்த பிராஹ்மண நிந்தைக்கு இவருக்கு எந்தவிடத்தைக் காணியாட்சியாகத்தர வைவஸ்வதன் சித்தம்பண்ணிவைத்திருக்கின்றானோ தெரியாது. இனியேனுங் கூர்ந்து யோசித்து அடங்கிவாழ்வாராக. இது நிற்க.

இவர் தர்மவிராதனென்னும் வேடுவன்பக்கல் கௌசிகன் என்னும் வேதியன் சென்று சர்வதர்மங்களையு முபதேசிக்கப்பெற்றவாறென்னை யென்று யாம் கேட்டதற்கு அவ்வேடுவன் கௌசிகனை வணங்கியே வாழ்ந்தானென்றார். எவ்வித்தைகளிலும் அந்தணர்க்கே யதிகாரமுண்டென்பது தொலைந்து, சர்வாதிகாரப்ராப்தமுண்டாகத்தக்க வேதியன் சூத்திரனிலுங் கீழ்ப்பட்ட வேடுவனைச் சரண்புக்கு உபதேசகலை யுணர்ந்து பிழைத்தானென்னுஞ் சித்தாந்தம் சிறந்தெழுந்ததை இவரான் மறுக்கமுடியாமற்போனது பரிதாபமென்க. வேடுவன் சூத்திரனிற் றாழ்ந்தவனாகையால், அவன் கௌசிகனாகிய வேதியனை வணங்கியது குற்றமாகாது. அன்றியுமிவர் திருநாளைப்போவார்க்கு ஞான நிகழ்ந்ததுபோலத் தர்மவிராதன் ஞானோபதேச கர்த்தாவாயினது ஏகதேசமென்றொரு சமாதானந்தேடி யிறக்குமுகமாயினார். திருநாளைப்போவார் ஜாதியிற் றாழ்ந்தவராயினும், செய்கையாலந்தணராயினா ரென்பதே யமையும். தர்மவிராதனுக்கு நமதன்பர் திருநாளைப்போவாரைத் துணைசேர்த்தது எமக்குச் சாதகமேயாயிற்று. இவர்களோடுதானே வசிட்டர் - பராசர் - வியாசர்முதலிய (தோற்றத்தால்) கீழ்மக்களுஞ் சேரத்தக்கவராயினர். இவர்கள் யாவருந் தவவொழுக்கத்தாற்சிறந்து வேதியராயினார்களென்பதே முடிந்தசித்தாந்தமாயினமையால், இவர் கண்டுகூறிய ஏகதேசநியாய மிவர்பாலன்றி யேனையோரிடம் மணஞ்செய்யாதொழிந்தது. தர்மவிராதனிடம் கௌசிகன் சகல தர்மங்களையு முணர்ந்தானென்றொப்பிய பாரதம் எவ்வித்தைக்கும் பிராமணனே யதிகாரியென்று வாதித்த விவாதமதத்திற்கு நேத்திரபங்கந் தேடியதற்கு இவர் யாது பரிகாரந் தேடினார்? இவைகளை யோசியாமல் பிராமணமாதாகிய அகலிகை க்ஷத்திரிய வீரனாகிய இராமபத்திரனது பாத ஸ்பரிசத்தால் க்ஷேமமடைந்தது போல்வதொன்றெனவுந் தர்மவிராத கௌசிகர்க

னது விர்த்தாந்தத்தை யொப்படைத்தார். இதுவுமெமக்கே யுப
காரமாயிற்றன்றி நமதன்பருக்கு ஒரு உபகாரத்தையுஞ் செய்தி
லது. ஏனெனெனில், அகலிகை வேதியராகிய கௌதமரை மணந்
தவளாயினும், செய்கையால் வேதியத்தன்மை யில்லாதவளாயி
னள். இராமசந்திரர் யோக்யதையிற் சிறந்தவராயினமையால்,
அவளைத் தமது பாத தீக்ஷையால் பரிசுத்தப்படுத்தியருளினர்.
இந்தச் சரித்திரத்தால் பிறப்பினலாயது பிராஹ்மணத்வமென்று
ஆவேசத்தா லாற்றிமலையு மிவருக்கென்ன சாதகமுண்டாயதோ
எமக்குத் தெரியவில்லை. இப்படி யெல்லாப்படியாலும் கிழாவெ
துய்கத்தக்க ஜாதி பிராஹ்மணத்வம் உலகை வஞ்சிக்குமாறெ
ழுந்த அவாந்தரகற்பிதமா யொழிந்ததெனலே முடிவாயிற்றென்க.

இனி நமதன்பர் ஜம்புகன் என்னுஞ் சூத்திரன் தன்குலவொ
ழுக்கத்துக்கு மாறாகத் தவஞ்செய்ததற்காக இரகுவீரனாற் றண்டிக்
கப்பட்டானென்று ஒரு பெரிய சங்கதியைத் தூக்கிக்கொண்டு
வந்து எமக்குப் பூச்சிக்காட்டினர். மேலே பிரஸ்தாபிக்கப்பட்ட
தர்மவிராதன் - விதுரன் - திருநாளைப்போவார் - வசிட்டன் - வியா
தன் முதலினோரைத் தண்டித்த அரசர்களை யேனோ யிவர் தேடிக்
கண்டுபிடிக்கவில்லை? ஜம்புகன் பிறப்பினலாயதோஷத்தை ஸம்ஸ்
காரத்தால் நிவர்த்தித்துத் துவிஜத்வம் வழியாமல் தவத்திற் புக்க
மையால், தண்டிக்கப்பட்டானென்றறிக. அவனந்த ஜந்மத்தில் தவ
சித்தி பெறத்தக்க பூர்வபுண்யமும் பிராப்தமாகாதொழிந்தானெ
ன்றறிக. இதனால், நமது சாஸ்திரியாருக்கு ஒரு சாதகமு முண்டா
யினதில்லையறிக. இது நிற்க.

நமதன்பர் சூத்திரனைப்போலப் பிராமணஸ்திரீயுஞ் சூத்தி
ரப்பெண்ணாகச் சொல்லப்பட்டவளாயினும் பிராமணஸ்திரீ பிரா
மணபீஜத்துக்குப் பிறந்தமையால், அங்ஙனம் பிறவாத சூத்திர
னோடு சமமாகாமல் அவனைக்காட்டிலும் விசேடத்தன்மை யெய்
தினளென்று ஒருவிசேடங்கண்டு கூறினர். இதனையும் யோசிப்
பாம். பிராமணபீஜத்துக்குப் பிறந்தவள் சூத்திரனிற் சிறந்தவ
ளாயின், பிராமணராகிய வியாசரது பீஜத்துக்குப் பிறந்த விது
ரன் எவ்வாறுகத் தக்கவன்? இவனுக்கும், இவர் கொண்டாடும்
ஸ்திரீக்கும் பேதமில்லாதொழிந்ததற்கு என்ன சமாதானங் தேடி
னர்? அவ்விதுரன் கேவலம் சூத்திரனாகாமல் ஞானபுங்கவனாயின
மையால், பிராமணஸ்திரீக்குக் குறைந்தவன் சூத்திரன் என்றது



சர்வாஸங்கதமாயினதறிக. அன்றியும், பிறப்பினற் பிராமணஜாதி
யுண்டென்பதை மேலே நன்குமறுத்தோம். அதனால், பிராமண
ஸ்திரீயைப் பிராமணபீஜத்துக்குப் பிறந்தவளென்று உயர்வுகூ
றிச் சூத்திரனை நிஷேதித்தது அறியாமையேயாம். பிராமணஸ்திரீ
யென்றிவர் கொண்டாடும் பெண்ணைப் பிராம்மணரே சூத்திரமா
தென்றெருப்பிச் சுசுருஷைக்குத் தங்களிடம் வைத்துக்கொண்ட
மையால், அவர்களைப்போல் புருஷர்களுஞ் சூத்திரராயுள்ளாரெ
ன்பதே துணிவென்றறிக. இதனால், பிராமணபீஜத்துக்குப் பிறந்
தா ளந்தப்பெண்ணென்றது பொய்யாயினவாறறிக. இனிப் பிரா
மணப்பெண்ணைச் சூத்திரப்பெண்ணாய்ச் சொற்றது யாதுபற்றி?
அவளுக்கு ஸம்ஸ்காரமில்லாத காரணமேயன்றோ? அவள்மாத்திர
மேயன்றி க்ஷத்திரியப்பெண்ணும், வைசியப்பெண்ணும், சூத்தி
ரப்பெண்ணுமாகிய வெல்லாப்பெண்களும் பிறப்பினலாய சூத்
ரத்வமே யுடையராய்ச் சூத்திரப்பெண்களாகவே சிறந்தார்கள்.
சாஸ்திரங்களில் "ஸ்திரீசூத்திரர்கள்" என்று பிரயோக முண்
டாகுமிடங்கடோறும் நாற்குலத்து ஸ்திரீகளையும், சூத்திர புரு
ஷனையுமே கிரகிப்பது மரபாயினமையால், இவர்கள் ஸம்ஸ்காரம்
பெறுமையாலேயே யோரினமாக்கப்பட்டமையும், சூத்திரனொ
ழிந்த வைசியன், க்ஷத்திரியன், பிராமணன் என்னும் புருஷர்கள்
ஒருவரிலொருவர் ஸம்ஸ்கார தாரதம்யத்தா லுயர்ந்ததுபற்றி வே
றுவேறு பெயர்களைத் தாங்கிச் சிறந்தமையுமே அமைந்தவாறறிக.
இவ்வுண்மை தெளிந்திடாத நண்பர் (வேதமந்திரங்களாற் செய்
யப்படுஞ் சடங்குகளாற் பரிசுத்தமெய்திய பிராஹ்மணஸ்திரீக்
கும், அவ்வாறாகாத சூத்திரனுக்கும்) பேதம் மிகவுண்டு என்றார்.
சூத்திரன் "ஆயாவேதி" என்றது முதலிய வேதமந்திரங்களை யுச்
சரித்தற்குச் சதபதப்பிரமாணத்தி லாதாரங்கண்ட விவேகிகள்
சூத்திரனில் வேதியர்மாது உயர்ந்தவளென் றிவர்தொடுத்த வஸங்
கர்த்மவாதத்தை வெட்டிச்சாய்த்திடாமற் போகாரென்க. விரிக்
கிற் பெருகும். இது நிற்க.

இவர் பிராமணனையுஞ், சூத்திரனையுந் தமையன் றம்பிகளென்று
யாம் கூறியவாறு அங்கீகரித்துக்கொண்டு, தமையனுக்குரிய வே
தாதிகாரத்தைத் தம்பி யடையவிரும்புவது தகுதியாவென்று வின
விச்செருக்கினர். தமையனுந் தம்பியும் ஸஜாதியாயிடுதலன்றி, விஜா
தியாயிடுதலமையாது. ஸஜாதியாகிய தமையனுக் கதிகாரமுள்ள

வேதத்தில் தம்பிக்கதிகாரமில்லையென்றது யாங்ஙனம்? தமையனு
கிய பிராமணன் பிரமனது முகத்திற் பிறந்தவனும், தம்பியாகிய சூத்
திரன் அவனது பாதத்திற் பிறந்தவனுமாயினமையால், தமையனுக்
குரிய வேதாதிகாரத்தைத் தம்பி பெறுதவனுயினனெனின், அது
கூடாது. ஏனெனின், இவரது பிரசங்கமொன்றில், (சிவனாது கீழ்
முகங்களிற்பிறந்த வேதம் அவரது மேன்முகத்திற்பிறந்த சிவாகமத்
தினுந் தாழ்ந்ததெனல் யாங்ஙனம்? நின்மலராகிய சிவனாது உறுப்
புகளிலொன்று உயர்வதும், மற்றொன்று தாழ்வதுங் கூடாது)
என்று எழுதப்பட்டிருக்கின்றது. அதனுல், கடவுளுக்கு உயர்வு
தாழ்வான வுறுப்புகள் கிடையாவெனவும், கீழ்முகத்திற் பிறந்த
வேதம் மேன்முகத்திற் பிறந்த சிவாகமத்திற்றுழாதெனவு மிவ
ரது நிச்சயம் வெளிப்படுகின்றது. அதனை யீண்டநுவதித்துக்
கொண்டால், பிரமனது பாதத்திற் பிறந்த சூத்திரர் அவனது முகத்
திற் பிறந்த பிராமணரினுந் தாழாரென்று ருசுப்படுகின்றது. இத
னுல் பாதத்திற் பிறந்த தம்பியாகிய சூத்திரன், முகத்திற் பிறந்த
தமையனுகிய பிராமணனிற் குறைந்தவனென்றுண்டாகிய வாதம்
மணம்பற்றிலதென்க. அன்றியும், பிராமணன் முகத்திற் பிறந்தான்,
சூத்திரன் பாதத்திற் பிறந்தானென்பது வேதத்திலெழுந்த ரூபகா
லங்காரமென்று மேல் யாம் தெரிவித்திருக்கின்றமையால், பிராம
ணன் முகத்திற் பிறந்ததும், சூத்திரன் பாதத்திற் பிறந்ததும் வெ
றுங்கற்பனையாயிற்றென்க. இதனை முன்னர் யாம் எதிரிமதமாக்
கொண்டு அநுவதித்ததேயன்றி வேறில்லை. இனி யிவரது அபிமதம்
போல் சூத்திரன் தம்பியும், பிராமணன் தமையனுமே யாகட்டும்.
சிவபக்தனுகிய சூத்திரனொருவனை வைஷ்ணவ பிராமணனொருவ
னெதிர்த்துச் சுருதிப்பிரமாணங்கொண்டு வாதித்துச் சிவநிந்தை
செய்ததாகக் கொள்வோம். அதற்கு விடையளிக்கவேண்டிய சூத்
திரனுகிய சிவபக்தன் என்செய்வது? ஒரு விபூதியிட்ட பார்ப்பா
னைத் தேடிப்போய் இதற்கு என்னகதியென்று கேட்டால், அவன்
சிவனும் விஷ்ணுவும் ஒன்றுதானே யென்றுசொல்லி யனுப்பிவிடுகி
றுன். மற்றொரு பார்ப்பானைக் கண்டு கேட்டால் எனக்கு அந்தச்
சங்கதியொன்றுந் தெரியாது என்றுசொல்லிப் போய்விடுகிறுன்.
கொஞ்சந் தெரிந்தவன் கிடைத்து, அவனை யழைத்துக்கொண்டு
போனுல், அவன் எதிரியோடு பேசத்தொடங்கி அவமானப்பட்டு
ஓடிப்போகிறுன். கொஞ்சம் நன்றுய்ப் பேசத்தெரிந்தவனுயிருந்



தால், எதிரியினிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டு வழவழவென்று
விஷயங்களை விட்டு நழுவுகிறுன். இவ்வளவவதிகளை யநுபவித்
துக்கொண்டு சிவநிந்தையை மறுக்க முடியாமல், சிவபக்தனொரு
வன் கசங்கவேண்டியது ஆவசியகமோ? சிவாபிமானியாயிருப்ப
வன் எந்தவருணத்தவனுயினுஞ் சிவநிந்தையைக்கேட்க நேரிடு
ங்கால், எதிரியை மறுத்தற்கு என்னசஸ்திரங்கள் வேண்டியவோ
அவைகளைத்தேடிச் சித்தம்பண்ணி வைத்திருப்பது ஆவசியகமாம்.
எதிரிசெய்யுஞ் சிவநிந்தையை மறுத்துச் சிவபரத்துவ ஸ்தாபனஞ்
செய்தின்புறும் பெரும்பேறு கைகூடுவதை மறுப்பதாகிய (சூத்தி
ரன் வேதம் படிக்கக்கூடாது என்னும்) அபசித்தாந்தம் சிவபக்தி
ஹீனர்களுக்கே மிகப் பூஜ்யமாயதென்க. இன்னுமொன்று சொல்
லுகிறேம்.

ஒரு அரசனுக்கு நால்வர் குமாரரிருந்தார்கள். அவ்வரசன்
தனக்கு வயோதிகம் வரலால், இராஜ்யத்தை மக்கள்பால் விடுத்துத்
தவத்திற் சென்றுன். அவருள், மூத்தமகன் இராஜ்யத்தைக் கவனி
யாமல், சூது குடி பொய்முதலிய தீயவழியிற் புக்கு ஈனஸ்திதியி
லிருந்துவிட்டான். இரண்டாவது மூன்றுவது மக்கள் இராஜகாரி
யங்களிற் பிரவேசித்து ஒழுங்குபெற நடத்திவரும் புத்தியுந் திறனு
மின்றி வேறு விவகாரங்களிற்சென்று காலங்கழித்திருந்தார்கள்.
நான்காவது பிள்ளை இராஜதந்திரத்திற் சிறந்து புத்திசாலியாயிருந்
தான். அப்படிநிகழ்ந்துவருங்காலையில், வேற்றரசனொருவன் படை
யெடுத்து இவர்களை யெதிர்த்தான். அப்போது நாலாவது குமா
ரன் சத்துருவை யெதிர்த்துப் போராடிவென்று தங்களது இராஜ
யத்தைக் காத்துக்கொண்டான். அதனைக்கண்ட மூத்தவன் இளைய
தம்பியைநோக்கி, நான் செய்யவேண்டிய காரியத்தை நீ யெப்படிச்
செய்தாயென்று தடுத்திடல் மரபாமோ? அப்படித் தடுத்தால்,முன்
தமையனென்று பாராட்டியிருந்த மரியாதையை யொழித்து அவ
னையுஞ் சத்துருவாகக்கொண்டு அந்தத் தம்பியானவன் ஊரைவிட்
டோட்டத் தடையிராதாகையால், இதனை நமதன்பர் தாமெடுத்துக்
கொண்டவுபமேயத்தோடிணங்க வுவமித்து அடங்கி வாழ்வாராக.
அன்றியுமொன்று சொல்லுகிறேம். இவர் தமையனுக்கே சொத்
தின்பாத்யதை யுண்டென்றும், தம்பிக்கு அது கிடையாதென்றும்
பிரசங்கித்தாரன்றே? அத்தமையனிறந்தும் அவனுக்குச் சந்ததி
யில்லாமலும்போனு லதனையெவ்வாறு கொள்வது? தானுந் தன்

னுடைய சந்ததியு மில்லாதகாலத்தில், தன்னுடைய தம்பிக்கு முழுபாத்யதையுடைய பிதுரார்ஜித சொத்தின் சம்பந்தத்தை யோசியாமல், நீ இங்குவாராதே! எட்டப்போ!! என்று அதட்டிப்பேசுந் தமையன் கதியை நமதன்பரே இனி யோசிக்கவேண்டியது. இம்மட்டிலமையாமல், பிரமனதுமுகத்திற் பிறந்தவன் சிறந்தவன், அவனதுகாலிற் பிறந்தவன் குறைந்தவன் என்று நமதன்பர் பின்னும் வாதிடுவராயின், அதற்கும் இறைதருவாம். ஒரு மாவிருட்சத்தில், மேலுங்கீழு மோடியுள்ள கிளைகளில் பழங்கள் பழுத்திருந்தன. அவற்றுள், மேற்கிளையிற் பழுத்ததுதான் மாம்பழம், கீழ்க்கிளையிற் பழுத்தது மாம்பழமன்று என வாதிடுவாருண்டோ? மாமரத்தின் எந்தக்கிளையிற் பழுத்ததும் மாம்பழமேயாகையால், அதனையுணராதோதுவதெல்லாம் அறியாமையாகவே முடியும். இதனையுணர்ந்தவர்கள் நமதன்பர் செய்துவருஞ் சூத்திரநிந்தையைக் கண்டிரங்கி அவரை பிடித்து நல்லறிவுச்சுடர்கொளுத்துவது ஆவசியகமாமென்க. இவ்வளவும் அவரது மதத்தை யாம் தழுவியுரைத்த நீதிகளாம். உண்மையாய்ப் பார்க்குமிடத்தில், பிரமனது முகத்திலும், தோளிலும், பிற இடங்களிலும் மானிடர்கள் பிறந்தார்களென்பது சுத்த பொய்யென்று மேலே யாம் நன்குபரிஷ்கரித்ததே சத்தியம். ஆகையால், நமதன்ப ரிம்மட்டினின்று எம்மோடிகலுதலொழிந்து சுகித்து வாழுமாறு பிரார்த்தித்துத் திருவருளைச் சிந்திக்கின்றேம். சுபம்.

---

## கொழும்புசர்மாவின் குறும்பறுத்தல்.

பிரமவித்யா பத்திரிகாசிரியர் முதல் சங்கராசாரியரை ஜகத்குருவென்று எழுதினர். அவரை ஞானாமிர்த பத்திரிகாசிரியர் சங்கராசாரியர் ஜகத்குருவாவ தெப்படியென்று வினவினர். அதற்கு அவர் பரமேசுவரதீட்சித சிஷ்யநாமத்தால் வெளிவந்து சூத்திரநிந்தையிலிழிந்து தருக்கிச் செருக்கினர். அதற்கு யாம் பரிகாரந் தேடி யுபசாந்தியடைந்தோம். யாம் கேட்டவைகளில் ஒருவிஷயத்துக்கேனும் பிரமவித்யா பத்திரிகாசிரியரிடமிருந்தாவது, வேறு யாரிடமிருந்தாவது பதில் கிடைக்கவில்லை. இங்ஙனமாக, கொழும்புசர்மாவின் பேரால் வெளியான வபத்தபஞ்சாங்கத்தில், சை பிரமவித்யா பத்திராதிபர்தாமே எமது கேள்விகளுக்கெல்லாம்

43 E



பதில்சொல்லிவிட்டதுபோல் தாறுமாறான விஷயங்களையெழுதிப் பக்கங்களைநிரப்பி எம்மையும் பலவாறு தூஷித்துப் பண்டித ஸிம்ஹமாய்க் கர்ஜித்தார். இவரது வண்மையை யறியவேண்டினோர் இவர் தமது பத்திரிகையில் ஞானாமிர்த மறுப்பு என்றெழுதிய பகுதியில் 3 - வது இலக்கமிட்ட விஷயத்தில், "கலிபுருஷர்மகிமை" பலரால் பலபத்திரிகைகளில் மறுக்கப்பட்டது, நமது தூஷணம் நிறைந்து நிற்குமிது ஒருதக்கபண்டிதர் எழுதாத விஷயமாதலின் ஒரு பொருட்டல்ல, சாவகாசமானபொழுது கவனிப்பாம், எமக்கு அது லட்சியமில்லை, கடுஞ்சொல் எமக்கு வேண்டாம்" என்று எழுதியிருப்பதைப் பார்த்து மகிழ்வது ஆவசியகமாம்.

இனி யிவரது பண்டிதத்திறத்தைச் சிறிது ஆராய்வாம். யாம் விடுத்த கலிபுருஷர்மகிமையை இவரது சகோதரர்கள் எத்தனை பேர்களோ மறுத்திருக்கிறார்கள்? ஏனோ வீண்டம்பம்பேசி மலைந்தனர்? எமது பத்திரிகையைப் பார்த்தபோது, இவரதுள்ளந் திடுக்கிட்டு, இதற்கென்னவழி சொல்லப்போகிறோமென்று ஏங்கி, இன்றுவரையில் கதிகாணாமல் "சாவகாசமானபோது கவனிப்பாம்" என்று சாக்குபேசிப் பதுங்கிய நிலையை மறந்து, இவர் பண்டிதராகார் என்று எம்மைத்தூஷித்த தென்னையோ? யாம் பண்டிதரென்று இவரிடம் பண்டித ஸாமர்த்தியங் காட்டவந்ததில்லை. இவரது பிராமணஜாதியினது சொரூபத்தையும், இவர் தூஷித்த சூத்திரஜாதியினது நிலைமையையுமெடுத்துப் பிரகாசப்படுத்தினோம். எமது கேள்விகட்கொருசிறிதும் விடையளிக்க வகையற்ற விவரது விரிவிலாவறிவை நோக்கி விவேகிகள் வெய்துற்று வியந்துகொண்டிருக்கவும், இவரெம்மைத் தூஷித்தது எமக்குச் சிறுநகையையே விளைத்துக்கொண்டிருக்கின்றது. இம்மட்டிலேயொழியாமல், யாமிவரைத் தூஷித்ததாகப் பிரமாணம் பண்ணுகிறார். பிறர்தூஷணம் பேணாத விப்பெரியார் அபண்டிதரென்று எம்மைத்தூஷித்தது மறியாமோ? யாமெழுதிய கலிபுருஷர்மகிமையைச் சுட்டி, அது "எமக்கு லட்சியமில்லை" எனவும், "ஒருபொருட்டல்ல" வெனவுங் கடுஞ்சொற்களை யிறைத்துக் கம்பீரம்பேசிய விக்கலிபுருஷ ஸிம்ஹம் "கடுஞ்சொல் எமக்குவேண்டாம்" என்றதுங் கல்விவிசேடமேயாம். இவரெம்மை அபண்டிதரென்றதும், யாமிவரை அபண்டிதரென்றதும் உசிதமல்ல. எம்மிருவரது நியாயவண்மைகளைப் பரிசீலிக்கும் நடுநிலைமையுடைய மத்தியஸ்தரே மதிக்கத்தக்கவர்

கள். இனி யிவர் "எமக்கு லட்சியமில்லை, ஒருபொருட்டல்ல" என்று ஒதுக்கிய கலிபுருஷர்மகிமையைப் பின்னர் "சாவகாசமாகக் கவனிப்பாம்" என்று பிரஸ்தாபித்து அதனை லட்சியப்படுத்தியும், பொருட்படுத்தியும் புந்திவேறுயினவாறென்னை? பண்டிதரல்லாத யாமெழுதிய அற்பவிஷயத்தைப் பண்டிதராகிய இவர் உடனே களைந்தெறிவதைவிட்டுச் சாவகாசத்தை யபேட்சித்துச் சதுரிழந்தவாறென்னை? இனி வீண்சாலம் பகவர்வதைவிட்டு உடனே விடைபகர்ந்து மணந்தேடிக்கொள்வாராக. இது நிற்க.

கலியுகவலிமைக்குத் தலைமைபூண்டு வெளிவந்த பரமேசுவர தீக்ஷிதரது மாணுக்கர் ஒருவாறடங்கியது யாவரும் சந்தோஷிக்கத்தக்கதாயிற்று. அடங்கிப்போன அவரினு மறிவின் மிக்காரெனப் பின்னர் வெளிப்பட்ட கொழும்புசர்மாவி னதோகதியை யாம் எழுதிய கொழும்புசர்மாவின் கொடுமைதவிர்த்தல்" என்பதன் வாயிலாக யாவரு மறிந்திருக்கிறார்கள். இக்கொழும்புசர்மா எமது கலிபுருஷர்மகிமையை மறுத்ததாகவெளியிட்ட வாபாசத்தையே நமது சாஸ்திரியார் மதித்துப் பலர் கண்டித்துவிட்டார்கள் என்று பெருமை பேசிக்கொண்டர். இனி யதனைச் சற்றுவிசாரிப்பாம்.

## பூர்வபட்சம்.

இவர் முதற்சாதியினை ரிக்காலத்தி லில்லையென்றார். முதற்சாதியினராகிய விப்பிரர் இக்காலத்திலில்லாதிருப்பின், இவர் சிரோபூஷணமாகக்கொண்டிருக்குந் தில்லைவாழந்தணர்களும், ஆதிசைவர்களும் பிராமணராவதெங்ஙனம்?

## சித்தாந்தம்.

இக்காலத்தி லிவர் கூறும் விப்பிரர் வசிட்டர்-வியாசர் முதலினோரை மூலபுருஷராகக்கொண்டிருத்தலால், இவர்கள் முதற்சாதியினராகிய விப்பிரராகாரென்க. ஆதிசைவர் சிவமுகோத்பவர்களும், தில்லைவேதியர் சிவகணவதாரபுருஷர்களுமாக வெண்ணப்படுஞ் சிவசம்பந்தத்தால் இவர்களையும் பிராமணரெனவிழுக்காது. சிவபெருமானை வேதங்கள் பிராமணரென்று கூறுதலால், அவரதுமக்களாகிய விவ்விருதிறத்து வேதியரும் பிராமணராயினரென்க. பிரமனது முகத்தில் பிராமணர் பிறந்தாரென்னுஞ் சொல்லேயன்றி, அப்பிரமனது பேரைச் சொல்லிக்கொண்டு வெளிவரத்தக்க வேதியர்க ளொருவரு மிக்காலத்திலில்லை. அதவா இருப்பினும்,



அவர்கள் சிவாசாரியர்-தில்லைவேதியர் என்னு மிவர்களைநோக்கப் பிராமணராகார்கள். ஏனெனின், வேதத்தில் சிவனைப் பிராமணரெனவும், விஷ்ணுவை க்ஷத்திரியரெனவும், பிரமனை வைசியனெனவுஞ் சொல்லியிருக்கின்றது. பிராமணராகிய சிவபெருமானிடம் பிறந்தவர்களுக்கே பிராமணத்வம் பிராப்தமாம். வைசியனாகிய பிரமனிடம் பிறந்தவர்களுக்கு எங்ஙனே பிராமணத்வம் பிராப்தமாகும்? சிவவேதிய தில்லைவேதியர் என்னும் பிராமணர்களைநோக்கப் பிரமனிடம் பிறந்தவராக எண்ணப்படுவோர் வைசியர்களாயிடுவ ரென்க. பிரமபுத்திரர்களாகிய வவர்களுக்கே பிராமணத்வம் சந்தேகமாயொழியுமானால், வசிட்டாதி வர்ணசங்கர வேதியர்க்குப் பிராமணத்வத்தை யாமெங்ஙனே வொப்பலாம்? பிரமன் பிராமணனாயின், அவனிடம் பிறந்தார் யாவரும் பிராமணராயிடுதல் வேண்டும்? அவனிடம் பிராமணரும், க்ஷத்திரியரும், வைசியரும், சூத்திரரும் பிறந்தாரென்கையால், இதனை அசம்பாவித மென்றொதுக்குவதே மரபாமென்க. பிரமனதுமக்கள் நால்வரில் நால்வரையுந் தனித்தனி நாலுஜாதியாகக்கொள்வது புத்திப்ரமமாகவேதோன்றுகிறது. சிவனாரிடத்தில் பலசாதிகள் பிறந்தபிரசம்சை நூல்களிற் கேட்கப்படாமையால், பிராமணராகிய அவரிடம் பிறந்த சிவாசாரியர்களும், தில்லைவேதியர்களுமே பிராமணரென்று யாம் கொண்டாடி வழிபடத்தக்கவராயினரென்க. ஒருகால் சிவப்பிராமணர்களை நமதுசாஸ்திரியார் கானீனர் என்று சிலதப்புதஸ்தாவேசுகளைக் கொண்டு தூஷிக்கவரலாம். அவர்கள் பூசிக்குந் திருக்கோயில்களுக்குச் சென்று வழிபடுவதும், அவர்களது திருமுன்னின்று விபூதிப் பிரஸாதத்துக்குக்கையேந்தி யிரப்பதுமாகிய அடிமைத்திறம்பேணி வாழுநீராகிய விவர்செய்யுஞ் சிவாசாரிய தூஷணம் கனம்பெறமாட்டாதென்க. முதற்குலத்தவரென்று தங்களைக் கொண்டாடிமகிழும் பிரதிவாதிகளுக்கும், ஏனையவெல்லாவருணத்தவருக்கும் ஆசாரிய முதன்மை வகித்துச் சிவதரிசனஞ் செய்வித்தலும், விபூதிப் பிரஸாதங்கொடுத்து அநுக்கிரகித்தலுமுடையாராகிய வேதியர்மணிகளே யாம்வழிபடும் பிராமணராயினரென்க. விரிக்கிற் பெருகும்.

## பூர்வபட்சம்.

கும்பத்திற் பிறந்தவர் கலசயோனி என்பது முதலியவைகட்குப் பிரமாணமில்லை. இவ்வாறு வேதக்கிற் சொல்லியுள்ளதா?

### சித்தாந்தம்.

இவர் எமதுகட்சிகளை யநுவதிக்குமிடத்து, ஒழுங்காயநுவதிக்காமலும், பலதூஷணங்களை நிரப்பியும், யாம் சொல்லாதனைகளை வருவித்தும் வீணிற் பக்கங்களைநிரப்பிப் பகட்டியிருக்கிறார். அவையெல்லாம் யாம் ஈண்டுப் பிரஸ்தாபிப்பதிற் பயனில்லை. முக்கியவிஷயத்தை யெடுத்துக்கொண்டோம். உலகத்தில் சாதாரணமாய் நதிமூலம் ரிஷிமூலம் விசாரியாதே யென்றுசொல்வ திவரறியார்போலும். ரிஷிகளுடைய பிறப்புகளைச் சர்வ புராணங்களுங் கூறுவதன்றி வஜ்ரஸூசிகோபநிஷத்து நன்குபரிஷ்கரித்து அவ்விருடியர் பிறப்பினால் பிராமணராகார் என்றுசாதித்தலால், நமதன்ப ரினிவஜ்ரஸூசிகோபநிஷத்தையே தூஷித்துக் கொடிபோடவேண்டும். அது இவரால் முடியாதகாரியம். ஆகையால், வசிட்டாதி வர்ணசங்கரமுனிவரினத்தில் வந்த பிராமண சந்ததியாராமெ விவரது ஜாலவித்தை யினிப் பயன்படாதென்க. இவரெவ்வளவு தலைகீழாக விழுந்து முட்டிப்பார்த்தாலும், இவருக்கும் பிறப்பினாலாய பிராமணத்வம் சித்தியாதது சத்தியமென்க.

### பூர்வபட்சம்.

வஜ்ரசூசிகோபநிஷத்தினுடைய காலத்தில் விப்பிரர் ஜாதிவேதியருக்குவந்த தோஷமென்னோ? தற்காலத்தில் ஆகமாதிகளில் ஜாதி சூத்திரால்லவென்பதனால், ஜாதிசூத்திரர்க்குவந்த தோஷம் யாதோ?

### சித்தாந்தம்.

இவரது சூழ்ச்சி மிகக்கொடியது. ஏனெனின், இவர் சர்வ வித்தைகளிலும் அந்தணரே சுதந்தரமுடையாரெனவும், சூத்திரர் சுசுருஷைக்கே யுரியவரெனவும் பிரஸ்தாபித்த பிரதிவாதிக்கு யாம் கூறிய சமாதானத்தை யீண்டநுவதியாமல் வஜ்ரசூசிகோபநிஷத்தைப் பிரஸ்தாபித்து வழவழனானம்பேசி, வம்பளத்தலின்மாத்திரமுடம்பெல்லாம் வாயாகப் பிரஸித்திபெற்றார். வேதத்தை நாலாக வகுத்தவரும், பிரமசூத்திரத்தைச் செய்தவரும், அஷ்டாதசபுராணங்களுக்குக் கர்த்தாவுமாகிய வியாசரும் ஜாதிவேதியரல்லரென்றும், மத்ஸ்யகந்தி மகனாரென்றும், அப்படியே ஸ்ரீமத் ராமாயணஞ்செய்தவர் வேடுவர்கோமானாகிய வான்மீகியென்றும், அவரும் ஜாதிவேதியரல்லரென்றும் யாம் பிரகாசப்படுத்தியதை ஏனோ இவரநுவதியாதொழிந்தார்? இனியேனு மநுவதித்துச் சமாதானஞ்



சொல்லட்டும் பார்ப்போம். மேற்கூறப்பட்ட விருடியர் ஜாதிவேதியராகாமையால், "சர்வ வித்தைகளிலும் அந்தணரே சுதந்தரமுடையார்" என்று இவர் சொன்னதையே சொல்லிக் காலப்போக்குச்செய்வது சிஷ்டர்கள் இகழ்தற்குத் தக்கதாயிற்றென்க.

இனி யிவரநுவதித் தெழுதியதிலுண்டான வாபாசத்தைச் சிறிதெடுத்திசைப்பாம். வஜ்ரசூசிகோப நிஷத்துண்டான காலத்தில் ஜாதிவேதிய ரில்லையென்று இவரொப்பினார். அவர்களுக்கு வேறாக ஜாதிவேதியரிருந்ததாகவும் கூறினார். வஜ்ரசூசிகோபநிஷத்திற் கூறிய மத்ஸ்யகந்திமகனார்முதலிய வேதியரை யாமறிந்தோம். ஜாதியரையேயன்றோ முன்னும் இப்போதும் யாம் விசாரிப்பது? அவர்களுற்பத்தியையும், அவர்கள் பேரையுமெடுத்துப் பிரஸ்தாபித்தாலன்றோ அவ் விருதிறத்து வேதியர்களுக் குண்டான வித்யாசத்தை உலகமறிந்து குணப்படும்? இவர் வசிட்டாதி வர்ணசங்கரவேதியர்க்கு வேறாக ஜாதிவேதிய ருள்ளார்களெனவொப்பியதால், தம்மை யிவர் ஜாதிவேதியரென்றுகொண்டிருப்பதாக ஏற்படுகின்றது. அதனை ருசுப்படுத்தவே யாம்கேட்பதன்றி, இவரை வர்ணசங்கரகுலத்தவரென்று கூறவேண்டுமாவசியக மெமக்கில்லை. இனி யிவரது முன்னோர்கள் யாவர்? அவர்கள் பிரமனது முகத்திற் பிறந்த வேதியராயிடுதலையும், அவர்களது சந்ததிவரிசையையும், அவர்கள் வசிட்டாதி வர்ணசங்கரவேதியர்கள் சந்ததியிற் கலவாமையையும் இனிது பிரகாசப்படுத்தி, இவருக்குள்ள சுத்தவேதியத்தன்மையை ஸ்தாபித்துக்கொள்வாராக. இனி வஜ்ரசூசிகோபநிஷத்து எப்போதுண்டாகியது? அதனை யுண்டாக்கியவர் யாவர்? அது நூற்றெட்டுபநிஷத்தி லொன்றுமன்றோ? அதனை யொருவனுண்டாக்கினுரெனின், அதனோடுசேர்ந்த ஏனையுபநிஷத்துக்களும் ஒவ்வொருகாலத்தி லொவ்வொருமுனிவரா லுண்டாயினவென்னும் வாதமுண்டாமன்றோ? அவ்வுபநிஷத்துக்கள் வேதாந்தமென்றும், வேதத்திலுத்தரகாண்டமென்றும் பெயர்பெறலால், இவற்றைப் பிற்காலத்தவர் செய்தாரென்பது இவைகளைப் பசுநூலென்று தூஷித்தற்கே ஆதாரமாம். சிவனார் சொல்லியருளிய சிவாகமத்திலும் வேதமுயர்ந்தது என்றுபேசும் விதண்டையின்பயனாகவேயன்றோ வேதாந்தம் பசுக்களாற் செய்யப்பட்டது என்றுகூறத் திருவருள் கூட்டியது? இனி யிவர் வஜ்ரசூசிகோபநிஷத்துண்டான காலத்தில் வர்ண சங்கரவேதியர் பிரஸ்தாபத்தை யொப்பியதால்,

அது தோன்றுவதன்முன்னரே சுத்தவேதியரிருப்பைப் பிரமாண வாயிலாக விஸ்தாபிக்கக் கடமைப்பட்டிருக்கிறார். அதுவு மோருபநிஷத்தா யிருந்தாலே கனம்பெறும். அவ்வுபநிஷத்து வஜ்ராசூசிக்கு முன்பிறந்ததாகவு மிருக்கவேண்டும். இவற்றினுற்பத்தி காலங்களையும், ஆக்கியோர்களையுந் தேடி யெடுப்படைக்கவேண்டிய பொறுப்பு இவர் தலைமேலேறியதற்கு யாம் அதிகமாக வருந்துகிறோம். நமது ஸ்ரீநிவாசசாஸ்திரியார் முதல் தமது ஜாதிச்சுமையை ஒருகிறுக்கிசிஷ்யரது தலையிலேற்றி வெளியிட்டார். அவர் சுமக்கமுடியாமல் கீழே போட்டுவிட்டார். பின்னர்க் கொழும்பிலொரு ஆளைத் தேடி அந்தச்சுமையை யெடுத்து அவர் தலையிலேற்றுகிறார். அவர் மூச்சு விடமாட்டாமல் முக்கி நெக்குவிட்டு நெடுமூச்செறிகின்றார். இனி யாரையாவது தேடுவாரோ? அல்லது தாமே தூக்கிக்கொண்டு வெளியிற் புறப்படுவாரோ? அல்லது நமக்கேனிந்த ஜோலியென்று சும்மாவிருந்து சுகப்படுவாரோ? யாதோ? தெரியாது. இது நிற்க.

இவர் சிவாகமத்தில் ஜாதிசூத்திரர் ஜாதிசூத்திரரல்லாதவரென்னும் பிரஸ்தாப மிருத்தலால், ஜாதிசூத்திரருக்குண்டான குறைவு யாதென்று கேட்டாரன்றோ? ஜாதிசூத்திரர் பிறப்பினாலே சூத்திரராயுள்ளவர்கள். ஜாதிசூத்திரரல்லாதவர்கள் அவ்வாறன்றி இருதிறத்தவராவர். பிறந்தநிலையினின்றும் பெயர்ந்து கீழானகாரியங்களிற்சென்று தாழ்ந்தவர்களும், பிறந்தநிலையினின்றும் பெயர்ந்து மேலானகாரியங்களிற்சென்று உயர்ந்தவர்களுமே அவர்களென்றறிக. தாழ்ந்தவர்கள் கீழானபலசாதிகளும், உயர்ந்தவர்கள் பிராமணாதிகளுமாம். இதனால், சூத்திரர்கள் ஜாதிசூத்திரராகாத அநுலோமாதிகளுக்கு உயர்ந்தவர்களாம். ஜாதிசூத்திரராகாத பிராமணாதிகளுக்குத் தாழ்ந்தவர்களு மாவார்கள். ஜாதிசூத்திரரல்லாதவர்கள் உயர்ந்தவர்களும், தாழ்ந்தவர்களுமாயிடு முறைமையோராது ஜாதிசூத்திரர்களுக்குண்டான குறைவு யாது என்று இவர்கடாவியது நிஷ்பலமாயினதறிக. சூத்திரன் வைசியனாகலாம். வைசியன் க்ஷத்திரியனாகலாம். க்ஷத்திரியன் பிராமணனாகலாம். அன்றியும், சூத்திரன் வைசியனும், க்ஷத்திரியனும், பிராமணனுமாகலாம். வைசியன் க்ஷத்திரியனும், பிராமணனுமாகலாம். க்ஷத்திரியன் பிராமணனாகலாம். இவ்வாறு ஆயிடுதல் உயர்ந்தநிலைகளாம். இவர்களைப்போல் அநுலோமாதிகளும் உயர்ந்தவராகலாம். உய



ர்ந்த நிலைகளினின்றுந் தவறினால் பிரஷ்டர்களாயிடுதலே சித்தம். பிராமணன் க்ஷத்திரியனாயிடுதலும், க்ஷத்திரியன் வைசியனாயிடுதலும், வைசியன் சூத்திரனாயிடுதலுங் கூடாது. இவ்வாறு பகுத்துணராத நஞ்சயர்செய்யுங் காருடவித்தை இனிச்செல்லாதெனவறிக. சூத்திரன்முதலினோர் வைசியனாதியோராகவும், வைசியன்முதலினோர் க்ஷத்திரியனாதியோராகவும், க்ஷத்திரியன்முதலினோர் பிராமணனாதியோராகவும் படிகளேறி யுயர்ந்த ஜாதிகளான சரித்திரங்களும், அநுபவநிதரிசனங்களும் பலவுள. அவற்றை யீண்டு விரிவஞ்சி விடுத்தாமென்க.

பூர்வபட்சம்.

வேதம் சிவனாது நான்குமுகங்களிற் பிறந்தது என்றும், சிவாகமம் அவரது மேன்முகத்திற் பிறந்தது என்றுங் கூறுவது கட்டுக்கதை.

சித்தாந்தம்.

வேதங்கள் சிவனாது கீழ்முகத்தினும், சிவாகமங்கள் அவரது மேன்முகத்தினும் பிறந்தனவென்று சிவாகமங்களே கூறுகின்றன. அச்சிவாகமங்களை வேதம் பூஷிக்கின்றது. இனிச் சிவாகமங்கள் கட்டுக்கதையாயின், அவற்றைப் பூஷித்த வேதமுங் கட்டுக்கதையாம். வேதத்தைக் கட்டுக்கதையென்றுகூறுங் கிறிஸ்தவர்களுக்குச் சிவாகமதூஷகராகிய இவர் துணைபோந்தது இவரது அதிர்ஷ்டமேயாம். அன்றியும், சிவாகமங்கள் அனேகபுராணங்களால் பூஷிக்கப்பட்டிருக்கின்றன. ஹாலாஸ்யமஹாத்மியத்தில் சிவனாது ஊர்த்தவமுகத்திற் சிவாகமங்கடோன்றினவென்று கூறப்பட்டிருக்கின்றது. இவைகளை மறுக்கவகையற்றுத் தலைகுனியு மிவருக்கேனோ வீண்வாய்? இனியேனும் பொய்வழியிற்புகாது வாழ்வாராக.

பூர்வபட்சம்.

தமக்குரிய விப்பிரசேவையைச் செய்யாது மூடப்படிப்பினால் பிராமணரிடத்தேயுள்ள பொறாமை காரணமாகச் சூதமகாரிஷியைச் சூத்திரினுங் கீழிட்டவரென்று சொல்லும்படித் தூண்டிற்று.

சித்தாந்தம்.

சூத்திரர் விப்பிரசேவைக் குரியரென்று மூடப்படிப்பினாலுரைத்த இவரது அகந்தைக்கு யாம் விசனப்படுகிறோம். கௌசிகன் என்னும் விப்பிரன் தர்மவிராதனென்னும் வேடனுக்குச் சுசுருஷைசெய்து பிழைத்த சரித்திரத்துக்குக் கதித்தேடித் தமது ஜாதி

மானத்தைக் காத்துக்கொள்ளாமல், இவர்செய்த சூத்திரநிந்தை யெங்ஙனே கனம்பெறும்? இப்படியே சௌநகாதியர்களாகிய விப்பிரர்கள் சூதர் என்னுங் கீழ்ச்சாதிபுருஷரது காலில் வீழ்ந்து சுசுருஷைசெய்து பிழைத்த கதைக்குங் கதித்தோம்; கௌரவப்படுவதொழிந்து வயிற்றிலிடித்துக்கொள்வதி லென்ன பயன்? சூதமுனிவரைச் சூத்திரரினுங் கீழிட்டவரென்று யாம் கூறியது பிசகென்று இவர் பிரஸ்தாபித்ததேயன்றி, அச்சூதர் எப்படிப்பிராமணரென்று ருசுப்படுத்தா தொழிந்தார். அம்முனிவர்க்கு மூலவேதியர் யாவர்? அவர் பிரமனது முகத்திற் றோன்றிய ரிஷிகளிலொருவரா? அல்லது அவ்வாறு தோன்றிய ரிஷிகளிலொருவரது சந்ததியில் வந்தவரா? இதற்குத் தக்கபிரமாணங்காட்டி யெம்மைத் திருப்திசெய்வது இவரது பெருங்கடமை யென்றறிக. சூதர் தேர்ப்பாகனது திருமகனென்று பலநூல்கள் கூறுவ திவரறியார்போலும். இனியேனும் விசாரித்தொடுங்குவாராக. விப்பிரஸ்திரீயைச் சுசுருஷைக்குரியவராகக் கொண்டிருக்கும் விப்பிரர் சூத்திரர் சுசுருஷை செய்யத்தக்கவரென்பதை (பண்ணையாள் செய்யக்கடமைப்பட்டிருக்கும் வேலையைப்போல்) எண்ணி யிறுமாந்திடுவது செரிக்கமாட்டாதென்க. வேமனசதகத்தில், "தன்னைப்பெற்ற தாய் சூத்திரப்பெண் - தன்னுடைய தந்தையைப் பெற்றவள் சூத்திரப்பெண் - தன்னுடைய மனைவி சூத்திரப்பெண்-தானெப்படிப் பிராமணன்?" என்று வினவப்பட்டிருக்கின்றது. விப்பிரவர்க்கத்து ஸ்திரீகள் ஸம்ஸ்காரயோகத்தால் துவிஜத்வம் பெறுமையால், பிறப்பினளவாய சூத்திரப்பெண்களாயினரென்பதே துணிவென்றறிக. வசிட்டபகவான் சக்கிலிப்பெண்ணை மணந்த வேதியராயினமையால், ஓர்சக்கிலித் தெலுங்கு பண்டிதன் "பாபடு பாபடு அன்டுருகா - பாபடு மாயிண்டி அல்லுடுகா" என்றுபாடிக் கொண்டாடியிருக்கின்றனன். இதன் கருத்து, பார்ப்பான் பார்ப்பான் என்கிறீர்களல்லவா? அந்தப்பார்ப்பான் எங்கள் வீட்டு மருமகனல்லவா? என்பதேயாம். இவ்வாறு கௌரவிக்கத்தக்க விப்பிரஸ்திரீகளைச் சுசுருஷைக் குரியவராகப்பெற்ற விப்பிரர்கள் சூத்திரர்களைச் சுசுருஷைக் குரியவர்களென்று தூஷிப்பது மதியாமோ? இன்னுமிந்தச் சூத்திரத்வம் ஒவ்வொரு பிராமணனிடத்திலும் உபநயனத்துக்குப் பூர்வம் நிலைபெறுயிருப்பதொரு ஸ்திதியாய்க் காணப்படுவதாலும், பிராமண ஸ்திரீகளிடத்து எப்போதும் நிலைபெறு யிருப்பதொன்றாய்ப்ப[illegible]ப்படுவதாலும், அங்



தப்பிராமணர் செய்யுஞ் சூத்திரநிந்தை பிராமணச் சிசுக்களையும், பிராமண ஸ்திரீகளையும் பற்றித்தொடர்ந்து வருந்தாமற்போகாதென்க. இவ்விஷயத்தை யாம் "வேதசிவாகமப் பிராமாணியத்தில்" நன்கு பரிஷ்கரித்திருக்கின்றோம். ஆண்டுங் கண்டு சுகித்திடுக. இது நிற்க.

இவர் சூத்திரர்கள் பிராமணரிடத்திற் பொறாமைகொண்டு அவர்களை நிந்திக்கிறார்களென வொன்று கூறியிருக்கின்றார். இது அவருக்குப் பிரதிகூலமாய் முடிந்ததறிக. எங்ஙனமெனின், இவர் கொள்கையின்படிச் சூத்திரர் என்றுஞ் சூத்திரராகவே யிருக்கத் தக்கவர்கள். பிராமணர்கள் என்றுமுயர்ந்து கௌரவமாய் வாழ்கின்றவர்கள். இதனைத்தொடர்ந்து சிறிதுகூறுவாம். உலகிலொருவனிடத்தின் மற்றொருவனுக்குப் பொறாமை யுண்டாவது எதனால்? தன்னைப்போலிருந்த வொருவன், அல்லது தன்னினுங் குறைந்த வொருவன், தன்னைக்காட்டிலு முயர்ந்திடுவானாயின், அவனிடத்திற் பொறாமை யுண்டாவது சகசம். தன்னிலு முயர்ந்தவனிடத்தில் ஒருவனும் பொறாமை வகித்திடான். இது உலகிலநுபவம். இங்ஙனமாக, என்றும் தாழ்ந்திருக்கத்தக்க சூத்திரர்கள் என்று முயர்ந்துவாழும் பிராமணர்களிடம் பொறாமை வகித்திடல் யாங்ஙனங்கூடும்? இனிச் சூத்திரர்கள் தங்களைப்போலவே பிறப்பினுஞ் சூத்திரர்களாயிருப்பவர்க ளுயர்ந்து தங்களை விப்பிரரென்றும், பிராமணரென்றும் கௌரவம் பாராட்டிக்கொள்வதிற்றானே பொறாமைகொண்டார்களென் றிவர் பிரசங்கித்தலே யமையும். இதனால், பிராமணர்க ளென்றுமுயர்ந்தவர்களென்பதழிந்து சூத்திரராயிருந்தவர்களே பிராமணராயினார்க ளென்னு மெமது பட்சம் வேரூன்றிப் பொலிவெய்திய துணர்க. சூத்திரர் மாத்திரமேயன்றி, அவரினுங்கீழிட்டவரும் பிராமணராகலா மென்பது நிச்சயமாகையால், நமதன்பரும், அவர்கொண்டாடும் பிராமணர்களும் சூத்திரரினுங் கீழிட்டவர்கள் (வசிட்டர், வியாசர் முதலினோர்) வமிசத்தில்வந்த பிராமணர்களென்றறிவதே சத்தியமென்றறிக. இவ்விருடியர்கள் ஆதியில் விந்தியகிரிச் சாரலில் மாடுமேய்த்துக்கொண்டிருந்தார்கள். அப்படி மேய்த்துவருங்கால், பத்துபேர் ஒருகூட்டமாயிருந்து வாழ்ந்தார்கள். அவர்களில் ஒருவர் தலைவராயிருந்தார். இந்தப்பிரகாரம் பலகூட்டங்கள் எங்கும் பல்கியிருந்தன. அவர்கள் சந்ததியாரே இப்போது பிராமணராய் வர்த்திப்பவர்கள் இந்தப்

பிராமணர்கள் ஷை கூட்டத்தலைவர்கள் பேரையே தங்கள் கோத்திரப்பெயராகக்கொண்டு வெளிப்பட்டிருக்கிறார்கள். கோத்திரம் என்னுஞ்சொல் கோக்களைமேய்க்குங் கூட்டத்தினடியாகப் பிறந்ததென வறிந்தடங்குக. இன்னு மிவ்வாறு பலபடியாலெடுத்து விஸ்தரிக்கக்கூடிய பெருமைக்குரியராகிய நமதன்பர் சூத்திர தூஷணஞ் செய்து கனங்கெடாது, இனியேனு மொதுங்கி வாழ்வாராக. விரிக்கிற் பெருகும்.

நமதன்பரெழுதிய முக்கிய விஷயங்களை யீண்டு விசாரித்து முடிவுசெய்தோம். இவர்போல் யாமொன்றும் வழவழ வென்று தொடங்கி விடுத்ததில்லை. இவைகளைப் பூர்வபட்சியார் கவனித்து சுகிக்க வழிதேடுமாறு போதிப்பதன்றி, வேறொரு விஷயத்தை யீண்டுச் சுருக்கிக் கூறுகின்றோம். அது வருமாறு.

இப்போதுண்டானவாதம் சைவர்களுக்கும் மாயாவாதிகளாகிய அசைவர்களுக்குமென்பது யாவருமறிவார்கள். இதில் பிரதிவாதியாயுள்ளவர் சூத்திர சைவர்களுக்குச் சாஸ்திராதிகாரங் கிடையாதென்று ஒரு அவாந்தர சங்கதி யெடுத்துப் பிரசங்கித்துப் பரிபவந்தேடிக்கொண்டார். இவர் தம்மைமாயாவாதியென்று கொள்ளாமல் வேதாந்தியென்று கொண்டிருக்கின்றார். அவரவ்வாறாயினுமாகுக. அதனால், அவர் பிராமணவேதாந்தியாகின்றார். அப்படியாகுங்கால், அவர் சூத்திர வேதாந்திகளைச் சாஸ்திராதிகாரிகளாக வொப்புவது கஷ்டதரமேயாம். அவருடைய வேதாந்த மதம் "ஸந்யாஸம் ஸ்ரவணம் குர்யாத்" என்னும் வசனப்பிரகாரம் ஸந்யாஸஞ் செய்துக்கொண்ட வநந்தரமே வேதாந்த சிரவணாதிகாரம் பிராப்தமாவதாகப் போதிக்கின்றது. ஸந்யாஸமோ சூத்திரர்களுக்குக்கிடையாதென்பது வைதிகசித்தாந்தம். இங்ஙனமாக, சூத்திரவேதாந்திகள் கைவல்ய வாசிட்டாதிகளைக் கக்கத்திலிடுக்கிக்கொண்டு, யாம் சந்நியாஸிகள் - யாம் சுவாமிகள் - யாம் பெரியவாள் - யாம்பிரமங்கள் - யாம் வேதாந்திகள் - யாம் அத்வைதிகள் என்று மூலைக்குமூலை யெழும்பி யாரவாரிக்குமிரைச்ச லினியென்னுவது? இவைகளுக்கு அச்சூத்திர வேதாந்திகள் பரிகாரந்தேடாமலிருப்பது அவர்களுக்குப் பெருங்குறைவா மென்றறிக. அன்றியுமிவ்வேதாந்திகள் கொண்டாடுஞ் சங்கராசாரியர் தாம்செய்த சூத்திரபாஷ்யத்தில், அபசூத்திராதிகரணத்தில் சூத்திரன் பிரஹ்ம வித்தைக்கு அநருகன் என்று பிரசங்கித்திருக்கிறார். இவரை எப்படியோ சூத்திரவேதா



ந்திகள் ஜெகத்குருவென்று கொண்டாடி மகிழலாம்? இன்னும் விப்பிரவர்க்கத்தார் கலியில் க்ஷத்திரியரும், வைசியரு மில்லையென்று வாதிப்பதுண்டு. இல்லையென்பதற்கர்த்தம் அச்சாதியினர் முதலே யில்லையென்பதோ? அல்லது அவர்கள் தமது நிலைமைகுன்றிச் சூத்திராய்விட்டார்களென்பதோ? எமக்குப் புலப்படவில்லை. எவ்வாறு கூறினும் விப்பிரர்பால் க்ஷத்திரிய நிந்தையும், வைசிய நிந்தையுங் கேட்கப்படுதல் சித்தம். முன்னே சூத்திர நிந்தை பெறப்பட்டதை நன்கு விளக்கினோம். இவ்வாறு யாவரையுநிந்துத் தாமே கொடிபோட்டரசாளலாமென்று சொப்பனங்கண்டு வாய்ப்பிதற்றி வரும் பிரதிவாதிகள் பட்சம் அறவே நசித்ததறிக. இனியேனுமிவைகளைக் கூர்ந்தோசித்து க்ஷத்திரியரும், வைசியரும், சூத்திரரும், ஏனையரும் பிரதிவாதிகளது மோகத்திலகப்படாமல் சாக்கிரதைப்பட்டு வாழ்ந்து சுகிக்குமாறு பிரார்த்தித்துத் திருவருளைச் சிந்திக்கின்றோம். சுபம்.

---

## பிரமவித்யா குருசர்மாவின் கொடுமை தவிர்த்தல்

பிரமவித்யாவின் ஒரு அநுபந்தத்தில், கொழும்பு குருசர்மாவென்பவர் வெளிப்பட்டுச் சில சந்தேகங்கள் கேட்டிருக்கின்றார். சந்தேகங்கேட்கும் விதம் உலகில் பலவிதமுண்டு. அவற்றுள், மாணாக்கன் தனக்குத்தெரியாததைத் தெரிந்துகொள்ளச் சங்கிப்பதும், கற்றவர்க ளொருவருக்கொருவர் மித்ரபாவத்தால் சங்கிப்பதும், அற்பகல்வியுடையார் தாம் தெரிந்துகொண்டவைகளைப் பெரியோரவைக்கட்சென்று அகங்காரமேற்கொண்டு சங்கிப்பதும், மூடர்கள் தெரியாமையினாற் சங்கிப்பதும், கற்றவர்க ளொருவருக்கொருவர் தாங்கடாங்களும் வெல்லவேண்டுமென்று தமது புலமைதோன்றச் சங்கிப்பதும், சமயிகள் தங்கடங்களது சமயங்களை நாட்டவேண்டுமென்று சங்கிப்பதும், இன்னும் பலர் பலகருத்துகளோடு சங்கிப்பதுமாகிய பேதங்களில், நமது சர்மாவின்சங்கை சமயிகள் தங்களது சமயங்களை நாட்டவேண்டுமென்று சங்கித்தல் என்னும் தலைப்பிலடங்கலாம். அவர் வேறு எந்த வகுப்பினராயினுமாகுக. இனி அவரது சங்கைகளை யோட்டி எமது சைவத்தை நாட்டியுபகரிப்பாம்.

### பூர்வபட்சம்.

1. பெரியபுராணம் ஆயிரம் வருஷத்துக்குட்பட்ட சரித்திரங்களைக் கூறுவது. இவ்வாயிர வருஷத்துக்குள் பிரஸ்தாபிக்கப்பட்டவர்கள் கண்ணப்பர் - சமயாசாரியர் நால்வர் முதலியோர். ஆயிரம் வருஷத்துக்குட்பட்ட இவர்களைக் கலியுகம் 2,021 - வது வருஷத்திற் பிறந்த சங்கராசாரியர் சிவாநந்தலஹரி - சௌந்தரியலஹிரி - சிவபுஜங்கமுதலிய நூல்களிற் றுதித்தாரெனல் யாங்ஙனம்?

### சித்தாந்தம்.

பெரியபுராணம் ஆயிரம் வருஷத்துக்குட்பட்டவர்களது சரித்திரங்களைக் கூறுவதென்பதற்கு யாதுபிரமாணம்? பெரியபுராணத்தில் அவ்வாறு கூறியிருக்கின்றதா? வேறு நூலிலாவது பிரமாணமுண்டா? பெரியபுராணத்திற் கூறப்பட்ட அடியார்களது காலவளவேனும் இவரறிவாரோ? அவ்வடியார்களில், ஸ்ரீசண்டேசுரநாயனார் எவ்வளவுகாலஞ் சென்றவர்? திருமூலநாயனார் மூவாயிரம் வருஷம் யோகிலிருந்து மூவாயிரந்திருமந்திர மோதியருளினவர். ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தர் கூன்பாண்டியன் காலத்தி லெழுந்தருளியிருந்தவர். இவரது சரித்திரம் ஹாலாஸ்யத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. இவரது காலம் ஏறக்குறைய 4,000வருஷம் ஆகின்றது. இவர் திருக்காளத்திக்குத் தரிசனார்த்தஞ் சென்றபோது, சுவாமிசந்நிதியில் விக்கிரகரூபமாயெழுந்தருளியிருந்த ஸ்ரீ கண்ணப்பதேவரை வழிபட்டனர். இவைகளை யோசிக்கிறபோது பூர்வபட்சி கொண்டவாறு சங்கராசாரியருக்கு வயசு 2,973 ஆனபோதிலும், அச்சங்கராசாரியர் அவருக்குப் பூர்வமேயிருந்த ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தர்-ஸ்ரீசாக்கியர் - ஸ்ரீகண்ணப்பர் முதலியோர்களைத் துதித்தாரென்பதில் பாதகமுண்டாயினதில்லை. சங்கராசாரியருக்கு இவர் குறித்த வயசு அவரது ஜாதகக்குறிப்பினைக்கண்டோ எழுதினர்? சங்கரவிஜயத்திற் கண்டாமெனின், சங்கரவிஜயம் ஸர்வஸம்பிரதிபந்நமான பிரமாணமாகாது. அங்ஙனமாயின், பெரியபுராணமும் பிரமாணமாகாதெனின், யாம் அதனைப் பிரமாணமாகக்கொள்ளும்படிப் புறச்சமயிகளுக்குக் கூறவந்ததில்லை. பிரமாணமாகக்கொண்டால் தடைப்பதுமில்லை. ஹாலாஸ்யம் ஸம்ஹிதாப்பிரமாணமாகையால், அதில் ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தருக்கு யாம் காலங்காட்டியவாறு சங்கராசாரியருக்கு நமது நண்பர் தக்கசாஸனந்தேடிக் காலங்காட்டுவாராக. சங்கராசாரியரது காலமெல்லாம் 1,000 வருஷத்துக்கு உட்பட்டதென்று



அநுபவ நிதரிசனங்களால் அறிஞர் கூறுகின்றார்கள். இனிச் சங்கராசாரியர் முற்பட்டவராகவே யிருக்கட்டும். அவரது நூல்களில் அவருக்குப் பிற்பட்டவர்களது பிரஸ்தாபம் வந்தவாறுதானென்னை? அதற்குக் கதிகூறாமல் வயிற்றிலடித்துக்கொள்வதிலென்ன பயன்? அந்த நூல்களைச் சங்கராசாரியர் செய்யவில்லையெனவாவது, அல்லது சங்கராசாரியரது நூல்களில் ஸ்ரீகண்ணப்பர் முதலியோரைக் கூறுஞ் சுலோகங்கள் கற்பிதமெனவாவது, அல்லது ஸ்ரீகண்ணப்பர் முதலியோர் பெரியபுராணத்திற் போந்த கண்ணப்பராதியோராசாரெனவாவது கூறி, ஒருமுடிவு கட்டாமல் வாளாவிடுத்தது அவரது இறமையின் குறையையே தெரிவிக்கின்றது.

### பூர்வபட்சம்.

2 அர்ச்சுனன் 5,000 வருஷத்துக்குமுன் னிருந்தான். அவன் மதுரைக்குச் சென்று பாண்டியன் மகளைக் கல்யாணஞ்செய்த காலத்தில் மதுரைஸ்தலங் கட்டப்பட்டிருந்ததா? அவன் சுவாமிதரிசனம் பண்ணினான், தமிழ்ச்சங்கத்தைப் பார்த்தான், அச்சங்கத்தின் சரித்திரத்தைக் கேட்டான் என்று பாரதத்திற் பிரஸ்தாபமுண்டா?

### சித்தாந்தம்.

அர்ச்சுனன் ஸ்ரீமதுரையில் சிவதரிசனஞ் செய்ததும், அவன் தமிழ்ச்சங்கத்தைப் பார்த்ததுங்கேட்டதும் பாரதத்திற் பிரஸ்தாபியாமையால், இப்போது குடிகெட்டுப்போனதென்னை? அவை பிரஸ்தாபிக்கப்படாமையால், அர்ச்சுனன் காலத்தில் ஸ்ரீசோமசுந்தரக் கடவுளாலயமும், தமிழ்ச்சங்கமும் ஸ்ரீமதுரையி லிருந்ததில்லையெனவும், பிற்காலத்தில் அவைதோன்றினவெனவும் நமது சர்மாவினது கருத்து வெளியாகின்றது "இப்படிப்பட்ட துரோகசிந்தை இவருக்குண்டானது காலகுபாவந்தான். ஸ்ரீமதுரையைப் பிரதிபாதிக்கும் ஹாலாஸ்யமாஹாத்மியத்தைப் பொய்யாக்கவேபோலும் ஸ்ரீசோமசுந்தரக்கடவுணிந்தையி லிவரிறங்கியது? ஒன்றோடொன்றுகலி சங்கரவிஜயங்கள்" என்று பேர்பெற்று வெளியாயிருக்கும் இரண்டு சங்கரவிஜயங்களிற்போந்த சங்கராசாரியரது பொய்க்கதையில் வைத்த நம்பிக்கை இவர் ஸ்ரீசோமசுந்தரக்கடவுளது திருவிளையாடலில் வையாமற்போனது அதிசயமே. ஹாலாஸ்யமாஹாத்மியம் வைதிகசிரேஷ்டர் பலருக்கும் பாராயணநூலாயிருப்ப இவரறியார்போ

னும். ஸ்ரீகும்பகோணமடத்தில் முன்பட்டமாயிருந்த ஸ்ரீமத் மஹாதேவேந்திரஸரஸ்வதிஸ்வாமிகள் ஹாலாஸ்யமாஹாத்மியம் பாராயணஞ் செய்துகொண்டிருந்ததை இனியேனும் விசாரித்துணர்வாராக. இவர் தமது சொந்த சொத்தென்று சொப்பனங்கண்டு கொண்டிருக்கும் வேதத்தைக் கற்பிதமென்று கூறுங் கிறிஸ்தவர்களோடு இவர் சேர்ந்து ஹாலாஸ்யமாஹாத்மியத்தைப் பொய்யென்று நிஷேதிப்பதில் எமக்கொரு நஷ்டமுமுண்டாயினதில்லையன்றி. வியாசர் வேதத்தை நான்காக வகுப்பதற்குப்பூர்வமே தொல்காப்பியம் உள்ளது என்று நச்சினார்க்கினியர் தமது தொல்காப்பியவுரையில் எழுதியிருப்பதைப் பார்த்து நமதன்ப ரினியேனுங் காணுவாராக. அர்ஜுனன் இங்கிலண்டு - ஸ்காட்லண்டு முதலிய தீவுகளைத் தனது ஆணைவழிச்செலுத்தி யாண்டானென்று பாரதங் கூறுமையால், அவனது வெற்றி அவ்விடங்களிற் பரவியதில்லையென்பாவது, அல்லது அவ்வூர்களே அப்போதிருந்ததில்லையெனவாவது இனி யிவர் வாதிப்பார்போலும். அர்ஜுனன் காலத்தில் ஸ்ரீமதுரை யிருந்ததில்லையென்று வாதிடுமிவர் அவனுக்கு முந்திய இராமர் ஸ்ரீ சோமசுந்தரக்கடவுளை வழிபட்டதாகக்கூறும் இவ்விசரித்திரத்துக்கு என்னகதி கேட்பார்? இதனையும் பொய்யென்றாலல்லது இவரது மனோரத மீடேறமாட்டாது. வீண் வேதத்துரோகத்திலே தலைமெலிந்திட விவர்க்கு க்ஷேமகரமன்றும். விரிக்கிற் பெருகும்.

பூர்வபக்ஷம்.

3. சங்கராசாரியர் ஸம்ஸ்கிருத பாஷாவிருத்தியின்பொருட்டு திக்விஜயஞ் செய்தனர். அப்பொழுது அவரைப் பாண்டியன் மதுரைக்கழைத்தான். அக்காலத்தில் பாண்டியன் அவருக்குத் தமிழ்ச்சங்க ஸ்தானத்தையும், சங்கவித்துவான்களையும் ஏன் காட்டவில்லை?

சித்தாந்தம்.

சங்கராசாரியர்தானே ஸம்ஸ்கிருத பாஷையை விருத்திசெய்தவர்? இது அவரை ஜகத்குருவென்பது போல்வதொன்றாம். இச்சங்கராசாரியர் நேற்றுப் பிறந்தவர். இவரெப்படியோ நெடுங்காலத்துக்கு முன்னிருந்த சங்கத்தையும், சங்கத்தாரையும் பார்க்கக்கூடும்? ஸ்ரீசிவபெருமான் தமிழ்ச்சங்கத்தைப் பரிபாலித்ததுபோல் கீர்வாணசங்கமொன்றைப் பரிபாலியாமையால், இவருக்கு மாளாந் துயருதித்துக்கொண்டு பாதிக்கின்றது. ஆதலால், தமிழ்ச்சங்கமிருந்த



தைப் பொய்யென்று சாதிக்கப் பார்க்கிறார். ஸ்ரீ சோமசுந்தரக்கடவுளது பூர்ணானுக்கிரகத்தைப்பெற்றிருக்குந் தமிழ் யாண்டுங் களங்குறையாதென்க. காளிதாசர் முதலிய கீர்வாண வித்துவான்களது பேராற்றலின்முன்னா நிச்சங்கராசாரியரது வல்லபந்தானெவ்வளவு? எத்தனையோ முன்னோர்கள் கீர்வாண பிரவர்த்தகராயிருந்தார்கள்? அவர்களிருக்கவும், சங்கராசாரியரை ஸம்ஸ்கிருத பாஷா விருத்திக்கு முதல்வராகக்கூறியதுந் தவறென்க. இச்சங்கராசாரியர் ஸம்ஸ்கிருத வித்துவானாயிருந்தது கொண்டே பாண்டியன் மதிக்கமாட்டான். ஸ்ரீ சோமசுந்தரக்கடவுளுக்கு அடிமைப்பட்டவர்களையே பாண்டியர்கள் வணங்கியுய்வார்கள். சங்கராசாரியர் ஏகான்மவாதியாயினமையால், அவரை அவன் மதிக்கவிடமில்லை. பாண்டியன் காலத்தில் சங்கராசாரியரிருந்ததுமில்லை. பாண்டியன் சங்கராசாரியரை ஸ்ரீமதுரைக்கழைத்தானென்றது இஷ்டம்போல லெழுதிக்கொண்டதேயாம். அப்படிப் பாண்டியன் அழைத்ததுண்டாயின், அந்தப்பாண்டியன் பேரென்னை? அவன் சங்கராசாரியரையழைத்ததை ஏனோ ஹாலாஸ்யமாஹாத்மியம் கூறிற்றில்லது? சங்கராசாரியர் ஸ்ரீமதுரையில் செய்த திக்விஜயந்தான் யாது? அது ஏனோ ஸ்ரீசிவனாரது திருவிளையாடல்களிலொன்றாகச் சிறவாதொழிந்தது? யோசித்தடங்குவாராக.

பூர்வபக்ஷம்.

4. வியாசர் 5,000 வருஷத்துக்குமுன் வேதத்தை நான்காக வகுத்தனர். அதற்குப்பூர்வம் சிவாகமங்க ளிருந்ததுண்டா?

சித்தாந்தம்.

வியாசர் வேதங்களை நான்காக வகுப்பதற்குமுன்னமே தமிழிருந்த சங்கதியைத் தொல்காப்பியவுரையில் நச்சினார்க்கினியர் கூறினர். சிவாகமங்களை அவ்வேதமே "[illegible]" என்று பூஷித்திருக்கின்றது. அது இவருக்குத் தெரியாவிட்டால், இவருக்கு வேதவிசாரத்திலுள்ள குறைவுக்காக இவர் துக்கிக்கட்டும். வேதங்களுக்குமுன்னமே பிரமதேவரிடத்திலிருந்துண்டான புராணங்களில், சிவாகமம் விஸ்தாரமாய்ப் பூஷிக்கப்பட்டிருக்கின்றது. சூதசங்கிதையில் காமிகாதி சிவாகமங்களை எப்படி ஸ்ரீசிவபெருமான் சொல்லியருளினாரோ, அப்படியே பதினெண்புராணங்களையும் சத்தியவதியின் சுதராகிய வியாசர் சொன்னாரென்று கூறப்பட்டிருக்கின்றது. அன்றியும், சூதசங்கிதாவியாக்யானத்தில் சௌனகாதியர்

களுக்குச் சூதமுனிவர் சிவாகமதீக்ஷை செய்தருளினரென்று மாதவாசாரியர் கூறியிருக்கின்றனர். அன்றியும், வாயுசங்கிதையில் சிவாகமபூஷணம் விஸ்தாரமாகச் செய்யப்பட்டிருக்கின்றது. இவ்வாறு பலபிரமாணங்களுள.

பூர்வபட்சம்.

5. புத்தன் என்பவன் 1,600 வருஷத்துக்குமுன்பு உண்டுபண்ணிய புத்தசமயத்திலே பிராமணரிலொருவருஞ் சேர்ந்ததில்லை. சூத்திரர்கள்மாத்திரஞ் சேர்ந்தார்கள். அந்தக்காலத்துக்குமுன் காமிகமுதலிய சிவாகமங்களும், உபாகமங்களும் உண்டாயிருந்தனவா?

சித்தாந்தம்.

புத்தசமயம் திரிபுரசங்கார காலத்திற்கு முன்னரே யுள்ளது. திரிபுரசங்கார காலத்தில் விஷ்ணுவால் பௌத்தாசாரம் பரவச் செய்யப்பட்டது. இவ்வளவு பிராசீனமதத்தை நமதன்பர் 1,600 வருஷத்திற்கு முன்னுண்டாகியது என்றது இவரது பொய்மையையும், இவரது விசாரணையின் குறைவையுமே தெரிவிக்கின்றது. அன்றியும், ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள் புத்தமதத்தை வென்றருளினவர். இவர் ஸ்ரீஞானசம்பந்தருக்கு வெகுகாலத்திற்கு முந்தினவர். இவருக்காக ஸ்ரீசோமசுந்தரமூர்த்தி நரிகளைக் குதிரைகளாக்கிக்கொண்டுவந்த திருவிளையாடலைத் திரேதாயுகத்தில் நடந்ததாகப் பிரமகைவர்த்தபுராணங் கூறுகின்றது. எங்ஙனமெனின், "க்ருதே ப்ரஹ்ம வநம்நாம - த்ரேதாயாம் ஜம்புகாஸ்வகம் - த்வாபரே துபருஹத்கச்சம்-சந்த்ரலேகா கலௌயுகே" என்னும் வசனம் கிருதயுகத்தில் பிரஹ்மவனம் என்றும், துவாபரயுகத்தில் பிருஹத்கச்சம் என்றும், கலியுகத்தில் சந்திரலேகை என்றும் பிரசித்தியடைந்துள்ள சிவக்ஷேத்திரம் திரேதாயுகத்தில் ஜம்புகாஸ்வகம் என்று பிரசித்தியடைந்தது என்று தெரிவிக்கின்றது. இந்த க்ஷேத்திரம் இப்போது சந்தலை என்று வழங்கப்பட்டுவருகின்றது. இதிலிருந்துதான் ஸ்ரீசிவபெருமான் நரிகளைத்திரட்டிக் குதிரைகளாக்கி ஸ்ரீமதுரைக்குக்கொண்டுவந்தனர். அந்தக்காரணத்தினாலேயே ஜம்புகாஸ்வகம் என்னும் பெயர் இதற்குச் சிறந்தது. இதன்விரிவை க்ஷேத்ர புராணம் சுமந்து தேவவர்மா ஸம்வாதத்திற் பரக்கக்காணலாம். இவ்வாறு போந்த திரேதாயுகத்தில் புத்த சமயத்தை வாதிற்போக்கிய ஸ்ரீவாதவூர்ப்பெருமான் தமது ஸ்ரீ வாசகத்தில் சிவாகமங்களை விஸ்தாரமாய்ப் பூஷித்திருக்கின்றனர். இதனால் தமிழும், சிவாகமமும் அநாதியெ



ன்று நிச்சயமாகின்றது. முன்னுஞ் சிவாகமத்தினிருப்பை அதிகமாகச் சொல்லியிருக்கின்றோம். அன்றியுமிவர் சங்கராசாரியருக்கு வயசு 2,973 என்று கூறியிருக்கின்றனர். இந்தச்சங்கராசாரியர் பௌத்தமதத்தைக் கண்டித்ததாகச் சங்கரவிஜயங் கூறுகின்றது. நமதன்பர் கணக்கிட்டவாறு புத்தமதந்தோன்றி 1,600 வருஷமானால், அதனை 2,973 வருஷத்துக்கு முன்னிருந்த சங்கராசாரியர் எப்படிக் கண்டித்தல் கூடும்? அன்றியும், அந்தப்புத்தமதத்துக்குச் சிவாகமம் பின்பிறந்ததுண்டாயின், அதனைப் புத்தமதத்துக்கு முன்பிறந்த சங்கராசாரியர் தமதுபாஷ்யத்தில் தூஷித்தவாறென்னை? இவைகளையும் யோசிப்பாராக. இது நிற்க. இவரால் புத்தன் என்று பிரஸ்தாபிக்கப்பட்டவன் என்ன ஜாதி? இவர் சூத்திரர்களெல்லாம் புத்தராயினரென்றதும் அஸங்கதம். இப்போது பிராஹ்மணர்களே அதிகமாய்க் கிறிஸ்தவர்களாகின்றனர். இந்த அநுபவத்தால், முன்னும் பிராஹ்மணர்களே அவனோடு சேர்ந்தவர்களில் முந்தினவர்களாயிருக்கத் தடையில்லை. சூத்திரர்கள் சேர்ந்திரார்களென்று யாம் சொல்லவும் வரவில்லை. "சிவாகமம் அப்போதிருந்ததா? எப்போதுண்டாகியது?" என்று இவர் வினயது ஆங்கிலேய பண்டிதர்களாகிய அரிஸ்டாடல் - பர்டோலி முதலிய வேதவைரிகள் "ருக்வேதகாலத்தில் எஜுர்வேதமிருந்ததா? எஜுர்வேதம் எப்போதுண்டாகியது?" என்று கடாவி இருக்காதிகள் சிலவருஷங்களுக்கு முன்தான் சிலரா லுண்டுபண்ணப்பட்டனவென்று (இங்கிலீஷ்படித்த ஸாமானியர்கள் மனதில்) தப்பு அபிப்பிராயத்தைப் பரப்பியதுபோலே இனஞ்செய்தவாறறிக.

117096

பூர்வபட்சம்.

6. ஸ்மிருதிகளில் அல்லது மஹரிஷிகள் செய்த வேறு நூல்களில் சிவாகமங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றனவா?

சித்தாந்தம்.

ஸ்மிருதிகளில் சிவாகமப்பிரஸ்தாபம் உண்டாகாதது குறைவாகாது. ஸ்மிருதிகாரர்கள் வேதத்தின் கருமகாண்டத்தை அநுஸரித்து நூல்செய்தவர்கள். சிவாகமம் அதனைக்கடந்த ஞானகாண்டத்தினும் மாந்திரத்தைப் போதிப்பது. இதனை அவர்கள் பிரஸ்தாபிக்க ஆவசியகமில்லை. ஆயினும், மநுஸ்மிருதியில் "ஷஷ்டியாமமெ" என்று பூஷிக்கப்பட்டிருக்கின்றது.

### பூர்வபட்சம்.

7. சிவாகமம் வேதத்தைப்போல முதனூலாயிருப்பின், வே
தம் இந்துதேசமுழுதும் வழங்கிவருவதுபோலச் சிவாகமம் வழங்
காமல், தக்ஷிணத்திலுஞ் சிலவிடங்களின்மாத்திரம் வழங்குமா
றென்னை?

### சித்தாந்தம்.

சுவயம்புவாகிய வேதம் உலகமுழுதும் வழங்கப்படாமல், இந்
துதேசத்தின்மாத்திரம் வழங்கப்படுமாறு என்னை? அந்நியாயமே
சிவாகமம் இந்துதேசமுழுதும் வழங்காமைக்கும் ஆகுமென்று தெ
ளிந்தடங்குக.

### பூர்வபட்சம்.

8. சிதம்பராலயம் 4,500 வருஷத்துக்குமுன் இரண்யவர்ம
னாற் கட்டப்பட்டது. திருவாரூர் - திருப்பெருந்துறை - ஸ்ரீகாஞ்சீ
புரமுதலியன சிதம்பரத்துக்குப் பிற்பாடாயுள்ளன. முன்னாலய
மாகிய சிதம்பரம் வேதவழிப்படியும், பின்னாலயங்களாகிய திரு
வாரூர்முதலியன சிவாகமவழிப்படியும் பூஜிக்கப்பட்டு வருவதெ
ன்னை?

### சித்தாந்தம்.

திருவாரூர் முதலியன ஸ்ரீசிதம்பரத்துக்குப் பிந்தினவை யென்
பதற்கு ஆட்சியென்னை? ஸ்ரீசிதம்பரத்தை நோக்கி ... இரண்ய
வர்மன் தனது மார்க்கத்தில் ஸ்ரீகாஞ்சியைக் கண்டிருக்கின்றான்.
அதவா நமதன்பர் கூறியபடிக் கொண்டால், ஸ்ரீசிதம்பரமுண்டான
காலத்திற்கு ஏனையபதிகள் எவ்வளவுகாலத்தின்பின்னருண்டா
யின? இவர் பௌத்தமதமுண்டாவதற்குமுன் சிவாகமமிருந்த
தில்லையென்று துணிந்தவராகையால், இவர் பிரஸ்தாபித்தவாறு
1,600 வருஷத்திற்குமுன்னுண்டாகிய பௌத்தமதத்திற்குப் பின்
பிறந்த சிவாகமாநுஷ்டானத்தை மேற்கொண்ட திருவாரூர் முத
லியன 1,600 வருஷத்திற்குப் பின்னுண்டாயினவென்றே இவர்
சாதிக்கவேண்டியது. இனி யிவரது வாதப்படி ஸ்ரீசிதம்பரந்
தோன்றிய 4,500 வருஷத்தில், 1,600 கழிந்தால், 2,900 வருஷம்
ஸ்ரீசிதம்பரத்துக்குப் பிற்பட்டனவாகத் திருவாரூர் முதலியன சிற
ந்திடும். இந்தக்கணக்கெடுத்துரைக்க இவரேற்பட்டதற்காக இவ
ரைக் கலிபுருஷன் தன்னிடம் மந்திரிவேலைகொடுத்து வைத்துக்
கொள்ளாமற்போகான். இந்த விவரந் தெரிந்திருந்தால், ஸ்ரீமத்



அப்பர்சுவாமிகள் தமது திருவாரூர்த் திருத்தாண்டகத்தில் "ஒருவனு
யுகேத்த நின்றநாளோ" என்று தொடங்கி, "மாதோர்பாகந் திருவினுவ்
சர்வத்திற்கு முன்னோபின்னோ-திருவாரூர் கோயிலாக் கொண்டநாளே" என
ம்; "மாடமொடு மாளிகைகள் மல்குதில்லை மணிதிகழு மம்பலத்தே மன்
க்கூத்தை - யாவோன் புகுவதற்கு முன்னோபின்னோ வணியாரூர் கோயி
க்கொண்டநாளே" எனவும், "வேதத்தை விரிப்பதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்டநாளே" எனவும் போந்த திருவாக்குக
ள், திருவாரூரி லெம்பெருமானெழுந்தருளிய காலத்தினருமை
யை யெடுத்துரைக்கமாட்டார். ஸாதுக்களுக்குப் பக்திமார்க்கங்
கெட இவர்பூண்ட வியாபாரம் நஞ்சினுங்கொடிதென்று யாம் அஞ்சு
கின்றனம். இது நிற்க. ஸ்ரீசிதம்பராலயத்தில் பூஜகராயுள்ளவர்
கள் வசிட்டாதி வர்ணசங்கர வேதியர் குலத்தவராகார். அவர்
கள் திருக்கயிலையிலிருந்துவந்த சிவகணத்தலைவர்கள். அவர்களும்,
ஏனைய சிவக்ஷேத்திரபூஜகர்களும் சிவாகமாசாரமே பூண்டிருந்த
வர்கள். ஸ்ரீசிதம்பராலயத்திற்குப் பதஞ்சலிபகவான் சிவாகமங்க
ளைத்தழுவிய பூஜாபத்ததி செய்திருக்கின்றனர். அதுவே முக்
யம். இதனையுணராது ஸ்ரீசிதம்பரம் வைதிகபூஜைமேற்கொண்
டது என்றது தெரியாமையேயாம். வேதத்தில், பஞ்சாவரணம்-
பலிபீடம் - த்வஜஸ்தம்ப முதலியன கூறப்பட்டிருக்கின்றனவோ?
இதில்லாத பஞ்சாவரணாதிகளையுடைய ஸ்ரீசிதம்பராலயத்தை
வைதிகம் என்று இந்தப்பண்டிதர் கூறியது யாங்ஙனம்? ஸ்ரீசிதம்
பராலயத்தில் சிலஸ்மார்த்தர்கள்சேர்ந்து ஸ்மிருத்யாசாரங்களைக்
கலந்து கெடுத்தாரெனல் ஸித்தம்.

### பூர்வபட்சம்.

9. காசிமுதலிய தலங்களில் வைதிகர்கள் பூஜாகாரியங்களைச்
செய்கின்றார்கள், யாழ்ப்பாணத்திலுள்ள வெகு ஆலயங்களில், சூத்
திரரிற் சைவராயுள்ளவர்கள் பூஜைசெய்கின்றார்கள். இச்சூத்திர
சைவர்களை எம்மை திருவாரூர்முதலிய தலங்களில் சிவாலயபூஜகர்
களாக ஏற்படுத்திக்கொள்ளக்கூடாது? தற்காலத்திலே நூதன
மாக வெளிப்பட்டிருக்கும் அபிஷேகஸ்தர்களுக்கும், பிராமணர்
களுக்கும் நடையுடைபாவனைகளில் பேதமென்னோ? தாங்களும்
பிராமணராகவேண்டுமென்னும் விருப்பத்தினாலோ, அல்லது பிரா
மணருக்குச் சமானமாய்த்தோன்றி அவர்களைக் கெடுக்கவேண்டு
மென்று நினைப்பினாலோ சூத்திரர்க ளிவ்வாறுசெய்வது? யாழ்ப்

பாணத்திலே வசிக்குஞ் சூத்திரரொருவர் பிராமணரல்லாதகூட்டத்தில் வேதரிக்குகளுக்கு அர்த்தஞ்சொல்லிப் பிரசங்கிக்கின்றார். இது வேதவிதியா? ஆகமவிதியா ? கலியுகவிதியா?

சித்தாந்தம்.

காசிமுதலிய பதிகளில் ஆலயபூஜைசெய்ய வைதிகர்களுக்கு யார் விதியெழுதினார்கள்? விதிகடந்தே அவர்கள் பூஜிக்கின்றார்கள். அவர்களைப்போலவே அந்தக்காசியில் க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களும், ஏனைய அம்பட்டன் வண்ணான் முதலினோரும் பூஜித்துவருகின்றார்கள். இவருட்டலையாய வைதிகர்கள் காசி முதலிய பதிகளிற் பூஜகர்களாயினவாறு ஏனோ திருவாரூர் முதலிய க்ஷேத்திரங்களிலும் பூஜகர்களாயிருதல் கூடாது? இவ்வைதிகர்களைப்போலவே சூத்திரர்சிலர் யாழ்ப்பாணத்திற் பூஜகர்களாயிருந்தால், யாரென்னசெய்யலாம்? வைதிகர்கள் தலையிலேறிய குற்றமே அவர்பக்கலுஞ் சேரும். வைதிகர்கள் குற்றவாளிகளாகாதபோது அவர்களுமாகாரென்க. இனிப் பிராமணர்களுக்கும், அபிஷேகஸ்தர்களுக்கும் பேமென்னோ என்றாரன்றோ? பிராமணரென்பவர்கள் யாவர்? அவர்கள் சிவாநுபூதிப்பெருஞ்செல்வராகிய அறவோரேயாம். இனி யிவர் வசிட்ட கௌதம கண்வாதி பிராமணர் தன்மையை யோசிப்பாராக. இதனை யுணர்த்தவேயன்றோ "அந்தணரென்போ ரறவோர்" என்றருளிச்செய்தனர் வள்ளுவரும்? ஈண்டிவர் பிரஸ்தாபித்த பிராமணர்கள் யாவரை மூலமாகக்கொண்டவர்கள்? அவர்களுக்குப் பிராமணத்தன்மை ஆகந்துகமாக வந்ததேயன்றி வேறில்லையாகையால், பிராமணரினும் விசிட்டர்களாகிய (சூத்திரத்வம் நசிக்கப்பெற்ற) அபிஷேகஸ்தர்கள் பிராமணரைக் கெடுக்கவாவது, அவர்களோடு தாங்கள் சமானம்மாயிடவாவது எண்ணுகிலாரென்க. தீக்ஷைபெறாத பிராமணன் தீக்ஷைபெற்ற சூத்திரனிற் குறைந்தவனென்பது திண்ணமாகையால், அவர் பிராமணஜாதியாகவேண்டுமென்று ஆசைகொள்ளாரென்க. இனி வேதரிக்குகளைப் பிராமணர்கள் சொல்ல விதித்த வேதம் சூத்திரர்கள் சொல்லக்கூடாதென்று விலக்காமையால், சூத்திரர்கள் வேதங்களைப்படித்தலும், அர்த்தவிசாரஞ்செய்தலுங் குற்றமாகாதென்க. விப்பிரவியாக்யாதாக்க ளேற்பட்டுத் தப்பர்த்தஞ்செய்து மரபுகுலையச்செய்தமையால், யாழ்ப்பாணத்தி லொருசூத்திரரைவர் வேதார்த்தப்பிரஸங்கஞ்செய்து உண்



மையை நாட்டியிருக்கலாம். இவ்வுண்மையைத் தூஷித்ததே கலியுகவிதியென் றறிக.

பூர்வபட்சம்.

10. சைவசமயாசாரியர்களாகிய நால்வருள், தேவாரம் பாடியவர்கள் அத்தேவாரத்தில் வேதத்தையெடுத்துப் பிரஸ்தாபித்ததுபோல் சிவாகமங்களை யேனெடுத்தோதவில்லை?

சித்தாந்தம்.

தேவாரதிருவாசகங்கள் வேதத்தின் ஞானகாண்டத்தைப் பிரதிபாதிப்பன. அதுபற்றியே அவை வேதம் என்று பெயர் பெற்றன. அவற்றிற்கு வேதமென்னும் பெயர் சிறந்தமையால், வேதத்தை அவை விஸ்தாரமாய்ப் பூஷித்தன. வேதம் சிவாகமங்களைப் பூஷியாமற்போகவில்லை. அதுபோலத் தமிழ்வேதமும் சிவாகமங்களைப் பூஷியாமற்போகவில்லை. அவை வருமாறு:

திருஞானசம்பந்தசுவாமிகள்

திருவாலவாய்த் திருப்பதிகத்தில் "ஆகமத்தொடு மந்திரங்களமைத்த சங்கதம்" என்றும், திருவிற்கோலத் திருப்பதிகத்தில் "தொகுத்தவ னருமறை யங்கமாகமம்" என்றும், திருவொற்றியூர்த் திருப்பதிகத்தில் "சோகையம்பிலிசொல்வார், அவர்க்கூறைகள்போர்த்துழல்வார்— ஆகமச்செல்வனாரை யலர்தூற்றுதல்காரணமாக் - கூகையம்மாக்கள்சொல்லைக் குறிக்கொள்ளன்மின்" என்றும் திருவாய்மலர்ந்தருளினர்.

திருநாவுக்கரசுசுவாமிகள்

திருவிடைமருதூர்த் திருப்பதிகத்தில் "பணையிலாகமஞ் சொல்லுந்தன் பாங்கிக்கே" என்று திருவாய்மலர்ந்தருளினர்.

ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள்

திருவாரூர்ப் பரவையுண்மண்டலித் திருப்பதிகத்தில் "அம்மானே - யாகமசீலர்க்கருணல்கும் - பெம்மானே" என்றும், திருக்கைலாயத் திருப்பதிகத்தில் "அரவொலியாகமங்க ளறிவாரறிதோத்திரங்கள்" என்றும் திருவாய்மலர்ந்தருளினர்.

ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள்

ஸ்ரீசிவபுராணத் திருவகவலில் "ஆகமமாகிநின் றண்ணிப்பான்றாள் வாழ்க" என்றும், கீர்த்தித்திருவகவலில் "மன்னுமாமலை மகேந்திரமதனிற் - சொன்னவாகமந் தோற்றுவித்தருளியும்" என்றும் திருவாய்மலர்ந்தருளினர்.

இச் சிவாகமோத்கர்ஷப் பிரமாணங்களில், ஆகமம் என்று வந்த வசனங்களுக்கு வேதமென்று பொருள் கூறி, மாயாவாதிகள் மருண்டு பிரசங்கித்திடுவர். அவரையங்ஙனந் தொலையவே திருவிற்கோலத்திருப்பதிகத்தில், ஸ்ரீஜ்ஞானஸம்பந்தப்பெருமான் "அருமறை-அங்கம்-ஆகமம்" என்றுபிரித்து, வேதம்-வேதாங்கம்-சிவாகமம் என்பவைகளைத் துதித்தருளினர். அன்றியும், ஆகமச்செல்வனாரை அலர்தூற்றுவார் "தோகையம் பீலிகொள்வார் - துவர்க்கூறைகள் போர்த்துழல்வார்" என்று அடையாளமிட்டுச் சமணரென்பது போதர விளக்கினர். ஆகமசித்தரைத் தமது திருவுள்ளத்திற்குப் புறம்பாகவொதுக்கிய நாட்டமுணர்ந்தவர்கள் பிரகிருதத்தில் பிரச்சந்நபௌத்தர்களாய்த் தோன்றிச் சிவாகமதூஷணஞ்செய்யு மாயாவாதிகளை யெங்ஙனே வைதிகரென்று துணிவார்கள்? ஸ்ரீ சுந்தரமூர்த்திகள் "ஆகமசீலர்க்கருள்நல்கும்" என்றும், ஸ்ரீ வாசகப்பெருமான் "ஆகமமாகிநின்றண்ணிப்பான்" என்றும் திருவாய்மலர்ந்தருளியது ஒரே கருத்தினவாய்ச் சிவாகமவழி நிற்போர்க்கே முத்தியின்பங் கைகூடுமென்பதை விளக்கியவாறறிக. இதனால், வேதங்களைப் போலச் சிவாகமங்களும் தேவாரதிருவாசகங்களால் பிரமாணமென்று வெளிப்பட்டவிடத்தும், வேதங்களைக்காட்டிலும் சிவாகமம் விசேடப்பிரமாணமென்று வெளிப்பட்டவாறறிக. விரிக்கிற் பெருகும்.

பூர்வபட்சம்.

11. ஸம்ஸ்கிருதத்துக்குத் தமிழ் மேலானபாஷை யென்பதற்கு நியாயமுண்டோ?

சித்தாந்தம்.

ஸம்ஸ்கிருதம் மாத்ருபாஷையென்று பெயர் பெற்றிருக்கின்றது. இது மாத்ருபாஷையானால், பித்ருபாஷை யாது? மாதா ஸ்திரீயானபடியால், மாத்ருபாஷையென்று வெளிப்பட்டபாஷை ஸ்வதந்திரபாஷையாகாது. இத்தப்பாஷையானது தனது அவதார ஸ்வரூபங்களால் சங்கவித்துவான்களாகத் தோன்றித் தமிழைக் கற்று, அதனை முற்றுங்கற்றுமாற்றல் போதாமல் ஸ்ரீசோமசுந்தரத் தேவடிகளே யவிருக்கி மானமழிந்த கனைத் தாலாஸ்யமாகிய கீர்வாணநூல் கூறுதலாலும், பிராம்மணர்களாகிய ஸ்ரீஜ்ஞானஸம்பந்தர் முதலியோர் கீர்வாணத்தில் தேவாரமோதாமல் திராவிடத்திற்றானே யோதி அற்புதங்களை நடத்தினமையாலும், கீர்வாண



பாஷையால் வித்யாதி அதிசயங்கள் நடவாமையாலும், ஸ்ரீ சிவபெருமான் இத்தமிழ்ப்பாட்டுகளையே யுவந்தநுக்கிரகித்தமையாலும், வைஷ்ணவசித்தாந்தத்தில் தமிழ்ப்பிரபந்தத்தைக் கீர்வாணவேதத்திலும் பூஜ்யமாகக்கொண்டு கீர்வாண வேதாதிகாரிகளே அநுஷ்டிக்கின்றமையாலும் கீர்வாணத்திலுந் தமிழுயர்ந்ததெனல் ஸ்திரமாயிற்று.

பூர்வபட்சம்.

12. ஆகமம் வேதத்திலுஞ்சிறந்தது என்பதற்கு நியாயமுண்டா?

சித்தாந்தம்.

வேதம் சாமானியநூல். சிவாகமம் விசேடநூல். தர்மார்த்த காமமோக்ஷங்களில், முதன் மூன்றுபாகம் தள்ளத்தக்கனவும், மோக்ஷமொன்றே கொள்ளத்தக்கதுமாம். இந்நாலையுங் கூறுவது வேதம். மோக்ஷத்தைமாத்திரங் கூறுவது சிவாகமம். ஆகையினாற்றான் வேதம் ஸநகாதிகளுக்கு உண்மைஞானத்தைப் பயப்பிக்குஞ் சத்திபோதாமல் அவர்களை மயங்கவைத்தது, சிவாகமம் அங்ஙனமாகவொட்டாமல் அவரைத்தெளிவித்தது என்று சங்கரசங்கிதை கூறுமாற்றுலும், பிறவாற்றுலும் வேதத்திலுஞ் சிவாகமமுயர்ந்ததெனல் சத்தியமென்றறிக. விரிக்கிற் பெருகும்.

முடிவு.

நமது சர்மாவினது எடுப்பத்தனையும் ஊஷரபூமியிற்செய்த கிருஷியாயினமையால், இனி அவரும் அவரினத்தவர்களெவரும் எவ்வளவு ஸாமர்த்தியத்தைக் காட்டினாலும் பிரயோஜனப்படாதென்று தெளிந்து நன்மை கடைப்பிடித் தொழுகுவதே மரபாமென்க. இந்தக்கேள்விகளின் யோக்கியதையை யூகிக்கிறபோது இவை பிரமவித்தியாபத்திராதிபரது சரக்காகத் தோன்றவில்லை. கேவல மொன்றுந்தெரியாத வொருவரது பிற்றலாகவே தோன்றியது. ஆயினுமிதற்கு பிரேரகர் பத்திராதிபராயிராமற்போகார். இந்தப் பத்திராதிபரது முயற்சிகள் (வேடமாத்திரத்தாலொற்றுமைப்பட்டு அந்யோந்யஸ்நேகம்பாராட்டிச் சிவனடியார்களொன்றெண்ணப்பட்டிருந்த) ஸ்மார்த்த சைவ நண்பர்களுக்கு விரோதத்தையே நாளுக்குநாள் விருத்திசெய்கின்றமையால், இனியேனும் அவரவ்வசட்டுவழியினின்றுந்திரும்பிப் பழமைபாராட்டி க்ஷேமந்தேடுவாராக. சுபம்.

---

## பிரமவித்யா பத்திராதிபரது சங்கராசாரியர் பிறப்பின் குழப்பம்.

நமது பிரம்ஹவித்யாபத்திராதிபர் சித்தாந்திக்காடு சிவாலோசாரியருக்கு எழுதிய போலிமறுப்பில் "பவிஷ்யச்சிவபக்தா நாமவதாராங்வ தாம்யஹம்" என்னும் வசனமொன்றெழுதி, சிவரஹஸ்யத்தில் குறிப்பாய் ஸ்ரீ சங்கராசாரியரவதாரம் சொல்லப்பட்டது என்ருர். இது சர்வாபத்தமாம். எங்ஙனமெனின், சங்கராசாரியர் (மேரி வயிற்றில் ஏசுபிறந்ததுபோல்) கணவனைவேண்டாத காரிகையொருத்தியிடம் பிறந்தாரென்று ஒரு சாராரும், சிவகுரு - ஆரியாம்பாள் என்னுந் தந்தைதாயார்களிடம் அவர் நன்மகவாய்ப் பிறந்தாரென்று மற்றொரு சாராரும் சங்கரவிஜயங்களிற் கூறியிருக்கின்ருர்கள். இவை யொன்றிலொன்று விரோதப்படினும், அவர் மாதாவுதரத்திற் பிறந்தாரென்பதில் மாறுபட்டதில்லை.

மேலெடுத்துக்காட்டிய வசனம் ஸ்ரீ சிவபெருமான் உமாதேவியாரைப்பார்த்துத் தானினியொரு சிவனடியாராக வவதரிக்கப் போவதைத் தெரிவித்ததாகப் போதிக்கின்றது. இதில் சிவனுர் சங்கராசாரியராகப் பிறப்பது பிரஸ்தாபமில்லை. அப்பரமன் சிவனடியார்கோலங் கொள்ளப்போவதாகப் பெறப்பட்ட மாத்திரத்தானே அச்சிவனடியாரே சங்கராசாரியராகத் துணிந்தது யாங்ஙனம்? நமது பத்திராதிபரும் அவரினத்து மாயாவாத நண்பரும் சிவகுருமைந்தர் ஜகத்குருப்பேர்கொண்ட மாயாவாத குருவைச் சிவனடியாரென்றுகூற இசையாதவர்கள். அப்படிக்கூறுவது அவர்களுக்குப் பெரியதோரவமானமாய்த் தொன்றும். சிவனே சங்கராசாரியரென்பதில் அவர்களுக்குப் பரமசந்தோஷம். ஸாமான்ய ஸ்மார்த்தஜனங்களே கொஞ்சம் மாயாவாத ஞானம் கைவரப்பெறுவார்களாயின், தங்களைச் சிவபக்தர்களென்ருவது, சிவனடியார்களென்ருவது கூறிக்கொள்ளார்கள். தாங்கள் பிரஹ்மமென்று வெளிப்படுவார்கள். சிஷ்யபிரஹ்மங்களே அடியவர்களென்று தம்மைக் கூறிக்கொள்ள இசையார்களாகையால், அச்சிஷ்யபிரஹ்மங்களையாண்டிடுங் குருப்பிரஹ்மத்தைச் சிவனடியாரென்று கூறிக்கொள்வது அவ்வுபயப் பிரஹ்மங்களுக்கும் பரிபவந்தான். இப்படியிருக்கும், மேற் சிஷ்யபிரஹ்மங்கள் அல்லது அவருட்டனித்த பிரஹ்மவித்தியாபத்திராதிபபிரஹ்மம் (தமக்கு நெடுந்தூரத்தினதாகிய) சிவரகசியத்தை யனுகினமையால், அது இந்தக்குட்டிபிரஹ்மங்களினது தாய்ப்பிரஹ்மத்துக்குச் சிவனுராதுகாலி விடங்காட்டி அடியவரென்று பேரிட்டுப் பிரஹ்மபட்டத்தை யுடைத்து ஸாமான்ய பசுவாதலை நாட்டியதென்க. இந்தப் பசுவாகிய சங்கராசாரியரை மேலே யாம் சிவகுருமைந்தரென்று கூறினும். இவரை ஸ்மார்த்தர்களும், நமதன்பரும் ஜகத்குருவென்று கொண்டாடுகின்ருர்கள். பிதாவுக்குச் சிவகுருவென்றும், பிள்ளைக்கு ஜகத்குருவென்றும் இடுகுறிப்பேர்கள் வந்திருக்குநோக்கமறியாமல், பிள்ளையாகிய சங்கராசாரியருக்கு ஜகத்குருப்பேரைக் காரணப்பெயராகக்கருதி உலகமுழுதுக்கும் அவர் குருவென்று பூர்வபட்சிகள் மனப்பால் குடிப்பது யாவரும் வெறுக்கத்தக்கதாயிருக்கின்றது. ஜகத்குரு ஜகத்துக்குக் குருவானுல், சிவகுரு சிவனுக்குக் குருவாயிருத்தல் வேண்டுமன்ரே? இப்போது நமதன்பர் சங்கராசாரியரை ஜகத்குருவென்று வாதிடுவதுபோல், இனி அவரது பிதாவாகிய சிவகுருவைச் சிவனுக்குக் குருவென்று வாதிக்கவும் தலைப்படுவார் போலும். சிவகுருவென்பவருக்கு அந்தப்பெயர் அவரது பிதா இட்டதுபோல், அவர் தனது பிள்ளைக்கு ஜகத்குருவென்று பேரிட்டு மகிழ்ந்தாரெனவே யமையுமென்க. விரிக்கிற் பெருகும்.

இனிச் சிவபக்தரென்பது சிவபெருமானிடம் பக்திபாராட்டுபவர் அல்லது சைவர் என்றே பொருள்பயந்திடும். இச்சைவர்கள் தம்மைச் சிவபெருமானுக்கு அடிமைப்பொருளென்றே கொண்டு வாழ்வார்கள். நமதன்பரும், அவர்குருவாகிய சிவகுருமைந்தரும் சிவபெருமானை (தம்பாற் கற்பிதமாய ஜகசீவபரங்களிலொன்றென) நிஷேதித்துத் தாமே மெய்ப்பொருளென்றுகொண்டு வாழ்கின்றவர்கள். அதனுல், சங்கராசாரியர் சிவனடியாராத லிழுக்கும். விவகாரத்தி லவரடியவராதல் சாலுமெனின், அவ்விவகாரம் அவர்க்கு மிச்சையாகலின், அவரடியவராதலும் மிச்சையாயொழியும். இம்மிச்சையடியார் அல்லது பொய்யடியாரைச் சிவரஹஸ்யமெடுத்துப் புகழ்வதும் பொய்யேயாம். மெய்யடியாரையே அது புகழுமன்றிப் பொய்யடியார்களைப் புகழுமெனல் சர்வாஸங்கதமாம். அன்றியுமிவர் சங்கராசாரியர்பிறப்புக்கு மூலமாகத்தேடிய சிவனை யிவரதுமதத்தில் மாயோபாதிகதராகச் சொல்லியிருக்கின்றது. மாயையோ இவர்மதத்தில் சொன்மாத்

திரமாயுள்ள வில்பொருள். அதனால், அதிற்பிரதிபலித்த பிரமச் சாயையாகிய சிவனு மில்பொருளேயாம். உருவமற்ற (ஏகமாகிய) பிரமத்துக்கோ இரண்டாவது பொருளில்லை. அது பொய்யாகிய மாயையிற் பிரதிபலித்தலும், அந்தப்பிரதிபலநம் மெய்யாயிருதலும் யாங்ஙனம்? இவ்வஸம்பாவித நிலையிற் கேட்கப்படும் பொய்ச் சிவனாது அவதாரமாகிய சங்கராசாரியரை யாம் எப்படியோ ரொருஸத்பதார்த்தமாகக் கொள்வது? இனி யிவர்மதத்தில் சீவனை அவித்யோபாதிகனாகக் கூறுவதுண்மை. இவ்வவித்தையும் பொய்ப்பொருள். அதனு ளிவ்வவித்தையிற் பிரதிபலநமாய்த் தோன்றிய சீவனும் பொய்ப்பொருளாகத் தட்டில்லை. இந்தச் சீவனைக்கநிஷ்டான மிவரது சித்தாந்தத்திற் கூடஸ்தனாகச் சொல்லப்படுகின்றது. பிரமம் மாயையிலும், கூடஸ்தன் அவித்தையிலுந் தோய்ந்தனான மிவரது சித்தாந்தஞானமாம். இவரது சங்கராசாரியர் சிவகுருமைந்தராக ஆரியாம்பாளது கர்ப்பயோநிஸ்பரிச முற்றப் பிறந்தாராகையால், இவரைச் சிவனென்று கூறுவதிலும், இவர் பிறந்தபின்னர் உலகில் பலதுன்பங்களிலழுந்தி மோக்ஷ துன்பு வருந்தினரென்பதிலும் யாமாட்சேபிக்கமாட்டோமாகையால், இவ்வவித்யோபாதிகத்வ ஸத்பதார்த்தமாகிய சங்கரசிவனை (பிரஹ்மம் மாயையிற்றோய்ந்தபோதுண்டாகிய) சிவனாது அவதாரமென்று கூறுவது இழுக்காய் முடிந்ததென்க. அவித்யோபா பாதிகரும், கூடஸ்தமூலத்தைக் கொண்டவருமாகிய சிவகுருமைந்தர் மாயோபாதிகரும், பிரஹ்மமூலத்தைக்கொண்டவருமாகிய சிவனாது அவதாரமாவது சர்வாஸங்கதமாம். ஏகவாதஞ்சாதித்தவாறு நமதன்பர் சங்கரரது பிறப்பைக்கூறவந்த ஸந்தர்ப்பத்தில், பிரமம் மாயை ஈசுரன் கூடஸ்தன் அவித்தை சிவன்முதலிய விவிதப்பொருள்கள் விருத்தியாக இடந்தேடித் தமது ஏகவாதத்துக்கிடந்தேடிக்கொண்டது (பஞ்சபாண்டவரென்றால் அறியேனு? கட்டில்கால்போலவென்று வாயாற்கூறி, மூன்றுவிரல்களை விரித்து, இரண்டுவிரல்களைக் காட்டி ஒருவிரலாற் கீழே கோடிழுத்தவன் கதையோடுதானே) இனமாயதென்க. விரிக்கிற் பெருகும். இது நிற்க.

இவர் மதத்தில், ஆன்மாவாகிய தானே பிரஹ்மமென்றும், தன்னிடத்தில் சகசீவபரங்கள் கற்பிதமென்றுஞ் சொல்லும் வழக்குண்மையால், தன்னைநோக்க அச்சகசீவபரங்க ளிழிந்தனவாம்.



இங்ஙனமாக, பரம் அல்லது ஈசனது அவதாரமாக (தன்னைத்தவிர வஸ்துவில்லையென்று சாதித்த) சங்கராசாரியரை நமதன்பர் கூறியது அச்சங்கராசாரியரைத் தூஷித்ததாகவே முடியும். அன்றியும், புல், பூடு, புழு, மரம், விலங்கு, பறவை, மனிதர், தேவர் முதலிய எல்லாப்பிறப்பும் பிரஹ்மஸ்வரூபங்களென்றுகொண்டாடு மிவர் மதத்தில் யாவருமே பிரஹ்மத்தினவதாரமென்று கூறவேண்டியது ஆவசியகமாக, இவர் சங்கராசாரியரைமாத்திரம் சிவாவதாரமென்று கொண்டாடியது பேதமையேயாம். அப்படிக்கூறவந்தவிடத்தும் அதிஷ்டானமாகிய பிரஹ்மத்தினது அவதாரமென்று கூறாமல், மாயையிலாரோபிதமாகிய சிவனாது பிறப்பென்று கூறியது பேதமையிற்பேதமையாம். இனி யிவர் சங்கராசாரியர் பிறப்புக்கு மூலமாகத்தேடிய சிவன் மாயோபாதிகராயிடினும், அவரோடு மாயோபாதிகர்களாகத்தோன்றிய பிரம விஷ்ணுக்களது பிரஸ்தாபமு மிவரதுமதத்திற் கேட்கப்படுகின்றது. சிவன், விஷ்ணு, பிரமன் என்னுமாயோபாதிகர்கள் மூவரில் சிவன் தமோபிரவிஷ்டரும், விஷ்ணு ஸத்வவிசிஷ்டரும், பிரஹ்மா ராஜஸ் சிரேஷ்டருமாயிருத்தல் சித்தம். இவருள் சங்காசாரியர்பிறப்புக்கு நமதன்பர் தமோபிரவிஷ்டராகிய சிவனையே மூலமாகத்தேடியவாறென்னை? தாமசம் ஞானவிரோதமாயுள்ளது. இந்தக் குணநிஷ்டானமுடையாரை ஞானப்பிரசாரகர்த்தாவுக்கு மூலமாகக்கொண்டது தவறுதலி லிழுக்கென்றோ? இனி யிவர் சிவனுக்கு அந்தஸ் ஸத்வமுண்டென்றுவாதிக்க வருவார்போலும். அப்போது விஷ்ணுவுக்கு அந்தஸ்தமஸைக்கூறிச் சிவனிலும் விஷ்ணு குறைந்தவர் என்று வாதிக்கும் வைஷ்ணவகண்டநமுண்டாகுகையால், சிவனும் விஷ்ணுவும் பேதமில்லாதவர்கள். அவர்களில் யாரை யுபாசிப்பது மொன்றேயென்று யோகிஸ்மார்த்தர்கள் கூறுவதும், சிவாவதாரமென் றிவர்கொண்டாடுஞ் சங்கராசாரியர் விஷ்ணுபுஜங்கமுதலிய நூல்கள் செய்து விஷ்ணுவை வழிபட்டதும் ஸர்வாஸங்கதமாம். தாமஸப்பிரதானராகிய விஷ்ணுவை ஸாத்விகப்பிரதானராகிய சிவன் சங்கராசாரியாகப் பிறந்து வழிபட்டகதை எந்தஸதஸிலோ கனம்பெறும்? இவைகளை யூன்றிவிசாரிப்பவர்கள் சிவன் சங்கராசாரியாகப் பிறந்தாரென்று வாதிக்கும் நமதன்பரது வெள்ளறிவை யெள்ளி நகையாடாதொழியாரென்க. இது நிற்க.

சங்கராசாரியர்பிறப்புக்கு மூலமாக விவர் தேடிய தாமஸ சிவனை யாம் பரமாக வொப்பியதின்று. திரிமூர்த்தியுத்தின சிவனை

யே யாம் பரமாக வொப்பியிருக்கின்றோம். அந்தச் சிவனையே சிவரஹஸ்ய முணர்த்தியதென்க. இந்தத் துரீயசிவனை வேதமுதலிய கலைகளும், ருதஸம்ஹிதை முதலியனவும் உமாஸஹாயந்வாதிலிங்கங்களோடு கூடினவரென்று போதிக்கின்றன. இவர் மூதாவுதரத்திற்றங்கி யோநிவாய்ப்பட்டுப் பிறக்கமாட்டார். இவரையே "எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தந், சொல்லாற் றெளிந்தோஞ் சொலவுரிசில்லித், பிறந்தகதை யுங்கேளாப் பெருமையில் வாழ்ந்தோன், இறந்தகதை யுங்கேட்டிலேம்" என்று சைவத்திருவாளரொருவர் விதந்தோதியிருக்கின்றனர். அன்றியும், "ஏகம்தவாப்யஸகாரம்" என்னுஞ் சுலோகத்தால் ஸ்ரீ ஹரதத்தாசாரியஸ்வாமிகள் ஸ்வல்பாம்சத்திறனுஞ் ஸ்ரீ சிவபெருமான் கர்ப்பவாசஞ்செய்து பிறவாரென்று ஸ்தாபித்திருக்கின்றனர். இன்னு மிவரது பிறவாமையை அநந்த சிவஞானிகளும், அநந்த சாஸ்திரங்களும் எடுத்துப் பிரகாசப்படுத்துவது சித்தம். "பிறப்பில் பெருமானைப் பின்றாழ் சடையானை" என்றார் எமது சைவப் பிள்ளையாரும். இம்மட்டோ, "நதஸ்யகஸ்சித்பதிரஸ்திலோகே" என்னுஞ் சுவேதாசுவதரமந்திரம் சிவனுருக்கு ஜந்மஸ்தானமும், காரணமு மில்லையென்றும், அவருக்கு உற்பத்திகாரணமானவர்களொருவருமில்லையென்றுங் கூறுகின்றது. அன்றியும், "அஜம்த்ருவம்" என்னும் மந்திரமும், "அஜாதமித்தேவம்"என்னும் மந்திரமுஞ் சிவபரஞ்சுடரைப் பிறவாத பெரியபெருமானென்று பேசுகின்றன. இத்யாதி பிரபலபிரமாணங்களுக்கு விரோதமாக இத்துரியமூர்த்தியினது அவதாரமாயுள்ளவர் சங்கராசாரியென்று கூற வெவரான் முடியாது. துரியமூர்த்தியினது அவதாரம் சங்கராசாரியாகாவிடினும், அவர் குணருத்ரரது அவதாரமாகட்டுமேயெனின், அதுவுங் கூடாது. குணருத்ரர் சிவபரஞ்சுடரினது நாமரூபவொற்றுமைகளால் மேம்பாடெய்திச் சைவநிட்டையிற் சிந்திப்பவராதலானும், தனக்குக் கீழிட்டவதிகாரம் வகித்து விளங்கிய விஷ்ணுமுதலினோரை வழிபடாதவராதலாலும் அவர் தனது சைவநிட்டை கலைந்து, சங்கராசாரியாகப் பிறந்திழிந்து,பஜகோவிந்தம்பாடி,நெருப்பில்வெந்து தப்பியதுமுதலிய பாடுகள் பட்டாரென்று கூறுவது அசங்கதமாம். மாயாவாதமத ருத்ரர் சங்கராசாரியாயினதில்லையென்பதை முதலிலேதானே சொல்லிமுடித்தோம். எந்தவகையானுஞ் சங்கராசாரியர் சிவாவதாரமாயினதில்லையென்று யாம் பிரசங்கித்துத் தீர்மானித்தோமாகையால், யாம் சங்கராசாரியர் சிவனென்று தாபித்



ததையும், நமதன்பர் அவர் சிவாவதாரமென்று கூறியதையும் பார்த்து, மாயாவாதிகள் கலங்காவண்ணம் அன்னோர்கொள்ளு மாசங்கையைப் போக்கி எப்படியாவது சங்கராசாரியரைச் சிவரூபமாக்கிக் காத்துக்கொள்வாராக. சங்கராசாரியரது மகிமை தெரியவேண்டினோர் ஸ்ரீ மாதவர் செய்துள்ள வாயுஸ்தவத்தைப் பார்க்கக்கடவர். இராமகிருஷ்ணாதிகள் விஷ்ணுவினது அவதாரமென்பது சர்வஸம்பிரதிபந்நமாயினவாறு சங்கராசாரியர் சிவாவதாரமென்று பிரஸித்திபெற்றான்மாத்திரமே நமதன்பரது மதம் மணம்பெறலாமென்க. விரிக்கிற் பெருகும்.

இனி, நமதன்பர் சிவரஹஸ்யவசனத்துக்குக் கதி யாதென்று வினவலாம். அதிற்போந்த சிவபக்தர் மாயாவாதமருள்பிடித்தவரல்லர். சைவநலந்தழைத்தோங்கிய வொருபெருந்தவராகலாம். அவரது வரலாறுமுதலியவற்றை இவருக்கு எடுத்தோதவேண்டிய வாவசியகமெமக்கின்று. அச்சிவபக்தர் இதுவரையில் அவதரித்திருந்தாலுமிருக்கலாம். இனி யவதரிப்பதாயிருந்தாலும் அவதரிக்கலாம். சங்கராசாரியர்தான் அச்சிவபக்தரென்று ஸ்தாபிப்பது நமதன்பருக்குத் தலைச்சுமையான பெரும்பாரமாயிருப்பதறிந்து அடங்கிவிடுவாராக. கலியில் சிவன் நாலுசிஷ்யர்களோடு சங்கராசாரியாகப் பிறக்கப்போகிறாரென்று ஒருவசனமிருப்பதாக மாயாவாதிகள் கூறுவதுண்டு. அதனை யினி நமதன்பர் தேடிக்கொண்டுவரலாம். அவர் தேடிக்கொண்டுவரு மெவ்விதப்பிரமாணங்களையும் யாம் விசாரித்துக்கொள்ளச் சித்தமாயெதிர்பார்த்திருக்கின்றோம். சுபம்.

---

## பிரம்வித்யா பத்திராதிபரும், அவரது மாயாவாத ஜாலமும்.

மாயாவாதம் என்றொரு மதமிருப்பதாகச் சைவ நூல்கள் பலவற்றுள்ளுங் கூறியிருக்கின்றது. "மிண்டியமாயா வாதமென்னுஞ் சண்டமாருதம்" என்றார் ஸ்ரீ வாசகப்பெருமான். "மாயாவாதி பேயாகி" என்றார் ஸ்ரீ சகலாகமபண்டிதசுவாமிகள். "மாயாவாதப் பேயா" என்றார் ஸ்ரீ கொற்றங்குடிசுவாமிகள். இவ்வாறெதுக்கப்படுஞ் சமயிநான்பிரமம் என்னு ஞானியேயாம். இவனே அகம்பிரமவாதியாம். இவ்வகம்பிரமவாதத்துக்குக் குரு சங்கராசாரியரென்றறிக. நமது பிரம்ஹவித்யாபத்திராதிப ரிஃதுணராது, "சங்கரர்தானே பிரம மென்று கூறியதாய் ஓர் வசனமேனு மெடுத்துக்காட்டுவாரா?"

58 E



என்று எம்மை வினவினர். சங்கராசாரியரது பாஷ்யமுழுதுமே அகம்பிரமவாதப் பிராந்தியாயிருப்பதை இவர் மறைக்கப்பார்ப்பது அதனைமறுத்த ஏனைய சமயபாஷ்யாபிமானிகளுக்குச் சிரிப்பையே யுண்டுபண்ணுகின்றது. "பரம்ப்ரஹ்மநித்யம் ததைவாஹமஸ்மி" என்பது யார்வசனமென்று இனியேனும் தேடிவிசாரித்துத் தெளிவாராக. அன்றியும், "ஸாக்ஷிநித்ய: ப்ரத்யகாத்மாச் சிவோஹம்" என்பது யாரது வாய்மொழியென்று சற்றுவிசாரித்து வெளிவருவாராக. இன்னும், "சிதாநந்தரூபச் சிவோஹம் சிவோஹம்" என்பது எந்த ஆசாரியார் கூறியதென்றுதெரிந்துணப்படுவாராக. இவ்வாறு பலபடியால் அகம்பிரமவாதமுரைத்த சங்கராசாரியரது மானத்தைக் காக்கவேண்டி அவரது சிஷ்யராகிய நமது பத்திராதிபர் பரிந்து வெளிவந்தது அவரைமூடிய மாயாவாதமயக்கத்தின் பயனேயாமென்க. இவ்வகம்பிரமவாதிகளையே "யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவரும்" என்றார் ஸ்ரீ தாயுமானச்செல்வனார். அன்றியும், "அகம்பிரமக்காரர் வெளியாகிருகில் விடாதே" என்றார் ஸ்ரீ உமாபதிசிவனார். இவ்வாறு கண்டிக்கப்பட்டதும், மாயாவாதிகள் பலராலும் அகம்பிரமவாதமென்று அங்கீகரிக்கப்பட்டதுமாகிய சங்கரசித்தாந்தத்துக்குமேல் மொலாம்பூசி நமதன்பர் கௌரவமுண்டுபண்ணப் பார்க்கிறார். அது முடியாதகாரியம். இனி இந்தப்பண்டிதர் மாயாவாதம் தம்மதன்றென வொதுக்கித் தப்பித்தோடப்பார்ப்பதைத் தடுத்து, அந்தப் பட்டம் இவருக்கே சொந்தமென்பதை நன்குபரிஷ்காரப்படுத்தி ஈண்டுப் பட்டாபிஷேகஞ் செய்வாம்.

இவர் தமதுமதம் மாயாவாதமன்றெனவும், சைவர்மதமே மாயாவாதமாகுமெனவுஞ் சிலநியாயங்காட்டி விளக்கியதை யாம் மறுத்து, இவரது சங்கரமதமே மாயாவாதமென்று ருசுப்படுத்தினோம். அதனை யிவர் மறுத்தார்போன்று சிலபோலிநியாயங்கொண்டு மீண்டும் வெளியாயினார். இவரதுபோலிநியாயங்களை யாம் மறுப்பதன்முன்னர் இவர் முதற்கட்கூறியதையும், அதற்கு யாம் கூறிய மறுப்பையும் ஈண்டெடுத்துக்காட்டுவாம்.

### பூர்வபக்ஷம்.

மாயையே முதற்காரணமென்போரன்றோ மாயாவாதிகளெனப்படுவர்? சங்கராசாரியர் பிரமமே முதற்காரணமென்பவரன்றோ? அங்ஙனமாக, அவர் தம்மைப் பிரமவாதிகளென்னாது மாயா



வாதிகளென்றது யாதுகாரணம்பற்றி? சைவர் மாயையே முதற்காரணமெனக் கூறுவோராதலின், அவரன்றோ மாயாவாதிகளாமென்றார்?

### சித்தாந்தம்.

சைவசித்தாந்திகள் மாயையை உலகத்துக்கு முதற்காரணமென்று ஒப்பியது சத்தியம். அம்முதற்காரணமாகிய மாயைக்கு ஜடத்வம் பிராப்தமாகையால், அதனை ஸ்வதந்திரவஸ்துவாக வங்கீகரியார். அதனால், அவர் பரமகாரணவஸ்துவாகக்கொண்டு வழிபடும் மெய்ப்பொருள் அம்மாயையாகாது. அவர் வழிபடும் பரம்பொருளாயுள்ளது சிவமொன்றேயாம். வழிபடுகின்ற வதிகாரியாகிய சேதனனுக்கே மாயை குறைந்திடுமாயின், அந்தமாயை அவனுக்கு உபாஸகப்பொருளாயிடுதல் யாங்ஙனம்? அங்ஙனமாகாமையால், அம்மாயோபாஸகனாகாத சைவசித்தாந்தி மாயாவாதியாகமாட்டான். இவரது மதத்தில், பிரமமே உலகத்துக்கு முதற்காரணமென்று கூறுவதாக விவர் பிரஸ்தாபித்தாரன்றோ? அதனை யவ்வாறே கொள்வோம். அப்பிரமம் நிர்விகாரமாயுள்ளது. அது உலகமாக விகாரப்படுதல் யாங்ஙனம்? அன்றியுமப்பிரமம் ஞானவடிவமாயுள்ளது. அது உலகமாகிய ஜடப்பொருளாகக் காரியப்படுதல் யாங்ஙனம்? யாம் மாயையெனக்கொண்ட பொருளையே யிவர் பிரமமெனக்கோடலால், இவர் மாயாவாதியாயினதுன்மையறிக. எமது மாயையைத்தவிர விவருக்குப் பிரமமென்பதொருபொருளில்லையாகையால், இவரை மாயாவாதியெனவும், போலிப்பிரமவாதியெனவும் பெரியோர் கூறுவர்.

ஈண்டு எதிரி மதமும், எமது சித்தாந்தமும் வெளியாயின. இனி, எமது சித்தாந்தத்தை அவர் மறுத்தார்போன்று தீட்டிய வாபாசத்தையும் அடியிலெழுதிக்காட்டிப் பின்னரெமதுண்மையை நிறுத்தி யுபகரிப்பாம்.

### பூர்வபக்ஷம்.

நாயகரவர்கள் தம்மதத்திற்கு எவ்வளவு சிறப்புக்கூறினும், மாயையை முதற்காரணமாகக்கொண்டதுவரையில் மாயாவாதியென்பதற்குத் தடையுளதோ? உலகிற்கு முதற்காரணங் காலமென்பாரும், பூதமென்பாரும் முறையே காலவாதிகளும், பூதவாதிகளுந்தானே. அங்ஙனமே, மாயையை முதற்காரணமென்கிறவரையில் மாயாவாதிகளென்று சொல்லத்தானே வேண்டும்.

தேசத்தை அரசாட்சிசெய்வதுகாரணமாக அரசனென்று பேரடைந்த வொருவனுக்கு வேறுபேரிருந்தாலும், அரசனென்னும் பேர் ஒழிந்திடுமோ?

### சித்தாந்தம்.

நமது பத்திராதிபர் தமது அறியாமையை மேலுக்குமேல் வெளிப்படுத்திக்கொண்டு அவமானப்படுவது எமக்கே பரிதாபமாயிருக்கின்றது. ஏனெனின், சமயிகளுக்குப் பேருண்டாவது அன்னோர் சகத்துக்குக்கூறும் முதற்காரணத்தையே யாதாரமாகக்கொண்டது என்று எங்கேகூறப்பட்டுள்ளது? அப்படியொருநியதியுண்டாயின், உலகத்துக்கு யாம்தேடிய முதற்காரணத்தினடியாகவே எமக்குப் பேருண்டாகலாம்? அங்ஙனமின்மையின், எதிரிமனோரத மீடேறுவது துஸ்தரமாயிற்று. காலவாதிக்குக் காலத்தைத்தவிர வேறுகடவுளில்லை. பூதவாதிக்குப் பூதத்தைத்தவிர வேற்கடவுளில்லை. அதனால், தனது தெய்வமாகிய காலத்தின் பெயரடியாகக் காலவாதியும், தனது தெய்வமாகிய பூதத்தின்பெயரடியாகப் பூதவாதியும் பிரசித்தியடைந்தார்கள். அவ்விரு சமயிகளும் முறையே காலம், பூதம் என்பவைகளை உலகத்துக்கு முதற்காரணமாகக்கொண்டு, அவைகளுக்கு வேறாகத் தனித்தனித் தாங்கள் வழிபடுந் தெய்வங்களிருப்பதாக வங்கீகரித்திடின், அவர்களோடு நமதன்பரெம்மையினப்படுத்தலாம். அவர்கள் நமது பத்திராதிபரோடுதானே இனப்படுத்தற்பாலரென்க. எங்ஙனமெனின், காலவாதிக்குக் காலத்தைத்தவிர இரண்டாவதுவஸ்து வில்லை. பூதவாதிக்குப் பூதத்தைத்தவிர இரண்டாவதுவஸ்து வில்லை. மாயாவாதிக்கு மாயையைத்தவிர இரண்டாவதுவஸ்து வில்லை. இப்படி யாம் கொண்டதின்று. எமக்கு மாயையொருபொருளும், சீவனொருபொருளும், சிவனொருபொருளுமாக மூன்று பொருள்கள் ஒன்றிலொன்று விஜாதியாயிருப்பனவாக வங்கீகாரமாகையாலும், இவற்றுள் யாம் பெரியபொருளாக மதித்து வழிபடுவது சிவமொன்றேயாகையாலும், சீவருந்தியவெம்மையே யாம் வழிபடுவதும், எம்மிற்கீழிட்ட மாயையை யாம் வழிபடுவதும் அநாவசியகமாகையாலும், காலவாதிகள் காலத்தையே பரமென்றும், பூதவாதிகள் பூதத்தையே பரமென்றும் வாதிப்பது போல் யாம் மாயையையே கடவுளென்று வாதிப்பதில்லையாகையாலும் யாம் வழிபடத்தக்க சிவத்தின்பேரடியாகவே சைவர் என்



னும் பெயர் எமக்குச் சிறந்ததென்க. அதனால், யாம் மாயாவாதியாயிடுதல் கூடாது. இவரை மாயாவாதியென்றதற்கு எமது முன்னோர்வாக்கியங்களைப் பிரமாணமாக மேலே யாம் காட்டினோம். இவர் எம்மை மாயாவாதியென்றதற்கு யாதேனும் பிரமாணங் காட்டினரா? இவரது சமயமுன்னோர்களிலொருவராகிய தத்துவராயர் தமதுமதத்தில் அநுபூதியெய்தாதார் மாயாவாதிகளென்று போக்குரைத்துத் தாம் மாயாவாதியல்லரென வொதுங்கினர். அவ்வளவேயன்றிச் சைவர் மாயாவாதிகளென்று ஜண்டித்தனம்பேசிச் சதுரிழந்தாரில்லை. "சைவநெறியே யுய்யுநெறியது" என்று சைவநலத்தையே பின்னர் வியந்து உபாதியடைந்தனர். இது நிற்க.

சிவனை வழிபடுவோர் சைவர், விஷ்ணுவை வழிபடுவோர் வைஷ்ணவர், சக்தியை வழிபடுவோர் சாக்தர், கிறிஸ்துவை வழிபடுவோர் கிறிஸ்தவர் என்று வழங்கும்வழக்குகளையு மிவர் சிந்தித்திலர். இதனால், உலகத்துக்கு முதற்காரணமாகக்கூறும் பொருள்களினடியாகச் சமயிகளுக்குப் பெயர்களுண்டாவதில்லையெனவும், அச்சமயிகள் மதிக்கும் பரம்பொருள்களினடியாகவே அவர்களுக்குப் பெயர்களுண்டாவது சித்தமெனவும் வெளிப்பட்டதுணர்க.

இனி, நமது பத்திராதிபர் தமக்கு மாயை யொப்பின்றெனவும், பிரமமே யொப்பெனவும், அதனால் தாம் பிரமவாதியாயினதுன்மையெனவும், தாமொப்பாத மாயையடியாகவந்த மாயாவாதப் பெயரைத் தாம் தாங்குதல் கூடாதெனவும் வாதிக்கலாம். பிரமவாதியாகிய விவர் இவரதுபிரமத்தை அப்படியே சுத்தமாகவையாமல் மாயையினுங்கீழிட்ட உலகுக்குபாதானமாக்கியதென்னை? தன்னை மாயாவாதியாக்க விசையாத நண்பர் தனது பிரமத்தை யுலகமாக்கியது அப்பிரமத்தின் பாவமேயாம். இவர் பிரமவாதியென்று தம்மைக்கூறிக்கொள்ளுங் கௌரவம் அந்தப்பிரமம் ஒருகேட்டையு மடையாமலிருக்க விவர் காத்துக்கொள்ளாதவனாயில் நிலைபெறுதென்க. பிரமம் நிர்மலத்வங்கெட்டு ஜடவுலகுக்குபாதானமாயினதை யிவரொப்பியதால், இவரது சகோதரர்களாகிய காலவாதி-பூதவாதிகளோடுதானே இவர் கைகோத்துலாவும் பெரும்பாக்யமெய்திய மாயாவாதியாயினரெனல் சரதமாயிற்றென்க. காலவாதி காலமே கடவுளென்றது காலமுங்கடவுளு மொன்றென்றதாயிற்று. அப்

படியே பிரமவாதி பிரமமேயுலகமென்றது பிரமமும் உலகமு மொன்றென்றதாயிற்று. பிரமத்தை யுலகமாக்கிய பேதைமதம் பிரமவாதமாவதெங்ஙனம்? பிரமத்தைப் பிரமமென்று வழிபடுவாரே பிரமவாதியராம். அப்பிரமம் பரமசிவமேயாகையால், அப்பிரமோபாஸகர்கள் அல்லது பிரமவாதிகள் சிவனடியார்களாகிய சைவர்களேயாம். பிரமம் உலகமாயினதின்றாகையாலும், மாயையே யுலகமாயினமையாலும், இவர் பிரமம் உலகமாயினதென்றவிடத்தில் அப்பிரமம் அப்படியே யுலகமாகக்காரியப்படாமல் மாயையாயிற்றெனவும், அநிர்வசனீயமாகிய வம்மாயையே பின்னருலகமாயிற்றெனவுங் கூறினராகையாலும், எமது மாயையையே இவர் பிரமமெனக் கொண்டாரெனவும், அதனால் இவர் மாயாவாதியாயினரெனவும் இவர்க்கு யாம் பட்டாபிஷேகஞ்செய்து பிரசித்தியுண்டுபண்ணினோமென்க. சுபம்.

---

## பிரமவித்யா நாவலரை வினாதல்.

## (ஜகத்குரு விசாரம்.)

1. சங்கராசாரியர் மாதாவுதரத்திற் பிறப்பதற்குப் பூர்வம் ஜகத்குருவாயினதில்லை. அவரது விதேகத்தின் பின்னர் அவர் ஜகத்குருவாயினதில்லை. இடைக்காலத்தில், பால்யாவஸ்தை - மூர்ச்சாவஸ்தை - நித்திராவஸ்தைகளில் அவர் ஜகத்குருவாயினதில்லை. எஞ்சியகாலத்தில், கோவிந்தயோகியாகிய குருசந்நிதியில் அவர் ஜகத்குருவாயினதில்லை. இவ்வஸம்பாவிதங்களுக்கிடையில் எப்படியோ சங்கராசாரியருக்கு ஜகத்குருபட்டம் கிடைக்கும்?

2. வசிட்டர், நாரதர், பராசர், வியாசர், சுகர் முதலிய மகரிஷிகளைச் சைவ வைஷ்ணவர்களும், ஏகான்மவாதிகளும், ஏனையவர்களும் ஆசாரியர்களாக வங்கீகரித்திருக்கின்றார்கள். இவர்களை யொருகால் ஜகத்குருக்கள் என்று வாதித்தால், ஆரியர்களொருவருஞ் சண்டைக்கு வரார்கள். இவர்களை யபிமானித்து ஜகத்குருக்களென்று ஒருவரும் வாதிப்பதில்லை. இங்ஙனமாக, ஏகதேசமாகிய ஏகான்மவாதத்துக்கு நூல்செய்தவரை நமதன்பர் ஜகத்குருவென்பது யாங்ஙனம்? அவர் மாயாவாதத்துக்கு நூல்செய்தபடியே சைவசித்தாந்தத்துக்கு நூல்செய்தவர் ஸ்ரீகண்டசிவாசாரியரை யாமும், வீரசைவத்துக்கு நூல்செய்த பண்டிதாசாரியரை ஆராத்யர்களும், வைஷ்ணவத்துக்கு நூல்செய்த இராமாநுஜாசாரியரை வைஷ்ணவர்களும், மத்வமதத்துக்கு நூல்செய்த ஆநந்ததீர்த்தாசாரியரை மாத்வர்களும் ஜகத்குருக்களென்று வாதிடலாமன்றோ? வியாசரது ஸூத்திரத்துக்கு இவர்கள் (ஒருவரிலொருவர் மாறுபட்ட) பாஷ்யங்கள் தனித்தனியே செய்திருக்கின்றார்கள். அதனாலிவர்கள் யாவருமே பாஷ்யக்காரர்களாயினர்கள். இந்த பாஷ்யக்காரர்களில், ஏனையவர்களையொதுக்கிச் சங்கராசாரியரை ஜகத்குருவென்பது செல்லாது. ஒருகால் ஜகத்குருவென்பது அவரது தாய்இட்ட பெயராகலாம். சங்கரநாமம் கோவிந்தயோகியாற் கொடுத்ததாயிருக்கலாம். இவ்வாறு திருப்தியடைந்து நமதன்பர் அடங்குவதே உசிதம். உலகிலிப்போது தாய் தந்தையர்கள் தமது மக்களுக்குச் சிவகுரு, குருசாமி, குருமூர்த்தி என்று பேர்களிட்டுவரும் வழக்கானும் அஃது வெளியாமென்க. இனி ஜகத்குருவென்னுந் திருப்பெயர் ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியாகிய ஜகத்பிதாவுக்கே சொந்தமென்றுணர்க.

3. சங்கராசாரியர் சரஸ்வதியோடு வாதிக்கையில், காமகலையிலவளைவெற்றிபுனையவேண்டிப் பரகாயப்பிரவேசஞ்செய்து இராஜபத்னிகளைக் கற்பழித்தது தருமமா? பரகாயப்பிரவேசஞ் செய்யாமல் தமது ஸ்வசரீரத்திலேதானே (ஒரு பொதுமங்கையைக்கூடி) அவ்வுபயத்தையும் தகர்ந்து ஏன் தெளிந்திடல் கூடாது? தமது சந்யாசசரீரம் தோஷமெய்துமெனின், அது கூடாது. ஏனெனின், சரீரம் ஜடம். அதற்குப் பாவத்தையீட்டத்தக்க சுதந்தரங்கிடையாது. தோஷாதோஷங்கள் சைதன்யமிலகிய ஜடங்களிற் கேட்கப்படமாட்டா. அதனால், சைதன்யமே அவைகளுக்குப் பாத்யமுடையனவாம். தனது ஜடசரீரத்துக்குப் பரிசுத்திகரத்தையபேக்ஷித்துச் சேதனமாகிய தான் கேட்டைத் தேடிக்கொள்வதும், பரஸ்திரீகளுக்குப் பாதிக்ரவ்யபங்கந்தேடி வைப்பது முசிதமாவது யாங்ஙனம்? ஒருவன் மற்றொருவனை வாள்கொண்டுசேதித்துக் கொலைசெய்வானாயின், அக்கொலைக்கு வாளைத் தண்டிப்பாரில்லை. எய்தவனை விடுத்து அம்பை நோவாருண்டோ? அன்றியும், நரகலோகத்தில் துக்கானுபவம் உடலுக்கா, உயிருக்கா? இப்பூமியில் உடலோடுசேர்ந்தே உயிர் பாவத்தையீட்டினும், அவ்வுடலை யுயிர்நீங்கியவழிச் சுட்டு அல்லது

புதைத்து மங்கச்செய்துவிடுகின்றார்கள். அவ்வுடல்கொண்டிட்டிய பாவத்துக்கு உயிரே நிரயத்துன்ப மெய்தாநிற்கும். இவற்றை நோக்குழிச் சங்கரசைதன்யத்தைப் பூர்வபட்சியார் தப்பவைப்பது கஷ்டமென்றே துணிந்திடுக. மூலன் என்னும் பெயருடைய இடையனது சரீரத்திற்புகுந்த சித்தரொருவர் அம்மூலனது மனைவி தன்புருஷனென்று அந்தச்சரீரத்தைத்தொட வருகையில், அவள் தொடவிசையாமல் அஞ்சியோடினாரென்னும் திவ்ய சரிதத்தை நோக்கினார்க்குச் சங்கராசாரியரதுகதை அருவருப்பைத்தராதொழியுமோ? இச்சங்கராசாரியர் செய்த லோகோபகார மினிதுவெளிப்பட்டமையால், இவரை ஜகத்குருவென்பாரதுமதம் அஸம்பாவிதமாயதென்க.

4. சங்கராசாரியருக்கு அபிநவக்குத்தன் என்பவன் சூனியம் வைத்தானென்று சங்கரவிஜயங் கூறுகின்றது. அதனால், அவ்வாசாரியருக்குக் குதப்பிரதேசத்தில் இரத்தமூலங்கண்டு, சீக்கொண்டு அவதிப்பட்டுக்கொண்டிருந்தாராம். அதனை அவர் மானத்துக்கஞ்சி வெளியில்விடாமல் சகித்துக்கொண்டிருந்தார். இவ்வாறிருக்கையில், அவருடைய வஸ்திரம் தோய்க்கப்போன சிஷ்யன் அந்த வஸ்திரத்தி லிரத்தக்கறையைக்கண்டு குருவை விசாரித்துத் தெளிந்து, சூனியம் வைத்தவனுக்குப் பிரதிசூனியம் வைத்துக் குருவை க்ஷேமப்படுத்திவிட்டான். இதுதானோ ஜகத்குருமகிமை? சூனியத்தின்சேட்டை [illegible] தக்கது. இது சிவாநுக்ரகமெய்தினோர்பாற் சேரமாட்டாது. ஸ்ரீஞானஸம்பந்தப்பெருமானிடம் சமணர்களிழைத்த ஆபிசாரம் பயன்பட்டதா? கேவலமாகிய சூனியத்துக்கே தாளாத சங்கராசாரியர் இத்தகைய ஆபிசாரத்தின்முன்னிலைப்பாரெனல் தீயின்முன் பஞ்சு நிலைக்குமென்பதுபோல்வதேயாம். இவ்வளவு சாமான்ய சீவனை ஜகத்குருவென்பது பரிஹாஸாஸ்பதமென்க.

5. சங்கராசாரியருக்குக் கீர்வாணபாஷைமாத்திரமே தெரியும். அவர் மலையாளதேசத்திற் பிறந்தமையால், ஒருகால் அந்தப் பாஷையிலுமவர் பண்டிதரெனின், அவ்வாறுகோடற்கு மலையாள பாஷையிலவர் நூலொன்றுஞ் செய்யவில்லை. ஏனையபாஷைகளிலுமவர் நூல் செய்யவில்லை. அவருக்குத்தெரிந்த கீர்வாணபாஷை (ஒரு காலிலாவது) ஒருவரோடொருவர் பேசிவழங்கும் பாஷையாயினதில்லை. இவ்வேகதேசபாஷாபரிஞானமுடையாரைப் பல



பாஷாபரிஞானமுடைய பரதகண்டவாசிகளனைவருக்கு மநுக்கிரகிக்கத்தக்க ஜகத்குருவென்னும் வாதம் எங்ஙனே மணம்பெறும்? ஒருகால் நமதன்பர் ஸ்ரீஜ்ஞானஸம்பந்தர்முதலினோர் திராவிடத்திலன்றி யேனையபாஷைகளில் நூல்செய்ததில்லையென்று வாதிக்கலாம். அவர்கள் திருவருளைமுன்னிட்டு யாவுஞ்செய்தவர்கள். ஸ்வபோதகல்பன மொழிந்தவர்கள், எல்லாக்கலைகளையு மோதாதுணர்ந்தவர்கள். சங்கராசாரியர்முதலியவர்களும் வழிபட்ட தலைவராயுள்ளவர்கள். இவர்களுக்குத் தமிழ்ப்பாஷையும் ஆவசியமன்று. இவர்கள் உலகுக்குபகரித்துச் சைவநலத்தை யூட்டியவாறு தமிழ்நங்கைக்கும் மணமுண்டாகச்செய்தாரெனலே அமைவுடைத்து. விரிக்கிற் பெருகும்.

(பிரமாண பிரமேய விசாரம்.)

1. வேதம் முதலா, பிரமம் முதலா, அல்லதிரண்டும் முதலா? வேதம் முதலாயின், அது சப்தரூபமாகிய ஜடமாகையாலும், சேதனனொருவனிருந்து உச்சரியாதபோது சப்தியாதாகையாலும், ஜடமாகியவதற்குச் சர்வஞானோபதேசங் கூடாதாகையாலும், அன்றியுமது பிரமத்தை (ஞானவடிவான சேதனத்தை) யுண்டுபண்ணுமாற்றல் வகியாதாகையாலும் அதனை முதலென்று கூறும் வாதம் நிரஸ்தம். வேதம் சுவயம்பு என்றதும், அபௌருஷேயம் என்றது மிதனாற்கெடும். இனி, வேதம் முதலன்று. பிரமமே முதலென்று வாதமுண்டாயின், அப்பிரமம் ஞானவடிவமாகையாலும், அதில் ஜடமாகிய சாப்தமுண்டாகாதாகையாலும், பிரமம் நிர்விகாரமும், வேதம் விகாரமுமாகையாலும், பிரமத்திலிருந்து சாப்தம் வெளியாதற்கு அந்தப்பிரமம் தந்தாலுமுதலிய வுபகரணதாதாத்மியசம்பந்தம் பெற்றிராமையாலும் அதனை வேதோத்பத்திக்கு மூலம் அல்லது முதலென்று கூறுவதும் நிரஸ்தம். இனி யிரண்டுமே முதலென்று கூறின், பிரமமொன்றே யுள்ளது, அப்பிரமத்துக்கு இரண்டாவதுவஸ்து வில்லை என்று கூறி, ஜகஜீவபரங்களை நிஷேதிக்கும் ஏகான்மவாதத்தின்றலையில் இடி விழாநிற்கும். இவைகளைப்பரியாலோசித்து விடைபகர்ந்திடுக.

2. பிரமமொன்றே சத்தியம், அதற்குவேறாயுள்ளவை மிச்சை என்று கூறுமிவரது சித்தாந்தத்தில் பிரமத்துக்குவேறாகிய வேதம் மிச்சையாகாதொழியுமோ? அம்மிச்சையான பிரமாணத்தாற்போதரும் பிரமேயம் (பிரமம்) மிச்சையாகாது தப்புமோ?

கடலில் வீழ்ந்து தியங்குமொருவனுக்குத் தெப்பம்போல்வது வேதம். அதனை மிச்சையாக்கிவிட்டு நமதன்பர் ஜீவிப்பதெங்கே? இவரது மிச்சாவாதம் இவருக்கே தலையிடியாயினதறிக.

**3. முன்னில்லாத ஜகஜீவபரங்கள் பிரமத்தினிடத்தில் ஒருகால் கற்பிக்கப்பட்டவாறென்னை ? அங்ஙனங் கற்பிக்கப்பட்டவை அப்படியே நில்லாமல் மீண்டுங் கழலுமென்பதென்னை? பின்னர்க் கழலத்தக்கவை முன்னர் கற்பனையானவாறென்னை? இம்மயக்கத்தை மாற்றித் தேற்றுவாராக.**

4. இப்போது யாமும், நமதன்பரும் விவகரித்துவருகின்றோம். இருவரது சித்தாந்தப்படி யெம்மிருவரது சைதன்யமும் ஏகம். இருவரது தேகாதிகளுங் கற்பிதம். வேறுவிதமாகக்கூறின், ஜடம். "ஜடலிருவர்க் கொழியவுண்டுகொலொருத்தர்க்கு" என்றபடி ஏகசைதன்யஸ்வரூபிகளாகிய எம்மிருவர்க்கும் விவாதமுண்டாக ஆவசியகமில்லை. எம்மிருவரது தேகாதிகள் கற்பிதம் அல்லது ஜடம் என வொதுங்கினமையால், அவற்றினிடத்தும் விவாதப்பிரசங்கத்துக் கிடமில்லாமற்போயிற்று. இனி, விவாதமுண்டானவிதம் யாங்ஙனம் ?

5. இவரது சித்தாந்தப்படிப் பிரமம் அல்லது அறிவொன்றே சத்தியம். அதற்கிரண்டாவதுவஸ்து வேறொன்றுமில்லை. இனி, வேதம் யாருக்குப் பயன்படத்தக்கது ? அதனை யாவர் போதிப்பவர் ? யாவர் கேட்பவர் ? இதற்கு விடைபகர்வதைவிட்டு விவகாரபரமார்த்தங்களைக் குறுக்கேகொண்டுவந்து போட்டுக்கொண்டு குழப்பிவைப்பது சரியன்று. விவகாரமோ பொய். இவர் பொய்யாகிய விவகாரத்திற்புக்குப் பொய்வேதத்தையும், பொய்யுபதேசத்தையும், பொய்க்குருவையும், பொய்ச்சீடனையும் வரிசைப்பட நிறுத்திக் கந்தர்ப்பநகரத்தைக் காணியாட்சிகொண்டாளத் தலைப்படுவது பெருவிந்தையாய் முடியும்.

இவைகளுக்குச் சுருக்கமாகவும், தெளிவாகவும் விடையளித்து உலகுக்குபகரிப்பதைவிட்டு, எம்மை வீணாட்சேபங்கள்செய்து காலம்போக்கும் இவருக்குத்தோல்வித்தானத்தையே தேடி நிறுத்துமென்றுணர்க. சுபம்.



## "பிரமவித்யா ஆரியன்" வினாவின் அழிவுபாடு.

பிரமவித்யாவில் "ஆரியன்" என்பவர் சிலகடாக்களை யேவி
யிருக்கின்றார். அவற்றின்கதியை ஈண்டுச் சிறிது யோசிப்பாம்.

அவர் பதிக்குப் பசுவும்உலகமும் பின்னமா, அபின்னமா,
பின்னாபின்னமா? எனவும், மாயைக்கு உலகம் பின்னமா, அபின்
னமா, பின்னாபின்னமா? எனவும், மாயையினிடத்து உலகுண்
டாதல் மாதாவினிடத்துப் பிள்ளையுண்டாதல்போலா, வித்தி
னின்றும் மாமுண்டாதல்போலா, பால் தயிராவதுபோலா, மண்
கடமாவதுபோலா, கயிற்றினிடத்து அரவுண்டாதல்போலா? மா
யையின்கண் உலகம் பொருளா, குணமா, தொழிலா? எனவும்
வினவித் தமதுஸாமர்த்தியத்தைக் காட்டினார். இவ்வாறு கூறுவது
சைவசித்தாந்தமுடிவாயின், இவ்வினாக்களை யெழுப்பியது ஸாமஞ்
சஸமாம். அங்ஙனமாகாமையின், இவற்றிற்கு விடைபகர்வது எம
க்கு அநாவசியகமாம். ஆகையால், இவரெம்பக்கத்தில் விடுத்த
கடாக்களை யிவரிடத்திலேதானே திருப்பியொழிப்பாம்.

பதிக்குப் பசுவுமுலகமும் பின்னமெனின், வஸ்து இரண்
டும், மூன்றுமாகி இவரது ஏகவாதத்தின்றலையி லிடிவிழும். அவை
பதிக்கு அபின்னமெனின், பதி நிர்மலமும், பாசம் மலமும், பசு
அம்மலத்தையுடையதுமாயினமையால், இம்மூன்றும் அபின்ன
மாயிடுதல் கூடாது. பின்னாபின்னமெனின், மேற்கூறிய தோஷங்
களே வந்துசேரும். இனிப் பிரமத்தினிடத்தில் உலகுண்டாதல்
மாதாவினிடத்திற் பிள்ளையுண்டாதல்போலாமெனின், பிதா இல்
வழி மாதாவினிடத்துப் பிள்ளையுண்டாகாமையால், பிரமமாகிய
மாதாவினிடத்திற் பிள்ளையுண்டுபண்ணத்தக்க வேறொருபொ
ருள் வேண்டும். அன்றி, பிரமம் வித்தும், உலகம் மாமுமாகட்
டுமேயெனின், வித்து நிலத்தையாதாரமாகப் பெறுதபோது,
அதில் மரந்தோன்றாதாகையால், அவ்வித்தாகிய பிரமத்துக்கு
ஆதாரமாகிய வேறொருபொருள் வேண்டும். ஆயின், பிரமம் பா
லும், உலகம் தயிருமாகட்டுமேயெனின், பாலைத் தயிராக்குதற்
குப் பிரைமோர் வேண்டுமாகையாலும், தயிர் மீண்டும் பாலாகா
தாகையாலும் பிரமத்தை யுலகமாகப் பரிணமிக்கச்செய்தற்கு
வேறொருபொருள் வேண்டுவதன்றியும், அவ்வுலகம் மீண்டும் பிர

மமாயிட்மாட்டாது. அற்றேல், பிரமம் மண்ணும், உலகம் கடமுமாகட்டுமேயெனின், பிரமமாகிய மண்ணைக் கடம்போன்றவுலகமாகக் காரியப்படுத்தற்கு வேறொருபொருள் வேண்டும். ஆனால், பிரமம் கயிறும், உலகம் அதிற்றோன்றுமரவு மாகட்டுமேயெனின், பிரமமாகியகயிற்றில் அரவாகியவுலகத்தைக் காண்பதற்கு வேறொருபொருள் வேண்டும். இது நிற்க. பிரமத்தினிடத்தில் உலகம் பொருளெனின், உலகமாகிய பொருள் அழிவுபாடுடையதானையால், அதனை அழிவுபாடெய்தாத பிரமத்தினிடத்திருந்த ... பொருளென்றிடல் பொருந்தாது. இனி யவ்வுலக ... குணமெனின், ஜடமும், ரூபமுமுடையவதனைச் சேதனமும், அரூபமுமாகிய பிரமத்தின்குணமென்றிடல் கூடாது. ஆயினதனைத் தொழிலென்பாமெனின், பரனது தொழிலால் உலகம் தொழிற்படுதலுண்மையின், தொழிற்படும் பொருளாகியவதனைத் தொழிலென்றது கூடாது. அன்றி, தொழிலுக்கு உருவங்கூறுதலும் கூடாது. உலகம் உருவமுடையதாகலின், அதனை யுருவமெய்தாத பிரமத்தின்றொழிலென்பது பேதமையேயாம். இனி, "புறச்சமையத் தவர்க்கிருளாய்அகச்சமையத்தொளியாய் - புகலளவைக்களவாகிப்பொற்பணிபோற்பேதப் - பிறப்பிலதாயிருள்வெளிபோற்பதமுஞ்சொற்பொருள்போற் - பேதாபேதமுமின்றிப்பெருநூல்சொன்ன - வறத்திறனால்விளைவதாயுடலுயிர்கணருக்க - னறிவொளிபோற்பிறிவருமத்துவிதமாகுஞ் - சிறப்பினதாய்வேதாந்தத்தெளிவாஞ்சைவ - சித்தாந்தத்திறனிங்குத்தெரிக்கலுற்றாம்" என்னும் பிரமாணத்தாற் போதருமுடிவே யெமது சித்தாந்தமென்றுணர்க. இதனை நமதன்பர் நல்லாசாரியரையடைந்து அவருக்கேவல்செய்து கேட்டுத் தெளிந்தின்புறுவாராக. இதுநிற்க.

இவர் "ஆன்மா வியாபகமெனின், சரீரத்துக்குள் மாத்திரம் வியாபகமா? வெளியிலும் வியாபகமா?" என்றுசங்கித்துத் தமது மதத்துக்கே நேத்திரபங்கம் தேடிக்கொண்டார். எங்ஙனமெனின், இவரது மதத்திற்றானே ஆன்மா சர்வவியாபகமுடையது என்று கூறுவது வழக்கு. எமது மதத்தில், ஆன்மா சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடையதெனவும், அது மாயையைநோக்க வியாபகமும், சிவவியாபகத்தில் வியாத்தியுமாகத்தக்கதெனவும், அதன் அறிவு தொழில்கள் வியாப்பியமாகிய ஆணவத்தாற்கட்டுண்டிருப்பனவெனவுங் கூறுவதுண்மை. அதனால், பெத்தத்தி லதன்வியுத்வங் காணப்படாது. அதுபற்றியன்றே அதனை யணுவென்பர் பெரி



யோர். இவ்வுண்மைபோதரவே "அசித்தருவியாபகம்போல் வியாபகமுருவமன்றாய் - வசித்திடவரும்வியாபி யெனும்வழக்குடையதாகி - நசித்திடாநானச்செய்தி யாதியேமறைத்ததிற்கு - பசுத்துவமுடையனாகிப் பசுவெனநிற்குமான்மா" என்றார் எமது ஸ்ரீசந்தனாசாரியரும். இனி, நமதன்பர் பின்விஞக்களுக்கு விடைபகர்வாராக: ஆன்மா அல்லது பிரமம் ... இல்லாத வியாபகமுடையதெனின், அதற்கிரண்டாவதுபொரு ... போது அது வேறெதில் வியாபிப்பது? எல்லாந்தானயிருதலே வியாபகமாகையால், எதில் எது வியாபித்தது என்றது அடாதெனின், அப்... வியாப்தி - வியாப்பியம் என்னுஞ் சொற்களும், அவற்றின் பொருள்களும் என்னுவது? அன்றியும், எல்லாந்தானாயிருதலே வியாபகமெனின், எல்லாம் என்றது பாசபசுக்களேயாம். தான் என்றது பதியாம். இப்படி ஏனோ அப்பதி பாசபசுக்களாக விரிந்தது, அல்லது வியாபித்தது? பாசமாகவும், பசுவாகவும் வியாபித்த பதி ஏனோ இன்னும் (பாசபசுக்களுக்குவேறு) பலபொருள்களாக வியாபித்தல் கூடாது? அங்ஙனம், பதி வியாபியாமையால், ... வாறு வியாபிக்கத்தக்கவாற்ற லதற்கில்லையென்பது சித்தமாம். அதனை வியாபிக்குமெனக்கொள்ளின், அவ்வாறுவியாபிக்கு மெவ்வளவுவியாபகமும் அதனது வியாபகத்தின் அகண்டமாகாமல் கண்டமேயாய் முடியும். அதனால், அது சர்வவியாபகப்பொருளாதல் யாண்டும் பூர்த்திகட்டாது. இதனால், தானே எல்லாமாயதென்னும் வாதத்தை யொழித்துத் தான் என்னும் பதி எல்லாம் என்னும் பசுபாசங்களில் வியாபித்தலையொப்புவதே பதியினது வியாபகதர்மமாம். பசுபாசங்களையியக்குதற்கே பதி அவற்றில் வியாபித்தமையால், அதுவே பூரணமாம். பதிக்கு பசுபாசங்களைத்தவிர வேறுபொருள்களில்லாமையால், பதியைப் அவற்றின்மேலிட்ட வியாபகத்வங் கேட்கப்படவில்லை. பதியைப்போலப் பசுபாசங்களும் நித்தியமாகையால், இவற்றிற்கு அன்னியமாக வேறுபொருள்களின் பிரஸ்தாபம் சாஸ்திரங்களிலுண்டாகவில்லை. இவ்வாறுதெளிந்திடாத விவர் பதியினதுவியாபகத்தை விசாரித்துச் சைவசித்தாந்தத்தை மறுக்கப்புகுந்தது ஆச்சரியமாயதென்க. இது நிற்க.

இவர் ஆன்மா எல்லாப்பொருளுமாகியதென்னுங்கால், அவ்வெல்லாப்பொருளும் ஆன்மாவைப்போல அறிவாயிருத்தல்வேண்டும். இவர்கூறு மான்மாவை அறிவு என்பது சொல்லே

யன்றி அதற்குப்பொருளில்லை. ஏனெனின், இவரறியாமைதுக்கங்களோடுகூடி இரவும்பகலும் விஷயவாசனைகளின் மொத்துண்டு வருந்தியுழல்கின்றார். இவரதறிவு சுழுத்தியில் இருந்தவிடந் தெரியாமலிருக்கின்றது. கருவிகரணங்களைக்கூடிச் சாக்கிரத்தில் வந்தபோது, நான் அறிவு என்று தலைநீட்டுகின்றது. அறிவேயெல்லாமாவதும், வியாபகமாவதுமுறுதியாயின், இவ்வசம்பாவிதங்களுக்குக் கதியென்னை? தேகம் - இந்திரியம் - பிராணன் - கரணம் இவைகளைக்கூடாமல் ஆன்மாத் தனிநின்று தான் அறிவுவடிவாயிருத்தலைக்காட்டிப் பதிஸ்தானத்துக்குரிய பிரஹ்மபட்டாபிஷேகத்தைக்கட்டியாளட்டும் பார்ப்போம்.

இவரது ஆன்மா அல்லது பிரமம் தேகத்திற் சிறைப்பட்டிருப்பதொன்று. இவரதுமதம் ஆன்மா வியாபகப்பொருளொன்று கூறுகின்றது. அங்ஙனமாயின், அது சாக்கிராதியவத்தைகளையெய்தி அறிவு ஏறியுங்குறைந்து மயங்குமாறென்னை? சரீரத்தினுள் அது வியாபித்ததெனின், கண்ணொன்றினைப்பார்க்கிறபோது அதில்வியாபித்தவான்மா செவியில் வியாபித்து ஒன்றினைக்கேளாததென்னை? இப்படியே யேனையிந்திரியவியாபாரங்களிடத்துங் காண்க. சாக்கிரத்தில் நுதலினும், சொப்பனத்தில் கண்டத்தினும், சுழுத்தியில் நாபியினும், துரியதுரியாதீதங்களில் வேறிரண்டிடங்களினுந்தங்கி அறிவு ஏறியுங்குறைந்தும் நின்றுசீவிக்கும் ஆன்மாவைச் சரீரத்தின் உள்வியாபகமுடையதென்னும் வாதம் எங்ஙனே மனம்பெறும்? உள்வியாபகத்துக்கே யோக்யதை கெட்டிருக்கும் அவ்வான்மா வெளிவியாபகமுடையதென்னும் வாதம் (குருவுக்குக் குதிரைமுட்டைவாங்கிக் கொடுத்த) அவிவேகபூரணகுருவின் சீடர்களுக்குமாத்திரமே பயன்படத்தக்கதென்க.

இனி, ஆன்மா வியாபகமாயின் அவ்வான்மாக்கள் பலவாகையால் அவையாவும் எப்படி வியாபகம்பெறுதல்கூடுமென்று பிரசங்கித்தாராகையால், அதற்கிறைதந்தொழிப்பாம். யாம்கூறு மான்மவியாபகம் முத்தித்தசையில் அது சிவன்றிருவடியிலமைவதொன்று. ஒருசந்திரனை யேககாலத்தி லுலகத்திலுள்ளார் யாவரது கண்களும் பார்த்ததாகக்கொள்வோம். அப்படிப்பார்க்குங்கால், யாவரது கண்ணொளிகளு மிடைவெளியிலொன்றோடொன்றுகலந்து வியாபித்தலும், அத்தனையும் அந்தச்சந்திரனைமுற்றும் பரிசித்து இன்புறுதலுங்கூடுமாகையால், எமது வியாபகம் சாமஞ்சஸமேயாயிற்று.



இவர் ஒருஇடத்தி லிரண்டுபொருள்களிருத்தல் கூடாதென்றார். அது உருவப்பொருள்களிடத்தன்றி அருவப்பொருள்களிடத்திற் சிறவாது. இவருக்கு வியாபகவிலக்கணந் தெரியாமையால், கண்டகண்டவாறு பிரசங்கித்துக்கழித்தார். இவரது வியாபகத்தையும், எமது வியாபகத்தையும் யாம் ஈண்டொருவாறு பிரகாசப்படுத்தினோமாகையால், இனி யிவரது தெளிவை விவேகிகள் யூகித்தறிவது சுலபமென்க. இது நிற்க.

இவர் ஆன்மா ஞானவடிவாயின், அதனை அஞ்ஞானம் எப்படி மறைக்கும் எனவும், சூரியனை இருள் மறைக்குமா? எனவுங் கடாவித்தருக்கினார். இதுவு மிவரது மதத்துக்கே தீங்குதேடியதாயிற்று. எங்ஙனமெனின், எமது மதத்தில் ஆன்மா ஞானவடிவம் என்றது அதனது சிற்றறிவை. அச்சிற்றறிவுதானும் அறிவித்தாலன்றித் தானேயறியாது. இச்சிற்றறிவினை அநாதியே மலம் அல்லது அஞ்ஞானம் மறைத்தது சகசம். இது எதுபோலுமெனின், கண்ணொளியைப் பூதவிருள் மறைத்ததுபோலாம். "அருக்கன்புகுதவிருள் போம் அடியிற்பொருந்தமலம்போம்" என்றபடி பூதவிருளால் மூடப்பெற்றகண்ணானது கதிரோனாலும், அஞ்ஞானவிருளால் மூடப்பெற்றவான்மாவானது சிவனாலுஞ் சத்திகுன்றித் துலங்குமென்க. கண்ணொளியையே பூதவிருள் மறைப்பதன்றிக் கதிரொளியை மறைக்கமுடியாதாற்போல, ஆன்மவொளியையே அஞ்ஞானவிருள் மறைக்குமன்றிச் சிவவொளியை மறைக்கமுடியாதென்க. இஃதோராது ஆன்மாவாகியதன்னைச் சிவமாகமயங்கி அச்சிவம் அஞ்ஞானத்தாலாவரிக்கப்பட்டது என்பாரது மதமே யீனமதமாயதென்க. இம்மதத்திற்றானே நமதன்பரிறங்கிக் கொண்டாடிப்பதால், இவர் தேடிய சங்கரமது மிவரைத் தெருவில்விட்டதென்க. எம்முடைய சங்கரமதம் யாவரையு முய்விப்பதெனவறிக. இவரது சங்கரர் கேவலபசுவும், எமது சங்கரர் வேதகாரணபதியுமாயினமையால், யாம் கூறியது ஸர்வஸம்பிரதிபந்நமாயினதறிக. விரிக்கிற் பெருகும். இது நிற்க.

இவர் ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் தமது பாஷ்யத்தில் உலகத்துக்குப் பிரமம் அபின்னநிமித்தோபாதானமாயுள்ளது எனவும், அந்தப்பிரமம் சகுணமாவதன்றி நிர்க்குணமாகாது எனவும் பிரசங்கித்திருப்பதால், அது எப்படிச் சைவர்க்கு அங்கீகாரமாம் என்று கடாவிச் செருக்கினார். இவர் சைவமரபறியாதவராகையால், வீண்

65E



கேள்விகளை விடுத்து எமக்குச் சிரமத்தை யுண்டுபண்ணுகிறார். ஆயினு மிவரது கொடுமையை விலக்கி ஸாதுக்களுக்கு ஸந்தோஷத்தையுண்டுபண்ணுவதை யாம் விரதமாகக்கொண்டமையால், அதனையும் விசாரித்துப் பரிஷ்கரிப்பாம். சிலந்திப்பூச்சியினிடத்தால் உண்டாகியதுபோல் பிரமத்தினிடத்தில் உலகமுண்டாகியது என்று வேதங் கூறுகின்றது. நூலுக்கு முதற்காரணமும், நிமித்தகாரணமும் சிலந்தியேயாயினவாறு, உலகுக்கு முதற்காரணம் அல்லது உபாதானகாரணமும், நிமித்தகாரணமும் பிரமமேயாகியது என்று சைவபாஷ்யகாரர் கொண்டிருக்கலாம். சிலந்தியினது தேகம் அதனிடத்துண்டாகிய நூலுக்கு உபாதானமாயினதன்றி அத்தேகத்தைத்தாங்கியிருந்த சைதன்யம் உபாதானமாயினதில்லை. அது நிமித்தமாகவே நின்றது. இதனை யிவ்வாறு பிரித்துரையாடும்போது, பிரமம் கேவலம் நிமித்தப்பொருளாகின்றது. இந்தப் பின்னநிமித்தவாதத்தை நிரூபிப்பதற்கு அவ்வேதந்தானே குலாலஸ்தானத்தில் பிரமத்தைக் குடியேற்றுகின்றது. இரண்டும் ஸாமஞ்சஸமேயாம். நிலங்குளிர்ந்தவழி வித்தினின்றும் அங்குரந் தோன்றுதல் கண்டாம். நிலத்தினின்றும் அங்குரமுண்டாயது என்பதும், வித்தினின்றும் அங்குரமுண்டாயது என்பதும் ஸாமஞ்சஸமாயினவாறு, உலகத்துக்கு அபின்னநிமித்தோபாதானவாதங் கூறுவதும், கேவலம் பின்னநிமித்தவாதங் கூறுவதும் எமக்குடம்பாடேயாமென்க. இக்கருத்தேபற்றியன்றோ எமது ஸ்ரீ அருணந்திசிவம் "உலையணுருவிற் றேன்றியொடுங்கியே" என்று சிவஞானசித்தியாரில் அருளிச்செய்தது? இவ்வாறு விசாரித்து யாம் துதித்து வழிபடும் ஸ்ரீபாஷ்யம்போலாது, மிச்சாவாதத்தைப் போதித்தும், பசுபாசங்களும், பதியு மொன்றென்று உபபாதித்தும் முரணிக்கூறுஞ் சங்கரபாஷ்யமே யாம் வெறுக்கத்தக்கதென்க. இவ்வாறு தெளிந்திடாமல், இவர் "ஆதிசைவர்கள் உலகிற்கு மாயையை முதற்காரணமாகவும், சிவத்தை நிமித்தகாரணமாகவும், சிற்சத்தியைத் துணைக்காரணமாகவுங்கொண்ட சிவஞானபோதவுரையைத் தமது சித்தாந்தமாக அங்கீகரிக்கின்றனரா?" எனப் பின்னர் வினவியதும் அஸம்பாவிதமாயினதறிக. ஆதிசைவமணியாகிய ஸ்ரீ சகலாகமபண்டிதஸ்வாமிகளேயன்றோ சிவஞானபோதத்துக்கு நிமித்தகாரணவாதத்தையங்கீகரித்துச் சிவஞானசித்தியார் என்னு முரைசெய்தருளினர்? இவர் வேறு எந்த ஆதிசைவர்களையோ அவ்வாறு கொள்



ளாதவர்கள் என்று கண்டுகூறியது? இவரது பிரமத்துக்குப் பிரமையுண்டானவாறு, இவர்க்குண்டாகும் பிரமையையெல்லா மிவர் வினுக்களாக்கி யெழுதிவிடுகிறாரிதென்கொலோ? இது நிற்க.

சைவபாஷ்யகாரர் பிரமத்தை எப்போதுஞ் சகுணமாகவே கூறுவதன்றி, நிர்க்குணவாதத்தைப் பிரதிஷேதிப்பதென்னையென வோராசங்கை யெழுப்பியிருக்கின்றார். வேதத்திற்கூறிய தஹரோபாஸனைமுதலிய யாவும் உமாஸஹாயத்வாதிலிங்கங்களோடுகூடிய பிரமத்தைக்குறித்தேயாகையாலும், தேவாரமுதலிய திராவிடஸூக்திகளும், சிவஞானபோதமுதலிய சித்தாந்தநூல்களு மவ்வாறே கூறுகின்றமையாலும் ஸ்ரீபாஷ்யகாரரது வாதம் ஸர்வஸம்பிரதிபந்நமாயதென்க. நிர்க்குணவாதமும் அவருக்குத் தோஷக்ரஸ்தமாகாதெனினும், நிர்க்குணமே முக்கியம் என்று வாதிடும் மாயாவாதமூர்க்கரை யுத்தேசித்து, அதனைப் பிரதிஷேதித்திருக்கலாமென்க. நிர்க்குணம் வேதபடிதமாயினும், அது ஏகமலபத்தாளாகிய விஞ்ஞானகலருக்குரிய அரூபசிவத்தை யாசிரயித்துடையதென வறிந்தின்புறுதலே யெமது சித்தாந்தமென்றுணர்க. விரிக்கிற் பெருகும்.

இவரிவ்வளவிலமையாது வைதிகசைவர் யார், தாந்திரிகசைவர் யார்? என்று கடாயினர். வைதிகசைவர் வேதசிவாகமங்களைத் தெளிந்து அவ்விருவித நூல்களினுங்கூறிய வநுட்டானங்களையும், நிட்டையையும் மேற்கொண்டவர்கள். தாந்திரிகசைவராவார் சிவாகமமொன்றினையே விசாரித்து, அது வேதத்தின்பாஷ்யமாயிடுதலைத் தெளிந்து வேதாவிரோதபுத்தியுடன் அச்சிவாகமாநுட்டானத்தையும், அதிற்போந்த நிட்டையையும் மேற்கொண்டவர்கள். இவ்விருதிறத்துச் சைவப்பெரியாரும் யாம் வழிபடற்குரியாரென்க. இவர்களது திருவடிகளைச் சிந்தித்துப் பிரஹ்மவித்யாவிலடங்கிய வேறொரு விபரீதத்தையும் ஈண்டுப் பரிஷ்கரித்திடுவாம்.

அப்பத்திராதிபர் வியாசரை ஞானாமிர்தக்காரர் தூஷித்ததாக வபிப்பிராயப்பட்டு, வியாசஸூத்திரத்தின் மகிமையை அதிகமாக வெடுத்துப் புகழ்ந்தார். வியாசஸூத்திரம் ஸர்வோத்தமமென்பது சைவருடம்பாடு. இதனை ஞானாமிர்தக்காரர் குறைகூறமாட்டார். "தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும், மூவர் தமிழும் முனிமொழியுங்-கோவைத், திருவா சகமுந் திருமூலர் சொல்லும், ஒருவா சகமென் றுணர்" என்று கூறிய ஔவையினது திருவாக்கால் முனிமொழி என்றுபெறப்பட்ட வியாசஸூத்திரம் அதனோடு சேர்த்துப் படிக்கப்பட்ட

வேனையநூல்களின் கருத்தைக்கொண்டது என்று வெளிப்பட்டமையால், அவ்வியாசஸூத்திரம் சுத்தசிவசன்மார்க்கபோதிதமென்பது சொல்லாமேயமையும். அதனுண்மைபோதரவே ஸ்ரீநீலகண்டசிவாசாரியசுவாமிகளும் அதற்குப் பாஷ்யஞ் செய்தருளினர். இந்த ஸ்ரீபாஷ்யம் சங்கரபாஷ்யத்தினும் முற்பட்டது. இனி, வியாசர் மாயாவாதம் - பாஸ்கரியம்-சத்தப்பிரமவாதம்-கிரீடாப்பிரமவாதம் என்னும் மதங்களைச் செய்தாரெனவுமுண்மையே. அதனால் அவை அவரது ஸ்வாநுஷ்டானமாய்விடமாட்டா. சிவமூர்த்தி ஊர்த்வஸ்ரோதஸ்ஸுடன் அதஸ்ரோதஸ்ஸையும், விஷ்ணுமூர்த்தி பாஞ்சராத்திர பௌத்தங்களையும், தேவகுரு உலகாயதத்தையும், அசுரகுரு அஹம்பிரஹ்மவாதத்தையுஞ் செய்தவாறு, வியாசர் செய்தவைகளையுங் கண்டுகொள்க. நமதன்பர் இவ்வாறு பகுத்து விசாரியாமையால், ஞானாமிர்தக்காரர் அம்மறை அங்யதாகிரகித்து வீண்போராட்டம் விளைத்தார். இப்படியே, இவராதுவாதமொவ்வொன்றும் விபரீதத்தை விளைத்துநிற்றலால், இம்மட்டில் யாம் விசிராந்தியடைந்தோம்.

---

## ஒரு சந்தேக நிவிர்த்தி.

பிரஹ்மஸ்ரீ வைத்யநாதகுருஸ்வாமி சர்மா அவர்கள் தமது இஷ்டரொருவரது சந்தேகநிவிர்த்தியின்பொருட்டு எழுதியது.

உலகில் யாவரும் ஒரு பிரயோசனமுள்ள காரியத்தையே கையாளவேண்டும். பயனில்லாத காரியத்தில் தலையிட்டுக்கொள்வது வீணாகவே முடியும். ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரநாயகரவர்கள் சேலத்தில் ஒருபிரசங்கஞ்செய்தபோது தாமெடுத்த விஷயத்தைச் சுருதியுக்திஅநுபவங்களால் ஸ்தாபித்தாரென்பது யாவருமறிந்தவிஷயமே. அவர்சொல்லிய யுக்தியும் விளக்கிய அநுபவமும் ஸர்வசிஷ்டஜநஸம்மதமாயும், சாஸ்திரங்களுக்கும் ஸம்பிரதாயங்களுக்கும் அவிரோதமாயும் இருந்தனவென்றும், பரமநாஸ்திகப் பாஷண்டிகளுக்குந் தெய்வத்தில் விசுவாசமுண்டாக ஹேதுவாகயிருந்தனவென்றும் யாவரும் ஒப்புக்கொண்டது பிரசித்தம். அவர்காட்டிய யுக்தியநுபவங்களுக்கியைய அவர்கூறிய சுருதிகளும் ஸமயோசிதமாயும், உள்ளபடியேயாயும் இருந்தனவென்பதில் யாவருக்கும் ஆக்ஷேபமில்லை. இவ்வாறு ஸர்வஸம்பிரதிபந்நமாகநடந்த பிரசங்கத்



தில், பிரஹ்மஸ்ரீ வேங்கடகிரிஐயர் என்பவருக்குமாத்திரம் ஒரு ஆக்ஷேபம் ஜநித்ததாகத் தெரியவந்தது. அதாவது ஷைநாயகரவர்கள் சூத்திரராகையால், அவர் சுருதிகளை வாயினுலுச்சரித்தது கூடாதென்று பிரஸ்தாபித்ததேயாம். இவரது ஆக்ஷேபத்தால் அங்கிருந்த சிலரும், தாங்களுங் குழப்பமடையநேரிட்டது. அதனால், தாங்களிப்போது அதன்விஷயமாக என்னைக்கேட்டீர்கள். அதற்கு நான் தெரிந்தவரையில் பதில்சொல்லுகிறேன். இந்தப்பதில் உங்களுக்குப் பிரயோசனப்படவேண்டுமானால், மனதில் இதற்குமுன்பு தங்களுக்குள்ள எண்ணங்களை அறவேயொழித்துவிட்டு, உண்மையறிவதே கடனாகக்கொண்டு கேளுங்கள். நான் சொல்வது பிசகாகவாவது ஸந்தேகமாகவாவது தோன்றும்பட்சத்தில், அதனை என்னிடங்காட்டி அதனால் நாமிருவரும் பயனடையச் செய்யுங்கள். நேற்றும், அதற்குமுன்னும் நம்மவர்கள்பால் வழங்கிவரும் அஸத்ஸம்பிரதாயங்களை ஆதாரமாகவைத்துக்கொண்டு பிடிவாதஞ்செய்யாதேயுங்கள். எந்தவிஷயத்தை யாவர் யாரிடங்கேட்டபோதிலும், சாரத்தையே கிரகிக்கவேண்டுமென்பது தாங்களறியாததல்ல. ஹம்ஸத்தைப்போன்ற தங்களுடைய சுபாவசீலங்களையறிந்தே யானறிந்தவுண்மையை ஒருவாறு இங்கே சொல்லத்துணிகின்றேன்.

நாம் ஒருகாரியத்தைச் செய்வதும், ஒருவழிச் செல்வதும் நமது அப்பன் பாட்டன் முதலினோருக்காகவல்ல. நாம் நல்லகதி அடைவதின்பொருட்டேதான். ஆதலால் நமதுமனதுக்குச் சரியாகத்தோன்றியும், யாதானுமோர்விஷயத்தில் நமது பழைய துர்வழக்கங்களை விடமாட்டாமல் போராடுவது நலமாகாது. ஆனால் நமதுமனதுக்குச் சரிப்பட்டவைகளைச் செய்வதில், நமக்குமுன்பு அந்தமார்க்கத்திற்சென்ற பெரியோர்களுடைய சம்மதத்துக்கு விரோதமுமுண்டாகக்கூடாது. ஆகையால் யாவும் யோசித்து நாம் யுக்தம்போல் நடந்துகொள்ளவேண்டியது.

தாங்களும் ஷை வேங்கடகிரிஐயரவர்களும் உலகம் மித்தை, சீவன் மித்தை, வேதம் மித்தை, எல்லாம் மாயையின்செயல், மாயையானது முயற்கொம்புபோல் சொன்மாத்திரமும், கானற்சலம்போலத் தோற்றன்மாத்திரமுமாயுள்ளது என்றுகூறும் வேதாந்தமதத்தைச் சேர்ந்தவர்கள். இதுவே உங்களுடைய சத்தியமானகொள்கை. உண்மையில் ஒன்றுமில்லை என்று கூறும் உங்களுக்கு எதுஎப்படியானால் என்னை? கானல்நீரில் காற்படிசலம்

நாயகரவர்கள் குடித்தால், உங்களுக்கு உண்மையில் நஷ்டம்யாது? மலடிமைந்தனை நாயகரவர்கள் மண்டையிலடித்தால், உங்களுக்கு விரோதம் என்னை? இல்லாமற்போகும் வெறும்பொய்யைப்பற்றி உங்களுக்கேன் வீண்வழக்கு? உண்மையில் மித்யையாகத் துணியப்பட்ட வேதத்தில், சிலவசனங்களை நாயகரவர்கள் உச்சரித்தது உங்களுடைய மதத்துக்கு ஒருவிரோதத்தையும் உண்டாக்கவில்லை. இது நிற்க.

வேதம் சத்யம். அது அநாதியாயும், ஸத்யமாயுமுள்ள பரமேசுவரனால் அநாதியாயும், ஸத்யமாயுமுள்ள ஆன்மாக்களுக்குக் கொடுக்கப்பட்டது எனவும், அந்தவேதவிதிகளே ஆன்மாக்களுக்குப் பாசநிவிர்த்தியின்பொருட்டு ஏற்பட்ட பத்தியபரிகாரங்கள் எனவும், வைதமாகிய சிவனாகட்டளையில் எவ்வளவு புரண்டாலும் பிரமாதமுண்டாகுமெனவுஞ் சாதிக்குஞ் சைவசித்தாந்தத்தையே நாயகரவர்கள் சார்ந்து விவகரிப்பவராக விளங்குகின்றது. ஆதலால் வேதம் சூத்திரர்களுக்குக் கூடாதென்பது வேதத்தின்கருத்தாகிறபக்ஷத்தில், அவ்வேதத்தையநுசரித்து நாயகரவர்களே அந்தப்பிரமாணத்திற்கட்டுண்டு அதை உச்சரிப்பதில் அஞ்சவேண்டியது. அவருக்கு யாவும் மெய்யாகின்றமையால், வேதம் மெய், அதில்விதித்த பிரமாணம் மெய், அதற்குமாறுபடுதலால் வினையும் பாவம் மெய் என்றாகி அவருக்கே வேதத்தை உச்சரிப்பது விரோதமாக முடிகின்றது. நாயகரவர்கள் உண்மைக்கு விரோதமாக நடக்கத்தக்கவரல்லர். ஏனெனில், அவர் சிவாதித்யாத்நாவளி என்றொருநூல் வெளியிட்டிருக்கின்றனர். அதில் "உபநயனஸம்ஸ்காரரஹிதர்களாகிய சூத்திரர்களுக்கு வேதாத்யயநம் விநாசகரமாவதுபோல், சிவபாவனாரஹிதத்வத்தால் அபரிசுத்தர்களாகிய பிராகிருதஜநங்களுக்குச் சிவலிங்கமாலயஸேவநம் நரகஹேது என்று (காமிகாகமத்தில்) நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது" என்றும், "சூத்திரர்களுக்கொப்பாகப் பாஞ்சராத்திரிக்கு வேதத்தில் அதிகாரமில்லையென்றுசொல்லும் சூத்திரப்படி" என்றும் எழுதப்பட்டிருக்கின்றன. இவைகளைப் பார்க்கும்போது சூத்திரர்கள் வேதாதிகாரம் பெறுமவர்களென்பது அவருக்கே யுடன்பாடென்று ஏற்படுகின்றது. இவைகளுக்கு விரோதமாக அவர் நடக்கமாட்டாரென்பது எமதுகருத்து. அப்படி யவர்நடந்திருப்பாராயின், அதற்குக்கருத்து வேறாயதாயதொன்றிருக்கும். அது நியாயமாகவேயிருக்கும்.



அதனை விசாரிக்கும்போது, அதுவும் வெளிவராமற்போகாது. சூத்திரர்கள் வேதம்ஓதுதல் கூடாது என்று நீங்கள் கூறுவதுபோல், அவருங்கூறிப் பிரமாணமுங்காட்டி அதற்குமாறாகத் தாம் ஓதுவாரெனின், அந்தநியாயத்தையே நீங்கள் விசாரித்துத்தெளியக் கடமைப்பட்டிருக்கின்றீர்கள். அதைவிட்டு அவர் வேதத்தையுச்சரித்தார் என்று அவரைத் தூஷிப்பது பயனற்றதாகமுடியும். இது நிற்க.

வேதத்தைச் சூத்திரர்கள் ஓதக்கூடாதென்று பிராஹ்மணர்களாகிய நாம் சொல்வதெல்லாம் எதன்பொருட்டு? அதைச் சூத்திரர்களாகிய அவர்கள் வாயினலுச்சரிக்கமுடியாத அருமைநோக்கியா? சூத்திரர்கள் அதையுச்சரிப்பதனால், அது அவர்களுக்கு யாதானுமோர்தீங்கை யுண்டுபண்ணுமென்று கருதியா; அந்த வேதத்துக்கே ஒரு தாழ்வுண்டாகுமென்றுகொண்டா? அல்லது அதற்குச் சொந்தக்காரர்களாக எண்ணிக்கொண்டிருக்கும் நமதுபாத்யதையைப் பிறருங்கொண்டு பெருமையடைவது தகுதியன்றெனவெண்ணியா? என்று யோசிக்கும்போது, கடைசியாகக்காட்டியதே நம்மவர் சூத்திரர்களை மறுப்பதற்குக்காரணமென்று தீர்மானிக்கவேண்டியது. வேதங்களைப் படிப்பதேயன்றி, அவற்றின் பொருளை யறிந்தும், அறிந்தபடி ஆங்கிலேயபாஷையில் மொழிபெயர்த்தும் அநேக வெள்ளைக்காரர்கள் விவகரித்துவருவதை யாவருமறிவார்கள். அவர்களுடைய ஆங்கிலேயமொழிபெயர்ப்பையே நம்மவர்களாகியபிராஹ்மணர்களுட்சிலர் படித்து வேதாந்தவிசாரணை செய்துவருகின்றார்கள். அதற்குக்காரணம் அந்தப்பிராஹ்மணர்கள் கீர்வாணத்தைப் படியாமலும், ஆங்கிலேயபாஷையைப்படித்துத் தலைமீறான அநுட்டானஞ்செய்வதேயாம். கோமாம்ஸபக்ஷிணிகளாகிய சுவேதர்கள் படித்தும், அறிந்தும், மொழிபெயர்த்தும் வெளியிட்டவிஷயத்தில், ஓர்குறையையும் அடையாமல் அதனைத் தமது குருநூலாகவுமதித்து விளங்கும் நமது ஐயரவர்கள் நாயகரவர்களைத் தூஷித்தது அதிக ஆச்சரியமாகவேயிருக்கின்றது. கோமாம்ஸபக்ஷிணிகள் வேதத்தில் அதிகபரிசிரமமெடுத்துக்கொண்டது வேதத்தில்வைத்த விசுவாசமல்ல. அதில் தோஷங்களைக்கண்டுபிடித்துத் தூஷிக்கவும், அதைத் தாழ்வுபடுத்தித் தங்களுடைய பொய்ம்மதங்களுக்கு மகிமை கற்பிக்கவுமேயன்றி வேறில்லை. நாயகரவர்களோ வேதத்தைத் தமது கண்ணாகமதித்து அதனை யுயிரினுமினிய பொருளா

கக்கொண்டு வாழ்கின்றவர். இத்திறத்துமேலோர் வேதத்திலோர் துண்டுவாக்கியத்தை யுச்சரித்தது ஐயரவர்களுக்குத் தங்களுக்குஞ் சகிக்கக்கூடாமற் போயிற்றல்லவா? இதற்குப் பொறாமை காரணமேயன்றி நியாயங் காரணமாகத் தோன்றவில்லை. இந்த விசாரத்தால், பிராஹ்மணர்களுக்கன்றி இதரமானவர்களுக்கு வேதம் உச்சரிக்கமுடியாது, அறியமுடியாது என்று கூறுவது பரிகாசமாக முடியும்.

இனி, வேதம் சூத்திரர்களுக்குத் தீங்கைவிளைக்கும் என்னும் விதமோ ஜீவதயாபரக்கொக்கின்கதையாக முடியும். அவர்களிடம் இரக்கம்வைத்துக் கூறுவதாயின், இதமாகக் கூறவேண்டும். நம்மவர்கள் கொடூரமாகக்கூறிவரும் வழக்கத்தால் அவர்களையெதிர்த்துக் கூறுவதாகவே அமையும். வேதம் அவர்களுக்குத் தீங்குசெய்யுமென்பது சுத்தபொய். பாவர்களுக்கும் உபகாரமாகக்கொடுத்த வேதம் சிலருக்கு நலமும், பலருக்குத் தீங்குஞ் செய்வதெப்படி? இந்தவார்த்தை ஐம்பத்தேழாவது தேசத்தாருக்கே பயன்படத்தக்கது. வேதம் சூத்திரஸ்பரிசத்தால் தாழ்வடையுமென்னும் விதமோவெனின், கடவுளுஞ் சூத்திரஸ்பரிசத்தால் தாழ்வடைவார் என்னும் நியாயத்தை யுண்டுபண்ணும். வேதம் உயர்ந்தபொருளாகையால் தாழ்ந்தவர்களாகிய சூத்திரஸ்பரிசத்தால் தாழ்வடையுமென்பதே நியாயமெனின், வேதத்திலும் மிகமேலாகிய கடவுளுக்கு அதிகதீட்டுண்டாகத் தடையிராதல்லவா? இந்தப் பிரகாரத்தா லெந்தவழியில் ஆராயவும் நமக்கு இடமில்லை. இனிப் பொறாமைகாரணமாக நாம் அவர்களை வஞ்சிக்கின்றோமென்பதுமாத்திரம் ஒப்பமுடியும்.

இனிச் சூத்திரர்கள் புராணங்களைக்கேட்கலாம், பார்க்கலாம் என்று நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோமல்லவா? பாரதராமாயணங்களை நாமே அவர்களுக்குப் படிப்பிக்கிறோமல்லவா? இந்தப் புராணங்களிலும், இதிகாசங்களிலும் சுருதிவாக்கியங்கள் முழுசு முழுசாயிருக்கின்றனவே! இந்தச்சுருதிகளையேயன்றோ புராணாந்தர்க்கதமாக அவர்கள் படிக்கிறார்கள், நாமும் படிப்பிக்கின்றோம்? இந்தச்சுருதிகள் அவைகளிற்சேர்ந்து வெளிப்படும்போது, சுருதி என்னும்பேரொழிந்து புராணம், இதிகாசம் என்னும் பேர்களைப் பெற்று வழங்கப்படுகின்றன. இவ்வாறு அவை வழங்கிவரும்போது சூத்திரர்களிடம் நமக்கு விகற்பமுண்டாவதில்லை. இதனை



யோசிக்கும்போது, சூத்திரர்கள் வேதம் என்னும்பேரையுடைய அதனை நான்முகமாகப் படிப்பதும், அறிவதுங் கூடாதென்பதே நம்மவர்கருத்தாக ஏற்படுகின்றது. அப்படிப்படிக்கும்போது அல்லது அத்யயநம்பண்ணும்போதுதான், அவர்களை நாம் விரோதிக்கவேண்டியதாகவுந் தோன்றுகிறது. நாயகரவர்கள் அப்படிக்கொண்டுமின்றிச் சமயோசிதமாக ஏகதேசவசனங்களையே யுச்சரித்தாராகையால், அவர் உச்சரித்த வசனங்களை வேதமாக நாம் ஏன் கொள்ளவேண்டும்? வேதமாகக்கொண்ட ளங்கமேயன்றோ நமக்கு அவர்மேல் விபரீதமுண்டாக இடஞ்செய்தது? புராணங்கள், உபபுராணங்கள், புராணேதிகாசங்கள் என்று பலவிதமாகவிரிந்த நூல்கடோறும் ஆங்காங்கு வேதவசனங்கள் விளங்கிக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு நூலினுஞ் சிற்சிலவசனங்களாக வேதங்கலந்து விளங்கலால், வேதமே புராணமுதலியவைகளாகத் திரிந்திருக்கின்றனவென ஏற்படுகின்றது. புராணமுதலியவைகளை அடங்கலும் பார்த்தவொருவன் வேதமடங்கலும் பார்த்தவனாவனென்பதிற்றடையில்லை. சிவாகமம், பாஞ்சராத்திரம், இரண்யகர்ப்பமுதலிய பலவாகமங்களிலும் வேதக்கோர்வையுண்டிருக்கின்றது. இவைகளையும் பிராஹ்மணரல்லாதவர்கள் படிக்கின்றார்களாகையால், இவற்றாலும் அச்சூத்திரர்கள் வேதத்தைப் படித்தவராகின்றனர். பலவிதத்தாலும் வேதம் சூத்திரர்களுக்கு விஷயமாதலால், சூத்திரர்கள் வேதவசனங்களையுச்சரிப்பது குற்றமென்று நாம் மறுப்பதும், ஏகதேசவசனங்களையுச்சரித்த நாயகரவர்களைக் குற்றங்கூறியதும் நமது தோஷமாகவே முடியும். இவ்வாறு யோசிக்கும்போது, நாயகரவர்கள் வேதருக்குகளை யுதகரிப்பது (எடுத்தவிஷயங்களைச் சாதித்தற்குச் சுரோதாக்களது மதிப்பின்பொருட்டேயாதலால்) நியாய விரோதமாகத் தோன்றவில்லை. இது நிற்க.

இத்தமிழ்த்தேசத்தில் தமிழர்கள் வழங்கிவருஞ்சொற்களில் வெகுவாய்க் கீர்வாணபதங்களைத் தோட்டிமுதல் தொண்டைமான் வரையில் வழங்கிவருகின்றார்கள். இவைகள் வேதத்திலடங்கிய சொற்களேயன்றி வேறில்லை. இனிச் சூத்திரர்கள் கீர்வாணபாஷையைப்படிப்பதுங் குற்றமென்று நாம் வாதிக்கவேண்டிவரும். நாம் முதலில் வழித்தப்பிவிவகரித்தமையால், நாமே பலஹேதுக்களால் அகப்பட்டுக்கொண்டு வருந்தப்படவேண்டியிருக்கின்றது. கீர்வாணபாஷையும், வேதமும் நமக்கே சொந்தமாகிறபோது, நம்மசொத்

தை நாமே பிறருக்குக்கொடுத்தாலன்றி, அவர்களே எங்ஙனம் அறிதல்கூடும்? அவர்களுக்கறிவித்தவர்கள் பிராஹ்மணர்களாகிய நாமேயாகின்றமையால், அவர்களைத் தூஷிப்பதைவிட்டு நம்மையே நாம் தூஷிக்கவாவது, திருத்திக்கொள்ளவாவது கடமைப்பட்டிருக்கின்றோம். தீர்க்கமாயோசிக்கிறபோது, நாம் அவர்களுக்குப் படிப்பிப்பது குணமேயன்றிக் குற்றமாகாது என்று மேல் யாம்விளக்கிக்காட்டிய நியாயத்தால் வெளிப்பட்டமையால், நாயகரவர்கள் பிறரது உபயோகத்துக்காக இரண்டொருசுருதிவசனங்களையுதகரித்தவிஷயத்தை நாம் மறுக்கவெழுந்தது அருமையின்வினைவென்றே பலதரஞ்சொல்லி யாம் சித்தாந்தப்படுத்துவோம்.

திருக்கோயில்களில் பிராஹ்மணர்கள் உத்ஸவகாலங்களில் வேதம் ஓதுகிறார்கள். நித்தியபூசைகளில் தீபாராதனைசமயங்களில் ஈசானாதிமந்திரங்களைச் சிவப்பிராஹ்மணர்கள் சொல்லிவருகின்றார்கள். அந்தக்காலங்களில் பிராஹ்மணர்கள் மந்திரபுஷ்பஞ் சொல்லிவருகிறார்கள். இவைகளைப் பிராஹ்மணரும், மற்றச்சாதியாரும் கேட்கச் சொல்லுகிறார்களேயன்றி, முணுமுணென்று மெதுவாய் வாயோடே சொல்லிக்கொள்வதில்லை. அந்தவசனங்கள் மற்றச்சாதியாரது காதுகளுக்கு விஷயமாகிக்கொண்டேவந்தால், பலதரங் கேட்பதனால் மனதுக்கும், வாக்குக்கும் விஷயமாய்விடுகின்றன. ஆனால், அவர்களும் வாயினால் உச்சரிக்க இடஞ்செய்கின்றது. அப்படியுச்சரிப்பது அவர்கள்பால் குற்றமாவதெப்படி? இதைத் தடுக்கவேண்டுமானால், திருக்கோயில்களில் வேதத்தையோ தடுக்கவாவது, வேதத்தை முணுமுணென்று வாயோடே சொல்லிக்கொள்ளவாவது ஏற்படுத்தவேண்டும். அப்படிச்செய்ய வேதம் இடங்கொடுக்கமாட்டாது. இடங்கொடாமையால், வேதத்தின்ஸம்மதம் பிராஹ்மணர்களைப்போல மற்றவர்களும் வேதத்தையாசரிக்கலாம் என்று ஏற்படுகின்றது.

இவ்வாறுவிசாரிக்குந் தெளிவிழந்த நம்மவர்கள் பலதீமைகள் செய்திருக்கின்றார்கள். அவற்றுளொன்று சொல்லுகிறோம். "துஷ்டதச்வம் கஜோன்மத்தம் வ்ருஷபம் காமமோஹிதம் - சூத்ரமக்ஷர ஸம்யுக்தம் - தூரத: பரிவர்ஜயேத்" என்னுஞ் சுலோகமொன்றைக்கற்பித்துத் துஷ்டத்தனமுள்ள குதிரையையும், மதம்பிடித்த யானையையும், காமாந்தகாரமுள்ள எருதையும், அக்ஷரந்தெரிந்த சூத்திரனையுந் தூரத்திலேயே தள்ளவேண்டியது என்



று சூத்திரநிந்தை செய்திருப்பது தகுதியா? படித்தசூத்திரனையே குதிரை, யானை, மாடு என்று மிருகங்களோடு ஒப்புரைத்து விலக்கத்துணியு நம்மவரகந்தையை யோசிக்கும்போது, படிக்காத சூத்திரனை இன்னுங்கீழ்ப்பட்ட எந்த ஜன்மத்தோடுவமித்தொதுக்க அவர்களாசைப்படுவார்களோவென்று துக்கிக்கின்றேன். சூத்திரன் படித்தால் தங்களை மதிக்கமாட்டானென்றும், தாங்களவனை அதிகாரம்பண்ணமுடியாதென்றும் எண்ணியே இத்தீயவசனத்தை நம்மவர்கள் எழுதிவைத்தார்களென்பதற்கு ஓர்சந்தேகமுமில்லை. இந்தவசனம் சத்தியமானால், சூத்திரர்களுக்குப் புராணங்களாலும், ஸ்மிருதிகளாலும் பிரஹ்மஜ்ஞானசித்தி யுண்டுபண்ணலாமென்று பலசாஸ்திரங்கள் கூறுவது என்னாவது? அவைகளுக்கு முழுவிரோதமாயெழுந்த இந்தத்துஷ்டவசனத்தைக் கற்பித்தவர்களைக்காட்டிலும் வேறுதுஷ்டர்களை யான் கண்டதில்லை. இவர்கள்தேடிய துஷ்டமிருகங்களோடு இவர்களே சேரத்தக்கவரென்பது எனதுகருத்து. துஷ்டகுதிரை, துஷ்டகஜம், துஷ்டமாடு என்பதுபோல் துஷ்டசூத்திரன் என்று ஒருகால் சூத்திரர்களில் துஷ்டர்களைத்தேடி யொதுக்குவதானால் விரோதமுண்டாகாது. அப்போதும் துஷ்டசூத்திரனைப்போல் துஷ்டபிராஹ்மணனுமுண்டாயிருக்கத் தடையிராதாகையால், அவனையும் ஒதுக்கவேண்டியதே மரபாயிற்று. இவைகளைக் கவனியாமல் கண்மூடித்தனமாக நம்மவர் பாராட்டிவரும் கொடுமை நமக்கேயன்றோ முடிவில் தீங்காய் முடிகின்றது? இவைகளைத் தாங்கள் தீர்க்கமாயோசிக்கவேண்டியது. இது நிற்க.

திருநெல்வேலி ஜில்லாவில் தென்காசிக்கடுத்த செங்கோட்டையில் ஸ்ரீ சிவபெருமானதுசந்நிதியில் பிரதோஷசமயங்களில் வேதபாராயணஞ்செய்துவரும் பிராஹ்மணர்கள் அங்குள்ள சைவர்கள், அபிஷேகஸ்தர்கள்முதலிய சாதுக்களை யதட்டி, "நீங்கள் விலகிப்போகவேண்டியது; நாங்கள் வேதபாராயணஞ்செய்வதை நீங்கள் கேட்கக்கூடாது" என்று கொடுமையாகக் கூறியதன்பேரில், அவர்களுக்கும், இவர்களுக்குங் கலகமுண்டானதாகக் கேள்விப்பட்டேன். இது சரியான காரியமா? சுவாமி யெழுந்தருளப்பண்ணும்போது, ஸ்ரீபாதந்தாங்கிகள், வாத்தியக்காரர்கள், மற்றுந்தரிசிக்கக்கூடிய பலஜாதி மனுஷ்யர்கள் சூழ்ந்திருப்பதற்கு இவர்களென்னவழி தேடினார்கள்? அன்றியும், சுவாமி திருவீதியி

லெழுந்தருளும்போது, எண்ணிறந்த ஜனங்கள் (பலஜாதியர்கள்) சூழ்வதனால் அவர்கள் கேட்கக்கூடாதென்று வேதபாராயணஞ் செய்யாது அவர்கள் விலகிப்போதற்கு நியாயமுண்டா? பிராஹ்மணர்களாகிய நம்மிடத்தில் விசுவாசமும், மரியாதையும் பாராட்டிவரும் அவர்களிடத்தில் நமது கொடுமையைச் செலுத்தமுயன்றால், அது நமக்கே தீங்காய்முடிகின்றது. நமதுஜாதியின் பூர்வயோக்யதையைப் பார்த்தால், நமக்குக் குருவாயிருந்தவர்கள் விதுரன், தர்மவியாதன், சூதர், மெய்கண்டார்முதலிய சூத்திரர்களாகவே தோன்றுகிறது. வியாசர், வான்மீகர்முதலியவர்கள் சரித்திரமும் நம்மைத் தலைகுனியச்செய்கின்றது. நாம் அவர்களை யெதிர்த்தால், அவர்கள் நமதுமுன்னோர்களது பிறப்புகளை யெடுத்துப்போட்டு ருஷிமூலங்களை வெளியிலிழுக்காமற்போகார்கள். இவைகளையெல்லாம் நாம் கவனித்து, நமது கௌரவங்கெடாமலிருக்க நம்மைநாமே காப்பாற்றிக்கொள்ளவேண்டியது. இவைகளைக் கவனியாமல் அளவுக்கதிகமாக நாம்விஸ்தாரம்பேசுவது நமதுமூடத்தனமாகவே முடியும். இது நிற்க.

உலகத்தினது தற்காலஇருப்பைப் பாருங்கள். உற்றுப்பார்த்தால், பிராஹ்மணர்களாகிய நமக்கு வந்திருக்குங்கெடுதியானது தங்களுடைய கண்ணை யுறுத்தாமற்போகாது. பிராஹ்மணர்களாகிய நம் பிள்ளைகளை உபநயனத்துக்குமுந்தியே ஆங்கிலேயபடிப்பில் விட்டுவிடுகிறோம். அதைத் தொட்டமாத்திரத்திலேயே அந்தப் பிள்ளைகள் துரைகளாய்விடுகிறார்கள். நான்ஸென்ஸ் என்னும் ஒரு வார்த்தையை முதலிலேயே கற்றுக்கொள்ளுகிறார்கள். இது அவர்களுக்குப் பிரணவமாக முடிந்துவிடுகின்றது. எப்படியெனில், பிரணவத்தை எல்லாமந்திரங்களுக்கும் மூலமாகக்கொண்டு உச்சரிப்பதுபோல, நமதுபிள்ளைகள் பெரியோர்கள் புத்திசொல்லுங்கால் ஒன்றுசொல்லக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். அது வருமாறு: அடா பையர்! ஸ்நானம் பண்ணவில்லையா? நான்சென்ஸ், கோவிலுக்குப் போகவில்லையா? நான்சென்ஸ், பெரியவாளை நமஸ்கரித்துக்கொள்ளுகிறையா? நான்சென்ஸ், குருவந்தனஞ் செய்கிறையா? நான்சென்ஸ் என்றுகூறிவரும் அநுபவம் தாங்களறியாததல்ல. முளைக்கும்போதே நமது பிள்ளைகள் இப்படிக்கெட்டுப் பிஞ்சியிலேதானே பழுத்துவிடுகின்றமையால், பின்னுக்குப் பின் வரவர மாயியாய்விடுகிறார்கள். நம்முடைய நாட்டுக்குச் சதி



யாகத்தோன்றி விர்த்தியடைந்துவரும் ஆங்கிலேயபாஷையானது பிராஹ்மணர்களாகிய நமக்கே முழுத்தாம்பூலம்பிடித்திருக்கின்றது. இன்னுங் கொஞ்சகாலத்திற்குள் வேதமும், கீர்வாணபாஷையும் முதலற்றுப்போமென்றுந் தோன்றுகிறது. இப்படிப்பட்ட தௌர்ப்பாக்யகாலத்தில், வேதத்திலும் தெய்வத்திலும் விசுவாசமுண்டாகும்பொருட்டு நாயகரவர்கள் தக்கயுக்திகளை நாட்டி, அவைகளை வேதவசனங்களுக்கொப்பக் காட்டி, வைதிகநெறியை யுலகில் பரவச்செய்துவரும் அருமையையும், அவர் பிராஹ்மணர்களாகிய நம்மிடத்தில் பாராட்டிவரும் அன்பையுமறிந்திடாமல் அவரிடம் நாம் அசூயைகொள்வது நமதுக்ஷேமத்துக்குக் குறைவேயன்றி வேறில்லை.

நமதுஜாதி யுயர்ந்ததேயன்றி அந்தஜாதிக்குரியவராகிய நாம் உயர்ந்தவராக விப்போது காணப்படவில்லை. பெரியஅந்தஸ்திலிருவருட் சிலருக்குக் குடி அதிகமாய்விட்டது, நீச்சர்களுறவு மிஞ்சிவிட்டது, காலையில் ஸ்நானங்கிடையாது, மடி கிடையாது, ஸந்தி கிடையாது. பூஜை, ஹோமம், ஜபம், தபம் இவைகள்வாயில் மண் விழுந்தது. உத்யோகத்திலிருந்து வந்தால் ஸ்நானமில்லை, ஸந்தியில்லை. முதலே இவைகள் தெரியாது. அப்பனுக்குச் சிரார்த்தமேது? கோயிலேது? குளமேது? வேதமேது? போதமேது? ஜாதியேது? சமயமேது? பெரியோரேது? சிறியோரேது? மாதாஏது? பிதாஏது? குருஏது? தெய்வமேது? முதல்வருணத்தவராகிய நாம் இப்படியானால், பின்வருணத்தவர்கள் எப்படியாவார்கள்? வாத்தியார் நின்றுகொண்டு பெய்தால், சிஷ்யன் நடந்துகொண்டே பெய்வான் என்றபடியல்லவா முடியும்? இப்படிப்பட்டகாலத்தில் நாயகரவர்கள் எல்லாருடைய க்ஷேமங்களையுங்கருதிச் சுருதிகளைக் கையாண்டது எப்படித்தப்பிதமாகும்?

உலகம் முழுகிப்போகிற சமயமாயிருக்கு மிந்தத்தௌர்ப்பாக்யகாலத்தில், தெய்வவிசுவாச முண்டாகத்தக்க வார்த்தைகளை யாராவது எடுத்துச்சொல்லவந்தால், நீ வாயைத்திறந்து பேசாதே, நீசூத்திரன் என்று அதட்டுவது தர்மமா? பிராஹ்மணஜாதியானது குருத்வஞ்செய்யவுண்டான ஜாதிதான். அந்தஜாதி நீச்சஸேவகத்வஞ்செய்யுஞ்சாதியாக முடிந்த இக்காலத்தில், தெய்வத்தின்பேரையாவது தெரிந்துகொள்ளும்படிப் பரோபகாரஞ்செய்யும் பிறரை நாம் அதட்டிப்பேசுவது தெய்வத்துக்கு ஸம்மதமாகுமா? நம்

மவர்கள் தாங்கள் பிழைக்கவழிதேடுவதே கஷ்டமாயிருக்க, எங்கே அன்னியர்களைச் சுகப்படுத்தப்போகிறார்கள்? அன்னியர்கள் தங்கள் சொந்தமுயற்சியால் தாங்களுஞ் சுகப்பட்டுத் தங்களைச் சேர்ந்த மற்றவர்களையுஞ் சுகப்படுத்துவதற்கான வழிதேடுவது நல்லகாரியந்தானே! அப்படிமுயலுகையில், அவர்களைப்பார்த்துப் பிராஹ்மணர்களாகிய நாமும் தக்கவழியினின்று ஒழுக்கம்பேணமுயல்வது நமக்கும் நல்லதுதானே! இவ்வாறு நாம் தெளிந்து குணப்படாமல் அவர்களைப்பார்த்து, வயிறெரிந்து வீண்மனஸ்தாபந்தேடிக்கொள்வது சரியன்று. இது நிற்க.

பிராஹ்மணனுடைய ஷட்கர்மங்களில், ஈதல்-ஏற்றல்களடங்கியிருக்கின்றன. இதனால் பிராஹ்மணனுக்குப் பிராஹ்மணனேகொடுத்தலும், பிராஹ்மணனிடத்தில் பிராஹ்மணனே வாங்குதலுமாகிய தர்மம் வெளிப்படுகின்றது. அதனால், பிராஹ்மணன் சூத்திரனிடத்தில் ஒன்றும் வாங்கக்கூடாது என்று ஏற்படுகின்றது. அவ்வாறு சூத்திரனிடத்தில் தானம்வாங்காத பிராஹ்மணருளரோ? பிராமணர்களாகிய நாம் பிறரிடம் தானம் வாங்கலாமென்றும், பிறருக்குக் கொடுக்கக்கூடாதென்றும் நம்மவர்கள் விவகரிப்பதற்கு நியாயம் யாதேனுமுளதோ? நாம் பிறருக்குக்கொடுக்காமல், அவர்களிடத்தில் வாங்குவது அவர்களை யேமாற்றுவதாகவே முடிவதன்றி வேறில்லை. நமது வஞ்சகத்தை அறிந்து, அவர்கள் நம்மை விசுவசித்துங் கௌரவித்தும் வருவது அவர்களது பெருந்தன்மையாவதன்றி வேறு என்னுவது? இவைகளை நாம் சித்தஸமாதானத்துடன் யோசித்தால், அவர்களை விரோதிக்க இடமேயில்லை. நாயகரவர்களைச் சூத்திரரெனக்கூறி வீண்மனஸ்தாபத்தை யுண்டுபண்ணுதற்கும் இடமில்லை. நாயகரவர்கள் சூத்திருமல்லர். நாயகரவர்கள் சுருதிபோதகத்தால் தமதுண்மையை ஸ்தாபித்து எம்போன்ற பலரையும், மற்றவர்களையும் வழிக்குக்கொண்டுவருவது ஈசுவரன் சந்தோஷிக்கத்தக்கதாகவேயிருக்கின்றது. இது நிற்க.

சூத்திரன் பிராஹ்மணனைத் தொடக்கூடாதல்லவா? பிராஹ்மணனே மற்றொருவனுடைய பெண்சாதியைத் தொடக்கூடாதல்லவா? அதிலும், கற்புடைய ஒருபிராஹ்மணப்பெண்ணை யாவரும் மனதாலும் நெருங்கக்கூடாதல்லவா? அப்படியிருந்தும், அந்தக் கற்புடைய பிராஹ்மணஸ்திரீ ஒரு நடுஆற்றில் முழுகிப்போவதாயிருந்தால் கிட்டநிற்கும் ஒரு சூத்திரன் பரிதாபப்பட்டு அவளை



எடுத்துவிடுவது கூடாதோ? நமக்கு அவளைத்தொட அதிகாரங் கிடையாது என்று பார்த்துக்கொண்டு நிற்பதுதான் தர்மமோ? ஒரு சத்துருவந்து நம்மவீட்டில் கொள்ளையடிக்கும்போது, நாம் சத்துருவை விரட்டி, நம்மவீட்டை ஸ்திரப்படுத்தும்வழியைப் பார்க்கிறதா அல்லது வீட்டின் ஈசான்யமூலையில் அடுப்புமூட்டலாமா, ஆக்னேயத்தில் அடுப்புமூட்டலாமா? என்று சாஸ்திர ஆராய்ச்சி செய்கிறதா? தெய்வத்தின் நாமத்தைச் சொன்னால் பரிஹாஸஞ்செய்யும் மடையர்களும், வாயால்மட்டும் தெய்வமுண்டெனச்சொல்லி உண்மைவழியில் நடந்துவராத திருடர்களும் மிகுந்துள்ள இந்தக்காலத்தில், சூத்திரன் என்று ஒருவரை நாம் நிந்திப்பது அழகா? திருடியும், பொய்சொல்லியும், தப்புப்பத்திரஞ்செய்தும், குடிகெடுத்தும், ஜெயிலுக்குப்போமவர்களையெல்லாம் மகுடசிந்தாமணி ஜடாவல்லபர் என்றெண்ணி, அவர்களுடன் பந்திபோஜனமும், கொடுக்கல் வாங்கல்முதலிய ஸம்பந்தங்களுஞ் செய்யும் நாம் ஒருவரை ஏதாவது சொல்ல வாயுமுண்டா? சோமசுந்தரநாயகர் திருடும்படி சொல்லிக்கொடுக்கின்றாரா, அல்லது வியபிசாரஞ்செய்யும்படி சொல்லிக்கொடுக்கின்றாரா? தெய்வலக்ஷணம் இன்னது என்று சொல்லிக்கொண்டும், அந்தத் தெய்வம் இட்டகட்டளை இதுவென்று உபதேசித்தும், அந்தக்கட்டளையாகிய வேதத்தில் தன் கருத்தே விளங்குகிறதென்றுங்காட்ட ஏதாவது ஒருவசனஞ் சொல்வது பிசகானால், வேறுஎதுதான் நியாயம்? நன்றியறித லென்பது நமது நாட்டாருக்குப் பெரிய பூஷணம், தனக்கு உபகாரஞ்செய்த ஒருவனுக்குத் தான் பிரதியுபகாரஞ்செய்யாவிடினும், கேடு செய்யாதிருப்பது அழகு. நாயகரவாள் செய்துவரும் லோகோபகாரத்திற்கு நானே சாக்ஷி. எனக்குத் தெய்வலக்ஷணந் தெரிந்ததும், ஆன்மலக்ஷணந் தெரிந்ததும் அவாளுடைய காருண்யத்தால்தான். அவாள் என்னுடைய பருவமறிந்து, தம் அருளான குளிகையால் என்னைச் சுத்திசெய்து, வேதிசெய்து முன்னுக்குக்கொண்டுவந்த சமாச்சாரம் நான் சாவுமளவும் மறக்கக்கூடியதல்ல. என்றும் அழியாதபெருஞ்செல்வமாகிய ஸ்ரீ பரமேஸ்வரனை எனக்குத் தேடித்தந்து, நான் பாசத்தால் அவதிப்படுவதை எனக்கு விளக்கிக்காட்டி, எனக்கு பரமகதியாக ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தநாமத்தைச்சொல்லிய நாயகரவர்களுடைய தன்மையைச் சற்றே யோசித்துப்பார்த்தாலல்லவோ தெரியும்? சிங்ககிரி என்றும், கும்பகோணம் என்றும் பேருள்ள இடங்களில்,

பெரிய மடங்களைக் கட்டிக்கொண்டு ஜகதாசாரியார் என்று பிருது சொல்லித் திரிபவர் எல்லாம் யாருக்காவது ஆஸ்திகபுத்தியுண்டாகும்படி ஏதாவது உபதேசஞ்செய்துவருகின்றார்களா? பரமேசுவரனுடைய பக்தி ஸாமான்யமா? ஸ்ரீமத் அப்பையதீக்ஷிதசுவாமிகள் சொல்லியபடியே பார்க்கும்போது, பரமேச்வரன் ஒருவனுளன் என்னும் ஞானமானது இலகுவில்வருவது கிடையாது. பல நூல்களை யாராய்ந்துவிட்டதாலாவது, மிகுந்த வல்லபத்தாலாவது, புத்தியினாலாவது கிடைக்காது. பெருந்தவத்தால்மட்டுமே கிடைக்குமென்று தெரியவருகிறது. அப்பேர்ப்பட்ட பரமேச்வரபக்தி எனக்கு ஜனிக்கும்படி நாயகரவர்களே காரணராய் நின்றமையால், பரமேச்வரனுடைய அருள் வெளிப்பட்ட இடமாக அவர் விளங்குகின்றார். இது என் சங்கதி. இதேமாதிரியாய் எத்தனையோ அன்பர்கள் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். இவ்வளவுக்கும் காரணமாக விளங்கும் நாயகரவாள் ஒருதுண்டு வேதவாக்கைச் சொல்லுவது எப்படியோ அநியாயம்? ஸ்ரீபரமேச்வரனுடன் பிரஹ்மாவையும், விஷ்ணுவையும் சமானமாகச்சொல்லுவது ஸ்மார்த்தரான நம்மவரில் பலருக்கும் ஆசாரம். இது ஸத்ஸம்பிரதாயமென்று நாங்களெல்லாம் எண்ணிஅறிய இருக்கோம். இந்தநிலையில் நாயகரவாள் வந்து, ஸ்ரீபரமசிவனே தெய்வமென்றும், மற்றவர்கள் பசுக்களென்றும் விள்க்கினார்கள். தம்முடைய கக்ஷியைச் சுருதிவாக்கால் அவர் ஸ்தாபியாவிட்டால், நாங்கள் எள்ளளவும் அவரை நம்பியிருக்கமாட்டோம். இதுமட்டுமா? பரமேச்வரனுடைய திருமுடியையும், திவ்யதிருவடியையும் பிரஹ்மவிஷ்ணுக்கள் தேடிஅலுத்தது பொய்யென்று வைஷ்ணவர்கள் சொல்லித் திரிகின்றார்கள். இந்த உண்மை வேதத்திலேயேயிருக்கிறது. இதனை நமது நாயகரவர்களே வெளியிட்டார்கள். இப்படி அநந்தமாயுள்ள விஷயங்களை லோகோபகாரமாய் ஒருவர் வெளியிடுவது தெய்வத்துக்குச் சம்மதமில்லாமலும், தெய்வமில்லை எல்லாம் மித்தையென்று உளறிக்கொட்டுவது சம்மதமாகவு மிருக்குமா? தாங்கள் சற்றுயோசித்துப்பாருங்கள்.

வியாஸபகவான் பரமேச்வரனே தெய்வமென்று தன்சிஷ்யர்களுக்குத் தெரியும்படிச்செய்ய எண்ணினார். ஆனால் அவர்களுக்கு எப்படி அதைத்தெரியச் செய்தார்? ஸ்ரீகாசியில் விசுவநாதரதுசந்நிதியில் ஸ்ரீ நந்திகேச்வரருக்குப்பக்கத்தில் நின்று, "நாராயணனே பரன்,ஸத்யம்" என்றுசொல்லிக் கையைத்தூக்கினார். உடனே நந்திகேச்வரருக்குக் கோபம்பிறந்து அவரதுகையை வெட்டியெறிந்தார். பிறகு அங்கு விஷ்ணுவே வந்து பரமேச்வரனே பெரியவரென்று உபதேசித்தார். சிஷ்யர்களது நன்மைக்காகத் தமது கையை வியாசர் வெட்டக்கொடுத்தார். இப்படியே இந்திரனுடைய நன்மைக்காக ஸ்ரீததீசிபகவான் தமது முதுகெலும்பை முறித்துக்கொடுத்தார். புறாவின் நன்மைக்காகச் சிபிச்சக்கரவர்த்தியென்பவர் தம்முடலை அறுத்துக்கொடுத்தார். அப்படிப்போல நமது நாயகரவர்கள் நீங்களெல்லாந் திட்டிமகிழ இடங்கொடுத்தாரென்றே தோன்றுகின்றது. நாயகரவாள் பிராஹ்மணர்களுக்காக எவ்வளவு பரிவுடன் எவ்வளவு விஷயங்கள் எழுதியிருக்கின்றார்கள் தெரியுமா? இதையெல்லா மறந்துவிட்டு வீண்துவஜங் கட்டிக்கொண்டு அவாள்பேரில் தோஷஞ்சொல்லுவது எனக்குச் சம்மதமேயில்லை. அவாள் வேதவாக்கியங்களைச் சொல்லுவதும் பிசகாகாது. ஆதலால், இந்தவிஷயத்தில் நீங்களென்னை யினியொன்றுங் கேட்கவேண்டாம். வேதமில்லை யென்னப்பட்டவர்கள் அவைதிகர்கள். ஸ்மார்த்தர்களான நாம் பூணூல் போட்டுக்கொள்ளும்போதெல்லாம், "சுருதிப்படிக்கும், ஸ்மிருதிப்படிக்குமுள்ள,நித்திய கர்மாநுஷ்டானயோக்யதை சித்திக்கும்பொருட்டும்" என்று சங்கல்பஞ்சொல்லுகிறோம். இது நல்ல ஆசாரந்தான். இதற்குமாறாக வேதமென்பது மித்தையென்றுளறும் மூடவேதாந்தத்தை நம்மவர்கள் ஆசிரயிக்கிறார்களே! அது நியாயமா? நான் சொல்வதைக் கேளுங்கள். வேதாந்தமென்பது வேதத்தின்முடிவு. வேதமே பொய்யென்றுளறும் ஸ்மார்த்தகோடிகள் தங்களை வேதாந்திகளென்று எப்படிச்சொல்லிக்கொள்ளலாம்? இது நிற்க.

தாங்களொருகாரியஞ் செய்யுங்கள். நாயகரவர்கள் சித்தாந்தபூஷணம், சமரஸஞானதீபம், சித்தாந்தசேகரம், பிரஹ்மதத்வநிருபணம், வேதாந்தமதவிசாரம், ஆபாஸஞானநிரோதம், சுதர்க்கவாதவிபஞ்சநி என்னுஞ் சிலபுத்தகங்கள் எழுதியிருக்கின்றார்கள். இவற்றில் எதாவதொன்றைவாங்கி வாசித்துப்பாருங்கள். முக்கியமாய் ஆபாஸஞானநிரோதம் என்பதன் பிற்பாதியை நன்றாய்ப் படித்துப்பாருங்கள். அப்போது உங்களுக்கு நாயகரவர்களுடைய நிஜயோக்யதை வெளியாகும். இந்தவிஷயமாக நானே வேண்டுமானாலுந் தங்களிடம்வந்து சம்பாஷிக்கிறேன். அப்போதாவது உங்

களுக்கு உண்மை விளங்காமற்போகாது. இவ்வளவுந் தங்களிடம் நான் வைத்திருக்குஞ் சுதந்தரத்தால் எழுதினேன். வேறு விசேஷமில்லை. எனது அப்பனாகிய [illegible]ப்பிரானது கழன்மலர்கள் வாழ்க. சுபம்.

இவ்வாறு உண்மையுபந்நியாஸஞ்செய்துபகரித்த புருஷார்த்தமாகிய நமது பிரஹ்மஸ்ரீ சர்மாஅவர்களது கம்பீரத்தை யாவருமறிந்து சந்தோஷிக்குமாறும், பிரஹ்மவித்யாபத்திராதிபர்முதலிய பொருமையுடையார் கண்டு உள்ளம் வெதும்புமாறும் இதனை யாம் வெளிப்படுத்தினோமென்க.

## முடிவுரை.

துவாதசாந்தக்ஷேத்திரமாகிய திருவாலவாயின்கண்ணெழுந்தருளியிருக்கும் ஜகத்குரு ஸ்ரீஜ்ஞானஸம்பந்ததேசிகஸ்வாமிகள், ஸ்ரீபாஸ்கரசேதுபதிமகாராஜாஅவர்களது வேண்டுகோளால் ஒரு நவராத்திரிமஹோத்ஸவநிமித்தமாக இராமநாதபுரத்துக்கு விஜயஞ்செய்தார்கள். அம்மஹாசந்நிதானத்துடன்அடியேனுமங்குப்போயிருந்தேன். நவராத்திரிமஹோத்ஸவம் செம்மையாக நடந்தது. அநந்தரம், மகாராஜா அவர்கள் ஸ்ரீமகாசந்நிதானத்தை ஸ்ரீலக்ஷ்மிபுரமடத்தில் வந்து தரிசித்தார்கள். அப்போது சிலபிரஸ்தாபங்கணடந்துவருகையில், ஸ்ரீநிவாஸசாஸ்திரியார்-சபாபதிநாவலர் இருவரதுபிரஸ்தாபமும் வந்தது. அவ்விருவருக்கும் பெருந்தொகைகள் தாமுதவியது ஒருவருக்கொருவர் மததூஷணஞ்செய்து பூசல்விளைக்கவன்றெனவும், ஸ்ரீநிவாஸசாஸ்திரியார் சிவரஹஸ்யமாதிகிரந்தங்கள் வெளியிடுவதாகவும், சபாபதிநாவலர் திராவிடபாஷ்யமாதிகிரந்தங்கள் வெளியிடுவதாகவுங் கேட்டுக்கொண்டதற்காகவே அவர்களுக்கு அப்பெருந்தொகைகளுபகரித்ததெனவுஞ் சொன்னார்கள். அவ்விருவருமவ்வாறுசெய்யாமல் விளைத்த பூசலுக்கிடையில் தாங்கள் நுழைந்து சைவநிந்தையைப் பரிகரித்தது ஆவசியகமேயாயினும், தன்வீட்டிநுழைந்த கள்வனைக் கம்புகொண்டடித்து வெளியே துரத்தியபின்னர்க் கம்பை யெறிந்துவிடவேண்டியதுபோல், இனித் தாங்கள் சும்மாவிருப்பதுவே சுகம் எனவும், வாதவழியினின்றும் விலகிச் சாத்திரரூபமாக விஷயங்களையெழுதி வெளிப்படுத்



துவது உசிதமெனவும் எம்மைப்பார்த்துத் தெரிவித்தார்கள். மகாராஜாஅவர்களது அத்தியாச்சரியகரமான சுபோதம் மனோரஞ்சிதமாயும், உசிதமாயுமிருந்த[illegible] அதனை மனப்பூர்வமாக வங்கீகரித்த யாம் அன்றுமுத[illegible]மவித்யாவை யெதிரிட்டு மறுத்தற்றொழிலை மறந்தோம். அப்பிரஹ்மவித்யாபத்திராதிபர் நியாயவரம்புமீறி விவகரிப்பதில் அதிகசமர்த்தரென்றறிந்த யாம் அவரோடு கற்பகோடிகாலம் விவகரித்தாலும் வாதம் ஒருமுடிவுக்கு வராது. எடுத்தவிஷயஞ் சோர்ந்திடின், அவரவ்வளவினில்லாது மற்றொன்றைத்தொடுத்து வீராவேசத்துடன் வெளிப்படுமியற்கைமணங்கந்திக்கு நீராகையால், அவரோடு வாதித்தலைநிறுத்தி யுபசாந்தியடைவது எமக்குப் பெரும்பாக்யமேயாம்.

இனி, நமது சாஸ்திரியாரும், அவரினத்தவரும் யாம் பின்னிட்டதாகப்பேசி மகிழலாம். அது எமக்கு ஒருபொருட்டன்று. ஸ்ரீமகாராஜாஅவர்களது அபிப்பிராயத்தைக் கூர்ந்துயோசித்தவர்கள் உண்மைகண்டுணராமற்போகார். மகாராஜாஅவர்களேயன்றி, ஸ்ரீமஹாசந்நிதானமும் அவ்வாறே திருவுளம்பற்றியது. அதனை மேற்கொண்டொழுகும் யாம் பிறரது பயனில்சொல்லைமதியாது திருவருணடத்துஞ் செந்நெறிபற்றியொழுகி, அத்திருவருளைச்சிந்தித்து வாழ்வோமாக.

இந்த ஸத்கிரந்தம் ஸாதுக்கள் க்ஷேமார்த்தம் உலகில் நீடு வாழ்க. சுபம்| சுபம்||

### வாழ்த்து.

சிவநெறிவிளக்கவந்ததேசிகர்நால்வர்வாழி
அவநெறியாழாதெம்மையாண்டமெய்கண்டானாதி
தவமுனிவோர்கணால்வர்தன்னருள்வாழியன்னோர்
புவனியிற்றந்தசைவபோதநன்னூல்கள்வாழி.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ-அருணந்திசிவன்திருவடிவாழ்க.

# சிவஞானசித்தியார் - மாயாவாதிமதம்.

## பூர்வபட்சம்.

"நானேபிரமமென்றுரைத்தஞானம்மெய்த்தேறலவென்னலி
யூனேபுகுந்தங்கின்றுயிர்கட்குபதேசக்குருவுரைத்தவரு
மானுமதிகேடுமாயமாயாவாதிபேயாகித்
தானேயுரைக்குமக்காலினல்மைதன்னைச்சாற்றுவாம். (௧)

அறிவாயகிலகாரணமாயனந்தானந்தமாயருவாய்ச்
செறிவாயெங்குநித்தமாய்த்திகழ்ந்தசத்தாய்ச்சுத்தமதாய்க்
குறிதான்குணங்களொன்றின்றிக்கூறும்வேதந்தனக்களவாய்ப்
பிறியாதனுபூதிகந்தனக்காய்நின்றதந்தப்பிரமந்தான். (௨)

ஒன்றுமிரவிபலபாண்டத்துண்டாமுதகத்தங்கங்கே
நின்றாற்போலவுடறோறுநிகழ்ந்துநிற்கும்பொருள்மெய்கண்
சென்றாற்போலப்புலன்களுக்குஞ்சிந்தைதனக்குந்தெரியாதா
மென்றுங்காட்சிமுதலாயவிரண்டுமளவைக்கெட்டாதால். (௩)

இருளிற்பழுதையரவெனவேயிசையுமிரவியிருங்கதிர்க
ளருளப்பழுதைமெய்யாகியரவும்பொய்யாமதுபோல
மருளிற்சகமுஞ்சத்தாகிமருவித்தோன்றுமாசில்லாத்
தெருளிற்சித்தேசத்தாகும்பித்தாஞ்சகத்தின்செயலெல்லாம். (௪)

உலகந்தானுமிருவசனத்துண்டாமின்றேலுதியாது
நிலவியுண்டேலழியாதுநிற்பதாகுமித்தையா
மிலகுசுத்திகனல்சேரவின்றும்வெள்ளியின்மதாங்
குலவுசகமும்விவகாரம்பரமார்த்தத்திற்கொள்ளாதால். (௫)

நாங்குமுலகுக்குபாதானஞ்சத்தாஞ்சிலம்பியூறன்பால்.
வாங்கிவைத்துக்காப்பதுபோல்வையமெல்லாந்தன்பக்க
லோங்கவுதிப்பித்துளதாக்கிநிறுத்தியொடுக்கத்திலதாக்கு
மாங்குவந்துவாறதருஞ்சத்தாஞ்சகத்தினமையெல்லாம். (௬)



மன்னும்பிரமந்தனில்வானுய்வானில்வளியாயந்தவளி
தன்னிலழலாயழலின்பாற்சலமாய்ச்சலத்திற்றரணியாய்ச்
சொன்னவிதனின்மருந்தாகித்தோற்றுமருந்திலன்னமா
யன்னமதனிற்றுவ[illegible]ரறுதாதுவாயினவால். (௭)

ஆறுதாதுக்களுங்கூடிவந்தகோசமன்னமய
மாறில்பிராணகோசமயமன்னுமதனின்மனோமயந்தான்
வேறுவருமவிஞ்ஞானமயமேவுமதனினதுதன்னிற்
கூறிவருமானந்தமயங்கோசமயம்பின்கூடியதால். (௮)

கோசவுருவிற்பிரமந்தான்கூடித்தோன்றநீடுமொரு
காசமருவுங்கடந்தோறுநின்றாற்போலக்கிரவன்றன்
விசுவிரணமுருவின்கண்வெளிப்பட்டிடுவதிற்பற்றும்
பாசமதனுக்கின்றுகுமென்றாற்பரத்திற்பற்றன்றே. (௯)

அலகின்மணிகளவைகோவையடைந்தபொழுதினங்கங்கே
நிலவுமொருநூல்பலதிறமாய்நின்றாற்போலநீடுருவம்
பலவுமருவும்பேதத்தாற்பன்மையாகும்பிரமந்தான்
குலவுபோகபோக்கியங்கள்கொள்ளும்போன்றுகொள்ளாதால். (௰)

போற்றுஞ்செயலாற்பலகாமம்புணர்ந்துபோகபோக்கியத்திற்
றோற்றுநனவுகனவினுடன்சுழுத்திதுரியமெய்துமிதம்
கேற்றகாரணநிரனிரையேயீரேழ்நாலொன்றெல்லாமு
மாற்றிநிற்குங்கேடின்றிவந்தயோகமாய்த்திடவே. (௧௧)

கருவியெல்லாநானெனவேகருதல்பந்தமக்கருத்தை
யொருவமுத்தியுண்டாகுமுள்ளம்வித்தாஞ்செய்தியினுன்
மருவுமாயாகாரியங்களவித்தைமாயவேமாயை
பிரியும்பிரியாஞானமதுபிறக்கும்பிறவாபேதமே. (௧௨)

ஆனகன்மவனுட்டயங்களந்தக்கரணசுத்திதரு
மூனமின்றியச்சுத்திஞானமதனையுண்டாக்கு
ஞானமதுதான்பிரமத்தைநானென்றுணர்த்துநான்பிறந்தால்
வானமதிநீர்த்துளக்கமெனக்காணுந்தன்னைமாயையிலே. (௧௩)

தானேதானுயனுபோகந்தன்னிற்றன்னையனுபவித்திட்
டேனையுயிரேயுணர்வேயென்றென்றுமின்றியுரையிறந்து
வானேமுதலாம்பூதங்கண்மாயமாயாதேநின்று
நானேபிரமமெனத்தெளியுஞானம்பிரமஞானமே. (௧௪)

சாற்றுமறைதத்துவமசிமாவாக்கியங்கடமையுணர்ந்தாற்
போற்றியதுநீயாருமென்றறைவதல்லாற்பொருளின்றே
தேற்றுமிதனைத்தெளியாதார்தெளியப்பஞ்சசாதனமே
லேற்றியமநியமாதியோகமிருநான்கெயற்றுவரால்." (௧௫)

---

## சிவஞானசித்தியார் - மாயாவாதிமதமறுதலை.

### சித்தாந்தம்.

"ஏகனெனவியம்பியிப்படியனைத்துமுத்தியடைமின்னொரு
மோகமானவுரைகொம்புமுன்றொடுமுடிந்திடாதுமலடாகிய
காகமானதுகருங்கலின்றசைபறித்தழுங்கரியகுஞ்சியின்
றுகமாபசிதவிர்க்கவாயிடைகொடுத்ததென்றுரைசெய்தன்மையே. (௧)

நீடுவேதமளவாகவேகமெனுநீதிநானிகழ்வதாகுமே
னடிஞாதுருவுஞானஞேயமொடுநாலுநான்மறையுமோதலா
லோடுமாகுமுனதேகமோதுமிவையூனமாயுரைமாறுகோள்
கூடுமாகுமனுபூதிதானுமதுகூடிடாதறிவிலாமையே. (௨)

நீதியாலொளிகொள்பானுவானதுகனீரிலேதிசமுமாறுபோ
லாதிதானுருவமாயகாயமதின்மேவியாவதிலையாகுமாந்
தீதிலாவருவமாகலாணிழல்கள்சேரவேறிட்டமிலாமையா
லோதிலோரகலினீரிலேயொருவர்காணலாவிலதுனேகமே. (௩)

வேறுவாயிற்புலனேறுமேன்மனமுமேவிடாதபிரமாணமுங்
கூறிடாதுளதுதானெனாவுணர்தல்கோடுநீமுயலினுடிறு
யீறிலாதபரமேகமேயெனவியம்புநீயிசையுஞானமும்
பேறதாவதிலைபேதமானவிதுபேனவேயுளதுபேசிலே. (௪)

இலகுசோதிமணியெனவுமேகமெனினிதனிலேகமதுவிலதிலுன்,
குலவுகாசமொளியதுவுநீடிவளர்குணமுமாடுவதோர்குணியும,
பலவுமானகுணமொருவுமேகமதுவெனவுநீபகரினிகரிலா
வுலகமானதனையுதவுமாறதிலையுணர்வுதானுமிலையுணரிலே. (௫)

புற்றினேர்பழுதைதொக்கபோதுமயிர்புளகமாகவரவிரவிலே
யுற்றதாமதனையொக்கவேயுலகுதிக்குமாறுமொருசத்திலே
பெற்றதாகுமெனினப்பிராந்திபுடையோருமப்பிரமபேதமாய்
நிற்பர்நீபகரின்முற்றுமையநிலைபெற்றுநின்மலமிலாததாம், (௬)



75ட

ஓதியேயுலகமதனைநீயுநிருவசனமாகவுரைசெய்வதென்
பேதையோயுளதுமிலதுமல்லபொருள்பேசுவாருமுளரோசொலா
யூதியேயுளதுவுந்தலாவிலதிலாவதின்மையதழிந்துபோ
நீதியாலுளதிலாமைநேர்வதெனினேர்மையாகியதுநின்றதே. (௭)

வேறதாகியதுபோலிருந்தமையில்வெள்ளிசுத்தியெனிலையமே
கூறலாமொருபரத்தோடொத்தபொருள்கொண்டுவைத்தபடிகண்டன
மாறிடாதுநிலநீரதாகியனல்வாயுவாகியவைமாறியுஞ்
சேறிடாதுவிகாரமன்றுபரமார்த்தமாயவைசெறிந்ததே. (௮)

மாயநூலதுசிலம்பிவாயினிடைவந்தவாறதனைமானவே
மாயதேயுலகமானதும்பிரமமதனிலேயெனினடங்கிநின்
றேயுமாகுமொருசித்துமத்துடனிலாததென்றுபினியம்பினீ
பேயனேகடமிருத்தில்வந்ததுபிறப்பதாவதிலைபேசிலே, (௯)

வேறதாகுமுருவத்திலேபரம்வெளிப்படும்மெனவிளம்பினீ
யூறிலாவொருசவத்திலேபிரமமூண்டுகாணுணர்வதின்றுதான்
மாறிவாயுவுமனுதியானவையும்வந்திடாமையினின்றெனி
னீறுதானுடையதாயதோபிரமமென்கொலோவிவையிறப்பதே. (௧௦)

பற்றதின்றியுடனின்றிடும்பரமெனப்பகர்ந்தனைபரிந்துட
னுற்றுடம்புதிரைநோய்நரைச்சிறையுறுப்பழிந்திவையுமுள்ளபின்
குற்றமென்றிதனைவிட்டிடாதுவிடவென்றலுங்குலைவுகொண்டிடும்
பெற்றிகண்டுமொருபற்றறும்பரிசுபேசவேயுளதுனைசையே. (௧௧)

சோதிமாமணிகளூடுபோனதொருநூலுமானநிலைசொல்லிடு
நீதியான்மணிகள்பேதமாகியொருநூலினின்றமைநிகழ்த்திநு
யாதிதானொருவனாகியேபலவகந்தயோனியிலமர்ந்தவனை
பேதியாதநிலைபேசினுயுலகுபேதமேயிலதபேதமே. (௧௨)

ஓத்துநின்றுடலினின்பதுன்பமவையுற்றுமுற்றிடுவதின்றெனும்
பித்தவுன்னுரையினுற்றதேதிலதுபெற்றதின்றிலதுபெற்றதேற்
றுய்த்தலின்றுறுதல்சிவபாலமதுசொல்விறுன்றினுந்தோய்விலாமைநீ
வைத்துரித்தமனவாக்கிறந்தபரமென்னமானமிலையின்னமே. (௧௩)

எங்குநின்றிடிலவத்தையின்றிடுமிசைந்திடுங்கரணமென்னினீ
யங்குநின்றபரமெங்கொளித்ததிதுநின்றதேதலைமையடங்கிடா
விங்குநின்றதொருகாந்தமானகலிரும்புசன்னிதியியக்குநேர்
தங்கிநின்றதெனிலிங்குநீளும்வகைதந்திடாதுனுரைதப்பதே. (௧௪)

இருள்பொதிந்தொருபருதியிவ்வுலகிலிசையிலின்றுடலகானனை
மருள்பொதிந்தொருபிரமமிக்குளதுமருவிநின்றவுருவொருவியே
தெருள்பொதிந்தபரருவொழுங்தெளிவுசென்றபே துகதியென்றிடும்
பொருள்பொதிந்ததெளிவமலனுக்குமலம்வருதலாதுளதுபுன்மையே. ()

சுத்தமானதுபரத்திலுக்கவைவதின்றசுத்தமதகாதி
வைத்தமாயமுறுசித்தசுத்தமுறமற்றதம்குமலம்வைத்தனை
யொத்தசிவன்மலகன்மமாயையுறுகின்றகாரணமுணர்ந்திடாய்
பித்தனேவிறகினிற்பிறப்பதெரியென்னின்வேறுபொருள்பெற்றதே. ()

உள்ளினீயுமறுபோகமென்றபொழுதற்றிடுந்துவிதமற்றதில்
கொள்ளிவில்லையெனிலில்லையீயுமறிவின்மைகண்டவிடமுண்மையேன்
மன்னுமோருணர்வுவந்திடும்முணர்வெலாமுமாயையெனின்மாயையே
சொன்னதோர்பிரமமாயிடும்பிரமமாயையாயறிவுசேருமே. (கஎ)

ஆரணங்கடருதத்துவம்மசிபதங்களின்பொருளறிந்திடாய்
காரணம்மதுவுமீயுமென்றிருமைகண்டுவேறறின்மைகருதலா
ஞானன்பிரமஞானாசாரியராயகன்கழல்கணண்ணலீ
யோரணைத்துமொழிசாதனங்கள்கொடியோகருாணமுமியற்றிடே." (கஅ)

## உண்மையுபதேசம்.

அநாதிமுத்தருய்ப்பாருயசலநூயெல்லா
வறிவுதொழிலருக்கிரகமுடையவரன்கன்ம
நாகுதிகமற்றொத்தவிடத்தேசத்திபாத
நமைவித்துமலங்களெல்லாநங்கநோக்கி
மறுதிகரணங்களெலாமடக்கித்தன்னை
வழிபடுகல்லறிவருளிமாக்கருணைக்கையா
லினுதபிறப்பினிலின்றுமெடுத்துமாறு
வின்பமுத்திக்கேவைப்பினைக்கண்முத்தியதுவே.

ஸ்ரீ-மெய்கண்டார் திருவடிவாழ்க.

11 / 1976

விளம்பரம்

சென்னை

# வேதாகமோக்த சைவசித்தாந்த சபையில்

## கிடைக்கக்கூடிய புத்தகங்கள்.

| | | ரூ. | | |
|---|---|---|---|---|
| 1. | ஞானவியப்பிரகாசம் ... ... ... | 1 | 12 | 0 |
| 2. | ஆத்மசிவோபாசனைப்படலம் ... ... | 0 | 12 | 0 |
| 3. | ஆகமசஞ்சீவிநோதம் ... ... ... | 1 | 0 | 0 |
| 4. | சமரசஞானதீபம் ... ... ... | 0 | 11 | 0 |
| 5. | சமயாசாரியர்கள்மகிமை... ... ... | 0 | 1 | 0 |
| 6. | சித்தாந்தசேகரம் ... ... ... | 0 | 0 | 0 |
| 7. | சித்தாந்தவர்த்தினி ... ... ... | 0 | 1 | 0 |
| 8. | சிவநாமவிருத்தமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| 9. | சிவபூசைப்பிரதிஷ்டை ... ... | 1 | 0 | 0 |
| 10. | சிவநாமாவளி ... ... ... | 0 | 1 | 0 |
| 11. | சிவசிந்தாமணிமாலை (மூலப்பாகம்) ... ... | 1 | 2 | 0 |
| 12. | சுக்லாம்பரதாகம்ஸமயவிநோதம் ... ... | 0 | 8 | 0 |
| 13. | சேக்கிழார்திருவாக்குவிளக்கம் ... ... | 0 | 2 | 0 |
| 14. | சைவக்குணமாலை ... ... ... | 1 | 8 | 0 |
| 15. | தக்கதாபோதகுருசேவனை ... ... | 0 | 4 | 0 |
| 16. | பரதத்வப்பிரகாசிகை ... ... ... | 1 | 0 | 0 |
| 17. | பரத்துவக்கலிதுடை ... ... ... | 1 | 4 | 0 |
| 18. | பிரமசூத்திரவிருத்திபாஷ்யம் ... ... ... | 1 | 0 | 0 |
| 19. | பிரம்மசூத்ரம் ... ... ... ... | 1 | 0 | 0 |
| 20. | மெய்கண்டசிவாசாரியசரித்திரம் ... ... | 0 | 4 | |
| 21. | விசாரப்பிரகாசதீபிகை ... ... ... | 1 | 4 | 0 |
| 22. | வேதசிவாகமப்பிரமாணம் ... ... | 1 | 0 | 0 |
| 23. | வேதாந்தமதவிசாரம் ... ... ... | 1 | 0 | 0 |
| 24. | * பெரியபுராணம் மொழிப்புரை (படங்களுடன்), 2-வால்யூம் ... ... ... | 7 | 0 | 0 |

* [illegible]

சி. நாராயணசாமி நாயகர்,
*Clerk, Traffic Audit Branch, M. & S.M.R.,*
*Royapuram.*

217